29A1

T.N.L.A. Debates

Official Report

Vol 26 No 1

May 6, 1986

C

V211,31 N86
N86.26.1
136486

வெளியீடு 19-5-1987 Issued 19-5-1987

2441

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை மே 6, 1986—தொகுதி 26 எண் 1**

Tuesday the 6th May 1986—Volume 26 No. 1

**சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009**
**Legislative Assembly Secretariat, Fort St. George,**
**Madras-600009**

விலை ரூ. 3] [Price Rs. 3

1186.26.1

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136486
சென்னை 600 008

# உள்ளடக்கம்.

5—6—1896

பக்கங்கள்

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் i—ii!

Personnel of the Government of Tamilnadu v—vi

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் vii—viii

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப் படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல் ix—xv

1. வினாக்கள்—விடைகள்—
   உடுக்குறியிட்ட வினாக்கள். 1—52

2. கவன ஈர்ப்பு—
   (அ) சென்னை இரயில்வே மருத்துவமனைக்கு எதிரில் இருந்த டாக்டர் அம்பேத்கார் சிலை உடைந்திருப்பது. 53—58
   (ஆ) திருப்பூரில் உள்ள துணி ஆலைகளின் கழிவு நீரை நொய்யலாற்றை நோக்கியோடும் வாய்க்கால்களிலும் ஓடைகளிலும் வெளியேற்றுவது. 58—60

3. வரவு-செலவுத் திட்டம், 1986-87, வாக்கெடுப்பு : (தொடர்ச்சி) 60—172
   (அ) கோரிக்கை எண். 15—காவல் துறை
   (ஆ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் (தொடர்ச்சி)
   திரு. அ. ரகுமாள்கான் 60—8
   *திரு. துரை கோவிந்தராசன் 81—94
   திரு. வி. பி. சிந்தன் 94—108
   *திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் 109—119
   திரு. சைதை சா. துரைசாமி 119—121
   *திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் 127—131
   திரு. என். எஸ். வி. சித்தன் 131—171

5. அரசினர் தீர்மானம்— 172
   விதி 32த்-ஐ தளர்த்தல்

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 172

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. சுந்தர்லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள் :

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் : (முதலமைச்சர்)—இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், காவல், இலஞ்ச ஒழிப்பு, கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவு துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (நிதி அமைச்சர்)—நிதி, வருவாய், பொது நிர்வாகம், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொழிலாளர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (மின் துறை அமைச்சர்)—மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு, அச்சு காகிதக் கட்டுப்பாடு, எழுது பொருள் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (செய்தி- அறநிலையத் துறை அமைச்சர்)—செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பொது, மாவட்ட வருவாய் அதிகாரிகள் , திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மது அருந்த அனுமதி வழங்கல், திட்டம், தொல்பொருள் இயல், மற்றும் பயண இசைவுச் சீட்டு.

5. மாண்புமிகு திரு. க. இராசாராம் : (தொழில் துறை அமைச்சர்)—பெருந் தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (உள்ளாட்சித் துறை அமைச்சர்)—நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (கல்வி அமைச்சர்)—கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

8. மாண்புமிகு டாட்டர் கா. காளிமுத்து : (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணி கூட்டுறவுச் சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

9. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (சட்ட அமைச்சர்)—சட்டம், நீதி மன்றங்கள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, சிறைகள், எடைகள் அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு கடன் நிவாரணம், (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் சர்க்கரைப்பாகு கழிவு.

10. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்று சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

11. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (போக்குவரத்துத் துறை அமைச்சர்)—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்,

12. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (உணவு அமைச்சர்)—உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

13. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : (ஆயத்துறை மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்)—மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக) ஆயத்துறை, கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

14. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

15. மாண்புமிகு திரு. தா. வீராச்சாமி : (வணிக வரித்துறை அமைச்சர்)—வணிக வரிகள்.

16. மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (வீட்டு வசதித்துறை அமைச்சர்)—வீட்டுவசதி மற்றும் குடிசை மாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

17. மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : (ஊரகத் தொழில் அமைச்சர்)—கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரக தொழில்கள்.



2941

18. மாண்புமிகு திரு. த. இராமசாமி : (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்)—வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.

19. மாண்புமிகு திரு. ஏ. அருணாசலம் : (ஆதித் திராவிடர் நலத்துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

20. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவிந்தன் : (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம் மற்றும் மீன் வளம்.

21. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (சமூகநலத் துறை அமைச்சர்)—மகளிர் குழந்தைகள் உள்ளிட்ட சமூக நலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

22. மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : (கதர்த் துறை அமைச்சர்)—கதர், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

23. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (பொதுப்பணித் துறை அமைச்சர்)—பொதுப் பணித்துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

24. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கூட்டுறவு.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

## THIRU SUNDER LAL KHURANA

*Members of the Council of Ministers :*

1. The HON. DR. M. G. RAMACHANDRAN : (CHIEF MINISTER)—Indian Administrative Service and other All India Services Police, Prevention of Corruption, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

2. The HON. DR. V. R. NEDUNCHEZHIAN : (MINISTER FOR FINANCE)—Finance, Revenue, General Administration, Legislature, Elections, Statistics, Youth Service Corporations and Ex-Servicemen and Labour.

3. The HON. THIRU S. RAMACHANDRAN : (MINISTER FOR ELECTRICITY)—Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. The HON. THIRU R. M. VEERAPPAN : (MINISTER FOR INFORMATION AND RELIGIOUS ENDOWMENTS)—Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Public, District Revenue Officers, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and grant of Liquor permits, Planning, Archaeology and Passports.

5. The HON. THIRU K. RAJARAM : (MINISTER FOR INDUSTRIES)—Large Scale Industries, Mines and Minerals , Electronics, Science and Technology.

6. The HON. THIRU P. U. SHANMUGAM : (MINISTER FOR LOCAL ADMINISTRATION)—Municipal Administration, Panchayats, Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

7. The HON. THIRU C. ARANGANAYAGAM : (MINISTER FOR EDUCATION)—Education, Official Language, Tamil Development and Culture.

8. The HON. DR. K. KALIMUTHU : (MINISTER FOR AGRICULTURE)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water Supply and Drainage Board.

9. The HON. THIRU C. PONNAIYAN : (MINISTER FOR LAW)—Law, Courts, Prisons, Deputy Collector Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief incuding Legislation on Money Lending, Legislation on Chits and Molasses.

10. The HON. DR. H.V. HANDE : (MINISTER FOR HEALTH)—Health and Environmental Pollution Control.

11. The HON. THIRU S. MUTHUSAMY : (MINISTER FOR TRANSPORT)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways.

12. The HON. THIRU S. THIRUNAVUKKARASU : (MINISTER FOR FOOD)—Food, Price Control and Census.

13. The HON. THIRU V. V. SWAMINATHAN : (MINISTER FOR EXCISE AND HANDLOOMS)—Prohibition excluding grant of Liquor Permits, Excise, Handlooms and Textiles.

14. The HON. THIRU R. SOUNDARARAJAN : (MINISTER FOR NUTRITIOUS MEALS)—Nutritious Meals.

15. The HON. THIRU T. VEERASAMY : (MINISTER FOR COMMERCIAL TAXES)—Commercial Taxes.

16. The HON. THIRU N. NALLUSAMY : (MINISTER FOR HOUSING)—Housing, Slum Clearance Board, Town Planning and Accommodation Control.

17. The HON. THIRU ANOOR P. G. JAGADEESAN : (MINISTER FOR RURAL INDUSTRIES)—Rural Industries including Village, Cottage and Small Industries.

18. The HON. THIRU T. RAMASAMY : (MINISTER FOR REHABILITATION AND EMPLOYMENT)—Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.

19. The HON. THIRU A. ARUNACHALAM : (MINISTER FOR ADI DRAVIDAR WELFARE)—Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

20. The HON. THIRU M. R. GOVENDAN : (MINISTER FOR BACKWARD CLASSES)—Backward Classes and Fisheries.



21. The HON. THIRUMATHI GOMATHI SRINIVASAN : (MINISTER FOR SOCIAL WELFARE)—Social Welfare including Women and ChildrenWelfare, Beggers Home, Orphanges and Correctional Administration.

22. The HON. THIRUMATHI VIJAYALAKSHMI PALANISAMY : (MINISTER FOR KHADI)—Khadi, Bhoodan and Gramdhan.

23. The HON. THIRU Y. S. M. YOSUF : (MINISTER FOR PUBLIC WORKS)—Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

24. The HON. THIRU K.K.S.S.R. RAMACHANDRAN : (MINISTER FOR CO-OPERATION)—Co-operation.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்:

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

பேரவைத் துணைத் தலைவர்:

மாண்புமிகு திரு. வி. பி. பாலசுப்பிரமணியன்

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்:

திரு. மா. சின்னராசு
திரு. செ. செம்மலை
திரு. சைதை சா. துரைசாமி
திரு. டி. ஆர். வேங்கடரமணன்
திரு. பொன். முத்துராமலிங்கம்

சட்டமன்ற பேரவைச் செயலாளர்:

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.,

இணைச் செயலாளர்:

திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.

துணைச் செயலாளர்கள்:

திரு. வெ. சீதாராமன், பி.க.ம், பி.ஜி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.

குழு அலுவலர்கள்:

திரு. சா. சீனிவாசன், பி.எஸ்சி.
திரு. கு. ஆ. சீனிவாசன், பி.ஏ.

சார்புச் செயலாளர்கள்:

திரு. ப. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.
திரு. வ. சா. ஜான், பி.ஏ.
திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.ஜி.எல்,
திரு. டி. சாலமன் ஜெயபால், பி.எஸ்சி., பி.எல்.
திரு. மா. கு. ஜோசப், பி.ஏ.,

எஸ்டேட் அலுவலர்கள்:

திரு. கேசவராம், பி.ஏ.
திரு. டி. ஜேகப் ஆர்தர், பி.ஏ., பி.எல்.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்:

திரு. கோ. வெங்கட்டராமன்

தலைமை நிருபர்:

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.

துணைச் செயலாளர் (பதிப்பாளர்):

திரு. ஜி. எஸ். அனந்த நாராயணன், எம்.ஏ. (தமிழ்).

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப்பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| 1 அண்ணாதாசன், திரு. எம். | .. | திருவரம்பூர் |
| 2 அப்துல் சமத், திரு. ஆ.கா.அ. | .. | திருவல்லிக்கேணி |
| 3 அப்துல் மஜீத், திரு. எச். | .. | வாணியம்பாடி |
| 4 அரங்கநாயகம், திரு. செ. | .. | தொண்டாமுத்தூர் |
| 5 அரிக்குமார், திரு. இரா. | .. | பெரணமல்லூர் |
| 6 அருணாசலம், திரு. இரா. | .. | நாமக்கல் (செ.வ.). |
| 7 அருணாசலம், திரு. எ. | .. | வரகூர் (செ.வ.) |
| 8 அன்பழகன், திரு. க. .. | .. | பார்க் டவுன் |
| 9 அன்பழகன், திரு. கே. .. | .. | ஓமலூர் |
| 10 அன்பழகன், திரு. தி. .. | .. | நாட்ராம்பள்ளி |
| 11 அன்பழகன், திரு. பொ. | .. | இளையான்குடி |
| 12 ஆண்டி அம்பலம் திரு. மெ. | .. | நத்தம் |
| 13 ஆதிமூலம் என்கிற தில்லைகாந்தி, திரு. | | ஆண்டிமடம் |
| 14 ஆபிரகாம், திரு. ம. .. | .. | ஆலந்தூர் |
| 15 ஆறுமுகம், திரு. அ. .. | .. | வந்தவாசி |
| 16 ஆறுமுகம், திரு. எச். ஜி. | .. | பென்னாகரம் |
| 17 ஆறுமுகம், திரு. ஆர். எஸ். | .. | ஒட்டபிடாரம் (செ.வ.). |
| 18 ஆறுமுகம், திரு. எ.எஸ்.ஏ. | .. | விருதுநகர் |
| 19 ஆறுமுகம், திரு. செ. | .. | மதுராந்தகம் |
| 20 ஆறுமுகம், திரு. மு. .. | .. | சேலம்-2. |
| 21 ஆனந்தகிருஷ்ணா, திரு. ஜி. | .. | பூந்தமல்லி |
| 22 ஆனந்தன், திரு. மு. | .. | உளுந்தூர்பேட்டை |
| 23 இரகுபதி, திரு. கோ. .. | .. | காட்பாடி |
| 24 இரத்தினம், திரு. எம். வி. | .. | பொள்ளாச்சி |
| 25 இரத்தினவேலு, திரு. சே. | .. | முசிறி |
| 26 இராசமாணிக்கம், திரு. ஆர். | .. | அரூர் (செ.வ.) |
| 27 இராசமாணிக்கம், திரு. எல்ல. | .. | தாம்பரம் |
| 28 இராசரக்தினம், திரு. எ. எம். | .. | கொளச்சல் |
| 29 இராசரத்தினம், திரு. எம். | .. | விழுப்புரம் |
| 30 இராசாங்கம், திரு. மு. | .. | திருவிடைமருதூர் |
| 31 இராசாம்பாள், திருமதி த. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 32 இராசாராம், திரு க. .. | .. | பனமரத்துப்பட்டி |
| 33 இராசாராமன், திரு. எஸ். | .. | [illegible] |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 34 இராசு, திரு வி. கே. .. .. | அரக்கோணம் (செ.வ.) |
| 35 இராசேந்திரன், திரு எஸ். என். | ஆத்துக்குடி |
| 36 இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி |
| 37 இராமச்சந்திரன், திரு. கே.எஸ்.எம். | போடிநாயக்கனூர் |
| 38 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 39 இராமச்சந்திரன், திரு. ச. .. | பண்ருட்டி |
| 40 இராமச்சந்திரன், திரு சோ. மா. | அண்ணா நகர் |
| 41 இராமச்சந்திரன், திரு ப. ந. | பட்டுக்கோட்டை |
| 42 இராமசாமி, திரு எஸ். என். .. | சாத்தான்குளம் |
| 43 இராமசாமி, திரு த. .. .. | இராமநாதபுரம் |
| 44 இராமநாதன், திரு மு. .. .. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 45 இராமலிங்கம், டாக்டர் கே. பி. | ராசிபுரம் |
| 46 இளங்கோவன், திரு. ஈ.வே.கி.ச. | சத்தியமங்கலம் |
| 47 ஈஸ்வரன், திரு. ஆர். .. .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 48 உ.சசி, திரு. கே. .. .. | கூடலூர் |
| 49 உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 50 எத்திராசன், திரு கி. .. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 51 கணபதி, திரு. கே. ஆர். .. | சிதம்பரம் |
| 52 கதிர்வேலு, திரு. மா. .. .. | ராணிப்பேட்டை |
| 53 கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு |
| 54 கந்தசாமி, திரு. பி. .. .. | பொங்கலூர் |
| 55 கல்லன், திரு. கே. .. .. | உதகமண்டலம் |
| 56 கலிதீர்த்தன், திரு. சோ. .. | சங்கராபுரம் |
| 57 காளிமுத்து, டாக்டர் கா. .. | மதுரை கிழக்கு |
| 58 கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ. .. | ஆயிரம் விளக்கு |
| 59 கிருஷ்ணசாமி, திரு. வி. இரா. .. | அணைக்கட்டு |
| 60 கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. .. | கும்பகோணம் |
| 61 கிருஷ்ணராஜ், திரு. ஜி. .. | சேலம்-1 |
| 62 குப்புசாமி, திரு. கே. .. .. | ஒட்டன்சத்திரம் |
| 63 குப்புசாமி, திரு. வே. .. .. | செய்யாறு |
| 64 குமர குருபர ராமநாதன், திரு. ச. | விளாத்திகுளம் |
| 65 குமரி அனந்தன், திரு. .. | ராதாபுரம் |
| 66 குமாரதாஸ், டாக்டர் தே. .. | கிள்ளியூர் |
| 67 கோமதி சீனிவாசன், திருமதி .. | வலங்கைமான் (செ.வ.) |
| 68 கோவிந்தசாமி, திரு. ஆர். .. | குடியாத்தம் |
| 69 கோவிந்தசாமி, திரு. ச. .. | எடப்பாடி |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 70 கோவேந்தன், திரு. எம். ஆர். .. | பேராவூரணி |
| 71 சங்கரலிங்கம், திரு. ச. .. .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 72 சண்முகம், திரு. இரா. .. | திருத்தணி |
| 73 சண்முகம், திரு. என். .. .. | சோளிங்கர் |
| 74 சண்முகம், திரு. ப. உ. .. .. | மேல்மலையனூர் |
| 75 சண்முகையா பாண்டியன், திரு எம். | ஆலங்குளம் |
| 76 சந்திரசேகரன், திரு. ஆ. .. | சோழவந்தான் |
| 77 சந்திரசேகர், திரு. மு. .. | முகையூர் |
| 78 சம்சுல் ஆலம், திரு. வி. எஸ். டி. .. | பாளையங்கோட்டை |
| 79 சமரசம், டாக்டர் கே. .. | காவேரிப்பட்டினம் |
| 80 சரோஜா, திருமதி இரா. .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 81 சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் (செ.வ.) |
| 82 சித்தன், திரு. என். எஸ். வி. .. | திருமங்கலம் |
| 83 சிந்தன், திரு. வி. பி. .. .. | வில்லிவாக்கம் |
| 84 சிவக்குமார், திரு. ஆர். .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 85 சிவக்குமார், திரு. எம். .. .. | கூனூர் (செ.வ.) |
| 86 சிவஞானம், திரு. ந. .. .. | திருவோணம் |
| 87 சிவப்பிரகாசம், திரு. சீ. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 88 சிவராமன், திரு. எஸ். .. .. | சின்னசேலம் |
| 89 சிவராஜ், திரு. சு. .. .. | ரிஷிவந்தியம் |
| 90 சின்னக்குழந்தை, திரு. மு. .. | ஆரணி |
| 91 சின்னச்சாமி, திரு. ரா. .. .. | நர்மபுரி |
| 92 சின்னசாமி, திரு. வே. கு. .. | பவானிசாகர் |
| 93 சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி |
| 94 சின்னராசு, திரு. மா. .. .. | மேட்டுப்பாளையம் |
| 95 சுந்தரதாஸ், திரு. மா. .. .. | விளவன்கோடு |
| 96 சுப்பராயன், திரு. கு. .. .. | திருப்பூர் |
| 97 சுப்பிரமணிய ஆதித்தன், திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர் |
| 98 சுப்பிரமணியன், திரு. உ. .. | சிவகங்கை |
| 99 சுப்பிரமணியன், திரு. வீ. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 100 சுப்புராயர், திரு. சி. .. .. | கம்பம் |
| 101 சுவாமிநாதன், திரு. வி. வி. .. | புவனகிரி |
| 102 செங்காளியப்பன், திரு. ஆர். .. | சிங்காநல்லூர் |
| 103 செங்கோட்டையன், திரு. கு. அ. .. | கோபிச்செட்டிப் பாளையம், |
| 104 செங்கோட்டையன், திரு. பெ. .. | கபிலர்மலை |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 105 செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 106 செல்லமுத்து, திரு எம். | திருவாரூர் (செ.வ.) |
| 107 செல்லப்பா, திரு. வி. கோ. | கடலூர் |
| 108 செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 109 சேகர், திரு கே. பி. கே. | பொன்னேரி (செ.வ.) |
| 110 சைதை துரைசாமி, திரு. சா. | சைதாப்பேட்டை |
| 111 சொர்ணலிங்கம், திரு. கா. | திருவாடனை |
| 112 சோலைராசு, திரு. க. | மருங்காபுரி |
| 113 சௌந்திரராஜன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 114 சௌரிராஜன், டாக்டர் கே. | தியாகராயநகர் |
| 115 ஞானசுந்தரம், திரு. சா. | மன்னார்குடி |
| 116 டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 117 தங்கமணி, திரு. மு. | மாயூரம் |
| 118 தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 119 தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 120 தங்கராசு, திரு. செ. | மங்களூர் (செ.வ.) |
| 121 தங்கவேல்ராஜ், திரு. பி. எம். | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 122 தங்கவேலு, திரு. வி. | வால்பாறை (செ.வ.) |
| 123 தமிழ்மணி, திரு. | திருப்போரூர் (செ.வ.) |
| 124 தமிழரசன், திரு. கு. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 125 தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 126 தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 127 தியாகராசன், திரு. ஆர். | விருத்தாசலம் |
| 128 திருஞானம், திரு. பி. ஆர். | எற்காடு (ஆ. வா.) |
| 129 திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 130 திருமலைசாமிக் கவுண்டர், திரு. சு. | உடுமலைப்பேட்டை |
| 131 தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | மொரப்பூர் |
| 132 தீர்த்தராமன், திரு. ப. | பாலக்கோடு |
| 133 துரை அன்பரசன், திரு. | நெல்லிக்குப்பம் |
| 134 துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | தஞ்சாவூர் |
| 135 துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு |
| 136 துரைராசு, திரு. எஸ். பி. | காரைக்குடி |
| 137 துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 138 தெய்வநாயகம், திரு. எ. | மதுரை சென்ட்ரல் |
| 139 தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 140 நடராசன், திரு. ஆ. | பேரூர் |
| 141 நரசிம்ம பல்லவன், திரு. க. | உத்திரமேரூர் |
| 142 நரசிம்மன், திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 143 நல்லமுத்து, டாக்டர் க. | பெரம்பலூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 144 நல்லுசாமி, திரு. என். | திருச்சிராப்பள்ளி-2 |
| 145 நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 146 நாராயணன், திரு. எஸ். | திருநெல்வேலி |
| 147 நாராயணன், திரு. பு. கோ. | பவானி |
| 148 நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர் |
| 149 பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 150 பரமசிவம், திரு. பா. ந. | பல்லடம் |
| 151 பரிதி இளம்வழுதி, திரு. | பெரம்பூர் |
| 152 பழனி, திரு. த. | ஆற்காடு |
| 153 பழனிச்சாமி, திரு. கா. செ. | காங்கேயம் |
| 154 பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 155 பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 156 பாண்டுரங்கன், திரு. மு. | கலசபாக்கம் |
| 157 பாப்பா சுப்பிரமணியன், திரு. | குத்தாலம் |
| 158 பாரதி, திரு. ஜி. கே. ஜெ. | திருவொற்றியூர் |
| 159 பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.). |
| 160 பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 161 பாலகிருஷ்ணன், திரு வி. | சிவகாசி |
| 162 பாலச்சந்திரன், திரு வை. | பத்மநாபபுரம் |
| 163 பாலசுப்பிரமணியன், திரு க. | சீர்காழி (செ.வ.) |
| 164 பாலசுப்பிரமணியன், திரு எஸ். | அம்பாசமுத்திரம் |
| 165 பாலசுப்பிரமணியன், திரு வேடசந்தூர் வி. பி. | வேடசந்தூர் |
| 166 பாலன், திரு சு. | எழும்பூர் |
| 167 பாலாஜி, திரு கே. | காஞ்சிபுரம் |
| 168 பாலுச்சாமி, திரு ஏ. | பரமக்குடி (செ.வ.) |
| 169 பாலுசாமி, திரு அ. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 1 0 வெற்றிடம் | |
| 171 பிரணவநாதன், திரு அ. | கடலாடி |
| 172 பிரேம்குமார், திரு ஆ. | திண்டுக்கல் |
| 173 புருசோத்தமன், திரு எஸ். | அரியலூர் |
| 174 புஷ்பராசு, திரு த. | திருமயம் |
| 175 பெரியசாமி, திரு அ. | தாராபுரம் (செ.வ.) |
| 176 பெரியசாமி, திரு ரா. | தொட்டியம் |
| 177 பெருமாள், திரு தெ. | கடையநல்லூர் |
| 178 பெருமாள் பிள்ளை, திரு கோ. | கன்னியாகுமரி |
| 179 பொன் முத்துராமலிங்கம், திரு | மதுரை (மேற்கு) |
| 180 பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | பழனி (செ.வ.) |
| 181 பொன்னுசாமி, டாக்டர் அ. | பெருந்துறை |
| 182 பொன்னுரங்கம், திரு ப. | ராயபுரம் |
| 183 பொன்னையன், திரு சி. | திருச்செங்கோடு |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 184 மணவாளன், திரு பி. பி. | திருப்பத்தூர் |
| 185 மணிமாறன், திரு மா. | நன்னிலம் (செ.வ.) |
| 186 மலர்மன்னன், திரு அ. | திருச்சிராப்பள்ளி-1 |
| 187 மனோகரன், திரு கி. | புரசைவாக்கம் |
| 188 மனோகரன், திரு தி.நா.கோ.அ. | திருநாவலூர் |
| 189 மாசிலாமணி, டாக்டர் ந. | ஜெயங்கொண்டான் |
| 190 மாதவன், திரு செ. | திருப்பத்தூர் |
| 191 மாதையன், திரு பு. பி. | அந்தியூர் (செ.வ.) |
| 192 மாரிமுத்து, திரு தா. | குளத்தூர் (செ.வ.) |
| 193 மாரிமுத்து, திரு மு. | திருப்பரங்குன்றம் |
| 194 மீனாட்சிசுந்தரம், திரு மா. | வேதாரண்யம் |
| 195 முகம்மது கனி, திரு ஜே. | புதுக்கோட்டை |
| 196 முகம்மது சலீம், டாக்டர் கு. | பெரியகுளம் |
| 197 முசிறிபுத்தன், திரு பி. | குளித்தலை |
| 198 முத்துசாமி, திரு க. | ஈரோடு |
| 199 முத்துராமலிங்கம், திரு பி.கே.எம். | உசிலம்பட்டி |
| 200 முத்துவேல், திரு கே. | முதுகுளத்தூர் |
| 201 முத்தையா, திரு இரா. | சேடப்பட்டி |
| 202 முருகானந்தம், திரு டி. என். | செஞ்சி |
| 203 முனிரத்தினம், திரு இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 204 யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 205 ரகுமான்கான், திரு அ. | சேப்பாக்கம் |
| 206 ரமணி, திரு கு. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 207 ரவீந்திரன், திரு ஏ. எஸ். | திருவண்ணாமலை |
| 208 ராமஜெயம், திரு. ம. நா. | வானூர் (செ.வ.) |
| 209 ராமன், திரு கி. | ராஜபாளையம் (செ.வ.) |
| 210 ராஜாபாபு, திரு ஜெ. | போளூர் |
| 211 ரெங்கசாமி, திரு ஆர். | கோவில்பட்டி |
| 212 ரெத்தினராஜ், திரு எஸ். | நாகர்கோவில் |
| 213 லட்சுமி திருமதி பி. | அவினாசி (செ.வ.) |
| 214 வடிவேல், திரு கு. | கரூர் |
| 215 வளர்மதி, திருமதி பா. | மயிலாப்பூர் |
| 216 விஜயபாலன், திரு என். | பூம்புகார் |
| 217 விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி | விராபாண்டி |
| 218 வீராணம்பலம், திரு க. வெ. | மேலூர் |
| 219 வீரய்யன், திரு கோ. | நாகப்பட்டினம் |
| 220 வீராசாமி, திரு தா. | ஒரத்தநாடு |
| 221 வெங்கடரெட்டி, திரு டி. | ஒசூர் |
| 222 வெங்கடாசலம், திரு அ. | ஆலங்குடி |
| 223 வெங்கடாசலம், திரு. கி. | லால்குடி |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 224 வெங்கடாசலம், திரு டி. எம். | பரகூர் |
| 225 வெங்கடரமணன், திரு டி. ஆர். | தென்காசி |
| 226 வேணுகோபால், திரு எஸ். | டாக்டர் ராதா கிருஷ்ண நகர் |
| 227 வேணுகோபால், திரு கே. வி. | தளி |
| 228 வேலு திரு கடலூர் இ. வி. | தண்டராம்பட்டு |
| 229 ஜகதீசன், திரு ஆனூர் பு. கோ. | செங்கல்பட்டு |
| 230 ஜான் வின்சென்ட், திரு மு. | நாங்குநேரி |
| 231 ஜெகதீசன், திரு | அரவக்குறிச்சி |
| 232 ஜெயச்சந்திரன், திரு சா. | காட்டுமன்னார் கோவில் (செ.வ.) |
| 233 ஜெயராமன், திரு வே. இரா. | தேனி |
| 234 ஹேமச்சந்திரன், திரு ஜே. | திருவட்டாறு |
| 235 பிரான்சிஸ், திரு ஜி. கே. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்கள்

| | |
|---|---|
| 1 மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் | அமைச்சர் |
| 2 மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே | அமைச்சர் |
| 3 மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப் | அமைச்சர் |
| 4 திரு ஆர். கிருஷ்ணமூர்த்தி | தலைமை வழக்கறிஞர். |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986, மே 6, செவ்வாய்க்கிழமை.

சித்திரை 23, அக்ஷய, திருவள்ளுவர் ஆண்டு 2017.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்"

கொடியவர் சிலரைக் கொலைத் தண்டனையால் அரசன் ஒறுத்தல் பயிரைக் காப்பாற்றக் களையைக் களைவதற்கு நிகரான செயலாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### மின் வாரியத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்கள்.

**666—(* வினா எண் 4091) திரு. ஆர். ரெங்கசாமி மற்றும் திரு. வி. பி. சிந்தன் :** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் ( Contract Labourers ) எத்தனை பேர் பணி செய்கிறார்கள் ?

(ஆ) இவர்களை நிரந்தரமாக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும் ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மின் உற்பத்தி கட்டுமான பணிகளிலும் மின் உற்பத்தி நிலையங்களிலும், கிராமப்புறங்களை மின்மயமாக்கும் ஏற்பாடுகளிலும், சுமார். 15,700 ஒப்பந்தத் தொழிலாளர்கள்

நிரந்தரமில்லா வேலைத்தன்மையில் அமர்த்தப்பட்டுள்ளனர். இது தவிர தனியார் அமைப்புகள் காவல் பணிக்காக அமர்த்தப் பட்டு அவர்களின் கீழ் சுமார் 1,500 ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

(ஆ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆர். ரெங்கசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, மின்சார வாரியத்திலே Liaemen jobs, Wiremen jobs Mazdoors, Helpers போன்ற பணிகளில் எல்லாம் இந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். முன்பு எல்லாம் ஹெல்ப்பர் என்ற ஒரு கேட்டகிரி இருந்தது. அதை இப்போது எடுத்து விட்டார்கள். அந்த கேட்டகிரி பர்மனென்டாக இருந்தது. இப்போது அந்த ஹெல்ப்பர் வேலையை இந்த ஒப்பந்தத் தொழிலாளர்கள் செய்கிறார்கள். எனவே இவர்கள் பார்ப்பது நிரந்தர வேலை. எனவே நிரந்தரமான பணியை இவர்களுக்குக் கொடுக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்து நிரந்தரம் ஆக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர் நலத்துறையைப் பொறுத்த வரையில் ஒரு குழுவைப் போட்டு அது ஆய்வு செய்து வருகிறது. அநேகமாக அதனுடைய பரிந்துரைகள் விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி கிடைத்த பிறகு எத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என்று அரசு முடிவு எடுக்கும்.

**திரு. ஆர். ரெங்கசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே. இந்த ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு மிகவும் குறைந்த கூலி கொடுக்கப்படுகிறது. 4 ரூபாய், 5 ரூபாய் என்று கொடுக்கப் படுகிறது. நம்முடைய அரசு கொடுக்கும் சம்பளத்திற்குக் குறை வாக அதாவது மினிமம் வேஜஸ் என்று சொல்லக்கூடிய சம்பளத்தைவிட குறைவாகக் கொடுக்கிறார்கள். எனவே அதை ஆராய்ந்து அதிகரிக்க அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன்.



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்படி ஆவன செய்யப்படும்.

**திரு. வி. பி. சிந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, நிரந்தரம் ஆக்கப்படாத தொழிலாளர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டால் அவர்களுக்கு நிரந்தரத் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் சம்பளம், வசதி எல்லாம் செய்து கொடுக்கவேண்டும் என்று அண்மையில் டெல்லி உச்ச நீதி மன்றம் தீர்ப்பு கூறியது மாண்புமிகு மின்துறை அமைச்சருக்குத் தெரியுமா என்று அறிய நான் ஆசைப்படுகிறேன். இதிலே அரசு ஒரு மாடல் எம்ப்ளாயி யாக இருக்க வேண்டும். தனியார் துறைக்கு எடுத்துக் காட்டாக அரசு இருக்கவேண்டும். பல்வேறு தீர்ப்புகளில் இந்த ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு சம வேலைக்கு சம கூலி வழங்கவேண்டும் என்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்யவேண்டும் என்றும் தீர்ப்புகள் வந்திருக்கின்றன. ஆனால் மின்வாரியத்தில் அதை எல்லாம் அமல் செய்வதற்குப் பதிலாக 15,700-க்கு மேற்பட்ட காண்டிராக்ட் தொழிலாளர்கள் இருந்து கொண்டிருக் கிறார்கள். இதற்கும் டெல்லி உச்ச நீதிமன்றம் சென்றுதான் நாங்கள் நியாயம் பெற வேண்டுமா அல்லது அரசு மீண்டும் இதை பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியத்திலே தற்காலிகத் தொழிலாளர் களை நியமித்து வேலை வாங்குவது என்பது ஒன்று. ஒப்பந்த தொழிலாளர்களை வைத்து வேலை வாங்குவது என்பது வேறு. உச்ச நீதிமன்றத்தில் என்ன தீர்ப்பு வழங்கப்பட்டு இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. மாண்புமிகு சிந்தன் போன்றவர்கள் இதிலே கண்ணும் கருத்துமாக இருந்து அவ்வப்போது வந்தத் தீர்ப்பை கவனித்து எங்களுக்குத் தகவல் தெரிவிக்கின்றபோது நாங்கள் நன்றிக்கடன்பட்டவர்களாக இருக்கிறோம்.

அடுத்து மின்வாரியத்தைப் பொறுத்தவரையில் நிரந்தரமான பணிகளில் தற்காலிகமாக வேலை புரிபவர்கள் ஒன்று. தற்காலிக மான வேலைகளில் தற்காலிகப் பணியாளர்களாக பணிபுரிபவர்

களை நிரந்தரப்படுத்துவது என்பது இயலாது. ஆதலால் இது பற்றி விரைவாக ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டிய அவசியத்தில் நாம் இருக்கிறோம்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சரவர்கள் மின் வாரியத்தில் வேலை கொடுத்துள்ள கணக்குப்படி 15,700 பேர் இப்படி ஒப்பந்தத் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். அங்கே நிரந்தரப் பணியிடங்கள் எத்தனை இருக்கிறதோ, அந்தப் பணியிடங்களுக்கு நிரந்தரமான ஆட்களை வைத்து இருக்கிறார்கள். கட்டுமானப் பணிகள் என்பது நிரந்தரம் அல்ல என்றார். இந்தக் கேள்வியே, நிரந்தரம் அல்லாத பணி என்பது சரியல்ல என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். ஆனால் மின்சாரம் சகல பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டு இருக்கிறது. சிறு சிறு கிராமங்களுக்குக் கூட போய்க்கொண்டிருக்கிறது. அண்மைக் காலத்தில் எத்தனையோ கிலோமீட்டர் தூரத்திற்கு புதிய லைன்கள் போடப்பட்டிருக்கின்றன. டிரான்ஸ்பார்மர்கள் பல புதிதாக போடப்பட்டிருக்கின்றன. அப்படி இந்தப் பணிகளை எல்லாம் காண்டிராக்ட் தொழிலாளர்களாகிய அவர்கள் செய்கிறார்கள். நிரந்தரக் களப்பணிகளின் பணிகளைச் செய்கிறார்கள். வெறும் கட்டுமானப் பணிகள் மட்டுமல்ல. குறைந்த தொழிலாளிகளை வைத்து நிரந்தர வேலை வாங்குவது என்ற லைனிலிருந்து மாற்றி ஆட்கள் குறைக்கப்பட்டுள்ளார்களா, இல்லையா? இப்போது அமைச்சர் சொன்ன மாதிரி அந்த ஆய்வுக் குழுவினுடைய பரிந்துரைகள் ஆராய்ச்சி செய்யப்பட்டு, எத்தனை நிரந்தர ஜாப் இருக்கிறதோ அத்தனையிடங்களிலும் நிரந்தரத் தொழிலாளர்களை அமர்த்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கட்டுமானப் பணிகளில் பொதுவாக அவர்கள் தற்காலிகப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மெயின்டெனன்ஸ் என்று சொல்லப்படும் பராமரிப்புப் பிரிவிலே நிரந்தரமான பணிகளைப் பொறுத்தவரையில், காலியிடங்கள் இருக்குமானால் நிச்சயமாக மின் வாரியம் அதைப்பற்றி முடிவெடுக்கும்.



திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, மின் வாரியத்திலே இதுபோன்ற பணி புரிகிற கான்ட்ராக்ட் லேபரர்ஸ் எத்தனை ஆண்டுக்காலமாக பணிபுரிந்து வருகிறார்கள், அவர்களிடம் எந்தத்தன்மையான வேலைகள் ஒப்படைக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குகின்ற வகையில் மின் தொடர்புக் கம்பிகளை நிர்மாணிப்பது கட்டுமானப் பிரிவு. அதேபோல் மின் உற்பத்தி நிறுவனங்களில் ‘கோல் ஹாண்ட்லிங், ஆஷ் ஹாண்ட்லிங்’ போன்றவைகளில் நியமிக்கப்படுகிறார்கள். எத்தனை ஆண்டுக்காலம் என்கின்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

## கடலூரில் அனல் மின் நிலையம்.

667—(* வினா எண் 9073) திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூரில் துவங்க இருக்கும் புதிய அனல் மின் நிலையம் எவ்வளவு ஏக்கர் நிலப் பரப்பளவில் எவ்வளவு செலவில் உருவாகிறது ?

(ஆ) அதன் மூலம் எவ்வளவு மெகாவாட் மின்சாரம் பெற முடியும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மற்றும் (ஆ) ரூ. 630 கோடி மதிப்பீட்டில் 800 ஹெக்டேர் (2000 ஏக்கர்) நிலப் பரப்பில் முதல் கட்டத்தில் ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறன் கொண்ட மூன்று பிரிவுகளும், இரண்டாவது கட்டத்தில் 210 மெகாவாட் திறன் கொண்ட இரு பிரிவுகளும், இறுதிக் கட்டத்தில் ஒவ்வொன்றும் 500 மெகாவாட் கொண்ட மேலும் இரண்டு பிரிவுகளும் கொண்ட அனல் மின்நிலையம் அமைக்க மின்வாரியம் திட்ட அறிக்கையை தயாரித்து வருகிறது.

**திரு. துரை அன்பரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் ஆற்காடு மாவட்டம் கடலூரில் அமையயிருக்கின்ற அனல் மின் நிலையத்தின் வேலைகள் நடப்பு ஆண்டிலே துவங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, இப்போதுதான் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. இதை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று இந்திய அரசை நாம் வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

**திரு. துரை அன்பரசன் :** தலைவர் அவர்களே, துவங்கப்பட இருக்கின்ற மின் நிலையம், எந்த நாட்டினுடைய உதவியோடு செயல்பட இருக்கிறது? அத்துடன் எந்தெந்த வகைகளில் வெளி நாட்டு நிறுவனம் நமக்கு உதவி செய்ய காத்திருக்கிறது என்பதை அறிய விரும்புவதோடு, கடலூரிலே தயாராக காத்திருக்கிற அதிலே உற்பத்தியாகின்ற மின்சாரம், பொதுவாக தமிழகத் தேவைக்குப் பயன்படுத்தப்படுமா, அல்லது வெளி மாநிலங்களுக்குப் பயன்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அமைப்பதற்காக சோவியத் யூனியன் உதவி தர முன் வந்துள்ளது. அதைப் பற்றி நம்முடைய முதல்வர் அவர்கள் இந்திய அரசுக்கு 6—4—1986 அன்று கடிதம் எழுதி இருக்கிறார். சோவியத் நாட்டினுடைய தலைவர் திரு. கோர்பச்சேவ் அவர்கள் இங்கே டெல்லிக்கு வருகிறபோது இந்தத் திட்டத்தையும் சேர்த்து அதிலே பேசப்படவேண்டும் என்று அந்தக் கடிதத்தின் மூலம் நாம் இந்திய அரசைக் கேட்டிருக்கிறோம். கடலூரில் உற்பத்தியாகக் கூடிய மின்சாரம் தமிழ்நாட்டிற்கு மட்டும்தான் பயன்படும்.





**சந்தன எண்ணை தொழிற்சாலைகள்**

668—(* வினா எண் 6095) **திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சந்தன எண்ணை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவை ஆண்டொன்றுக்கு ஈட்டும் லாபம் எவ்வளவு?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) சந்தன எண்ணெய் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்தில் ஒன்றும் தனியார் துறையில் மூன்றும் உள்ளன.

(ஆ) 1985 அக்டோபரிலிருந்து தமிழ்நாடு வனத்தோட்டக் கழக சந்தன தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்னும் ஓராண்டு முடிந்த பிறகே லாப நட்ட கணக்கு அறிய இயலும். தனியார் தொழிற்சாலைகளைப் பற்றிய இலாப—நஷ்ட விவரம் அரசிடம் இல்லை.

**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உற்பத்தியாகின்ற சந்தன எண்ணெயை ஏற்றுமதி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? உற்பத்தி ஆகும் சந்தன எண்ணெய்யை மூலப் பொருளாகக் கொண்டு சந்தன சோப்பு செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, சில மாதங்களுக்கு முன்பு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக ஒரு டன் சந்தன எண்ணெய் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இன்னும் 2 டன் சந்தன எண்ணெய் விற்பதற்காக விலை விவரங்கள் பேசப்பட்டு வருகின்றன. இதன் தொடர்பாக ஒரு துணைத் தொழில்—சோப்புத் தொழிற்சாலை ஆரம்பிக்கின்ற திட்டம் எதும் இப்போது இல்லை. ஆனால், இந்தத் தூள்களை, சந்தன மரத்திலிருந்து கிடைக்கின்ற தூள்களை வைத்துக் கொண்டு மென் சந்தனத் தூள் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு ஒரு திட்டம் உருவாக்கப் பெற்று, விரைவிலே தொடங்கப்படவிருக்கிறது.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டு உற்பத்தி செய்வதற்கு மல்பரிச் செடிகளை வளர்ப்பதற்கு தனிப்பட்டவர்களுக்குக் கடன் கொடுப்பதைப் போல, சந்தன மரங்களை தனிப்பட்டவர்கள் மலைகளில் உள்ள தங்களுடைய காடுகளில் உற்பத்தி செய்வதற்குக் கடன் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இதுவரை சந்தன மரங்கள் இயற்கையாகவே வளர்கிற ஒன்று என்று கருதப்பட்டது. ஆனால், சமீப காலத்திலே தமிழக அரசினுடைய வனத்துறை அந்தச் சந்தன மரங்களையும் நாம் பயிர் செய்ய முடியும் என்று முயற்சி செய்து, ஒன்றிரண்டு இடங்களில் ஆரம்பப் பலனை அந்த முயற்சி அளித்திருக்கிறது. பெரிய அளவில் பட்டுப் பூச்சி வளர்க்கும் தொழிலைப்போல இங்கே இந்த சந்தன மரங்களை வளர்ப்பதற்கு தனியாருக்கு ஊக்கம் அளிப்பதென்பது நடைமுறையில் இயலாத ஒன்று ஆகும்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெற்குப்பட்டு சந்தன எண்ணெய்த் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்ற சந்தன எண்ணெய் எந்த வகையில் விற்பனை செய்யப்படுகிறது? உலகச் சந்தையில் எந்தெந்த நாடுகள் அதை வாங்க முன் வருகின்றன என்பதை அறிய விரும்புவதோடு, சந்தனக் கட்டை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தடை விதித்திருப்பதைப் போல, சந்தன எண்ணெய் ஏற்றுமதியில் ஏதேனும் சங்கடங்கள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, உலக நாடுகளோடு நாம் நேரடியாக தொடர்பு கொண்டு இந்த சந்தன எண்ணெய்யை விற்க இயலாது. ஆகவே, அவர்களுக்கு வழங்குகின்ற ஏஜென்சிகள் மூலம் நாம் இந்த விற்பனையை நடத்திக் கொண்டிருக்கிறோம். இப்போது முதல் முறையாக, ஒரு டன் எண்ணெய் 18.25 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. கொஞ்சம் உலகச் சந்தையினுடைய விலை





குறைவாக இருக்கின்ற காரணத்தினால் இப்போது கிலோ ஒன்று 1,800 ரூபாய்க்கு விற்பதற்காக பேரம் பேசப்பட்டு வருகிறது. ஆகவே, உலகத்தினுடைய சந்தையில் நம்முடைய சந்தன எண்ணெய்யினுடைய தரம் உயர்ந்ததாக இன்றைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த எண்ணெய்யை ஏற்றுமதி செய்வதற்கு எந்தவிதமான சங்கடங்களும் இல்லை.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் சந்தன ஆலையில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். எனவே, அவர்களது பணிப் பாதுகாப்புக்காக அரசு அவர்களை நிரந்தரம் செய்து, அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்குமா? சந்தன மரங்கள் எங்கெங்கு பதப்படுத்தப்படுகின்றன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த சந்தன எண்ணெய்த் தொழிற்சாலை இப்பொழுதுதான் தொடங்கப்பட்டிருக்கிறது. இதிலே 89 நபர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நிரந்தரப்படுத்துவது என்பது இனிமேல்தான் முடிவெடுக்கப்பட வேண்டிய ஒன்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சந்தன மரங்களைப் பதப்படுத்துகின்ற இடத்தைப்பற்றிக் கேட்கிறார்கள். அதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் தர முடியும்.

## ஆனைமலைப் பகுதியை தேசிய பூங்காவாக்கல்.

669—(* வினா எண் 7354) திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 82 ஆனைமலைக்குன்று கிராமத்தில் உள்ள பூனாச்சி வனச்சாகம், தூணக்கடவு வனச்சாகம் முதலியவற்றை தேசிய பூங்காவாக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) பூனாச்சி மற்றும் தூணக்கடவு வனச் சாகங்கள் ஆனைமலை

வனவிலங்குச் சரணாலய எல்லைக்குள் உள்ளன. ஆனைமலை வனவிலங்குச் சரணாலயத்தைத் தேசியப் பூங்காவாக ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. மா. சுந்தரதாஸ்:** பேரவைத் தலைவர் அவர்களே. அரசின் பரிசீலனையில் உள்ளது என்று கூறியதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பணி எப்பொழுது தொடங்கப் படும், எப்பொழுது முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவரவர்களே, இது எப்பொழுது தொடங்கி எப்பொழுது முடியும் என்று சொல்ல முடியாத ஒரு பணியாகும். ஏற்கனவே இந்தப் பகுதியை நாம் வன விலங்கு சரணாலயம் என்று அறிவித்து அந்தக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறோம். இது தேசியப் பூங்கா என்று அறிவிக்கப்பட்டால் அதற்குள் எந்தவிதமான நடமாட்டங்களோ அல்லது வேறு பணிகளோ நடத்தவே கூடாது. இன்னும் சொல்லப்போனால், இதிலே ஒரு பகுதியை போர் ஏரியா என்று அவர்கள் தேர்ந்தெடுத்து அங்கே மனிதர்களே செல்லக்கூடாது, மனித நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென்ற அளவிற்கு எல்லாம் திட்டங்கள் இருக்கின்றன. இதில் அந்தப் பகுதியில் ஒரு கால் பகுதியிலே மலைவாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினை மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அவர்கள் இந்த இடத்திலேயிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டுமென்ற கருத்தை அந்த நிபுணர்கள் சொல்கிறார்கள். அப்படி அப்புறப்படுத்துவது என்பது நடைமுறையிலே சாத்தியமற்ற ஒன்று. ஆகவே, அந்த மலைவாழ் மக்கள் வாழ்கின்ற பகுதியை நீக்கிவிட்டு சுமார் 75 சதவீதம் பகுதியை தேசியப் பூங்காவாக ஆக்குவதற்கான திட்டத்தை தருமாறு அந்த நிபுணர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இவைகளையெல்லாம் பரிசீலித்து முடிவான அறிக்கை அரசுக்குத் தருவதற்காக தலைமை வன விலங்கு காப்பாளர், கோவையிலே இருக்கின்ற மாவட்ட வருவாய்த் துறை அதிகாரி, கோவையில் வன பாதுகாவலர் ஆராய்ச்சித் துறையிலே இருக்கிற அதிகாரி—ஆகிய மூவர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. அவர்கள் அறிக்கை கொடுத்த பிறகு அதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.



## சாலைகளில் நிரந்தரத் தடுப்புகள்.

670—(* வினா எண் 8714) **திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திற்கு முக்கிய பிரமுகர்கள் வருகின்றபோது தடுப்பு வேலி சவுக்குக் கட்டையால் அவ்வப்போது சாலைகளில் அமைக்கும்போது ஏற்படுகின்ற செலவுகளைக் கட்டுப்படுத்தவும், சாலைகள், பிளாட்பாரங்கள் சேதமடையாமல் அழகாக இருக்கவும், நிரந்தரமான தடுப்பு வேலி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** விவா அறிக்கை * ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவா அறிக்கையில் இப்படிப்பட்ட தடுப்பு வேலி அமைப்பதற்கு 25 கிலோமீட்டர் தூரம் ஆகும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதிலே மீனம்பாக்கத்திலிருந்து கிண்டி வரையில் வேண்டுமானால் பரிசீலிக்கப்படலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்வலாம் இது ஒரு முக்கியமான பணி, அவ்வபபொழுது அந்தச் சாலையில், அந்த பிளாட்பாரங்களில் கீழே தோண்டுவதும், பிறகு மூடுவதும் என்று இருப்பதால் அந்த இடமே பாழடைந்து விடுகிறது. எனவே, இதைப் படிப்படியாகவாவது, இந்த முக்கியமான, பிரதான சாலையாக விளங்குகின்ற காமராஜர் சாலை, அண்ணா சாலை, கிண்டி இராஜபவன் சாலை போன்ற சாலைகளிலேயாவது இப்படிப்பட்ட நிரந்தரமான தடுப்பு வேலியை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட முக்கியமான சாலைகளினுடைய நீளம் சுமார் 25 கிலோமீட்டர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. முக்கியமான தலைவர்கள் அல்லது விருந்தினர்கள் நகரத்திற்கு

@ 173 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

வருகின்றபொழுது அவர்கள் எந்தக் காரியங்களுக்காக, எந்த நிகழ்ச்சிகளுக்காகச் செல்கிறார்களோ அந்தப் பாதைகளிலே மட்டும் இப்படிப்பட்ட தடுப்புப் பணிகள் ஏற்படுத்தப்படுகின்றன. ஆகவே, எல்லாவிடங்களிலேயும் இப்படிப்பட்ட ஒரு நிரந்தர தடுப்பு ஏற்படுத்த வேண்டும் என்று நாம் அதற்காக ஒரு கணக்கிட்டுப் பார்க்கின்ற நோக்கில் இரும்பு தடுப்பு ஏற்படுத்த வேண்டுமென்றால் ஒரு மீட்டருக்கு 650 ரூபாய் வீதம் ஆகிறது. ஆகவே, 25 கிலோமீட்டர் தூரத்திற்கு நிரந்தரமான தடுப்பை ஏற்படுத்தியாக வேண்டும். இப்படிப்பட்ட சவுக்குக் கட்டையால் ஏற்படுத்தப்படும் இந்தத் தற்காலிகத் தடுப்புக்கு ஒரு கிலோ மீட்டருக்கு 11,000 ரூபாய்தான் ஆகிறது. ஆகவே இது மிகப் பெரிய செலவினம் கொண்டிருக்கிற ஒன்று என்கின்ற அந்த நிலைமையோடு, அப்படி அமைத்தாலும் அது நிரந்தரமான பாதுகாப்பாக இருக்குமா என்பது அடுத்த பிரச்னை. ஆகவே. இதைப் பரிசீலிக்கின்ற இந்தச் சூழ்நிலையில் இப்பொழுது இருக்கிற முறைதான் சரியான முறை என்கின்ற முடிவுக்குத்தான் அரசு வந்திருக்கிறது.

(முற்பகல் 9-20)

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை தொலைநோக்குப் பார்வையோடு பரிசீலிக்க வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில்—ஒரு கிலோ மீட்டருக்கு செலவு ரூ. 11,000 ஆகிறது என்கிற விவரத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ஜனாதிபதி அவர்களும் பிரதம அமைச்சர் அவர்களும் மற்றும் மிக முக்கியமானவர்கள் எல்லாம் வருகிறபொழுது ஒரு வருடத்திற்கு 4 முறை, 5 முறை வந்தால், 5 ஆண்டுக்காலத்தில் எவ்வளவு ஆகும் என்று கணக்குப் பார்க்கும் போது, ஒரு நிரந்தரமான தீர்வாக, அல்லது அந்தத் தடுப்பு வேலிகளை ஒரே இடத்தில் நிரந்தரமாக அமைக்காமல், அதை அவ்வப்போது எடுத்து, எந்த எந்த வழிகளில் வருகிறார்களோ அந்த, அந்த வழிகளிலே பயன்படுத்துகின்ற முறையிலுள்ள திட்டத்தை, படிப்படியான திட்டமாக நடைமுறைப்படுத்தப் படுமா? அல்லது, அதைக் கூட தனியார் நிறுவனங்கள், குறிப்பிட்ட தூரத்திற்கு அவர்கள் அந்தப் பணியை இலவசமாக செய்வதற்கு விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் முன்னாலேயே குறிப்பிட்டிருக்கிறேன், முக்கிய பிரமுகர்கள் வருகிறபொழுது, அவர்கள் கலந்துகொள்கிற நிகழ்ச்சி களை ஒட்டி, எந்தப் பாதைகளில் செல்கிறார்களோ அங்கேதான் அந்தத் தடுப்புகள ஏற்படுத்தப்படுகின்றன. ஆகவே, நிரந் தரமாக, எல்லா இடங்களிலும் ஏற்படுத்தப்படுமானால், அதற்கு ஒரு கிலோ மீட்டருக்கு ரூ. 13 இலட்சம் ஆகிறது, 25 கிலோ மீட்டர் வருகிறது. இப்பொழுது தற்காலிகமாக, இப்படி அமைக்க ரூ. 11,000 தான் ஆகிறது. அப்படியே நிரந்தரமான அமைப்பை இவ்வளவு செலவிலே அமைத்தாலும், அது எவ்வளவு காலத்திற்குச் சரியாக இருக்கும், பாதுகாப்பாக இருக்கும், மக்க ளாலே பாதுகாக்கப்படும் என்கிற ஒரு பிரச்னையும் இன்னொரு பக்கத்திலே இருக்கிறது. நாம் இப்பொழுதே பார்க்கிறோம், சென்னை அண்ணாசாலையிலே போக்குவரத்து வசதி செய்வதற் காக, மிகப் பெரிய செலவில் அந்தச் சாலையின் நடுவிலே தடுப்பு அமைத்தோம். ஆனால், ஒரு அரசியல் கட்சி ஊர்வலத்தை நடத் துகிறபொழுது, அவர்களுக்கு அது இடையூறாக இருக்கிறது என்று அதை எல்லாம் பிய்த்து எறிந்து போட்டுவிட்டார்கள். ஆகவே, நம்முடைய நாட்டு மக்களை முதலிலே அதற்கெல்லாம் தயார்படுத்த வேண்டிய சூழ்நிலையில் நாம் இருக்கிறோம். ஒரு நாட்டினுடைய பொதுச் சொத்து பாதுகாக்கப்பட வேண்டு மென்ற உணர்வையும் ஏற்படுத்தி, அதற்குப் பிறகுதான் இவ்வளவு செலவிலே நிரந்தரமான அமைப்புகளை ஏற்படுத்துவதும் உகந்த தாகக் கூட இருக்கும்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு நிரந்தரமான தடுப்புச் சுவர் அமைக்கிற நோக்கில் ஏற்படுகிற செலவைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 2, 3 கிலோ மீட்டர் அள விற்கு "மேக் ஷிப்ட்" என்று சொல்வார்களே, அவ்வப்போது கழற்றி மாற்றிக் கொள்கின்ற அளவுக்கு ஒன்றினைச் செய்து வைத்துக் கொண்டால், பிரமுகர்கள் வருகின்ற பாதையிலே, தேவைப்படுகின்ற பாதையிலே மட்டும் அவற்றை நிறுத்தி வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்து, நிகழ்ச்சி நடந்து முடிந்த தற்குப் பிறகு அவற்றைக் கழற்றி மீண்டும் கொண்டு வந்து

வைத்துக் கொள்ளலாமே, அப்படிப்பட்ட ஏற்பாட்டை, மேக்ஷிப்ட் அரேஞ்ச்மென்ட் செய்தால் பணமும் மிச்சமாகுமே, அரசாங்கம் அதைப் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இறுதிப் பதிலிலே விமான நிலையத்திலிருந்து கிண்டி ரெயில்வே நிலையத்திற்கு இடையேயுள்ள மவுண்ட் சாலையை வேண்டுமானால் பாதுகாப்புத் தடுப்புகளால் நிரந்தரமாக தடுக்கப்படலாம் என்கின்ற கருத்தையும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள், துறையிலிருந்து. மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் சொல்வதைப் போல், சில முக்கியமான இடங்கள் என்று நாம் கருதுகிற பொழுது, எவ்வளவு நீளம் முக்கியமான இடம் என்பதுதான் பிரச்னை. 25 கிலோ மீட்டர் நீளம் உள்ள சாலைப் பகுதிகளில், முக்கியமான பிரமுகர்கள் எந்த நிகழ்ச்சிக்கு, எந்தப் பாதை வழியாகப் போவார்கள் என்பதை நாம் அறுதியிட்டுக் கூற முடியாது. ஆகவே, 10 கிலோ மீட்டர் அல்லது 15 கிலோ மீட்டர் தூரத்திற்குக்கூட நாம் தயாராக வைத்திருக்க வேண்டும். ஆனால், அப்படி அளவு வைத்து, நீங்கள் சொல்வதைப் போல் கழற்றி வைத்துவிட்டு தேவையானபொழுது கொண்டு வந்து மாட்டுவது என்ற சூழ்நிலையை ஒரு அரசாங்கம் மேற்கொண்டால், செத்த ஆடு கா பணம், சுமைக் கூலி முக்கால் பணம் என்கின்ற பழமொழி நடைமுறையிலே வரும். காரணம் அதைச் செய்கிற செலவைவிட, அதைப் பாதுகாப்பதற்காக அலுவலர்களை நியமித்து, அலுவலர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுப்பி, அவர்களுக்கு 8 மணி நேரம் வேலை என்றும் சொல்லி, இரவு நேரத்திலே அவர்களை அழைக்கிற பொழுது அதற்கு ஓவர்டைம் என்று சொல்லி, அதற்குப் புதிதாக ஆட்களை அமர்த்தி—ஆகவே, ரூ. 11,000-க்கு யாரோ இந்த நாட்டிலே தொழிலைச் செய்து கொண்டிருக்கிறவர்களுக்கு தொழிலும் வாய்ப்பளித்து, அவர்கள் அக்கறையோடு செய்து, அவர்களுடைய சாமான்கள், அதனாலே பாதுகாப்பாக எடுத்துச் செல்ல வேண்டுமென்ற அந்த உணர்வோடும், காரியங்களிலே நமக்கும் பாதுகாப்பை ஏற்படுத்துகிறார்கள். தேவையான பொழுது செய்யவேண்டிய செலவையும் செய்து கொண்டிருக்கிறோம்.



**திரு. சு. பாலன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிற நேரத்தில் அண்ணா சாலையில் பாதுகாப்புக்காகப் போடப்பட்ட அந்தத் தடுப்பை ஒரு அரசியல் கட்சிக்காரர்கள் நடத்திய ஊர்வலத்தில் உடைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள். கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லவேண்டாம்.

**திரு. சு. பாலன் :** ஆகவே அப்படி நெருக்கடியாக ஜனங்கள் வரும்போது அது உறுதியாக இல்லாததன் காரணமாக அப்படி உடைந்ததாகவும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இரும்பில் தடுப்புச் சுவர் போடவேண்டுமென்று மாற்றியது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஏதோ விலங்கினங்களுக்குத்தான் தடுப்புச் சுவர் எல்லாம் போட்டு, பாதுகாப்புக் கம்பிகள் எல்லாம் போட்டு நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது. நல்ல ஆறறிவு படைத்த, பகுத்தறிவு படைத்த, எல்லா உலக அனுபவங்களையும் தெரிந்த மனிதர்கள் நடமாடுகிற இடத்திலே வேலியே தேவை இல்லை. இருந்தாலும் நம் நாட்டு பழக்கவழக்கப்படி இன்று உலக சமுதாயத்தினுடைய உணர்வுகளையொட்டி அப்படிப்பட்ட ஒரு தடுப்பையும் போடுகிறோம். அந்தத் தடுப்பைக்கூட நீங்கள் அவசியமானபோது அதை உடைத்தெறிந்து விட்டுத்தான் செல்வோம் என்றால்—அதற்கென்ன—தடுப்புச்சுவர் கட்டினால் மாத்திரம் அதை உடைப்பதற்கு எவ்வளவு நேரமாகும்?

**திரு. வி. பி. சிந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடுப்பு வேலி இல்லாமலேயே மக்கள் கட்டுப்பாட்டையும் உணர்வுகளையும் தட்டியெழுப்பி இந்தக் காரியங்களைச் செய்ய முடியாதா? மேற்கத்திய நாடுகளில் எல்லாம் இப்படி தடுப்பு வேலிகள் போட்டு விழாக்கள் நடத்துவது, பெருந்தலைவர்கள் வரும்போது இப்படி ஏற்படுத்துவதில்லை. அப்படி நாமும் முயற்சி செய்தால் என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்களுடைய இந்தக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலன் அவர்களிடம் சமர்ப்பித்து அவர்களிடமிருந்து அந்த விடையை நாம் பெற்றால் அதை என்னுடைய விடையாக அவர்கள் ஏற்றுக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வனத்துறையால் பராமரிக்கப்படும் தோட்டங்களில் பஞ்சாயத்துக்களுக்குப் பங்கு.**

671—(* வினா எண் 9060) **திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கருவேலமரம், நீலகிரி தைலமரம் போன்ற மரங்களை பஞ்சாயத்துக்குச் சொந்தமான இடத்தில் வனத்துறை பிளான்ட் செய்யும்போது வருமானத்தில் 50 சதவிகிதம் பஞ்சாயத்துக்கு அனுமதிக்கப்பட வேண்டுமென்று ஒப்பந்தம் செய்யப் பட்டிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) ஒப்பந்தம் என்ற முறையில் எதும் செய்யப்படவில்லை.

(ஆ) 1—4—1981 க்கு முன்னர் முழுமையாக பஞ்சாயத்துக்குச் சொந்தமான இடத்தில் எழுப்பப்பட்ட தோட்டங்களின் வருவாயில் மட்டிலும் 50 சதவிகிதம் தொகை பஞ்சாயத்துக்களுக்கு பங்குத் தொகையாக வழங்கப்பட்டு வந்தது. ஆனால் 1—4—1981 க்குப் பிறகு பஞ்சாயத்திற்குச் சொந்தமான நிலங்களில் எழுப்பப்பட்டத் தோட்டங்களுடன் பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை போன்ற இதர அரசுத் துறையினரின் நிலங்களில் எழுப்பப்பட்ட தோட்டங்களின் வருவாயிலும் 50 சதவிகிதம் தொகை பஞ்சாயத்துக்களுக்கு பங்காக வழங்கப்பட்டு வருகிறது.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்துக்களுக்கு தேசிய காடுகள் அமைப்புத் திட்டத்திலே பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட ஏரி குளங்களிலே இப்படிச் செடிகள் வைத்து விருத்தி செய்தால் அதில் இருந்து வரக்கூடிய வருவாயில் பஞ்சாயத்துக்கு 50 சதவிகிதம் கொடுப்ப



தாக ஒப்பந்தம் செய்யப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக இருந்தபோது அப்படி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதாக அறிகிறேன். ஆனால் அவர்கள் 50 சதவிகிதத்தை அளித்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். நான் 1974-75-ல் சேர்மனாக இருந்தபோது ப்ளான்ட் செய்து இரண்டு ஈல்டு (மகசூல்) எடுத்துவிட்டார்கள், அப்படி இரண்டு ஈல்டு எடுத்தும் இன்றுவரை 1 சதவிகிதம் கூட அந்தப் பஞ்சாயத்துக்கு கிடைக்கவேண்டிய ஈவுத் தொகை கிடைக்கவில்லை. சம்பந்தப்பட்ட அந்த ஆணையாளரை அணுகியும் அந்தத் தொகை கிடைக்கவில்லை. அரசாங்கம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** கேள்விதான். எந்தத் தொகையும் கிடைக்கவில்லை. ஆகவே அது கிடைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு—அரசாங்கத்தின் கவனத்திற்கு அது கொண்டுபோகப்பட்டிருக்கிறது, அரசாங்கம் அனுமதி தரவில்லை என்று அவர்கள் பதில் அளிக்கிறார்கள். ஆகவே அது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு விகிதாசாரத்தொகை கிடைக்க அரசு ஆணை பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒப்பந்தம் இல்லை என்று சொன்னது ஓரிரண்டு துறைகளுக்கிடையே எழுத்து மூலமாக ஒப்பந்தம் ஏற்படுத்தப்படுவதில்லை என்பதற்காகச் சொன்னேன். முன்னாலே இருந்த முறைப்படி அந்தப் பஞ்சாயத்துக்குச் சொந்தமான நிலங்களில் பயிரிடுகிறபோது அதில் பாதித் தொகையை அவர்களுக்கு வழங்குவது என்பதை ஒரு முறையாக வைத்துக் கொண்டு வந்தோம். பஞ்சாயத்து நிலங்களுக்கு மட்டுமல்ல. அரசாங்கத்தின் நெடுஞ்சாலைத்துறை அல்லது பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான நிலங்களில் பயிரிட்டாலும் 50 சதவிகிதம் கொடுப்பது என்பது இப்போதும் பழக்கத்தில் இருக்கிறது. இதை இப்போது பல மாவட்டங்களில் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். 447 பஞ்சாயத்துக்களுக்கு ரூ. 84, 60

209.10 23—1—1986 முடிய கொடுப்பதற்கு அனுமதிகள் வழங்கப் பட்டிருக்கின்றன. குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்பு கொண்டிருக்கிற தர்மபுரி மாவட்டத்தில் 39 பஞ்சாயத்துக்களுக்கு ரூ. 16,92,186 கொடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. கொடுப்பதில் ஏதாவது தாமதமாகியிருக்கிறதா என்று தெரியவில்லை. அப்படியிருந்தால் அதை உடனடியாகக் கொடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

(முற்பகல் 9-30)

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டு விட்டது என்று குறிப்பிட்டார்கள். இது என்னுடைய சொந்த பஞ்சாயத்து. நான் இதிலே 3 முறை சேர்மனாக இருந்திருக்கிறேன். நாங்கள் ஆணையாளர் மூலமாக எழுதிக் கேட்டும், இன்னும் இந்தக் குறிப்பிட்ட பஞ்சாயத்திற்கு வரவில்லை. காட்டிலாகா சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு அனுமதி கொடுத்து, இரண்டு ஈல்டு எடுத்து விட்டார்கள். ஆனால், அந்தப் பஞ்சாயத்திற்கு அதற்கான விகிதாசாரம் கிடைக்கவில்லை. ஆகவே, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் உடனடியாக வழங்குவதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது. சமூக காடு வளர்ப்புத் திட்டத்தின் சிறப்பை கிராம மக்கள் தெரிந்து கொள்ளுகின்ற வகையில், எல்லோருக்கும் அறிமுகப்படுத்துகின்ற வகையில் இதை ஒரு நிகழ்ச்சியாகக்கூட ஏற்பாடு செய்து, அதிலே வழங்கப்பட வேண்டுமென்று தெரிவித்தேன். ஆகவே, அவர்கள் பணத்தையெல்லாம் தயாரித்து வைத்திருக்கிறார்கள் என்று அறிகிறேன். மாண்புமிகு உறுப்பினர் தொடர்பு கொண்டிருக்கின்ற இந்த பஞ்சாயத்து, தர்மபுரி மாவட்டத்திலுள்ள 39 பஞ்சாயத்துக்களில் ஒன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். உடனடியாக வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்படும்.



**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறை மூலமாக வளர்க்கப்படுகின்ற சமூகநலக் காடுகளை பராமரிப்பதற்குக் கொடுக்கப்படுகின்ற தொகைக்கும், உள்ளாட்சித் துறை மூலமாக வளர்க்கப்படுகின்ற சமூகநலக் காடுகள் பராமரிப்பதற்காகக் கொடுக்கப்படும் தொகைக்கும் நிரம்ப வேறுபாடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாக வனத்துறை மூலம் பராமரிப்பதற்கு கொடுக்கப்படுகின்ற தொகை குறைவு என்று சொல்லுகிறார்கள். எனவே, இந்த வேறுபாட்டை சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா? மேலும், இப்போது இரண்டு துறைகளின் மூலம் இந்த சமூகநலக் காடுகளை வளர்த்து வருகிறோம். எனவே, இந்த இரண்டு ஏஜன்சிகள் என்பதை மாற்றி, ஒரே ஏஜன்சி மூலம் இந்த சமூக நலக் காடுகள் வளர்க்கும் திட்டம் பரிசீலிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையின் மூலம் வளர்க்கப்படுகின்ற சமூகக் காடுகளுக்கு அங்கே என்ன கூலி, ஊதியம் என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. வனத் துறைக்கும், அதற்கும் வேறுபாடு இருக்கின்றது என்றால், அது தனியாக கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை. அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெளிவான விவரங்களைச் சேகரித்து, இது குறித்துக் கேள்வி கேட்டால், அதற்கான விவரங்கள் சேகரிக்கப்பட்டு, தெளிவாக பதில் சொல்ல முடியும். இரண்டு துறைகளின் மூலம் சமூகக் காடுகள் வளர்க்கும் திட்டத்தைப் பற்றித் தெரிவித்தார்கள். இந்த ஆண்டு முதல் நம்முடைய 'சோஷியல் பாரஸ்ட்ரி' அதாவது சமூகக் காடுகள் வளர்ப்பதை வனத் துறையினர் செய்யவேண்டும் என்று மத்திய அரசு மிக உறுதியாகத் தெரிவித்து, அதற்காக 18 கோடி ரூபாயை வழங்கியிருக்கிறார்கள். அந்தக் கருத்தை மாநில அரசும் ஏற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, அந்த 18 கோடி ரூபாய் சமூகக் காடுகள் வளர்க்கும் திட்டத்தை வனத் துறை மூலம் இந்த ஆண்டு செய்யப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மதுராந்தகத்தில் சிறு காகித ஆலை.

(*2—(* வினா எண் 6014) திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகத்தில் ஒரு மினி பேப்பர் ஆலை தொடங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) மற்றும் (ஆ) 1980-ம் ஆண்டு பிப்ரவரி திங்களில் மதுராந்தகத்தில் ஒரு மினி பேப்பர் ஆலை தொடங்க அரசு ஒப்புதல் அளித்தது. பிறகு சிறு காகித ஆலை அமைக்கும் திட்டம் தொழில் அளவில் சாத்தியமாக இருப்பினும், பொருளாதார ரீதியில் கட்டுப்படியாகாது என வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர். இந்த கருத்தின் அடிப்படையில் மேற்கூறிய திட்டத்தினை கைவிட அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இந்த மினி பேப்பர் ஆலை மதுராந்தகத்தில் தொடங்குவதற்கான திட்டமிருந்தும், அது கைவிடப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு மதுராந்தகத்தைச் சுற்றி இருக்கக்கூடிய அந்த சுற்றுப்புற சூழ்நிலைகளில் இந்த மினி பேப்பர் ஆலையைத் தொடங்குவதற்கான கச்சாப் பொருள்களான கரும்புச் சக்கை, யூகலிப்டஸ் மரங்கள், மற்றும் இதர கச்சாப் பொருள்கள் அதிகமாக அங்கே கிடைக்கின்றன. இந்த மதுராந்தகம் ஊரானது தமிழகத்திலே போக்குவரத்திற்கு ஒரு முக்கிய கேந்திரமாக உள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறு பரிசிலனை செய்து, இந்த மினி பேப்பர் ஆலையை—அன்றைக்கு பாரதிதாசன் சொன்னார், "ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம், ஆலைகள் வைப்போம்" என்று சொல்லிய அந்த பழம்பெரும் புலவர் பாடலுக்கு ஏற்ப, அந்த காகித ஆலையை அரசு அங்கே அமைத்துத் தருமா என்று தொழில் அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.







மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதியார், பாரதிதாசன் இரண்டில் ஒருவர் சொல்லி இருக்கிறார். . . . (கூச்சல்—குழப்பம்) அது பாரதியார் சொன்ன பாடல் தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லோரும் இலக்கியம் பேசுவதால் வந்த நிலை இது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதுராந்தகம் காகித ஆலையைப் பொறுத்தவரையில் அது சிறு காகித ஆலையாக அப்போது திட்டமிடப்பட்டது. சிறு காகித ஆலை, கரும்புச் சக்கையிலிருந்து செய்வது லாபமாகயிராது என்பதுதான் அப்போது அளிக்கப்பட்ட தீர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் தங்கவேலு அவர்கள் சிறு காகித ஆலையை பற்றி மீண்டும் கேட்கிறார்கள். பெரிய காகித ஆலை தற்போது வெற்றிகரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதுபோன்ற ஒரு திட்டத்தை பல்வேறு வசதிகள் இருக்கின்ற இடங்களை தேர்ந்தெடுத்து—வேண்டுமானால் ஒரு குழு போட்டு பரிசீலிக்கலாம்.

திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மினி பேப்பர் ஆலை தொடங்குகின்ற காரணத்தால் மதுராந்தகத்தை சுற்றியிருக்கின்றவர்கள்—தீண்டத்தகாத தொழிலாளர்கள் குறிப்பாக தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் அதற்கடுத்தார்போல் வறுமைக்கோட்டின்கீழ் உள்ள நரிக்குறவர்கள் நிறைய இருக்கக்கூடிய ஒரு பகுதி. ஆகவே, தயவு செய்து தொழில் துறை அமைச்சர் அவர்கள் இந்த இடத்தில் மீண்டும் உடனே ஒரு ஆலை நிறுவுவதற்கு ஆவன செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஜாதிக்காரர்கள் தான் இந்த பேப்பரை செய்கிறார்கள் என்று ஒன்றும் இலக்கணம் இல்லை. அது பெரிய ஆலையாக இருந்தால் அநேகமாக அதிகம் படித்தவர்கள் எல்லாம் தேவைப்படுகிறார்கள். அப்படித்தான் இப்போது இருக்கின்ற புகளூர் ஆலையில் நிர்வாகிகள் இருக்கிறார்கள். மிகக் குறைந்த எண்ணிக்கையில் உள்ளவர்கள்தான் வேலைக்கு

அமர்த்தப்படுகிறார்கள். அது முழுமையாக இயந்திரமயமாக்கப்பட்ட தொழிற்சாலையாகத்தான் இயங்கி வருவதை நான் பார்த்து இருக்கிறேன். மற்ற வசதிகள் எப்படி இருக்கின்றன என்பதைப் பார்த்துத்தான் ஒரு காகித ஆலை நிறுவ முடியும். பெரிய காகித ஆலை என்றால் தற்போது ரூ. 250 கோடியாகும். அவ்வளவு பெரிதான பரிசோதனைகள் செய்த பின்புதான் ஏற்றுக்கொள்ள முடியும்.

## பெரம்பலூர் சர்க்கரை ஆலை.

673—(* வினா எண் 7813) **டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் துணை யூனிட்டை ஜெயங்கொண்டம் தொகுதியில் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** திருச்சி மாவட்டம் பெரம்பலூர் சர்க்கரை ஆலை துணை யூனிட் ஒன்று பெரம்பலூர் வட்டத்தில் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. மத்திய அரசிடமிருந்து உரிமம் கிடைத்ததும், ஆலை அமைப்பதற்கான இடம் தேர்ந்தெடுக்கப்படும்.

**டாக்டர் ந. மாசிலாமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டான் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. அங்குள்ளவர்கள் விவசாயத்தை நம்பிக்கொண்டிருக்கிறார்கள். 15 ஏக்கர் பாசனத்தை பெறுகின்றது. அங்கே நெல் விளைவித்து நட்டம் ஏற்படுகின்றது. எனவே, பெரம்பலூர் சர்க்கரை ஆலையினுடைய துணை ஆலையை அங்கே நியமித்தால் அதன் மூலமாக கரும்பு உற்பத்தி செய்து விவசாயிகள் பலன் பெறுவதற்கு வாய்ப்பாக அமையும். எனவே, இதை மனதிலே கொண்டு அமைச்சர் அவர்கள் இந்த ஜெயங்கொண்டான் தொகுதியிலே ஆரம்பிப்பதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் துணை சர்க்கரை ஆலையை அமைப்பது பற்றி அரசு ஒரு முடிவு ஏற்கனவே எடுத்து இருக்கிறது. எந்த இடம் என்பது பற்றித்தான் முடிவு எடுக்க



வில்லை. சர்க்கரை இயக்குநர் அவர்கள் அதை தேர்ந்தெடுத்து அங்கே இருக்கின்ற கரும்பு வளர்ச்சி, விவசாய வளர்ச்சி, தண்ணீர் வசதி எல்லாவற்றையும் பார்த்து செய்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் பகுதியிலே, ஆண்டிமடம், ஜெயங்கொண்டான், பெரம்பலூர், உப்பிலியாபுரம் மிகவும் பின்தங்கிய பகுதிகள். ஜெயங்கொண்டான் பகுதி அல்லாமல் மற்றைய பகுதிகளில் இந்த சர்க்கரை ஆலை யூனிட் ஆரம்பிக்கின்ற ஒரு நிலை ஏற்பட்டால் பொது மக்கள் மத்தியிலே ஒரு தவறான எண்ணம் உருவாகும். ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் இருக்கின்ற இடங்களில் துவங்குகிறார்கள் என்ற எண்ணம் ஏற்படும். எனவே, இதனை மனதிலே கொண்டு அமைச்சர் அவர்கள் ஜெயங்கொண்டத்திலே துவங்குவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே துணை ஆலை திட்டக்குடி பகுதியிலே அமையும். அது ஜெயங்கொண்டான் வட்டாரத்தில் கரும்பு விளைவதற்கு பயன்படும்.

(முற்பகல் 9-40)

**திரு. தி. நா. கோ. அ. மனோகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தென்னார்க்காடு மாவட்டம் திருநாவலூர் தொகுதியில் செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக பி. மில் துவங்குகிற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தென்னார்க்காடு மாவட்டம் பற்றிக் கேட்டால் அமைச்சரிடம் பதில் இருக்காது.

**திரு. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் சர்க்கரை ஆலையினுடைய துணை யூனிட்டை மாண்புமிகு உறுப்பினர் திரு. மாசிலாமணி அவர்கள் ஏதோ ஆளும் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கக்கூடிய பகுதிகளில் ஆரம்பிப்பதால்

அரசுக்கு ஒரு கெட்ட பெயர் உருவாகக்கூடிய சூழ்நிலை இருப்பது போன்று சொன்னார்கள். எனது தொகுதியில் அதாவது ஆண்டிமடம் தொகுதியில் இதுவரையில் எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லை. எனது பகுதியில் மாத்தூர். செந்துறை போன்ற பகுதிகளில் இந்தத் தொழிற்சாலை அமைய அனைத்து சாத்தியக்கூறுகளும் இருப்பதாக அதிகாரிகள் அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறார்கள். இந்த வாய்ப்பை விட்டால் எனது தொகுதியில் வேறு எந்தவிதமான தொழிற்சாலையும் அமைய வாய்ப்பு இல்லாத காரணத்தால் எனது தொகுதியில் அதை அரசு அமைக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆலை அமைப்பது என்பதைப் பொறுத்தவரையில் எல்லாவற்றையும் பரிசீலித்த பிறகுதான் முடிவெடுக்க முடியும். ஆண்டிமடமா, திட்டக்குடியா, ஜெயங்கொண்டமா என்பதைப் பற்றி குழு முடிவெடுத்த பிறகுதான் அறிவிக்க இயலும்.

### கல்லூரிகளில் இராணுவக் கல்வி.

**674—(* வினா எண் 3020) திரு. குமரிஅனந்தன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகக் கல்லூரிகளில் எங்கெங்கே இராணுவக் கல்வி பட்டப் படிப்பிற்கு பாடமாக வைக்கப்பட்டுள்ளது?

(ஆ) எத்தனை மாணவர்கள் படிக்கிறார்கள்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) 1. குருநானக் கல்லூரி, சென்னை-32, இளநிலை பாதுகாப்பியல்.

2. ஊரிஸ் கல்லூரி, வேலூர், இளநிலை பாதுகாப்பியல்.

3. அரசினர் கலைக் கல்லூரி, உதகமண்டலம், இளநிலை பாதுகாப்பியல்.

4. பாதுகாப்புப் படைப்பயிற்சிக் கல்லூரி, வெலிங்டன், உதகை, நிறைநிலை பாதுகாப்பியல்.



(ஆ) 1. குருநானக் கல்லூரி—71 மாணவர்கள்.

2. ஊரிஸ் கல்லூரி. வேலூர்—158 மாணவர்கள்.

3. அரசினர் கலைக் கல்லூரி. உதகை—60 மாணவர்கள்.

4. பாதுகாப்புப்படை பயிற்சிக் கல்லூரி, வெலிங்டன், உதகை—328 மாணவர்கள்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, 4 கல்லூரிகளில் இந்தப் பயிற்சி நடத்துவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மாணவர்கள் என்று போட்டிருக்கிற காரணத்தால் மாணவ, மாணவியர் என்ற பன்மையையும் குறிக்கும், வேறு மாணவர்கள் என்ற பன்மையை அதாவது ஆண்களில் பன்மையையும் குறிக்கும். எனவே, அதில் மாணவிகள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்களா என்பதையும் அதைப்போலவே இந்த 4 கல்லூரிகள் போதுமானதாக இல்லை, எனவே இன்னும் அதிகமான இடங்களுக்கு விஸ்தரிக்கப்படுமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாணவிகள் பற்றிய விவரங்கள் தரப்படவில்லை. புதிய கல்லூரிகளிலே புதிதாகத் துவங்க வேண்டுமென்றால் அங்கேயிருந்து அவர்கள் விண்ணப்பம் செய்யவேண்டும். அந்த விண்ணப்பத்தைப் பார்த்து அங்கே இருக்கிற இடவசதி, பல்கலைக் கழக இணைவு. நிதியுதவிக் குழுவினுடைய முடிவு அரசின் நிதி ஒதுக்கீடு ஆகியவற்றின் அடிப்படையில் அந்தக் கருத்துக்கள் பரிசீலிக்கப்படும்.

**திரு. குமரி அனந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே. இதனை விஸ்தரிப்பதற்குரிய சாத்தியக்கூறுகளைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இராணுவப் பயிற்சிபோல் போலீஸ் பயிற்சியும் கொடுக்கவேண்டுமென்று நான் ஏற்கெனவே மானியக் கோரிக்கையில் பேசியிருக்கிறேன். அதுவும் மாண்புமிகு அமைச்சரின் பரிசீலனையில் இருக்கிறதா?

[1986 மே 6

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் இல்லை. தனியாக ஒரு கேள்வி கேட்டால் விவரங்களைச் சேகரித்துத் தரலாம்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, இராணுவக் கல்விக்கு பட்டப்படிப்பு இருப்பதுபோல், அரசுப் பள்ளிகளிலும் இராணுவக் கல்வியைக் கற்றுத் தருவதற்கு உரிய வகையில் ஏதாவது பள்ளிகளை அரசு நடத்துகிறதா ? அப்படி நடத்தவில்லை என்றால் இனிமேலாவது இராணுவக் கல்வியைக் கற்றுத் தருவதற்குப் பள்ளிகளைத் துவங்க உத்தேசம் இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இப்போது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் தற்போது சூழ்ந்து வருகிற வெளிநாட்டு அச்சுறுத்தலை எதிர்நோக்கி—இன்றையதினம் மேலைநாடுகளில், சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளில் கட்டாய இராணுவப் பயிற்சி என்ற வகையில் மெட்ரிக்குலேஷன் படிப்பு முடிந்தவுடன் இரண்டாண்டுகள் பயிற்சிக்காக அனுப்புகிறார்கள். ஆகவே மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இந்தியாவிலும் அப்படிப் பட்ட ஒரு கல்வியை ஆரம்பிக்க ஏற்பாடு செய்து ப்ளஸ் 2 வகுப்பு முடிந்தவுடன் அந்தக் கல்வியை ஆரம்பிக்கிற செயற்குறிப்பு பற்றி அரசு பரிசீலிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாயமான இராணுவப் பயிற்சி என்ற ஒரு செயற்குறிப்பு அரசினிடத்தில் இல்லை. ஆனால் என்.சி.சி.-யில் அதிகப் படியான மாணவர்களுக்கு பயிற்சி தரவேண்டுமென்று தமிழ்நாடு அரசு விரும்புகிறது. ஆனால் மத்தியிலே இருக்கிற அந்த அமைப்பைச் சார்ந்தவர்கள் இப்போது இருக்கிற இந்த அளவே போதும் என்ற கருத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். ஆகவே என்.சி.சி. என்ற அந்தப் பயிற்சியையும் கூட விஸ்தரிக்கக் கூடிய நிலை இன்றையதினம் இல்லை.



1986 மே 6]

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரஷ்யாவிலே 5 ஆம் வகுப்பு முதல் ராணுவக் கல்வி யிலே பயிற்சியும் கொடுத்து கற்றுக் கொடுக்கப்படுவதாக ரஷ்யா சென்று வந்த என் நண்பர்கள் சொன்னார்கள். இப்போது எப்படி நாம் தொழில் கல்வியையும், அதன் பயிற்சியையும் பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 வகுப்புகளுக்கு கற்றுக் கொடுக்கிறோமோ, அதுபோல மேல்நிலைப் பள்ளிகளிலிருந்தாவது அந்த ராணுவக் கல்வியை இந்த ஆண்டிலிருந்தாவது தொடங்கி பயிற்சி கொடுக்க அரசு முன்வருமா அல்லது இனியாவது அதற்கான பரிசீலனையை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ரஷ்யாவிலே இருப்பதில் எல்லாம் அங்கொன்றும் இங் கொன்றுமாக எடுத்து இங்கே பின்பற்ற முடியாது. வேண்டு மானால் முழுவதுமாக பின்பற்றினால் சரியாக இருக்கும்.

*Grant to Anglo-Indian Schools.*

* 675 (Q. No.—3850) Thiru G. K. FRANCIS : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether there are proposals with the Government to meet the present enhanced fees levied in Anglo-Indian Schools by suitably increasing fee compensation Grant to Anglo-Indian Students ;

(*b*) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) மற்றும் (ஆ) ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளுக்கு, அவைகள் 1982-83 ஆம் ஆண்டில் ஆங்கிலோ இந்திய மாணவர்கள் அல்லாத ஏனைய மாணவர்களிடம் இருந்து வசூல் செய்த படிப்பு கட்டண வீதத்தில் 1985-86-ம் கல்வி ஆண்டிலிருந்து இப்பள்ளிகளில் பயிலும் ஆங்கிலோ-இந்திய மாணவர்களுக்கான படிப்பு கட்டண இழப் பீட்டு மான்யம் (Fee Compensation Grant) வழங்க அரசாணை நிலை எண் 348, கல்வி, நாள் 18—3—1986-ல் அரசு உரிய ஆணைகள் வெளியிட்டுள்ளது.

[1986 மே 6

**மதுரை ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் காலரிகள் கட்டுதல்.**

676—(*வினா எண் 3930) திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் எல்லாப் பகுதிகளிலும் காலரி கட்டி முடிக்கும் திட்டம் அரசின் கவனத்தில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்பொழுது வேலை தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ): இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மதுரையில் இருக்கக்கூடிய ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் பாதி அளவுக்கு காலரிகள் கட்டப்பட்டு மீதிப் பகுதிகளில் கட்டப்படாமல் இருக்கின்றன. அந்த ரேஸ் கோர்ஸ் மைதானத்தில் மாவட்ட விளையாட்டு மையம் இயங்கிக் கொண்டிருக்கிறது. சுமார் 7 லட்சம் மக்கள் தொகை கொண்ட மதுரை மாநகர் தமிழகத்தினுடைய 2-வது பெரிய நகரமாக விளங்குகின்ற நிலையில் முழுமையான காலரி வசதி கொண்ட ஒரு விளையாட்டு அரங்கம் இல்லாதது ஒரு பெரும் குறையாக இருக்கிறது. எனவே இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு வருகின்ற நிதி ஆண்டிலாவது அந்தத் திட்டத்தை அரசு மேற்கொள்ளுவதற்குரிய செயற்குறிப்பை கவனத்தில் எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே இருக்கின்ற அந்த விளையாட்டுத் திடலில் காலரி அமைக்கப்படாமல் இருப்பதற்கான காரணம், அந்தச் சங்கத்தைச் சார்ந்தவர்கள் 10 லட்சம் ரூபாய் கடனுடன் மதுரை மாவட்ட விளையாட்டு மையத்திற்கு அந்த திடலை வழங்கியிருக்கிறார்கள். அதாவது மதுரை மாவட்ட கால்பந்து சங்கம் ரூ. 10 லட்சம் கடனுடன் அந்தத் திடலை வாங்கியிருக்கிறார்கள். மேலும் 7½ லட்சம் ரூபாய் திருப்பிச் செலுத்தப்பட



1986 மே 6]

வேண்டியிருக்கிறது. இப்போதுள்ள அந்த நிலையில் இதற்காக மாவட்ட விளையாட்டு மன்றத்தில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. காலரிகள் கட்டுவதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவில்லை. அந்த நிலையில் அந்த திடல் பற்றிய நிலைமைகள் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இப்போது காலரி கட்டுகின்ற எந்தத் திட்டமும் இல்லை.

திரு. மு. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எதிர்காலத்திலாவது தேவையைக் கருதி, அந்தப் பெரிய நகரத்திற்கு அவ்வளவு அதிக அளவில் மக்கள் வசிக்கின்ற நகரத்திற்கு தேவையை பூர்த்தி செய்யக்கூடிய நிலையில் அந்தக் காலரிகளை கட்டும் திட்டத்தை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தற்போது இல்லை என்றுதான் என்னால் சொல்ல முடியும். எப்பொழுதும் இல்லை என்று நான் சொல்லக்கூடாது. ஆனால் மதுரை மாநகரத்தினுடைய அப்படிப்பட்ட தேவைகளைப் பார்த்து அதுபோன்ற பணிகளை நிறைவேற்றும் நிலைமை எதிர்காலத்தில் ஏற்பட வேண்டும் என்றுதான் நாங்களும் விரும்புகிறோம்.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் நான் கேட்க விரும்புவது, உடனடியாக முழுமையாக அந்த வசதிகளை, அந்த காலரிகளை கட்டுகின்ற திட்டத்தை அமல் படுத்த முடியாத நிலைமை இருந்தாலும்கூட, சிறு மழை பெய்தால் கூட, உளைச் சேறு ஏற்படுகின்ற அளவுக்கு அந்த மைதானம் செம்மைப் படுத்தப்படாமல் இருக்கின்றதே. அதை செம்மைப்படுத்தக்கூடிய அளவுக்கு மேம்பாடு செய்யும் வகையில், செம்மை மேம்பாட்டு திட்டத்தை அரசு எடுத்துக் கொள்ளுமா ? அதற்குத் தேவையான உத்தரவுகளை இடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திடலை செம்மையாக வைத்திருக்க வேண்டும் என்றும் அதற்கான திட்டத்தை குறிப்பிட்ட அந்த மாவட்ட விளையாட்டு மன்றம் எடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

[1986 மே 6

## ஹோமியோபதி பட்டப் படிப்பு.

677—(*வினா எண் 2198) திருமிகு. செ. செம்மலை, மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் பட்டப் படிப்பு துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டம் திருமங்கலம் அரசு ஓமியோபதி மருத்துவக் கல்லூரியில் பட்டப்படிப்பு துவங்கும் செயற்குறிப்பு அரசால் 1985-86 பகுதி திட்டத்தின் கீழ் இசைவு பெறப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-50)

திரு. செ. செம்மலை: தலைவர் அவர்களே, இந்தப் பட்டப் படிப்பில் எத்தனை மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, இந்த ஓமியோபதி கல்லூரியைப் பொறுத்தவரையில் இப்போது டிகிரி கோர்ஸ் B.H.M.S. என்று Bachelor of Homoeopathy என்று இந்த ஆண்டு துவக்கவிருக்கிறோம். அதிலே 22 மாணவர்களை நாம் சேர்க்கவிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): தலைவர் அவர்களே, வருகிற ஆண்டிலிருந்து பட்டப் படிப்பு துவங்கவிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பட்டப் படிப்பு துவங்கினாலும் இன்றைக்கு இருக்கிற டிப்ளமா கோர்சும் இருக்குமா என்று



1986 மே 6]

அறிய விரும்புகிறேன். அதேபோல அலோபதி முறையில் இருப்
பதைப்போல ஓமியோபதியிலும் பார்மசிஸ்ட்கள் தேவைப்படு
கிறார்கள். மருந்தாளுநர் பயிற்சி கொடுக்கிற பணியை அந்தக்
கல்லூரி செய்கிறதா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே,
டிகிரி கோர்ஸ் வந்தால் படிப்படியாக டிப்ளமா கோர்சை எடுத்து
விட வேண்டும். அந்த அளவிற்கு படுக்கைகளுடைய எண்
ணிக்கை தேவைப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் இப்போது
தான் நில ஆர்ஜிதப் பணியில் ஈடுபட்டிருக்கிறோம்.

The Commissioner for Land Administration has sent a proposal to the Government in the Revenue Department for grant of 23.43 acres of Land in Thirumangalam.

23.43 ஏக்கர் நிலம் திருமங்கலம் பகுதியில் கொடுப்பதற்கு நாம்
கேட்டுக் கொண்டிருக்கிறோம். அதற்காக

Erection of earthern bund to a height of 3 feet to prevent water from getting into the proposed side. அதுமட்டுமல்லாமல்

Construction of surplus weir channel, culverts, etc.,

இவைகள் எல்லாம் நாம் கட்ட வேண்டு
மென்று திட்டமிட்டிருக்கிறோம். கட்டி முடிப்பதற்கு சில
நாட்கள் ஆகும். அதற்காகத்தான் டிகிரி கோர்சை மட்டும்
வைத்திருக்கிறோம். டிப்ளமா கோர்ஸ் பார்மசி கோர்சில்
விரைவில் ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, ஓமியோ
பதி டாக்டர்களுக்கும். அலோபதி டாக்டர்களுக்கும் சமமாக
சம்பளம் கொடுக்கப்பட்டு, அவர்களுக்கு தகுதி கொடுக்கப்பட்டி
ருப்பது தமிழ் நாட்டில் வரவேற்கத்தக்க நிகழ்ச்சியாக இருக்கிற
போது, தமிழகம் முழுவதும் ஒவ்வொரு மருத்துவமனையிலும்
ஓமியோபதி டாக்டர்களை நியமித்து இருக்கிற இந்த அரசு, அவர்
களுக்கு 'குவார்ட்டர்ஸ்' கொடுக்கிற நிலைமையையும் பரிசீலிக்
கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

[1986 மே 6

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஒன்றும் அரசிடம் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஹோமியோபதி கல்லூரி ஆசிரியர்கள்.

678—(* வினா எண் 8914) **திரு. ப. ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அரசினர் ஹோமியோபதி கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் ஒரே சம்பளம் வழங்க அரசு உத்தரவு இட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அரசினர் ஓமியோபதி கல்லூரியில் பணிபுரிகிற பேராசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் நான்காவது சம்பள கமிஷனின் சிபார்சு அடிப்படையில் சம்பளம் மற்றும் சலுகைகளை வழங்குகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ? அந்தச் சலுகைகளை இப்போது வழங்குகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, நான்காவது சம்பள கமிஷனின் யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். மூன்றாவது 'சம்பளக் கமிஷன்' பொறுத்தவரையில் பேராசிரியர்களுக்குச் சம்பளம் ரூ. 850—1,500 என்று இருந்தது. இப்போது நான்காவது சம்பளக் கமிஷன் பரிந்துரை மூலமாக ரூ. 1,800-ல் ஆரம்பித்து, ரூ. 2,900 வரையில் அது போகும். அதேமாதிரியாக லெக்சரர்களுக்கு ரூ. 750—1,350 சம்பளம் என்பது மூன்றாவது சம்பளக் கமிஷனின் பரிந்துரை. நான்காவது சம்பளக் கமிஷன் பரிந்துரை ரூ. 1,575—2,[illegible].



1986 மே 6]

Modern Medicine டாக்டர்களுக்கு கொடுக்கக்கூடிய அந்த ஊதியத்திற்கு சரிசமமாக பரிந்துரை செய்யப்பட்டு அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ப. ந. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அரசினர் ஓமியோபதி கல்லூரியில் பணிபுரிகிற பேராசிரியர்களின் எண்ணிக்கை எத்தனை ? விரிவுரையாளர்களின் எண்ணிக்கை எத்தனை ? அங்கே விரிவுரையாளர்கள் போதவில்லையென்ற குறைபாடு மாணவர்கள் மத்தியில் இருக்கிறதா ? அதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, அந்த எண்ணிக்கை விவரம் என்னிடம் இல்லையென்றாலும், அங்கே இருக்கிற பேராசிரியர்கள் போதுமென்ற குறிப்புதான் வந்திருக்கிறது. இருந்தாலும் அங்கேயிருக்கிற படுக்கைகள் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்ற அந்த முயற்சியில் நாம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அதுதான் இப்போது நமக்கு மிகத் தேவையான ஒன்றாகும்.

### வெளி மாநிலங்களிலிருந்து உணவுப் பொருட்கள் கொள்முதல்.

679—(*வினா எண் [illegible]) **திரு. சி. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1984—85-ம் ஆண்டில் மக்களுக்கு வினியோகிக்க வெளி மாநிலங்களிலிருந்து உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** (அ) மற்றும் (ஆ) சுமார் 35 ஆயிரம் மெட்ரிக் டன் அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவு திட்டத்திற்கு பருப்பு வகைகள் வெளி மாநிலத்திலிருந்து டெண்டர் மூலம் வாங்கப்பட்டு இருக்கிறது.

[1986 மே 6

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களில் இருந்து அரிசி மற்றும் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்வதால் அதிகப்படியான செலவு எவ்வளவு ஏற்பட்டது? இதற்கு மத்திய அரசிடம் மாநில அரசு ஏதாவது மானியம் கோரியிருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அரிசியை மனதிலே வைத்துக் கொண்டு இந்தக் கேள்வியை கேட்டிருப்பார் என்று கருதுகிறேன். அரிசி 1984-லே வெளி மாநிலத்திலிருந்து வாங்கப்படவில்லை. பருப்பு வகைகள்தான் வாங்கப்பட்டு இருக்கின்றன. இதற்கு மத்திய அரசு மானியம் எதுவும் வழங்கவில்லை. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசன் வாங்கி, மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவுக் கூடங்களுக்கு வினியோகம் செய்யப்படுகிறது.

திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984—85 ஆம் ஆண்டு வெளிமாநிலங்களில் இருந்து அரிசி கொள்முதல் செய்த பின்பும், மத்திய தொகுப்பிலிருந்து தமிழக அரசிற்கு அரிசி கிடைத்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங் களில் தலா 90 ஆயிரம் டன் அரிசி மத்திய தொகுப்பிலிருந்து நமக்கு வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு ஜனவரியில் 65 ஆயிரம் டன் அரிசி மத்திய தொகுப்பிலிருந்து வழங்கப்பட்டு இருக்கிறது. மார்ச், ஏப்ரல் மாதங்களில் சுமார் 40 ஆயிரம் டன் மத்திய தொகுப்பிலிருந்து வழங்கப்பட்டு இருக்கிறது. மத்திய தொகுப்பிலிருந்து சுமார் 1 லட்சம் டன் அரிசியை தொடர்ந்து வருகிற 3 மாதங்களுக்கு வழங்க வேண்டும் என்று மத்திய அரசிற்கு கடிதம் எழுதி வலியுறுத்திக் கொண்டு இருக்கிறோம்.

பேரவைத் தலைவர் அவர்களே. அடுத்த கேள்வியும் இதுபற்றி வருகிறது. எனவே அதையும் எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி.



1986 மே 6]

680—(*வினா எண் 8440) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிர மணியன் (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழகத்திற்கு தேவையான அரிசியை பஞ்சாப் மாநிலத்திலிருந்து வாங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) உள்ளது.

(ஆ) 1985 குறுவை கொள்முதல், நடப்பு சம்பா பருவத்தில் கொள்முதல், மத்திய அரசின் ஒதுக்கீடு, பொது விநியோகத்தில் கேட்பு இவற்றைப் பொறுத்து கையிருப்பை கணக்கிட்டு தேவை யானால் உணவு நிலைமையை சமாளிக்க வெளி மாநிலங்களி லிருந்தும் அரிசி வாங்குவதற்கான செயற்குறிப்பு பரிசீலிக்கப்படு கின்றது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாப் மாநிலத்தில் ஏராளமான அரிசியும் நெல்லும் பாதுகாப்பதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்றும் வேறு மாநிலங்களுக்கு கொடுக்கிற வாய்ப்பும் இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். இந்த மாநிலத்தில் கொள்முதல் செய்வதைவிட இன்னும் குறைவான விலைக்கே வாங்க முடியும் என்கிற சாத்தியக்கூறு அங்கே இருக்குமானால், அதை ஆய்ந்து, இங்கே கொள்முதலைக்கூட குறைத்துக்கொண்டு அங்கேயிருந்து அரிசி வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாபிலிருந்து அரிசி வாங்கு வதற்கான செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இருந்து [illegible] மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் [illegible] பஞ்சாப் மாநிலத்தில் அரிசி [illegible] ஆனால் அங்கே வாங்குகிற

[1986 மே 6

போது நம்முடைய தமிழகத்திலே வாங்குவதை விட குறைவான விலைக்கு நிச்சயமாக வாங்க முடியாது. நமக்கு ஏற்பட்டு இருக்கிற சூழ்நிலைகளின் அடிப்படையிலே மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்று ஏறக்குறைய ஒரு லட்சம் டன் அரிசி வாங்குவதற்கு நாம் அதற்காக டெண்டர் கால்பார் செய்து டெண்டர் கேட்டு இப்போது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அதற்கு இடையிலே ஏறக்குறைய 2 லட்சம் டன் அரிசி தமிழகத்திலே கொள்முதல் ஆகி இருக்கிறது. அதுபோக, ஏக போக கொள்முதலின் கால அளவு, ஏப்ரலோடு முடிந்த அந்தக் கால அளவு இன்னும் 2 மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டு இருக்கிறது. எனவே இந்த ஏகபோக கொள்முதல் நடைபெறுகிற தஞ்சாவூர், தென் ஆர்க்காடு, புதுக்கோட்டை மற்றும் திருச்சி மாவட்டத்தில் சில பகுதிகளில் இருந்து வருகிற மே ஜுன் மாதங்களிலே நெல் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. ஏறக்குறைய 35 ரூபாய் இடு பொருள் மானியமாக விவசாயிகளுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். இந்தக் கால அளவும் மே, ஜுன் மாதங்களுக்கு நீட்டிப்பு செய்து இருக்கிறோம். மத்திய அரசிலிருந்து ஏறக்குறைய 40 ஆயிரம் டன் கிடைத்திருக்கிறது. இப்போது 1 லட்சம் டன் வேண்டுமென்று கேட்டு இருக்கிறோம். எனவே இந்தச் சூழ்நிலையில் உடனடியாக 1 லட்சம் டன் அரிசியை பஞ்சாபிலிருந்து வாங்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லாத காரணத்தாலே, அரசினுடைய பரிசீலனையில் அது தற்போது இருந்து கொண்டு இருக்கிறது.

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாப் மாநிலத்திலிருந்து அரிசி வாங்குவதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அப்படி வாங்குகிற அரிசிக்கு தமிழகத்தில் கொள்முதல் செய்யக்கூடிய விலையைக் காட்டிலும் கூடுதல் விலை கொடுக்கவேண்டிய நிலை இருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி கூடுதல் விலையை பஞ்சாபிலே இருக்கின்ற அரிசி உற்பத்தியாளர்களுக்கு கொடுக்கின்ற நிலைக்குப் பதிலாக, தமிழகத்திலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு அதிகமாக விலையை போனசாகக் கொடுத்து, இந்த



1986 மே 6]

நெல் கொள்முதலைச் செய்கின்ற அந்தத் திட்டம் அரசிடம் இருக்கிறதா? அப்படி இல்லை என்றால், இத்தகைய யோசனைகளை அரசு பரிசீலித்து அதற்கு ஏற்ப முடிவு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாப மாநிலத்திலிருந்து அரிசி வாங்குவதற்கு, செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். விலைபற்றிய சரியான புள்ளிவிவரம் என்னிடத்திலே இல்லை. ஏனென்றால் அது இன்னும் முடிவுசெய்யப்படவில்லை, அரசினுடைய பரிசீலனையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. இதற்கிடையில் ஏகபோக கொள்முதல் பகுதியிலிருந்து நாம் விவசாயிகளிடம் நேரடியாக நெல் கொள்முதல் செய்கிறபோது அதற்கு ஏறக்குறைய 35 ரூபாயை ஒரு குவிண்டாலுக்கு நாம் இடுபொருள் மானியமாக வழங்கிக்கொண்டிருக்கிறோம். அதைக்கூட பணமாகக் கொடுக்கக்கூடாது என்று ரிசர்வ் வங்கி ஆட்சேபணை செய்திருக்கிற காரணத்தாலே நாம் உரமாகவும், பூச்சி மருந்தாகவும் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். பணமாகக் கொடுத்தால் அதிகமாக நெல் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. மத்திய அரசிடம், ரிசர்வ் வங்கி அதற்கு அனுமதி தரவேண்டுமென்று நாம் வேண்டி கேட்டுக்கொண்டிருக்கிறோம். இதற்கிடையிலே, மாண்புமிகு உறுப்பினர் ஜெயராமன் சொன்னதுபோல் வெளி மாநிலத்திலே இருந்து அரிசி வாங்குகிற போது எந்தச் சூழ்நிலையிலே வாங்குகிறோம் என்று சொன்னால், சராசரியாக முதல்வரின் சத்துணவுத் திட்டத்திற்கு சுமார் 20 ஆயிரம் டன் அரிசி ஒரு மாதத்திற்கு தேவைப்படுகிறது. பொது மக்கள் விநியோகத்திற்கு சுமார் 80 ஆயிரம் டன் அரிசி தேவைப்படுகிறது. ஆக, ஒரு மாதத்திற்கு சுமார் 1 லட்சம் டன் அரிசி தேவைப்படுகிறது. வருஷத்திற்கு 12 லட்சம் டன் அரிசி தேவைப்படுகிறது. இதிலே மற்ற மாவட்டங்களிலே 50 சதவீதம் டிரேடர்ஸ் லெவி என்று சொல்லி, வியாபாரிகளிடத்திலிருந்து

செல்வியாகப் பெறுகிறோம். தஞ்சாவூர் மாவட்டம் முழுவதும், மதுரையிலே சில தாலுக்காக்களை, வட ஆற்காட்டிலே சில தாலுக்காக்களை, புதுக்கோட்டையிலே இருக்கிற சில தாலுக்காக்களை, இவற்றிலே லெவியாக கொள்முதல் மூலம் நாம் முழுமையாக வாங்குகிறோம். இவற்றிலே நமக்கு வந்ததுபோக, மீதமுள்ளதை மத்திய அரசு, மத்திய தொகுப்பிலே இருந்து தருகிறது. இந்த இருப்பும் போதவில்லை என்ற நிலை ஏற்பட்டால்தான், வெளிமாநிலத்திலே நமது தேவைக்கு, 82-83-லே சுமார் 1 லட்சத்து 20 ஆயிரம் டன் அப்போது வாங்கி இருக்கிறார்கள். அதற்குப்பின்னாலே இதுவரை நாம் வெளிமாநிலத்திலிருந்து அரிசி வாங்கவில்லை. இப்போது வறட்சி, சரியான விளைச்சல் இல்லாத சூழ்நிலையிலே அப்படிப்பட்ட ஒரு அவசியம் ஏற்பட்டது; அதற்கான முயற்சியிலே ஈடுபட்டோம். இப்போது நிலைமை ஓரளவுக்கு திருப்தியாக இருக்கிற காரணத்தினாலே நாம் இன்னும் முடிவு செய்யவில்லை; பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். வெளியே கொடுக்கிற பணத்தை இங்கேயே கொடுத்து வாங்குகிற சூழ்நிலை ஏற்பட்டால் விவசாயிகளிடத்திலே இருக்கிற எல்லா அரிசியையும் எல்லா நெல்லையும் நாமே வாங்கி விட்டால், பொதுமக்களுடைய விநியோகத்திற்கு அது போய் சேராது. ஆகவே, 'ஓபன் மார்க்கெட்'டிலே விலை அதிகமாக ஏறிவிடும். பின்னாலே நாம் அதையும் சரிகட்டுவதற்கு வெளி மாநிலத்திலே வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும். லெவியிலே, 50 சதவிகிதம் டிரேடர்ஸ் லெவி, ஏகபோக கொள்முதல், இந்த இனங்களிலிருந்து வருவதுபோக, மீதப் பகுதியை விவசாயிகளிடத்திலே இருந்து வாங்கினால், இங்கேதான் நாம் திருப்பித் திருப்பி எடுத்துக்கொள்வோமே தவிர பற்றாக்குறை ஏற்படும். எனவேதான், வெளிமாநிலத்திலிருந்து வாங்குகிற முயற்சியிலே ஈடுபடுகிறோம். இப்போது நிலைமை திருப்தியாக இருக்கிற காரணத்தினாலே, நாம் வாங்க இன்னும் முடிவு செய்யவில்லை. அது அரசினுடைய பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது.

**திரு. செ. ஆறுமுகம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு அமைச்சர் அவர்களுடைய பதிலில் விவசாயிகளுக்கு 35 ரூபாய்க்கு உரமும் பூச்சி மருந்தும் கொடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அது விவசாயப் பெருங்குடி மக்களுக்கு



நேரடியாகக் கொடுக்கப்படுகிறதா அல்லது இடைத்தரகர் மூலம் சென்று, அது மக்களுக்குப் போய் சேராமல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடைத்தரகர்கள் மூலம் வழங்கப்படாது. நேரடியாக விவசாயப் பெருங்குடி மக்களுக்குத்தான் வழங்கப்படும்.

**திரு. பொ. உத்திராபதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொல்கிறபோது, வெளிமாநிலத்திலிருந்து வாங்கக்கூடிய நெல்லையோ அரிசியையோ அதிகமான விலை கொடுத்துத்தான் வாங்குகிறோம், அதே விலையை தமிழகத்திலே இருக்கிற விவசாயிகளுக்கு கொடுத்தால் இன்னும் அதிகமான நெல் கிடைக்கும் என்று சொன்னார்கள். இன்றைக்கு மத்திய அரசு உரத்துக்கு விலையை உயர்த்திவிட்டது; டீசல் விலையை உயர்த்திவிட்டது. ஆகவே நான் கேட்டுக்கொள்வது, 86-87 ஆம் ஆண்டு, அடுத்த ஆண்டாவது விவசாயிகள் ஊக்கமாக உற்பத்தி செய்வதற்கு நெல்லின் அளவை தமிழகத்திற்குத் தேவைப்படக்கூடிய அளவுக்கு ஊக்கப்படுத்துவதற்கு, அந்த நிலையை கணக்கில் எடுத்துக்கொண்டு—குவிண்டாலுக்கு இன்றைக்கு வெளி மாநிலத்திலிருந்து கொள்முதல் செய்கிற போது ஏறக்குறைய 200 ரூபாயிலிருந்து 250 ரூபாய் ஆகிறது— அந்த 250 ரூபாயை மத்திய சர்க்காரை வற்புறுத்தி, தமிழக சர்க்காரே மீதியைச் சேர்த்து குவிண்டாலுக்கு 250 ரூபாய் கொடுத்து நெல்லை கொள்முதல் செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பதில் சொல்கிறபோது 35 ரூபாயை ஏகபோக கொள்முதல் அமலில் இருக்கிற விவசாயப் பெருமக்கள் இருக்கிற பகுதிகளில் மட்டும் தருகிறோம். காரணம் அங்கே பிரைவேட் டிரேடர்ஸ் கிடையாது. தனியார் வியாபாரம் கிடையாது. எல்லாவற்றையும் டைரக்ட் பர்ச்சேஸ் மூலமாக நாமே வாங்கிவிடுகிறோம். எனவேதான் நாம் அவர்களுக்கு ஊக்கத்தொகையாக 35 ரூபாய்க்கு இடுபொருள் மானியம் வழங்குகிறோம். அதை மொத்தமாக வெளி மாநிலத்திலே

வாங்கினால் ஒருவேளை விலை அதிகமாக கொடுக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், உடனே அதற்கான ஏற்பாட்டை இங்கே செய்தால் அதனாலே உற்பத்தி அதிகம் ஆகாது. ஏற்கனவே உற்பத்தியாகிற அரிசி அளவை நாமே முழுமையாக வாங்கிக் கொள்கிறபோது திருப்பித்திருப்பி பற்றாக்குறை ஏற்படும். எனவேதான் இங்கே அத்தகைய சூழ்நிலை ஏற்படும். தேவை ஏற்பட்டால், அவசியம் ஏற்பட்டால்; கட்டாய சூழ்நிலையில் 1982-83-ல் வெளிமாநிலத்திலிருந்து 1 லட்சத்து 20 ஆயிரம் டன் அரிசி வாங்கி இருப்பதைப்போல வாங்க முயற்சி மேற்கொள்ளப் படும். 1984-85-லே வெளி மாநிலங்களிலிருந்து வாங்கப் படவில்லை. நெல்லுக்கு அதிக விலை தரவேண்டும் என்று மத்திய அரசை தொடர்ந்து மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. விவசாயத்துறையின் சார்பாக, அரசின் சார்பாக இப்போது தரப்படுவதை விட அதிகமாக விலை நெல்லுக்குத் தரவேண்டும் என்று சென்ற ஆண்டும் வற்புறுத்தி இருக்கிறோம். விவசாய விளைப்பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வதற்கு ஒரு குழுவை மத்திய அரசு வைத்து இருக்கிறது. அந்தக் குழு தமிழகத்திற்கு வந்தபோது அரசின் சார்பாக அந்தக் குழுவிடம் நாம் நெல்லுக்கு உற்பத்தி செலவு அதிகமாகிறது என்று சுட்டிக்காட்டி அதிக விலை தரவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். தொடர்ந்து மாநில அரசு வற்புறுத்தும்.

## புதிய ஜவுளிக் கொள்கை

**681—(* வினா எண் 7385) திரு. கு. சுப்பராயன் :** மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய ஜவுளிக் கொள்கை குறித்து மாநில அரசின் கருத்தை மத்திய அரசு கேட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து மாநில அரசு என்ன கருத்து தெரிவித்தது ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** (அ) மற்றும் (ஆ) புதிய ஜவுளிக் கொள்கை குறித்து மைய அரசு மாநில அரசின் கருத்தை கேட்கவில்லை. இருந்தாலும் மாநில அரசு தனது கருத்தை தெரிவித்திருக்கிறது.





**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மத்திய அரசு ஒரு புதிய கொள்கையை உருவாக்குகிற போது ஒவ்வொரு மாநிலத்துனுடைய கருத்தைக் கேட்டு அந்தக் கொள்கையை உருவாக்குவது தான் அந்த புதிய கொள்கையை அமல் செய்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கும். எனவே, மத்திய அரசு கேட்காமல் இருந்தால் கூட நமது மாநில அரசு கருத்து தெரிவித்து இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்ளுவது எல்லாம் இந்த புதிய ஜவுளிக் கொள்கையின் மூலமாக இந்தியாவில் இருக்கக்கூடிய கோடிக்கணக்கான கைத்தறி உற்பத்தி செய்யக்கூடிய அந்தத் துறை மிகவும் பாதிக்கப்படக் கூடிய சூழ்நிலையில் இருக்கிறது. அதை கணக்கில் எடுத்துக் கொண்டு நமது மாநில அரசு நமது அமைச்சரவையில் இந்த புதிய ஜவுளிக் கொள்கையை கைவிடவேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்புவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ? இந்த புதிய ஜவுளிக் கொள்கையில் உள்ள தவறான அம்சங்களை தமிழ்நாடு எடுத்துச் சொல்லுவதற்கு, ஒரு இயக்கத்தின் மூலமாக எடுத்துச் சொல்லுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன், மத்திய அரசு அறிவித்துள்ள புதிய ஜவுளி கொள்கையின் மீது கீழ்க்கண்ட முக்கியமான கருத்தை தெரிவித்து இருக்கிறது :

**கருத்து 1.**—புதிய துணிக் கொள்கையானது துணி ஆலை களுக்கு அதிகமான ஆதரவான கொள்கை ஆகும்.

**கருத்து 2.**—புதிய துணிக் கொள்கையில் 75 லட்சம் கைத்தறி நெசவாளர்கள் தொடர்ந்து வேலை வாய்ப்பு, போதிய ஊதியம் பெறுகிற அளவுக்கு நிரந்தர முதலீடு நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் கைத்தறி தொழிலுக்கு பணம் அதிகமாக ஒதுக்கு வதற்கு இந்த புதிய கொள்கையில் அக்கறை இல்லை. ஆனால் சுமார் 10 லட்சம் 12 லட்சம் உள்ள மில் தொழிலாளர்களுக்கு பணி புரியும் ஆலைகளுக்கு செலுத்தும் அக்கறை அதிகமாக இருக்கிறது.

கருத்து 3.—விசைத் தறி, துணி ஆலைகள் என்ற அமைப்பின் அடிப்படையில் 3 துறைகளாக வகைப்படுத்துவது சரியான கொள்கை ஆகும். ஆனால் இந்த 3 துறைகளையும் ஒன்றாக கொண்டு இதனுடைய நூற்பு, நெசவு, பதனப்படுத்துதல் என்ற மூன்று கட்டங்களில் பிரிப்பது அறிவியல் ரீதியில் பொருத்தம் அல்ல.

கருத்து 4.—ஜனதா துணி உற்பத்தி கைத்தறிக்கு மாற்றியது வரவேற்கத் தக்கது அன்று. துணி ஆலைகளுக்கு பளுவாக இருக்கும் ஒரு பொறுப்பு கைத்தறிக்கு எவ்வாறு ஊக்கம் அளிப்பதாக அமையக்கூடும்.

கருத்து 5.—சந்தானம் குழு, சிவராமன் குழு போன்ற உயர்மட்டக் குழுக்கள் விசைத் தறியின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று சொல்லியும் புதிய ஜவுளிக் கொள்கையில் விசைத் தறிகள் வளர்ச்சியில் கட்டுப்பாட்டைப் பற்றி ஒன்றும் கூறவில்லை. இது கைத்தறி வளர்ச்சியை பெரிதும் பாதிக்கும். கைத்தறி ரகம் புதிய ஒதுக்கீட்டு சட்டத்தின் பலனை கைத்தறி துறை பெறுவதற்கு மேற்படி சட்டத்தில் கைத்தறிக்கு ஒதுக்கிய ரகங்களை உற்பத்தி செய்யும் தடையை மீறி உற்பத்தி செய்யப்படும் விசைத் தறி ஆலைகளின் துணிகளை விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வழி வகை இல்லாமல் இந்தச் சட்டத்தில் குறைபாடுகள் இருப்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

(முற்பகல் 10-10)

**திரு. வி. பி. சிந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுடைய கொள்கையை இப்போது அமைச்சரவர்கள் படித்தார்கள். இந்தக் கொள்கையில் இந்த அரசு உறுதியாக நிற்குமா என்று அறிய விரும்புகிறேன். அது மட்டுமல்ல, கைத்தறியைப் பாதிக்கிறது இந்த புதிய ஜவுளிக் கொள்கை. புதிய ஜவுளிக் கொள்கை நைஸ் ரகத் துணி உற்பத்தியாளர்களுக்கு மட்டும் தான் உதவிசெய்கிறது. உயர்ந்த ரகத் துணிகளை ஊக்குவிப்பதும்; குறைந்த கவுண்ட் உள்ள துணிகளையெல்லாம் ஊக்குவிக்காத நிலையிலும் இருப்பது ஒரு பார



பட்சமான கொள்கையாக அடங்கியிருக்கிறது. எப்படியும் தமிழக அரசு இந்த ஜவுளிக் கொள்கையை எதிர்ப்பதில் உறுதியாக இருக்குமா? பாராளுமன்றத்தில் இந்தக் கொள்கை ஒலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்களுக்கு ஏன் இந்த சந்தேகம் என்று தெரியவில்லை. பாராளுமன்றத்தில் இந்தக் கொள்கையை அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் ஒலித்திருக்கிறார்கள்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, ஒரு விரிவான பதிலை நமது அமைச்சர் பெருமகனார் தந்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அண்மையிலே பெரியார் மாவட்டத்திற்குப் பக்கத்தில் இருக்கின்ற குமாரபாளையம் போன்ற பகுதிகளிலே சுற்றுப் பயணம் செய்தபோது விசைத் தறியாளர் சங்கங்கள் இதை எதிர்த்திருக்கிறார்கள். கைத்தறி சங்கத்தைச் சார்ந்தவர்கள் அப்படி ஒதுக்கியது நியாயம் என்று வாதாடுகிறார்கள். நாச்சிமுத்து அவர்கள் தலைமையில் டில்லிக்குச் சென்றார்கள். ஆக விசைத் தறியாளர்களுக்கும், கைத்தறியாளர்களுக்கும் இடையில் ஒருமித்த கருத்து சொல்லக் கூடியவர்களாக இல்லை. இதில் குறிப்பாக கைத்தறிக்கென்று ஒதுக்கியிருக்கின்ற ரகங்கள் விசைத் தறிக்குக் கொடுக்கப்படுகின்றபோது கைத்தறி பாதிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். இதை ஒரு சரியான முறையிலே அணுகி விசைத்தறியாளர்களையும் கைத்தறியாளர்களையும் அழைத்து நமது அமைச்சர் பெருமகனார் அவர்கள் பேசி, மாண்புமிகு முதலமைச்சருடைய அனுமதியோடு, தங்கள் கருத்தை மீண்டும் மத்திய அரசுக்கு வலியுறுத்துவார்களா? விசைத்தறியாளர்களையும், கைத்தறியாளர்களையும் அழைத்துப் பேசி, நமது பரிந்துரையை வலியுறுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே அகில இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களில் உள்ள, இந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களால் சேர்ந்து அமைக்கப்பட்டிருக்கிற ஆலோசனைக் குழுவின் தீர்மானத்தின் படி தான் 22

வகையான துணி ரகங்களை கைத்தறியாளர்களுக்கென்று தற்காலிக ஒதுக்கீடு செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விசைத்தறியாளர்களுக்கும், கைத்தறியாளர்களுக்கும் இடையே மாறுபட்ட கருத்து இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை தொடர்ந்து வந்துகொண்டுதான் இருக்கிறது. அவர்கள் இருவரையும் அழைத்துப் பேசுவதற்கு அரசு தயாராக இருக்கிறது. அவர்கள் தயாராக இருப்பார்களேயானால், அழைத்துப் பேசலாம்.

**திரு. என். சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தின் புதிய ஜவுளிக் கொள்கையின் விளைவாக 1984 ஆம் ஆண்டுக்கான விசைத் தறிகளுக்கு பணம் கட்டப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. 30—4—1986 க்குள் எத்தனை விசைத் தறிகளுக்கு பணம் கட்டப்பட்டு, உரிமங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறியிலே அதிகாரபூர்வமானவை, அதிகாரபூர்வமற்றவை ஆக எல்லாவற்றுக்கும் சேர்த்து 10 ஆம் தேதியோடு முடிவாக இது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிற்பாடு தனியாக வினா போடப்பட்டால் தனியான பதில் அளிக்கப்படும்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** தலைவர் அவர்களே, விசைத் தறிகளுக்கு அதிகாரபூர்வமான விசைத்தறிகளுக்கு என்ற வகையில் அனுமதி வழங்குவதற்கு இப்போது உத்தரவுகள் பிறப்பித்துக்கொண்டிருக்கிற நிலையில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு தான் என்று நிர்ணயிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டால் தான், அந்தத் தொழில்கள் தொடர்ந்து நடைபெறுவதற்கு வாய்ப்பு இருக்கும். இல்லையென்றால், ஏற்கனவே நலிந்து போய்க் கொண்டிருக்கின்ற அந்தத் தொழில் மேலும் நலியக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுவிடும். ஆக உடனடியாக இவ்வளவு உரிமங்கள் தான் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் என்று நிர்ணயிக்கப்படுமா?



**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, விசைத்தறிகள் ஒவ்வொரு மாவட்டத்திற்கு மட்டுமல்ல, ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு தான் இருக்கலாம் என்று சொல்வதற்கு மாநில அரசிற்கு தற்போது அதிகாரம் இல்லை. அதனால் தான் புரட்சித் தலைவர் அரசு மத்திய அரசிற்கு, விசைத்தறிக்கான உரிமங்களை வழங்குவதற்கும், அவைகளை விஸ்தரிப்பதற்காகவும் இருக்கின்ற அதிகாரத்தை மாநில அரசுக்குத் தரவேண்டுமென்று எழுதியிருக்கிறது.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய புதிய ஜவுளிக் கொள்கை கைத்தறி நெசவாளர்களைப் பெரிதும் பாதிப்பதால், இந்த மன்றத்திலே ஒரு தீர்மானத்தைப் போட்டு நிறைவேற்றவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி சொன்னார்கள். மத்திய அரசு புதிய ஜவுளிக் கொள்கை கைத்தறி நெசவாளர்களை பாதிக்கிறது, ஆகவே அதை ரத்து செய்ய வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை அரசு நிறைவேற்ற முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, புதிய ஜவுளிக் கொள்கை என்பது அதை அறிவிக்கின்றபோது கொஞ்சமாக சில பாராக்களிலே சொன்னார்கள். ஆனால் நாள் ஆக, ஆக, ஆலைகளுக்கும், விசைத் தறிகளுக்கும், கைத்தறிக்கும் மேலும், மேலும் பல சலுகைகளை அறிவித்து இருக்கிறார்கள். இறுதியான புதிய ஜவுளிக் கொள்கை எது என்று கண்டுபிடித்த பிற்பாடு இதுபற்றி நாம் யோசிக்கலாம்.

**நெல்லை, குமரி மாவட்டங்களில் கைத்தறி உதவி இயக்குநர்கள்.**

682—(* வினா எண் 8009) **திரு. எப். எம். இராசரத்தினம்:** மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி, குமரி மாவட்டங்களுக்கு கைத்தறி துறைக்கு தனித்தனியே உதவி இயக்குநர்கள் நியமிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** (அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி சரகத்தை இரண்டாகப் பிரித்து, திருநெல்வேலி மாவட்டத்திற்கு திருநெல்வேலியை தலைமையிடமாகக் கொண்டு தனியாக ஒரு கைத்தறி மற்றும் துணிநூல் துறை சரக உதவி இயக்குநர் அலுவலகம், நாகர்கோவிலை தலைமையிடமாகக் கொண்டு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தனியாக ஒரு கைத்தறி மற்றும் துணிநூல் துறை சரக உதவி இயக்குநர் அலுவலகமும் ஏற்படுத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. எப். எம். இராசரத்தினம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களை இரண்டாகப் பிரித்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு கைத்தறித் துறையினுடைய வளர்ச்சியைக் கருதி ஒரு உதவி இயக்குநர் அலுவலகம் அமைப்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறியமைக்காக கன்னியாகுமரி மாவட்டக் கைத்தறி நெசவாளர்களின் சார்பாக என்னுடைய நன்றியை நான் இப்போது தெரிவித்துக்கொள்ளுகிறேன். மேலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிதாகத் தொடங்கவுள்ள உதவி இயக்குநர் அலுவலகம் இந்த ஆண்டு, அதாவது நடப்பு நிதியாண்டில் குமரி மாவட்டத்திற்கு தனியாக உதவி இயக்குநர் அலுவலகம் தொடங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டிலேயே வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. எப். எம். இராசரத்தினம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் கைத்தறித் துணிகள் தேக்கம் எவ்வளவு? தேக்கத்தினுடைய காரணமாக பாதிக்கப்பட்ட நெசவாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கக் கடன்களை ரத்துச் செய்யும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா? சொந்தத் தறி இல்லாத நெசவாளர்களுக்கு உதவிட தொழில் வல் கூட்டுறவுச் சங்கங்கள் ஏதேனும் அமைக்கும் நோக்கம் உண்டா? என்பதையும் அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. தனியாக வினா போடும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

## கைத்தறிகளுக்குத் தேவையான நூல்

683—(* வினா எண் 8991) **திரு. ஏ. தங்கராசு :** மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கைத்தறி துணி தயாரிக்கத் தேவைப்படும் நூல் அவ்வளவும் தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலையால் விநியோகிக்கப்படுகிறதா?

(ஆ) கூட்டுறவு நூற்பாலை தயாரிக்கும் நூலின் தரம், விலை வெளி மார்க்கெட்டில் உள்ளதை விட குறைவாக இருக்கிறதா? அதிகமாக இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) கூட்டுறவு நூற்பாலை தயாரிக்கும் நூலின் தரம் நன்றாக இருக்குமாறு, பல வகையில் பரிசோதிக்கப்பட்டு, பிற்பாடுதான் மார்க்கெட்டிற்கு விற்க அனுமதிக்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கூட்டுறவு நூற்பாலைகளிலும் தயாரிக்கப்படுகிற நூலுக்கு இந்தியத் தரக்கட்டுப்பாட்டினுடைய முத்திரை போடப்படுகிறது. வெளி மார்க்கெட்டிலுள்ள விலையை விடச் சற்றுக் குறைவாகவே கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்து, கைத்தறி நெசவாளர்களுக்கு விநியோகிக்கும் நூலின் விலை இருக்கிறது.

**திரு. ஏ. தங்கராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்பாலையினுடைய விலைக்கும், கைத்தறி நெசவாளர்களுடைய விலைக்கும் மாறுபாடு இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, இந்த மாறுபாடே இல்லாமல் ஒரே விலையாக நிர்ணயிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் மாத்திரம்தான் நூல் விலை நிர்ணயிக்கிற குழு ஏற்பாடு செய்யப்பட்டு அது மாதம் ஒரு தடவை கூடி, அவ்வப்போது மார்க்கெட்டில் நிலவுகிற விலைக்கேற்ப கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் நூலின் விலையை நிர்ணயம் செய்கிறது. எங்கேயாவது, மார்க்கெட் விலையை விட அதிகமாக கோ-ஆப்டெக்ஸ் நூல் வழங்கப்பட்டு விற்கப்பட்டு இருக்குமானால், அரசின் கவனத்திற்கு அது கொண்டு வரப்பட்டால், கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

### அரசுப் பணிகளில் பெண்களுக்கு ஒதுக்கீடு

684—(* வினா எண் 7896) **திரு. பரிதி இளம்வழுதி :** மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு வேலைகளில் 50 சதவீதம் பெண்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற சொற்குறிப்பு அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு உத்தியோகம் கொடுப்பது பற்றி அமைச்சர் அவர்கள் பதிலில், இல்லை என்று சொல்கிறார்கள். இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் எம்.ஏ., பி.ஏ., எம்.எஸ்ஸி., பி.எஸ்ஸி., என்று படித்து விட்டு, வேலை இல்லாமல், கணவனால் கைவிடப்பட்டு, அடித்துத் துரத்தப்பட்டு, திக்கற்ற நிலைமையிலே தன்னுடைய குழந்தைகளோடு துன்புற்றுக் கொண்டிருக்கிற அந்தப் பெண்கள் சமுதாயத்தை மனதிலே வைத்து, அவர்களுக்கு எல்லாத் துறையிலும் 50 சதவிகிதம் இல்லையெனினும்கூட குறைந்தபட்சம் 25 சதவிகிதமாவது, அவர்களுக்குக் தகுதி இருந்தால் வேலைவாய்ப்புக் கொடுக்க வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியுள்ள பெண்களாக இருந்தால் அவர்கள் நிச்சயமாக வேலைவாய்ப்பில் இடம் பெறுவதற்கான வழிவகைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. 50 சதவிதம் கொடுக்கின்ற வகையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அப்படிப்பட்ட முறை இல்லை என்றாலும் 25 சதவீதமாவது கொடுக்க வேண்டும் என்ற நியதியைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதைப்பற்றியும் மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். தகுதி அடிப்படையில் அந்தப் பெண்கள் வேலைக்கு வருவார்களேயானால் நிச்சயமாக 25 சதவீதம்கூடக் கொடுப்பதற்காக அரசு பரிசீலனை செய்யும். ஆதரவற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியோர்களுக்கெல்லாம், வேலைக்குத் தகுதியான ஆதரவற்ற பெண்களாக இருந்தாலும், தகுதியுள்ள விதவைகளாக இருந்தாலும் அவர்களுக்கு வேலைக்கு முன்னுரிமை கொடுத்தும் அவர்களுக்கு அரசு வழிவகைகளைச் செய்து வருகிறது.

**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில் முன்னுரிமை கொடுக்கப்படுகின்ற பெண்களுக்கு வயது வரம்பு ஏதேனும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விதவைப் பெண்களுக்குத் தகுதி அடிப்படையில் வேலை கொடுக்கின்றபொழுது முன்னுரிமை கொடுக்கின்றபொழுது அவர்களுக்கு வயது வரம்பை, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த விண்ணப்பதாரர்களுக்கு உள்ள வயது வரம்பே ஆதரவற்ற விதவைப் பெண்களுக்கும், அதாவது அனைத்து ஜாதியைச் சேர்ந்த விதவைப் பெண்களுக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த விண்ணப்பதாரர்களுக்கு உள்ள தகுதியே பொருந்தும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

[1986 மே 6

## முதியோர் உதவித்தொகை வழங்கல்

685—(*வினா எண் 8196) திரு. சு. பாலன் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 5 மாதகாலமாக சென்னையில் முதியோர் உதவித்தொகை வழங்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இதற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** (அ) மற்றும் (ஆ) 1985 நவம்பர் மாதம் சென்னை நகரில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சென்னை நகரில் உள்ள அனைத்து வட்டாட்சியர்களும் வெள்ள நிவாரணப்பணியில் மும்முரமாக ஈடுபட்டதால் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள முதியோர் உதவித் தொகை சம்பந்தமான அனைத்து மணியார்டர்களும், குறித்த காலத்தில் அனுப்ப இயலவில்லை. வெள்ள நிவாரணப் பணிகள் டிசம்பர் 1985 உடன் முடிவடைந்ததால் சனவரி 1986-ல் பணம் அனுப்பப்பட்டது.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் 1985 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வட்டாட்சியர்கள் வெள்ள நிவாரணப் பணியில் ஈடுபட்டதன் காரணமாக கொடுக்கப்பட வேண்டிய இப்படிப்பட்ட பணம் நிறுத்தப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஆண்டுதோறும் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தை அடுத்து இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இனிமேலாவது உடனடியாக அவர்களுக்கு அந்தத் தொகையை மாதாமாதம் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதியோர் உதவித்தொகை வட்டாட்சியர் மூலமாக மாதாமாதம்தான் முதியோர்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் சில சமயங்களில் இயற்கைச் சூழ்நிலை



1986 மே 6]

யினால் மக்களுக்கு வேறு விதமான பணிகளில் வட்டாட்சியர்கள் ஈடுபடுகின்றபொழுது அப்படிப்பட்ட முதியோர் உதவித் தொகை கொடுக்கின்ற பணி தடைப்படுகின்ற நிலைகூட இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இயற்கையினால் பாதிக்கப்படாத நிலைமை ஏற்பட்டால் செப்டம்பர் மாதத்திலிருந்து நிச்சயமாக மாதாமாதம் கொடுக்கின்ற நிலைகூட ஏற்படலாம்.

**திரு. எஸ். வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாவட்டத்திலே முதியோர் உதவித் தொகை கோரும் விண்ணப்பங்கள் தேங்கியிருப்பதை அரசு அறியுமா ? அப்படியென்றால் எவ்வளவு விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கின்றன ? அவைகளுக்கு எப்பொழுது உதவித் தொகை கொடுத்து முடிக்கப்படும் என்று உறுதி கூறப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் எவ்வளவு விண்ணப்பங்கள் தேங்கி இருக்கின்றன என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. தற்சமயம் சென்னை மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை திட்டத்தின்கீழ் மொத்தம் 11,230 பேர் பயன் அடைந்து வருகின்றனர்.

**திரு. டி. என். முருகானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தற்சமயம் ஒரு மாவட்டத்திற்கு 1,500 என்ற குறியீட்டை வைத்துதான் முதியோர்களுக்கு உதவித் தொகை அளித்து வருவதாக அறிகிறேன். இந்தக் குறியீட்டை அதிகப்படுத்தி, ஆதரவற்றிருக்கும் ஏராளமான முதியோர்களுக்கு மேலும் உதவித் தொகை வழங்குவதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மூலக் கேள்வி, சென்னை மாவட்டத்தில் உள்ள முதியோர் உதவித் தொகை பற்றியதாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற மற்றைய மாவட்டங்களைப் பற்றிக் கேட்டிருக்கிறார்கள். அதுவும் 1,500 என்று ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டிருக்

[1986 மே 6

கிறது என்ற விவரத்தையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. இதற்குத் தனிக் கேள்வி போட்டால், பதில் அளிக்கப்படும்.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே பேசும்பொழுது நான் தகுதி படைத்த அனைவருக்கும் முதியோர் தொகை வழங்கப்பட வேண்டும், இருப்பவர்கள் இறந்தால்தான் அடுத்தவருக்கு என்ற நிலையிருக்கிறது என்று குறிப்பிட்டேன். அப்பொழுது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு, அவ்வாறு இல்லை யாது, தகுதி படைத்த அனைவருக்கும் வழங்கப்படுகிறது என்று கூறினார்கள். ஆனால், என்னுடைய தொகுதியிலிருக்கிற 226 பேர்கள், ஒராண்டுக் காலத்திற்கு மேல் முதியோர் தொகைக்காகக் காத்திருக்கிறார்கள். எனவே, அமைச்சர் அவர்கள் நிலைமை களைப் புரிந்து கொண்டு, தகுதிபடைத்த நபர்கள் எத்தனை பேர்கள் இருந்தாலும், அத்தனை பேர்களுக்கும் இந்த முதியோர் உதவித் தொகை வழங்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தகுதி படைத்த அனைவருக்கும் முதியோர் உதவித் தொகை கொடுக்க வேண்டுமென்று அரசு கொள்கை அளவில் முடிவு எடுத்திருக்கிறது. அந்த அடிப்படை யில்தான் முதியோர் உதவித் தொகை கொடுக்கப்பட்டு வருகிறது. இன்றைக்கு நிலுவையில் இருக்கின்ற 26,268 பேர்களுக்கும் முதியோர் உதவித் தொகை அளிக்கப்படும் என்று நான் மானியக் கோரிக்கையின்மீது பேசும்பொழுது குறிப்பிட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. கவன ஈர்ப்பு.

### (அ) சென்னை இரயில்வே மருத்துவமனைக்கு எதிரில் இருந்த டாக்டர் அம்பேத்கார் சிலை உடைந்திருப்பது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் கு. தமிழரசன், ம. நா. ராமஜெயம், க. பாலசுப்பிரமணியன், கி. எத்திராசன், ஏ. பானுச்சாமி, சா. ஜெயச்சந்திரன், தமிழ்மணி, கே. பி. கே. சேகர், ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. கு. தமிழரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடந்த 12-ஆம் தேதி இரவு சென்னை பெரம்பூர் ஐ.சி.எப்., இரயில்வே மருத்துவமனை எதிரிலுள்ள அண்ணல் அம்பேத்கார் சிலையை யாரோ சில சமூக விரோதிகள் உடைத்திருப்பதால் தாழ்த்தப்பட்ட மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12—4—1986 அன்று இரவு, சில குழப்பம் விளைப்பவர்கள், கான்ஸ்டபிள் சாலை மற்றும் லோகோ வொர்க்ஸ் சாலை சந்திப்பிலுள்ள டாக்டர் அம்பேத்கார் அவர்களது சிலையை உடைத்துச் சேதப்படுத்தியதாக, 13—4—1986 அன்று காலை, திரு. ஜெயக்குமார், செயலர், லோகோ ஒர்க்ஸ் பிராஞ்ச் (கார்மிக் சங்கம்), கே—7. ஐ.சி.எப். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதன் பேரில், கே—7, காவல் நிலைய குற்ற எண் 349/86-ல் இ.த.ச. 427-ன்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு வருகிறது. இந்த வழக்கு தொடர்பாக இது வரை யாரும் கைது செய்யப்படவில்லை. இந்தப் பகுதியில் சகஜ நிலை நிலவுகிறது.

**திரு. கு. தமிழரசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தாழ்த்தப்பட்ட மக்களின் தனிப்பெரும் தலைவராகவும் இந்திய தேசியத் தலைவர்களில் குறிப்பிடத் தகுந்த ஒரு தலைவராகவும் இந்திய அரசியல் சட்டத்தின் தந்தையாகவும் இருந்த

பேரறிஞர் அம்பேத்காருடைய சிலையை கடந்த ஏப்ரல் மாதம் 12 ஆம் தேதி இரவு வேண்டுமென்றே அடித்து—இரு நாட்களிலே அவருடைய பிறந்த நாள் வர இருக்கிறது. அப்பொழுது இழிவு படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு, சில சமூக விரோதிகள்—அதை உடைத்து பின்னப்படுத்தி இருக்கிறார்கள். அவர் மிகப் பெரிய தேசியத் தலைவர் என்பதனால் டெல்லி பாராளுமன்றத்திலே கூட வேறு யாருக்கும் இல்லாத அளவிலே அங்கே அவருக்குச் சிலை வைத்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, பக்கத்திலேயிருக்கிற கர்நாடகத்திலே சட்டமன்ற வளாகத்திற்குள் அவருக்குச் சிலை வைத்திருக்கிறார்கள். பக்கத்திலுள்ள பாண்டிச்சேரியிலே சட்டமன்ற வளாகத்திற்குள் சிலை வைத்திருக்கிறார்கள். அவர் மிகப் பெரிய தேசியத் தலைவர் என்பதால்தான் இப்படி வைத்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களை இழிவுபடுத்த வேண்டுமென்பதற்காக இந்தச் செயல்களைச் சில சமூக விரோதிகள் செய்திருக்கிறார்கள். அதைப் பற்றி எழுதுகிற பொழுது இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே ஒரு குறிப்பு எழுதியுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியாகக் கேட்க வேண்டும், இது ஒரு விவாதம் அல்ல. ஆகவே, கேள்வியாகக் கேளுங்கள்.

(முற்பகல் 10-30)

**திரு. கு. தமிழரசன்:** இதைப்பற்றி எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. அண்ணல் அம்பேத்கார் சிலை உடைக்கப்பட்டுவிட்டது என்ற செய்தியை போட்டுவிட்டு, பக்கத்திலே காந்தி சிலை உடைத்தவர்கள் மீது நடவடிக்கை இல்லை. ஒருவேளை காந்தி சிலை உடைத்தவர்கள் மீது நடவடிக்கை இல்லாததால் இந்த சிலை உடைக்கப்பட்டதோ என்று மற்றவர்கள் எண்ணுகின்ற அளவுக்கு அதோடு சம்பந்தப்பட்ட செய்தியை பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்கள். எனவே நாங்கள் சந்தேகிக்க வேண்டியதாக இருக்கிறது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதையே கேள்வியாக எடுத்து பதில் சொல்லுங்கள்.





**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாரோ விஷமிகள் அண்ணல் டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய சிலையை உடைத்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே விஷமிகள் சமுதாயத்தினுடைய பலயிடங்களிலே ஆங்காங்கே இருந்துகொண்டு சில தீங்கான காரியங்களில் ஈடுபடுகிறார்கள் என்பதை நாம் உணர்ந்து இருக்கிறோம். அவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அந்த குற்றவாளிகளுக்கு தக்க தண்டனைகள் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டாக்டர் அம்பேத்கார் அவர்களுக்கு வேறு எங்கேயோ சிலைகள் எல்லாம் வைத்து இருப்பதாகச் சொன்னார்கள். நம்முடைய தமிழகத்திலே மிகச் சிறந்த சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. எல்லாவற்றையும்விட மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக்கு பிறகுதான் ஆண்டுதோறும் அண்ணல் அம்பேத்கார் பிறந்த நாள் விழாவையே அரசு விழாவாகக் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். அந்த அளவுக்கு இந்த அரசு மிகச் சிறப்பாக செய்துகொண்டிருக்கிறது. இந்த குற்றவாளிகளை கண்டுபிடித்து அவர்களை இந்த அரசு தண்டிக்கும். ஏதோ ஒரு பத்திரிகையில் காந்தி சிலையை உடைத்ததற்கு நடவடிக்கை இல்லை, அதனால் இது நடைபெற்றிருக்கிறதோ என்று போட்டிருப்பதாகச் சொன்னார்கள். இந்தச் செய்திகளை வெளியிடுகின்ற ஒரு முறைகூட இந்த சமுதாய விரோதிகள் விஷமத்தனக்காரர்கள் என்று சொல்கிறோமே அந்தப் பட்டியலுக்குள்ளே ஒருவேளை அடங்கக்கூடும். நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை கண்டுபிடிக்க வேண்டும் என்று போடுவதுதான் முறை. ஒன்றோடு ஒன்றை தொடர்புபடுத்தி ஒரு தேவையற்ற பிரச்சனையை உருவாக்குவது அமைதியான சூழ்நிலையைக் கெடுப்பதற்கான ஒரு முயற்சி என்றுதான் பொதுமக்கள் கருதுவார்கள். ஆகவே தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். அந்த தண்டனைக்குரியவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அம்பேத்கார் அவர்களுடைய சிலை உடைந்ததை கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்கள். நம்முடைய தமிழகத்தை பொறுத்தவரையில் இன்றைக்கு காவல்துறை

மாலியம் என்பதால் இங்கே காவல்துறையினுடைய தலைமை அதிகாரிகள் எல்லாம் வருகை தந்து இருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது இந்த சிலையை உடைத்தது தனிப்பட்ட நபர்களா அல்லது ஏதாவது அமைப்பிலே ஈடுபாடு உடையவர்களா என்பதை காவல் துறையினர் நிச்சயமாக ஆராய வேண்டும். குறிப்பிட்ட நபர்களோ அல்லது ஏதாவது அமைப்பிலே ஈடுபாடு உடையவர்களோ இச்செயலில் ஈடுபட்டு இருப்பார்களானால் அவர்களுக்கு விரைவிலே தண்டனை அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இனிமேலாவது அம்பேத்கார் சிலை மட்டுமல்ல வேறு எந்த சிலையாக இருந்தாலும், நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏற்கனவே கோயில்களில் இருந்த சிலைகள்தான் போய்க்கொண்டிருக்கின்றன. இன்றைக்கு தலைவர்களுடைய சிலைகள் இப்படி அடையாளம் தெரியாமல் சிதறுகின்ற அளவுக்கு இங்கே சில காரியங்கள் நடைபெறுவதைத் தடுப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைந்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சா. ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சிலையை உடைத்தவர்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றைய தினத்தோடு சுமார் 25 நாட்கள் ஆகின்றன. இனி மேலும் கண்டுபிடிப்பார்களா என்பது சந்தேகமாக இருக்கிறது. குறிப்பாக இதுபோன்ற சிலைகள் உடைக்கின்ற விஷமிகளை காவல்துறை கண்டு பிடிப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, பெரம்பூர், ஐ.சி.எப். இரயில்வே மருத்துவமனை எதிரிலுள்ள அம்பேத்கார் சிலை சேதம் அடைந்ததை அரசே ஏற்று அதைச் சரிசெய்து அல்லது புதிதாக சிலையை வைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி உடைக்கப்படுகின்ற அல்லது அகற்றப்படுகின்ற அல்லது சேதப்படுத்தப்படுகின்ற சிலைகளை எல்லாம் அரசே மீண்டும் கொண்டு வந்து வைப்பது என்று





தொடங்கினால் முடிவே இல்லாமல் போய்விடும். ஆகவே அந்த சிலைகளை மீண்டும் வைப்பதற்கு, பொதுமக்கள் முன்வந்து வைப்பதுதான் நியாயமாக இருக்கும். இந்தக் குற்றவாளிகளை கண்டுபிடிப்பதில் தாமதம் ஏற்பட்டிருக்கின்றது என்று கூறியிருக்கிறார்கள். இரவு நேரத்திலே, சில வினாடிகளில், சில நிமிடங்களில் நடந்து விடுகின்ற இந்த நிகழ்ச்சியை யாரும் உடனடியாக கண்டுபிடிக்க இயலாது. ஆனால் யாராவது அதுபற்றித் தெரிந்தவர்கள் பொதுமக்கள் முன்வந்து தடயங்களைச் சொன்னால் அல்லது ஒரு ஐயப்பாடு இருக்கிறது என்று தெரிவித்தால் அதற்கான நடவடிக்கைகளைக்கூட நாம் எடுக்க இயலும். ஆகவே பொதுமக்களும் சேர்ந்துதான் இப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபடுகிற இந்த விஷமிகளை, குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க உதவியாக இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. தமிழ்மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணல் அம்பேத்கார் அவர்களின் சிலையை உடைத்தவர்களைக் கண்டுபிடிக்க நமது அரசு தனி ஸ்குவாட் அமைத்துத் தீவிரமாகக் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரபபன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தனி ஸ்குவாட் அமைத்தாலும் எப்போதோ இரவு நேரத்தில் இவ்வாறு செய்துவிட்டுப் போகிறவர்களைக் கண்டுபிடிப்பது என்பது அவ்வளவு சுலபமாக வந்து விடாது. இருந்தாலும் இப்படிப்பட்ட சமூக விரோதிகளைக் கண்டுபிடிக்க சாதாரண காவல் துறையினரே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு இதிலே ஈடுபடுவார்கள். அந்த அளவுக்கு அந்த அனுபவலர்களே போதும் என்று அரசு கருதுகிறது.

**திரு. கே. பி. கே. சேகர்:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மாதம் 12 ஆம் தேதி சென்னை பெரம்பூர் ஐ.சி.எஃப். இரயில்வே மருத்துவமனை எதிரில் உள்ள அண்ணல் அம்பேத்கார் சிலையை உடைத்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிறபோது அவர் உயிரோடு இருந்தால் அவரைக் கொலை செய்தால் என்ன தண்டனை வழங்கப்படுமோ அதுபோல் சிலையை உடைத்த

வர்கள் மீதும் நடவடிக்கை எடுத்து அந்தமாதிரியான தண்டனை வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது தேவையற்ற கேள்வி. இதற்குப் பதில் அளிக்கவேண்டிய தேவையில்லை.

**(ஆ) திருப்பூரில் உள்ள துணி ஆலைகளின் கழிவு நீரை நொய்யலாற்றை நோக்கியோடும் வாய்க்கால்களிலும், ஓடைகளிலும் வெளியேற்றுவது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கு. சுப்பராயன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். திரு. பொ. உத்திராபதி அவர்கள் திரு. கு. சுப்பராயன் அவர்களின் சார்பாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்கள்.

**திரு. பொ. உத்திராபதி :** பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் நொய்யலாற்றில் கொரிக்கல் கலந்த டையிஸ் மற்றும் சலவைப் பட்டறைத் தண்ணீர் தொடர்ந்து விடப்படுவதால் ஆற்றின் இருபுறமுள்ள குடிநீர் மற்றும் விவசாயக் கிணறுகள் கடுமையாகப் பாதிக்கப்படுவதால் மக்களுக்கு ஏற்படும் நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

**அறிக்கை.**

திருப்பூரிலும், அதைச் சுற்றிலும் ஏறக்குறைய 90 துணி ஆலைகள் உள்ளன. இத்தொழிற்சாலைகள் நெசவு நூலையும், துணியையும் உற்பத்தி செய்கின்றன. நூலை அல்லது துணிகளை வெளுத்தலும், மெருகூட்டலும், சாயமிடுதலும், செய்யப்படுகின்றன. செய்முறையில், இத்தொழிற்சாலைகள், வெளுப்புத் திரவம், சோடா சாம்பல், எரிகாரம், ஹைட்ரோ-குளோரிக் அமிலம், கந்தக



அமிலம், டை சோடியம் பாஸ்பேட், ஹைட்ரஜன்-பெர்ராக்சைட் உப்பு, பல்வேறு சாயங்கள் முதலியனவுமான இரசாயனங்களைப் பயன்படுத்துகின்றன. செய்முறையால் வெளிப்படுத்தப்படும் கழிவு நீரானது இயல்பில் காரமுள்ளதாகவிருக்கிறது. அக்கழிவுநீர், கரையாத திடப்பொருட்கள், மிதக்கும் திடப்பொருட்கள், இரசாயன உயிரகத் தேவை முதலியன கொண்டுள்ளது. அநேகத் தொழிற்சாலைகள் தமது கழிவுநீரை நிலத்திலோ, நொய்யலாற்றை நோக்கியோடும் வாய்க்காலிலோ ஓடைகளிலோ வெளிவிடுகின்றன.

1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டப் பிரிவு 26-ன்படி, ஏற்கனவே செயலிலுள்ள தொழிற்சாலைகள் கழிவுநீரை வெளிவிடுவதற்காக இவ்வாரியத்தின் இசைவைப் பெற வேண்டும். இதுவரை, திருப்பூரிலும் அதைச் சுற்றிலுமுள்ள 59 தொழிற்சாலைகள் வாரியத்தின் அனுமதிக்காக விண்ணப்பித்துள்ளன. மேற்படி சட்டப்பிரிவின் காப்புரைகளுக்கு இணங்குமாறு மற்ற தொழிற்சாலைகளுக்கு அறிக்கை விடப்பட்டுள்ளது. 31 தொழிற்சாலைகளுக்கு இசைவளிக்கப்பட்டு வாரியம் நிர்ணயித்துள்ள வரைமுறைகளுக்கு தக்கபடி தேவையான கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்தைக் குறிப்பிட்ட காலத் தவணைக்குள் நிறுவுமாறு வற்புறுத்தப்பட்டுள்ளன. இதுவரை நான்கு தொழிற்சாலைகள் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவியுள்ளன. மேலும் ஏழு தொழிற்சாலைகளில், கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையக் கட்டுமான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையம் கட்டுமான வேலையின் முன்னேற்றம் இவ்வாரியத்தினால் கண்காணிக்கப்படுகின்றன.

குறிப்பிட்ட காலத் தவணைக்குள் வாரியத்தின் அனுமதி வேண்டி விண்ணப்பிக்கத் தவறியமைக்காக, திருப்பூரிலும் அதைச் சுற்றிலுமுள்ள நூல் மற்றும் துணிகளைச் செய்முறைப்படுத்தும் ஏழு தொழிற்சாலைக்கெதிராக வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. மேற்படி வழக்குகள் திருப்பூர் சார்நிலை குற்றவியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. இவ்வாரியம் இப்பொருள் குறித்துக் கண்காணித்து வருகின்றது. இன்னும் அநேக தொழிற்

சாலைகளுக்கெதிராக நடவடிக்கை எடுக்குமாறும், சுத்திகரிக்கப்படாத கழிவுநீர் நொய்யலாற்றில் விடப்படாமல் நிறுத்தப்படுவதை உறுதிசெய்யுமாறும், அரசு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தை கேட்டுக்கொண்டுள்ளது.

3. வரவு-செலவுத் திட்டம், 1986 87, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).
கோரிக்கை எண் 15—காவல் துறை—தொடர்ச்சி.

**கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி.**

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்த மானியக் கோரிக்கையில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இங்கே தொடர்ந்து சட்டசபைக் கூட்டம் ஏறத்தாழ 8 ஆண்டுக்காலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

பல்வேறு கேள்விகள் கேள்வி நேரத்தின்போது இங்கே கேட்கப்படுகின்றன. ஆனால் இங்கே போலீஸ் துறை சம்பந்தமாக எந்த கேள்வியும் கேட்கப்படுவதில்லை; எடுத்துக்கொள்ளப்படுவதில்லை; விவாதிக்கப்படுவதில்லை என்ற நிலைமை இருப்பது பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு விரோதமல்லவா? அரசாங்க அதிகாரிகள், போலீஸ் அதிகாரிகள் பற்றிய தகவல்களைத் தெரிந்துக்கொள்வதற்காகத்தானே இந்த நேரத்தை நாம் பயன்படுத்துகிறோம். எனவே நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இங்கே போலீஸ் அமைச்சர் இருக்கிறார். அவர் பதில் சொல்லாவிட்டாலும் பரவாயில்லை. நிதியமைச்சர் இருக்கிறார். அவராவது பதில் சொல்லலாம். ஆகவே இந்த 8 ஆண்டுகாலமாகத் திட்டமிட்டு என்ன நோக்கத்தாலோ போலீஸ் சம்பந்தமான கேள்விகள் எடுக்கப்படாமல் இருப்பது கண்டிக்கத் தகுந்தது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவதாக ஒன்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன் காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் மலிவு விலையில் உணவுப் பொருள் வழங்குகிற திட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் இப்போது அந்த அளவு குறைக்கப்பட்டிருக்கிறது. 24 கிலோ அரிசி தரப்பட்டதற்குப் பதிலாக 12 கிலோதான் தரப்படு



கிறது. பாமாயில் கொடுக்கப்படுவது கிடையாது. ரேஷன் கடைகளில் இருக்கிற விலைகளைக் காட்டிலும் கூடுதலாக இருக்கிறது என்று போலீசார் சொல்கிறார்கள். எனவே இது குறித்து அரசு பரிசீலிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன். ஃபோர்த் பே கமிஷனிலே காவல் துறையைப் பொறுத்தவரையிலே எந்தவிதமான ரெப்ரசன்டேஷனும் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோது வீட்டுவசதிக்கென்று 80 ரூபாய் தரப்பட்டது. இப்போது ஃபோர்த் பே கமிஷனிலே 55 ரூபாய் என்று தெரிவித்திருக்கிறார்கள். போலீஸ் ரெப்ரசன்டேஷன் இல்லாத ஃபோர்த் பே கமிஷன் எந்தவிதத்தில் நியாயம் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

நம்முடைய அரசாங்கத்திலே 5—9—1979-ல் ஆர்டர்லி முறை ஒழிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் இன்னும் இந்தப் பெரிய அதிகாரிகள் காவல் துறையைச் சார்ந்தவர்களைக் கொத்தடிமைகளாக வைத்திருக்கிறார்கள். 'பார்ப்பானை ஐயர் என்ற காலமும் போச்சே, வெள்ளைப் பரங்கியைத் துரையென்ற காலமும் போச்சே' என்று பாரதி பாடினார். ஆனால் இன்னும் காவல் துறையிலே கொத்தடிமைகளாக துரை என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிற அளவிலே இருக்கிறது. அது மாற்றப்பட வேண்டும். அதைப்போலவே இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். போலீஸாருடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு அல்லது அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்பைத் தரவேண்டும் காவல் துறையின் மூலமாக என்று நான் கேட்டுக் கொள்கிறேன். மற்றத் துறைகளில் அது போல இருக்கிறது. அதைப்போலவே காவல் துறையில் பணிபுரிகின்ற காவலருடைய குடியிருப்புகளில் போதுமான வசதிகள் இல்லை. தண்ணீர் வசதி இல்லாமல் இருக்கிறது. மின்சார வசதி இல்லாமல் இருக்கிறது. சுண்ணாம்பு அடித்து 15 ஆண்டுகளுக்கு மேலாகிறது என்று சொல்லுகிறார்கள். சரியாக பராமரிக்கப்படாமல் இருக்

[திரு. அ. ரகுமான்கான்] [1986 மே 6

கிறது. அவைகளை சீர் செய்ய வேண்டும். அதைப்போலவே மின்சார மீட்டர்களை அவர்களுக்கு தனியாகப் போட வேண்டும். 40 ரூ, 50 ரூ என்று அவர்களுடைய சம்பளத்திலே அதற்காக பிடிக்கிறார்கள். அதைக் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

காவலர்களுக்கு என்று ஒரு கூட்டுறவு சொசைட்டி இருந்தது. அது இப்போது மூடப்பட்டிருக்கிறது. அதிலே ஊழல் நடைபெற்றிருப்பதாகச் சொல்லப்படுகிறது. எப்படி ஊழல் நடந்தது? ஊழல் நடப்பதற்கு யார் காரணம்? யார் தவறு செய்தார்கள் என்று கண்டு பிடிக்க வேண்டும். ஏனென்றால் காவல்துறையைச் சார்ந்த ஊழியர்களுடைய பணம் அதிலே இருக்கிறது. அவர்கள் அதை திரும்பப் பெற வேண்டியிருக்கிறது. அது பல வருஷங்களாக கொடுக்கப்படாமல் வட்டிக்கு வட்டி போட்டு ஏறிக் கொண்டே போய்க் கொண்டிருக்கிறது. அதைத் திரும்பத் தருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து காவலர்களுக்கு காஷுவல் லீவ் முதலில் 20 நாட்கள் என்று சொல்லப்பட்டு, அது இன்றைக்கு 12 நாள் ஆக மாற்றப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைக்கு காவலர்கள் சனிக்கிழமை முழுவதும் வந்து 20 நாட்களுக்கு மேலும் வேலை செய்கிறார்கள். ஒன்று 20 நாட்கள் என்று இருக்கக்கூடிய நிலைமையிலே சனிக்கிழமை வேலை செய்யக்கூடிய நாட்களில் சம்பளம் தரவேண்டும் அல்லது மற்றவர்களைப் போலவே அவர்களுக்கும் சனிக்கிழமை விடுமுறை கொடுத்து, கேஷுவல் லீவை 12 நாளாக ஆக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து மிக முக்கியமானது, போலீஸ் சங்கத்திற்கு அங்கீகாரம் வழங்கப்படும் என்று 1978-லே தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டது. நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்திலே அப்படிச் சொன்னார்கள். சென்னை உயர்நீதி மன்றமும் போலீஸ் சங்கம் வைப்பதற்கு அனுமதி தந்திருக்கிறது. ஆனால் போனதடவை நாவலர் அவர்கள் மெட்ராஸ் ஹைகோர்ட்டிலே அது குறித்து ஸ்டே வாங்கப்பட்டிருக்கிறது



1986 மே 6] [திரு. அ. ரகுமான்கான்]

என்று சொன்னார்கள். சுந்தரம் என்ற இன்ஸ்பெக்டர் அப்போது அந்த ஸ்டேயை வாங்கினார். அவர் இப்போது டி.எஸ்.பி.-ஆக ப்ரமோஷன் பெற்று விட்டார். தம் கடமையை சரிவர ஆற்றியதற்காக, டி.எஸ்.பி.-யாக மாறிவிட்ட காரணத்தாலே, அவர் இப்போது இன்ஸ்பெக்டர் இல்லை என்ற காரணத்தாலே அந்த வழக்கு இப்போது இன்ஃப்ரக்சுவல் ஆகிறது. நீங்களும் இன்னும் 2½ வருஷமாக அந்த ஸ்டேயை வெக்கேட் செய்யாமல் வைத்திருக்கிறீர்கள். மாறாக போலீஸ் சங்கம வைக்கப்பட வேண்டும் என்று உரிமைக்காகப் போராடியவர்கள் மீது இன்றைக்கும்—1983-லே நடந்தது அந்தப் போராட்டம்—அதை ஏதோ 1986-லே காலிஸ்தான் வேண்டுமென்று பொற்கோவிலிலே புகுந்து கொண்டு, பஞ்சாப் அரசைக் கவிழ்க்க முயற்சி செய்த போராட்டம் போல நினைத்துக்கொண்டு—அந்தப் போலீசார் ஒரு பெரிய ஆயுத புரட்சியையே நடத்தினார்கள் அரசைக் கவிழ்க்க சதி என்று சொல்லி ஒரு உண்மைக்கு மாறான வழக்கை தொடுத்திருக்கிறார்கள். போலீஸ் துறைக்கு எதிராக போலீஸ் துறையினரையே வழக்கு தொடர வைக்கும் கொடுமை நியாயம்தானா? ஆண்டவனுக்கே அடுக்குமா என்று தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன். அண்மையில்தான் அந்த வழக்கைப் போட்டிருக்கிறார்கள்.

அதைப்போலவே இன்னொரு முக்கியமான விஷயம். நீங்கள் சப்-இன்ஸ்பெக்டர் செலக்ஷனுக்காக 71, 79, 83, 84, 85 என்று வருடந்தோறும் தொடர்ந்து விளம்பரம் செய்து, ஒரு அப்ளிகேஷனுக்கு 25 ரூபாய் வீதம் பல லட்சங்களை அரசின் இந்தத் துறை சார்பாக திரட்டினீர்கள். ராணுவ அதிகாரிகளை வைத்து தேர்வு நடத்தப்படும் என்று சொன்னீர்கள். ஆனால் இன்னமும் எஸ்.ஐ. செலக்ஷன் நடத்தப்படாமல் இருக்கிறது. என்ன காரணம்? நான் கேட்கிறேன். காட்டுவதைக் காட்ட யாரும் தயங்குகிறார்களா? அல்லது உங்களுடைய கவனத்திற்கே கொண்டு வர யாரும் தயங்குகிறார்களா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே பட்டதாரி காவலர்கள் எல்லாம், பி.ஏ. படித்தவர்கள் எல்லாம் இன்றைக்கு முதல்நிலை காவலர்களாக, 2வது நிலை காவலர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் பி.யூ.சி. படித்த

வர்கள் எஸ்.ஐ.-யாக ஆகிவிடுகிறார்கள். பி.ஏ. படித்த காவலர்கள் காவலர்களாகவே இருக்கிறார்கள். ஆகவே இந்த போஸ்டிற்கு அவர்களுக்கு முன் உரிமை வழங்கப்பெற வேண்டும்.

அடுத்து இந்த எஸ்.ஐ. செலக்ஷனுக்காக அப்ளை செய்தவர்களுக்கு எல்லாம் வயதும் ஆகிக் கொண்டே போகிறது? எப்போது அந்தத் தேர்வை நடத்தப்போகிறீர்கள்? குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை என்று சொன்னீர்களே அது என்னவாயிற்றோ? இதைக் கொடுத்தாலாவது அதிலே கொஞ்சம் பூர்த்தி செய்ய முடியும். இந்த எஸ்.ஐ. செலக்ஷனுக்காக இன்னும் எவ்வளவு நாட்களுக்கு அவர்களை காக்க வைத்துக் கொண்டிருக்கப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

அடுத்து மக்கள் தொகைக்கு ஏற்ப போலீஸ்காரர்களின் எண்ணிக்கை போதாது. 12 ஆயிரம் போலீஸ்காரர்கள் புதியதாக நியமிக்கப்படுவார்கள் என்று சொன்னார்கள். அப்படி போலீஸ் நண்பர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டார்களா? எவ்வளவு பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று தெரியவில்லை. அதுவும் சப் இன்ஸ்பெக்டர் தேர்வுக்கான நிலையில்தான் இருக்கிறது. 1978-லேயிருந்து தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

என்னிடத்திலே ஒரு குறிப்பு இருக்கிறது. அந்தக் குறிப்பிலே மூர்த்தி என்பவர் போலீஸ் துறைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வெயிட்டிங் லிஸ்டிலே இருக்கிறார்கள். 1983-லே ஆர்டர் போடப்பட்டிருக்கிறது. இவ்வளவு வருஷத்திற்கு பிறகும் போலீஸ் டிபார்ட்மெண்ட் என்ன செய்து கொண்டிருக்கிறது. என் அவரை வேலைக்கு எடுக்கக் கூடாது? என்ன காரணம்? அவர் தீ குளிப்பேன் முதலமைச்சர் வீட்டின் முன்னாலே என்று கடிதம் எழுதினார். உடனே அவரை கைது செய்து ஜெயிலிலே வைத்திருக்கிறீர்கள். வேலையும் கொடுக்க முடியவில்லை. சாகவும் விடமாட்டேன் என்கிறீர்கள். இந்தச் சிக்கலை தீர்க்க என்னவழி என்று யோசிக்க வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று மிக முக்கியமான பிரச்சினை. நாட்டிலே சட்டம் ஒழுங்கு நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதற்கு உதாரணம், ஆற்றல் மிக்க ஆட்சி என்று சொல்லுகிறீர்களே, அந்த





ஆற்றல் மிக்க ஆட்சியில் எப்படி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், எப்படி சமுதாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது மிகுந்த வருத்தத்திற்குரிய ஒரு விஷயம்.

பூந்தமல்லி அருகே செங்கனேரி குப்பத்திலே சுப்பிரமணிய சாமி கோவிலிலே நாகராஜ குருக்கள் என்பவர் பூஜை செய்வதற்கு போனபோது, பல லட்சம் ரூபாய் மதிப்புள்ள சிலைகள் திருடப்பட்டிருப்பது தெரிகிறது. கபாலீஸ்வரர் கோவிலிலே, மைலாப்பூரிலே விளக்கையே திருடிக்கொண்டு போய்விட்டார்கள். திருச்சி அருகிலே உத்தமசீலபுரம் பெருமாள் கோவிலிலே இருந்த காவலர்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டு பல லட்சம் பெறுமான ஸ்வாமி சிலைகள் திருடப்பட்டிருக்கின்றன.

கோவை மாவட்டத்திலே சூளூர், திருவேங்கட பெருமான் ஸ்வாமி கோவிலிலே கதவு உடைக்கப்பட்டு 4 பஞ்ச லோக ஸ்வாமி சிலைகளை, பல லட்ச ரூபாய் மதிப்புள்ள சிலைகளை திருடியிருக்கிறார்கள். செங்கல்பட்டு மாவட்டம் திருத்தணி அருகே பெரிய கடம்பூர், கருநாகபாளையம்மன் கோவிலிலே 4 பஞ்சலோக சிலைகள் பல லட்சம் மதிப்பு உள்ளது திருடப்பட்டிருக்கிறது. பெரிய பாளையம் ஆத்தங்கரை ரோட்டில் உள்ள புகழ்பெற்ற கோவிலின் உண்டியல் உடைக்கப்பட்டு திருடப்பட்டிருக்கிறது. கோவில் பாளையம் காமபுரீஸ்வரர் கோவிலிலே பல லட்ச ரூபாய் மதிப்புள்ள சிலைகள் திருடப்பட்டிருக்கின்றன. அதைப்போலவே பாளையங்கோட்டை கர்ப்பூரபாண்டியன் கோவில் சிலை இரண்டு திருடப்பட்டிருக்கின்றன. அறங்காவலர் கம்ப்ளெயின்ட் கொடுத்திருக்கிறார். உங்களைப் பார்த்து நான் கேட்க விரும்புகிறேன். இப்போது தமிழகத்தில் கோவில் உண்டியல் காணாமல் போகிறது, சிலைகள் காணாமல் போகின்றன, முருகன் வேல் காணாமல் போகிறது. ஆனால் துறைத் தலைவர் அவர்களே, இந்தக் கொடுமையை கேட்டீர்களா? ஒரு கோவில் யானையையே காணோம். கோவில் யானையை காணோம் என்று நம்முடைய பாளையங்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினரிடத்தில் மக்கள் புகார் கொடுத்திருக்கிறார்கள். பூனை போனால் கூட

பரவாயில்லை. யானை காணாமல் போகிற அளவிற்கு இருக்கிற சர்க்கார் நமக்கு தேவைதானா? போலீஸ் டிபார்ட்மெண்ட் தேவைதானா? இத்தனை டி.ஐ.ஜி. மற்ற அதிகாரிகள் தேவை தானா? நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். பூனை போனால் கூட பரவாயில்லை. யானை போயிருக்கிறது.

அடுத்து இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். காவல் துறையைச் சார்ந்தவர்களே குற்றம் இழைக்கிறார்கள். உதாரணத் திற்குச் சொல்கிறேன். அபிராமபுரம் இ. 4 போலீஸ் ஸ்டேஷன். 16—10—85 அன்று சாந்தி, லட்சுமி என்ற பெண்கள் கைது செய்யப்பட்டு இருக்கிறது, நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது போய் கொடுமைபடுத்தப்பட்டு, அடிக்கப்பட்டு, மொட்டையடித்து கேவலப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். குற்றம் செய்திருந்தால் வழக்கு போட்டு, கோர்ட்டிற்கு கொண்டு போகட்டும். ஆனால் அநாகரிகமாக நடந்திருக்கிறது. இரவு நேரத்தில் பெண்களை காவல் நிலையத்திற்கு அழைத்து வரக் கூடாது என்ற புதுமைச் சட்டம் போட்டிருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது இந்த அக்கிரமம் நடக்கலாமா?

அதைப்போல போலீஸ்காரர்கள் ஜேப்படி அல்லது திருட்டை செய்வதை கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இது நம்முடைய போலீசுக்கு எவ்வளவு பெரிய அவமானம்? தமிழ் நாடு போலீசுக்கு எவ்வளவு பெரிய கேவலம்? அருள்கூர்ந்து கேட்க வேண்டும். ஜேப்படி செய்தவர்களுக்கு உடந்தையாக இருந்ததாக, திருட்டிலே பங்கு பெற்றதாக, அவர்களின் பெயர்களைக் கூடச் சொல்கிறேன். பவானி இருக்கிறது என்னிடத்தில். தேவராஜன், ஜெயராமன் ஆகியவர்கள் இதைக் குறித்து மேலதிகாரிகளுக்கு முறையிட்டு அவர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதன்பிறகு ஹைக்கோர்ட்டிற்கு போயிருக்கிறார்கள். நீதிபதி ஈக்னம் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் ஜேப்படியில் உடந்தை, திருட்டில் உடந்தை என்றால் ஆட்சியாளர்களை நான் கேட்க விரும்புகிறேன் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கு ஒரு போலீஸ் படை தேவையா? போலீஸ்காரர்கள் ஜேப்படி செய்தால் நாடு எப்படி இருக்கும். போலீஸ்காரர்கள் திருடினால் நாடு எப்படி இருக்கும்?



அதைப்போல இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். போலீஸ்காரர்கள் இருக்குமிடத்திலே திருட்டு. உதாரணம் மதுரை ஆயுதப் படை போலீஸ் ரேடியோ அறை. 17 ஆயிரம் ரூபாய் சம்பளம் பட்டுவாடா செய்யப்பட்டு மீதியை அந்தப் பெட்டியிலே வைத்திருக்கிறார்கள். அந்தப் பெட்டியைக் காணோம். தேடிப் பார்த்தால் யார் என்று கேட்டால் ஏட்டய்யா என்று சொல்கி றார்கள். அதாவது ஹெட்கான்ஸ்டேபிள் திருடியிருக்கிறார்கள். இதைச் சொன்னது யார் என்று கேட்டால் எஸ்.பி. அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். 9,845 ரூபாய் திருடப்பட்டிருக் கிறது. நான் சொல்லவில்லை. போலீஸ் இலாக்காவைச் சேர்ந்த ஹெட் கான்ஸ்டேபிள் போலீஸ்காரர்களுக்கு சம்பளம் கொடுக் கின்ற பணப் பெட்டியை திருடிக்கொண்டு போயிருக்கிறார் என்று மதுரை எஸ்.பி. சொல்கிறார். ஆகவே நான் சொல்கிறேன். இது போலீஸ் இலாக்காவின் இலட்சணம் எப்படியிருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம்.

அதைப்போலவே வாடியப்பன் என்ற ஒருவர். அவர் குடி போதையில் பெண் போலீசிடம் பலவந்தம் செய்ய முயற்சித்து இருக்கிறார். ஆப்பூர் காவல் நிலையம். இன்ஸ்பெக்டரும், சப் இன்ஸ்பெக்டரும் பக்கத்து ஊருக்கு போய் விசாரணை முடித்து விட்டு இரவு பன்னிரெண்டு மணிக்கு வந்திருக்கிறார்கள். போலீஸ் காரர்களுக்கு முன்னாலேயே குடிபோதையில் அந்தக் கற்பழிப்பு முயற்சி நடந்திருக்கிறது. நாடு உருப்படுமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து பெரம்பலூர் பஸ் நிலையத்தில் 1986 ஆம் ஆண்டு ஜனவரி 21-ம் தேதி இரவு 10 மணிக்கு திருமலை என்பவரும் அவரது மனைவி மல்லிகாவும் காத்து இருக்கிறார்கள். பெரிய சாமி, அருணாசலம் என்ற காவலர்கள் மப்டியில் வந்து மல்லி காவை மனம் திறந்து வா என்று கூப்பிட, அவர் மறுத்த காரணத் தால் இரண்டு பேரையும் காவல் நிலையத்திற்கு அழைத்துக் கொண்டு போய் கொடுமைப் படுத்தியிருக்கிறார்கள். இதை செய்திருப்பது யார், போலீஸ்காரர்கள், நான் கேட்க விரும்புகிறேன். இது நியாயம் தானா?

[திரு. அ. ரகுமான்கான்] [1986 மே 6

அதேபோல செய்யாறு காஞ்சிபுரம், வட ஆர்க்காடு மாவட்டம், இங்கே ஒருவர் பாவம், 5,000 ரூபாய் போட்டு வாங்கி 10 சைக்கிள்களை வைத்து சைக்கிள் கடை நடத்துகிறார். பெயர் இராமகிருஷ்ணன். அவரிடமிருந்த ஒரு சைக்கிள் காணாமல் போய்விட்டது. அதைக் கண்டுபிடித்து கொடுக்க 200 ரூபாய் கொடு என்று சொல்லி செய்யாறு போலீஸ் ஸ்டேஷன் எஸ்.ஐ. செங்கையாபதி, போலீஸ் காவலர் சுந்தரமூர்த்தி ஆகியோர்கள் லஞ்சம் கேட்க, இதைக் குறித்து லஞ்ச ஒழிப்பு போலீஸ்காரர்களுக்கு தகவல் கொடுக்க நேரிடையாக அவர்களைப் பிடித்து இருக்கிறார்கள். போலீஸ்காரர்கள் இப்படி லஞ்சம் வாங்குகிறார்கள். நீங்கள் கேட்கலாம் 200 ரூபாய்தானே, ஒரு சாதாரண தொகைதானே, இங்கே மகாசூரர்கள் இருக்கிறார்கள், மலை முழுங்கிகள் இருக்கிறார்கள் என்று சிலர் சமாதானம் கூறலாம். இது நியாயம் தானா?

(முற்பகல் 10-50)

அதைப்போல இன்றைக்கு சட்டம் ஒழுங்கை எடுத்துக் கொண்டால் மாஜிஸ்ட்ரேட்டுகள் சங்கம் ஒரு தீர்மானம் போட்டிருக்கிறது. தங்களுடைய உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு கொடுக்க போலீஸ் தேவையென்று அவர்கள் தீர்மானம் போடுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூட, உங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன், அதுபோன்ற கொடுத்தால் நலமாக இருக்கும். ஆனால் நீங்கள் பாதுகாப்பு கொடுக்காவிட்டாலும் நாங்கள் பாதுகாப்பைத் தேடிக்கொள்வோம். அது வேறு விவகாரம். ஆகவே நான் கேட்க விரும்புகிறேன். இன்றைக்கு மாஜிஸ்ட்ரேட்டாக பொன்னேரியில் பணியாற்றுகிறார். அவர் திருப்பாக்கத்தில் குடியிருக்கிறார். டியூட்டியிலே போகிறபோது, பரமன் என்பவர், தன்னுடைய வீட்டு விஷயம் சம்பந்தமாக தப்பாக தீர்ப்புக் கொடுத்துவிட்டாராம். அதனால் அவரை அடித்துக் கொலை செய்ய முயற்சித்து, ஆஸ்பத்திரியிலே அனுமதிக்கப்பட்டு இருக்கிறார். இதையெல்லாம் பார்க்கும்போது, அமைதிப் பூங்கா தமிழகத்திலே எப்படி இருக்கிறது, சட்டம் ஒழுங்கு எப்படி இருக்கிறது, ஆளுநர் உரையிலே சொல்லியிருக்கிறார்கள். இவைகளுக்கு எல்லாம் எடுத்துக் காட்டு.



1986 மே 6] [திரு. அ. ரகுமான்கான்]

உடுமலைப்பேட்டையிலிருந்து நான் ஒரு வக்கீல் என்ற முறையிலே பார் கவுன்சிலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது. பெரியசாமி என்பவரை 24—4—1986 அன்று போலீசாரால் அடித்து, போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு போய்,

'without any reason he has betn assaulted'

இதிலே ஏதாவது நியாயம் இருக்கிறதா? வக்கீலையே போலீஸ்காரர்கள் அடித்து கொடுமைப்படுத்தி இருக்கிறார், செல்லதுரை என்ற கான்ஸ்டபிள். அவர்கள் ஊர்வலம் நடத்தினார்கள், போராட்டம் நடத்தினார்கள், கோர்டுக்கு போகமாட்டேன் என்று பகிஷ்கரிப்பு கூடச் செய்தார்கள்.

இதுபோன்று வட ஆர்க்காடு மாவட்டத்திலே சோளிங்கநல்லூரைச் சேர்ந்த ஆசிரியர் பழனி, அவருடைய மனைவி, எல்.ஐ.சி. பில்டிங் முன்னாலே பட்டப் பகலிலே அவர்கள் போகும்போது, அந்தப் பெண்மணி அணிந்திருந்த 15 பவுன் நகையை அறுத்துக் கொண்டு ஓடிவிடுகிறான், திருடன். புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது, நடவடிக்கை எதுவும் இல்லை.

சென்னை அரசு பொது மருத்துவமனையில் உள்ள போலீஸ்காரர் சீனிவாசன், போலீஸ்காரர்களுக்கே எவ்வளவு அபாயம் பாருங்கள். அவருடைய மகள் ரேவதி, வயது 16, அவர் ஆவடி சத்தியமூர்த்தி உயர்நிலைப் பள்ளிக்கூடத்திலே படிக்கிறாள். நிலைமை என்ன தெரியுமா? போலீஸ்காரர் மகளுக்கே ஆபத்து. ரேவதியைக் காணோம். கடத்திக் கொண்டு போய்விட்டார்கள். பாவம், போலீஸ்காரர் என்ன செய்வார், ஆவடி போலீஸ் ஸ்டேஷனிலே புகார் கொடுத்திருக்கிறார். போலீஸ்காரர் தன்னுடைய மகளைப் பாதுகாக்க முடியவில்லை. போலீஸ் ஸ்டேஷனுக்குத் தான் போகிறார்.

அதுமட்டுமல்ல, இன்னொன்று, சட்டம் ஒழுங்கு பிரிவு சப்-இன்ஸ்பெக்டர் பெயர், சத்தியநேசன், அயனாவரத்திலே உள்ள காவல் நிலையத்திலே வேலை பார்க்கிறார். அவருடைய வீடு மதுரவாயல் அருகே உள்ள மேட்டுக் குப்பத்திலே இருக்கிறது. இரவு எட்டு பேர்கள் வந்து கத்தியோடு போய் பிள்ளையை அடித்து, அந்த அம்மாளை அடித்து, கொள்ளை அடித்துக் கொண்டு போய்விட்டார்கள். நகை, பணம் கொள்ளை அடிக்கப்பட்டு இருக்கிறது, புகார் செய்திருக்கிறார்கள்.

அதிலும், ஓய்வு பெற்ற ஐ.ஜி. குமாரமேனன், வாக்கிங் போவது அவருடைய வழக்கம். நுங்கம்பாக்கத்திலே அவருடைய வீடு, வாக்கிங் போய் இருக்கிறார். அவர்கள் வாக்கிங் போன நேரத்திலே திருடர்கள் உள்ளே வாக்கிங் போய், பணத்தைக் கொள்ளை அடித்து இருக்கிறார்கள். இவர்களுக்கே இந்தக் கொடுமை அதுமட்டுமல்ல. பொன்னேரியில் வக்கீல் வேலை பார்க்கின்ற ஒருவரிடம் கேஸ் கொடுக்கவேண்டும் என்று சொல்லி, ஒருவர் வந்திருக்கிறார். அவரை பெஞ்சிலே உட்கார வைத்து இருக்கிறார்கள், ஏதோ புது கேஸ் வந்திருக்கிறது என்று. உற்சாகமாகப் பேசியபோது, திடீரென்று கத்தியைக் காட்டி, வக்கீலையும், வக்கீல் பெண்டாட்டியையும் வாயிலே துணியை அடைத்து, கொள்ளை அடித்துக்கொண்டு போய் இருக்கிறார். 70 ஆயிரம் ரூபாய்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக மன்னிக்கவேண்டும். கொஞ்சம் களைத்துப் போய் வியர்த்து இருக்கின்ற காரணத்தால், ஓய்வு எடுக்க வேண்டும் என்பதற்காக நான் குறிப்பிடுகிறேன். அவர்கள், 6, 7 மாதங்களாக வந்திருக்கிற பத்திரிகையினுடைய செய்திக் குறிப்புகளைச் சொல்வதுபோல், இங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளை சொல்கிறார்கள். நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, இவைகளில் எல்லாம் காவல் துறை நடவடிக்கை எடுக்கவில்லையா? காவல் துறைக்கு புகார் வந்து அவர்கள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளவில்லையா? எந்த அடிப்படையில் இந்தக் குற்றங்களை எல்லாம் நீங்கள் பேசுகிறீர்கள். நடைபெற்று இருக்கின்ற திருட்டுக்கள் தெரியும். நீங்கள் உச்சகட்டமாக கொள்ளை வரைக்கும் போய் இருக்கிறீர்கள். அதிலே நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டு இருக்கிறது, புகார் கொடுக்கப்பட்டு இருக்கிறதா, நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறதா என்பதைத் தான் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, என் களைப்பைத் தீர்ப்பதற்கு உதவியதற்கு நன்றி. இவைகள் பத்திரிகைகள் செய்திகள் அல்ல ஆய்வு அறிக்கையிலே கொடுக்கப்பட்டு இருக்கிற விவரங்களிலே இவைகள் இல்லை. இதுபற்றி விவரங்கள் என்ன என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் சொல்கிறேன் காவல் நிலையத்திலே வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இருக்கிறதா, இல்லையா சொல்லவேண்டும்.

1986 மே 6]

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் களே, கொள்கை விளக்கக் குறிப்பிலே கொள்கை பற்றிய விளக்கங் கள்தான் இருக்குமே தவிர, நிகழ்ச்சிகளின் தொகுப்பாக இருக்க முடியாது.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் காவல் துறையைப் பற்றி பேச முன் வந்ததற்கு மகிழ்ச்சி. கொஞ்சம் படித்து விட்டுப் பேசினால் நல்லது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர் அவர்களே, இவைகள் எல்லாம் பொதுவான அறிவு. எல்லோ ருக்குமே தெரிந்து இருக்கக்கூடிய ஒன்று. கொள்கை விளக்கக் குறிப்பு என்கிறபோது, ரகுமான்கான் அவர்கள் இங்கே குறிப் பிடுவதைப் போன்று அன்றாடம் பத்திரிகையிலே வருகிற, திருட்டுக் கேசிலிருந்து, சாமி சிலை திருடு போனது, யானை திருடு போனது, இன்னும் பூனை திருடு போனது. இவைகளை எல்லாம் சொல்லவேண்டும் என்றால், 25, 30 வால்யூமாகத்தான் கொள்கை விளக்கக் குறிப்பைக் கொடுக்க முடியும். அதைத் தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** பாலிசி நோட்டை அவர்கள் படிக்க வில்லை என்று தெரிகிறது. பேரணாம்பேட்டிலே போலீஸ் லாக்கப் பிலே கொலை நடைபெற்று இருக்கிறது என்பதை நம்புவதற்குப் போதுமான காரணங்கள் இருக்கின்றன. அடித்து போலீஸ் லாக் கப்பிலே கொல்லப்பட்டு, தெருவிலே போடப்பட்டு, பிறகு தூக்கிலே தொங்கினார் என்று கதை கட்டியிருக்கிறார்கள். இது பற்றிய விவரங்கள் இதிலே வராது. வழக்கு என்று சொன்னால், வழக்கு முடிந்து விவரங்கள் என்ன என்பதைப் பற்றி அரசாங்கம் பதில் சொல்லவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வழக்கு பதிவு செய்யப்பட்டு இருக்கிறதா? (குறுக்கீடு) அப்படி இல்லை என்றால் நீங்கள் செய்தியாகச் சொல்வது மாதிரி தெரிகிறது. வழக்கு பதிவு செய்யப்பட்டு போலீஸ் நிலையத்திற்கு அழைத்துக் கொண்டு என்று சொன்னால், அமைச்சர் பதில் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும். நீங்கள் முதலிலே பேசும்போது, [illegible]

எல்லாம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இருக்கிறதா என்ற விவரம் வேண்டும் என்று சொன்னீர்கள். (குறுக்கீடு) வழக்கு பதிவு செய்திருக்கிறார்கள் (குறுக்கீடு) அப்படித் தெளிவாகப் பேசுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** துணைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் கேட்டேன்: வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இருக்கிறதா, புகார் வழக்கு மன்றத்திலே கொடுக்கப் பட்டு இருக்கிறதா? அல்லது நேரடியாக ரகுமான்கான் அவர் களிடத்திலே கொடுக்கப்பட்டு இருக்கிறதா? அதைத்தான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, வழக்கு காவல் நிலையத்திலே கொடுக்கப்பட்டு இருக்கிறது. என்னிடத்திலே தரப்பட்டு இருக்கிறது. உதாரணமாகச் சொல்ல விரும்புகிறேன். திருவண்ணாமலை நகராட்சி. அங்கே ஆளும் கட்சியிலே இரண்டுவிதமான கோஷ்டிகள் இருக்கின்றன. இந்த இரண்டு கோஷ்டியிலே ஒரு கோஷ்டி கமிஷனரிடத்திலே இருந்து டெண்டர் பாரமை பிடுங்கிக் கொண்டு போய்விட்டார்கள். கேஸ் போடப்பட்டு இருக்கிறது. அரெஸ்ட் செய்யப்பட்டார்கள். பெயி லிலே வந்தார்கள்.

நான் அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன்—வழக்கு இருக்கிறதா இல்லையா? அந்த அதிகாரியைக் கூப்பிட்டுத் தெரிந்து கொள்ளுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) மன்றத் தினுடைய தலைவர் அவர்களே, இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் லத்தீப் அவர்கள் வீட்டில் கார் திருட்டுப்போய் இருக்கிறது. அதைப்போலவே டைரக்டர் துரை அவர்கள் வீட்டில் ஒரு கொள்ளை. மரியாதைக்குரிய மாண்புமிகு ஜெயமாலினி, நடிகை அவர்களுடைய வீட்டில் திருட்டு. திருடுபவர்கள் கூட அந்த நடிகையின் ரசிகர்களாக இருக்கும் காட்சியைப் பார்க்கிறோம்

இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். போலீஸ் லாக்கப்பிலே டெத் என்று சொல்லப்படுவது இந்த ஆட்சியில் வழக்கமாக நடைபெறுகிற ஒன்றாக இருக்கிறது. தேவாரம்



என்பவர்—நம்முடைய கமிஷனர் தேவாரம் அவர்கள் அல்ல— போடிக்கும் தேனிக்கும் இடையில் இருக்கக்கூடிய ஒரு ஊர். அதைப்பற்றி கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக் கிறது. தனுஷ்கோடி என்ற 20 வயதுள்ள இளைஞர் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறான். விசாரணை நடந்து கொண்டிருக்கிறது இதைக் கண்டித்துக் கேட்ட மக்களுக்கு எதிராக துப்பாக்கிப் பிரயோகம், தடியடிப்பிரயோகம் நடைபெற்றது.

சட்டக் கல்லூரிப் போலீசாரால் இராமன் என்பவர் திருட்டு சம்பந்தமாக விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டு அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறார். இதை நம்புவதற்குப் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன.

தென்னார்க்காடு மாவட்டம், செஞ்சி காவல் நிலையத்திலே சிந்தாமணி என்பவர் மர்மமான முறையில் போலீஸ் லாக்கபபில் மரணம் அடைந்திருக்கிறார். அதைப்போலவே, கோட்டூர்புரம் காவல் நிலையத்திலும் நடைபெற்றிருக்கிறது. இதற்கெல்லாம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும். ஒரு டீக்கடை முதலாளி கொடுத்த திருட்டுப்புகாரின் பேரில், டீக்கடையில் பணி புரியும் கணேசன் என்பவரை விசாரணைக்கு அழைத்துச் சென்றனர். போலீஸ் லாக்கப்பில் அவரை அடித்து மர்மமான முறையில் கொலை செய்திருக்கின்றனர் என்று எனக்கு தகவல் கிடைத்திருக்கிறது. அவரை அந்த டீ கடைக்கு பக்கத்தில் ஒரு சந்தில் தூக்கி எறிந்துவிட்டு பிறகு தேடுவதைபோல் தேடி அவரை ஸ்டேஷனுக்கு எடுத்துச்சென்று, அவர் விஷம் குடித்து இறந்தது போல் ஒரு கற்பனையாக ஜோடித்து சொல்லப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல். அந்தத் தகவல் தவறாக இருந்தால் அமைச்சர் அவர்கள் பேசுகிற போது அதை மறுக்கலாம்.

அதைப்போலவே, பாலுசெட்டிச் சத்திரம், தென்காசி அருகே, சகோதர சட்டமன்ற உறுப்பினர், இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினருடைய தொகுதி. இங்கே போலீஸ் லாக் கப்பில் தேவதாஸ் என்பவர் மரணம். அதைக் கேட்டதால் துப்பாக்கிச் சூடு. நம்முடைய மரியாதைக்குரிய பழைய கமிஷனர் ஆப் போலீஸ், இன்றைக்கு ஐ.ஜி. ஆக இருக்கக்கூடிய திரு. ஸ்ரீபால் அவர்கள்கூட சொன்னார்கள். தேவதானப்பட்டியில் ஒரு காவல் சென்ட்ரியின் மீது ஒரு மாணவன் கத்தியால் குத்த வந்தான் ...

[1986 மே 6

**டாக்டர் த. முகம்மது சலீம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேவதானப்பட்டியில் துப்பாக்கிச் சூடு நடந்தது. நான் சற்று விளக்கமாக அதைச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் :** 20 நிமிடம் ஆகிவிட்டது. சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 331 காவல் கைதிகள், இந்த மாண்புமிகு முதலமைச்சர் ஆட்சிக்கு வந்த பிறகு, இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு, கொல்லப்பட்டிருப்பதாக, நான் சொல்லவில்லை—டெக்கான் ஹெரால்ட் 1981-ல் சொல்லப்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த மாதிரி அநியாயமான விசாரணைக்கு அழைத்துச் சென்று, கைதிகளின் உயிர்களைப் பறிக்கக்கூடிய அந்த நபர் யாராக இருந்தாலும் சரி—நாம் இந்த சபையில் அடிக்கடி சொல்வதுபோல், நாயாக இருந்தாலும்—கொல்வதற்கு உரிமை கிடையாது. எல்லோரும் ஒரு நாள் சாகப்போகிறவர்கள் தான். நியாயத்திற்காகப் போராடுவதுதான் மனிதனின் இலட்சியமாக இருக்கவேண்டும்—அவர் மீது 302 வழக்கு போட்டு, அவரை தூக்கு மேடையில் ஏற்ற வேண்டும். காரணம் அநியாயமாகக் கொல்வதற்கு, யாராக இருந்தாலும்—அ.தி.மு.க. ஆக இருந்தாலும், தி.மு.க. வாக இருந்தாலும், கம்யூனிஸ்டாக இருந்தாலும் அதிலே பாகுபாடு கிடையாது, எல்லோரும் ஒன்றுதான்—உரிமை கிடையாது. மனித உயிர்கள் இப்படி நாசமாவது நியாயமல்ல. இதை விசாரிக்க வேண்டும். நஞ்சப்பன் கமிஷன்—அதற்கு நீங்கள்தான் நீதிபதி போட்டீர்கள். அவர்களும் ஒரு ரிப்போர்ட் கொடுத்தார்கள். தேவயானை என்ற அரிசனப் பெண்மணி கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டாள்; அது தற்கொலை அல்ல; போலீசார் சொல்வது தவறு என்று தெளிவாகத் தீர்ப்புக் கொடுத்திருக்கிறார். அதன்மீது இவ்வளவு காலமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று நான் கேட்க விரும்புகிறேன். உங்கள் கைகளைக் கட்டியது யார்? தயவு செய்து சொல்லுங்கள். நீதிக்குத் தலைவணங்குவதாகச் சொல்வது ஒரு ஸ்லோகனாக பாமர மக்களை ஏமாற்றுவதற்குப்



1986 மே 6] [திரு. அ. ரகுமான்கான்]

பயன்படுகிறதே தவிர, அடிப்படையில் அது உண்மையாக இல்லை.

இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். நம்முடைய ராஜு அவர்கள் மீது ** போடப்பட்டது. அமைச்சர் இராமசாமி அவர்களின் கார் கண்ணாடியை உடைக்க முயற்சித்தார்கள் என்று. அவரை உற்று, உற்றுப் பாருங்கள். அவரைப் பார்த்தால் பட்டாக்கத்தி பக்கிரி மாதிரித் தெரிகிறதா? ஆனால் ராஜு அவர்கள் மீது ** நடைபெற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வழக்கின் பாயின்டை மட்டும் சொல்லுங்கள். ** என்றெல்லாம் சொல்லக்கூடாது. அது அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பெறுகிறது.

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு திரு. த. இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யார் தொகுதியில் தேர்தல் பிரச்சாரத்திற்கு சென்று கொண்டு இருந்த போது என் கார் கண்ணாடி உடைக்கப்பட்டதை அனைவரும் அறிவார்கள். அதை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் மறுக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். (குறுக்கீடு)

**திரு. வி. பி. சிந்தன் :** இதில் பாதிக்கப்பட்ட திரு. ராஜு அவர்களையும் பதில் சொல்ல அனுமதிப்பீர்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வழக்குக்குள்ளே போக வேண்டாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கார் கண்ணாடி உடைக்கப்பட்டது உண்மையா, இல்லையா என்று கேட்டார். (குறுக்கீடு) The case is pending வழக்கு இருக்கிறது. (குறுக்கீடு) திரு. ரகுமான்கான் அவர்களுக்கே அதனுடைய விவரங்கள் தெரியும். அவரே பதில் சொல்லலாம். எல்லோரும் இப்படி குறுக்கிடுவது சரியாக இல்லை.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1986 மே 6

**திரு. மு. இராமநாதன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன தில் குறுக்கிட்டு நான் பேச வரவில்லை. அவரை கேட்டுக் கொள்ள விரும்புவது எல்லாம் நானும் செய்யார் தேர்தலுக்குச் சென்று இருந்தேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசுவின் காரில் நானும் இருந்தேன். அதை சட்டமன்ற உறுப்பினர் திரு. இராசு தான் உடைத்தார் என்று குற்றம் சாட்டுகிறாரா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதையும் இங்கே சொல்ல முடியாது. அதையும் கோர்ட்டில் தான் சொல்லமுடியும். That can be decided only in Court. (குறுக்கீடு)

**திரு. அ. ரகுமான்கான் :** மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இது பெரிய விஷயம் அல்ல. ஒரு வழக்குப் போடுகிற போது அந்த வழக்குக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்று இந்த சபையிலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி இருக் கிறார்கள். இந்திரா அம்மையாரை கொலை செய்ய முயற்சித்த வழக்கில் எங்களோடு சேர்ந்து மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அக்யூஸ்டு. அப்போது அவர்கள் நான் திருவண்ணாமலையில் இருந்தேன் என்று சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே இராசு இங்கே தன்னிலை விளக்கம் கொடுக்காவிட்டாலும் கோர்ட்டில் சந்திக்கிறோம். ஆகவே மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன், நெடுஞ்செழியன் என்ற எங்கள் கட்சியைச் சேர்ந்த இளைஞர் அணியைச் சேர்ந்த அவர் தான் விளக்கை அணைத்தார் என்று சொல்லி ஒரு மேடையிலே பகிரங்க மாக கூட்டம் முடிந்த உடன் பார்த்துக்கொள்ளுகிறோம் என்று சொல்லி அநியாயமாக அந்த இளைஞன் கொல்லப்பட்டு இருக் கிறார். சட்டம் தன் கடமையைச் செய்யுமா? போன உயிர் வருமா? இது நியாயம் தானா? என்று தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் தான் உங்களுக்கு எல்லாம் தெரியும். துணைத் தலைவர் அவர்களே, இந்த ராபின் மெயின் என்ற ஒரு குற்றவாளி பற்றி வழக்கு இருக்கிறது. வழக்குகள் போக விரும்பவில்லை. போக மாட்டேன். அது 'சப்ஜுடிஸ்', அந்த



1986 மே 6] [திரு. அ. ரகுமான்கான்]

சி.பி.ஐ. க்கு கஸ்டடி இல்லாத காரணத்தால் எக்மோர் கோர்ட்டில் வைத்து இருக்கிறார்கள். அவர் சி.பி.ஐ. ஐ எதிர்த்து என்னை Wrongful detention செய்து இருக்கிறார்கள் என்று சொல்லி சென்னை ஹைகோர்ட்டில் அவர் ரிட் மனு செய் கிறார். ஆனால் அங்கே இருக்கக்கூடிய அந்த ஜி.டீ.யிலோ, வேறு எந்த ரெக்கார்டிலோ, அந்த ரிட் மனுவிலோ அவர் கையெழுத்து வாங்கி இருக்க முடியாது. காரணம் அவருடைய வக்கீல் வர வில்லை. அவர்களுக்கு வேண்டியவர்கள் வரவில்லை. அவர் கையெழுத்து இருக்கிறது. நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, குற்றச்சாட்டு சொல்ல வரவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு முதல் நாள்—இதற்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை, சம்பந்தம் இருக்கிறது என்று நான் அதற்கும் சம்பந்தம் இல்லை, சம்பந்தம் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை—அவர் காவல் நிலையங்களை சுற்றிப் பார்ப்பதற் காக எக்மோருக்கு மட்டும் போய் இருக்கிறார். இதை நான் சந்தேகத்தோடு சொல்லவில்லை. எனவே இதில் இணைக்க வேண்டாம். நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன், அந்த ரிட் மனுவில் எப்படி அந்த கையெழுத்து வந்தது. கையெழுத்து வந்ததற்கு என்ன காரணம். சி.பி.-யில் இருக்கிறதா? ரெக் கார்டில் இருக்கிறதா? நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ராபின்-மெயினை காப்பாற்ற முயற்சிக்கும் அந்த முகமூடி மனிதன் யார் என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னும் ஒன்றையும் நான் உங்கள் கவனத் திற்கு கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் இங்கே பேசுகிறபோது ஒரு தவறான தகவலை சில நண்பர்கள் தந்து விட்ட காரணத்தால் அவர் இங்கே சொல்லி விட்டார் என்று நான் கருதுகிறேன். அவர்மீது குற்றம் சொல்ல மாட்டேன். அவர் எனக்கு முன்பாகவே சட்டப்பேரவை உறுப்பினராக இருந்து சிறந்த பார்லிமெண்டேரியன் என்ற பெயர் பெற்றவர்கள். ஆக அவர் மீது குறை கூறுவதாக அவர்கள் கருத வேண்டாம்.

நம்முடைய சபாநாயகர் மீது நான் தனிப்பட்ட முறையில் எந்தவிதமான குற்றமும் சொல்ல முடியாது, சொல்லவும் கூடாது. ஆனால் சுக்கராஜ், சம்பாலால் இந்த 2 பேரும் போர்ஜரி செய்தார்கள், தப்பு செய்து விட்டார்கள் என்று வழக்கு போட்ட நோக்கில் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் அவர்களை விடுதலை

செய்கிறார். ஆனால் இந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார்தான் அவர்கள் அயோக்கியர்கள், போர்ஜரி செய்தவர்கள் என்று சொல்லி மேல்முறையீடு செய்கிறார்கள். ஹைகோர்ட்டில் நீதிபதி சிங்காரவேலு அவர்கள் குற்றவாளிகள் என்று சொல்லி 6 மாதமும், ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கிறார்கள். அதற்கு பிறகு அவர்கள் ஸ்பெசல் லீவில் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போகிறார்கள். சுப்ரீம் கோர்ட்டில் அவர்கள் குற்றவாளி என்று அறிவிக்கப்படுகிறது. நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்—இன்றைக்கு அந்தக் குற்றவாளிகள் சுக்கராஜ், சம்பாலால் ஏன் கைது செய்யப்படவில்லை? இதுவரைக்கும் அவர்கள் எங்கேயிருக்கிறார்கள்? யாருடைய பாதுகாப்பில் அவர்கள் இருக்கிறார்கள்? சோப்ராஜ் மிகப் பெரிய இண்டர்நேஷனல் ஃப்ராட்—அவரை பம்பாய் போலீஸ் பிடித்து இருக்கிறது. இவ்வளவு நாட்கள் கழித்து, தீர்ப்பு வந்ததற்குப் பிறகு, நான் கேட்கிறேன், இன்றைக்குப் போலீஸ் அதிகாரிகள், இந்த அளவு புகழ்பெற்ற போலீஸ் துறை, நான் குறை சொல்ல மாட்டேன். புகழ் பெற்ற போலீஸ் துறை தான் ஆனால் நான் கேட்கிறேன், ஏன் இந்த நபர்களை உங்களால் பிடிக்க முடியாதா? சம்பாலாலை உங்களால் பிடிக்க முடியாதா? உங்கள் கைகள் கட்டப்பட்டிருக்கின்றனவா? உங்கள் கைகளைக் கட்டியது யார்? என்று தயவு செய்து மக்கள் மன்றம் தெரிந்து கொள்ள விரும்புகிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதுபோல் இன்னொன்றையும் இங்கே நினைவூட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : 10.38—லிருந்து பேசிக் கொண்டிருக்கிறீர்கள். ½ மணி நேரமாகிவிட்டது. இன்னும் 5 பேர்கள் பேசவேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான்** : ஆமாம் சார், குறுக்கீடுகள் அதிகமாக இருந்தது. மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, இங்கே இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன்.



வி.ஐ.பி. கள் என்ற முறையிலே போலீஸ் பந்தோபஸ்து கொடுக்கப்படுவது சரிதான்.

* * * *

* * * *

நானும் அறிவேன்

(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இதையெல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன்.

* * * *

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : தலைவர் அவர்களே, காவல்துறை பாதுகாப்பு கொடுப்பது பற்றிச் சொல்கிறார்கள். கூட்டம் அதிகமாக யாருக்கு வருகிறதோ, அவர்களுக்குத்தான் போலீஸ் பாதுகாப்புத் தரவேண்டும்.

* * *

* * * *

**திரு. அ. ரகுமான்கான்** : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே, கே. கே. நகரில் ஒரு போலீஸ் டிரெயினிங் காலேஜ் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அந்தக் கல்லூரி. இயங்குகிறதா? எதுவும் அங்கே நடைபெறவில்லை என்ற தகவல். அதுபற்றிய விவரங்களை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதுபோலவே உங்களுடைய அனுமதியின் பேரில் ஒன்றை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் * * தினமணி பத்திரிகை அதிகாரபூர்வமான பத்திரிகை. அதிகாரபூர்வமான பத்திரிகை என்றால், சட்டமன்ற லைப்ரரியில் இருக்கின்ற, எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட, மறுக்கப்படாத ஒரு பத்திரிகை, எல்லோ ஜர்னல் அல்ல. * * *

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1986 மே 6

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

*　　*　　*　　*

அது சபைக் குறிப்பிலே இருக்கவேண்டாம். (குறுக்கீடு).

*　　*　　*　　*

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் குறிப்பிடுகின்றபொழுது, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பேசியதைக் குறிப்பிட்டு அவர்களுக்கு யாரோ தவறான தகவலைத் தந்திருக்கிறார்கள், அதைப் பேசியிருக்கிறார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்படி ஒரு உறுப்பினரைப்பற்றிப் பேசுவது சரியல்ல. நான் சொல்ல விரும்புவது, உங்களுக்குத் தரப்பட்ட தகவல்கள் முழுக்க முழுக்க தவறான அடிப்படையிலே சொல்லப்பட்டவை என்ற எண்ணம் தான் எங்களுக்கு ஏற்படுகின்றது.

(முற்பகல் 11-10)

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவரவர்களே, சில நாட்களுக்கு முன்பாக இந்த மன்றத்திலே பேசிய நேரத்திலே நீதிமன்றத்திலே இருந்த ஒரு வழக்கைப்பற்றிக் குறிப்பிட்டு, அந்த வழக்கு சம்பந்தமாக நீதி கிடைக்கவில்லை என்ற பிரச்சினை எழுப்பப்பட்டு, அது ஒரு பெரிய புயலாக ஆகி ஒரு சர்ச்சையை உண்டாக்கியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் நான் ஏதோ சில தகவல்களைக் கொடுத்ததாகவும், வேண்டுமென்றே சில தகவல்களைக் கொடுத்ததாகவும் கூறினார்கள். அவர்கள் பேசி முடிக்கட்டும்; பிறகு பதில் சொல்லலாம் என்றுதான் இருந்தேன். நான் எனக்குக் கிடைத்த தகவல்களைச் சொன்னேன். அதை மறுக்க வேண்டிய அவசியமோ, அல்லது யாரும் நிர்ப்பந்தப்படுத்த வேண்டிய அவசியமோ இல்லை. எனக்குக் கிடைத்த தகவலை முழுமையாகச் சொல்லி விட்டேன். தவறான தகவலை நான் கொடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



1986 மே 6]

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, சபைக் குறிப்பிலே அது இருக்கிறது. நான்கூட விசாரித்தேன். பிறகு தெளிவும் பெற்றேன். மாஜிஸ்ட்ரேட் அவர்கள் முதலிலே கேஸை அக்யூடல் பண்ணாமல். . .

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நான் சொன்னதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. . .

**திரு. அ. ரகுமான்கான் :** சுப்ரீம் கோர்ட்டிற்குப் போய். . . (குறுக்கீடு) இல்லீகல் ஜட்ஜ்மெண்டே இல்லை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** You have surrendered your rights voluntarily. அவ்வளவுதான்.

* **திரு. துரை கோவிந்தராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன்னால் ஐந்து கோடி தமிழ் மக்களுடைய காவல் தெய்வமாக இன்றைக்குத் தமிழகத்தில் பொறுப்பேற்றிருக்கின்ற தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகிய மானியங்களின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நான் முதலிலே நன்றியைச் சொல்லிக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைச் சார்ந்த திருக்காட்டுப்பள்ளி பகுதியில் தோகூர் என்ற இடத்தில், திருச்சியிலிருந்து வருகின்ற மக்கள், பக்கத்திலே இருக்கின்ற பி.ஹெச்.இ.எல்., பணியாற்றுகின்றவர்கள் ஓய்வு நேரத்தில் வருகின்ற சிறந்த இடமாக இருக்கின்ற கல்லணை பகுதியில் உள்ள தோகூரில் புதிய காவல் நிலையத்தைத் திறந்திருப்பதற்காக அந்தப் பகுதி மக்களின் சார்பாக நான் முதலிலே அவர்களுடைய பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த மானியங்களின் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர் கள் இங்கே பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள். பல்வேறு ஊர்களிலே இருக்கின்ற காவல் துறையின் அன்றாட, சகஜமான நிலைகளை அடுக்காகக் கோர்த்து சட்டத் தையும், ஒழுங்கையும் இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நிலைநாட்டவில்லை என்று பல்வேறு குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே எடுத் துக் காட்டியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-20)

நான் எண்ணிப் பார்த்தேன். அண்மையிலே ஒரு பகுதியிலே நடைபெற்ற இடைத் தேர்தலில் மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கட்சித் தலைவரவர்கள் தூசி என்ற இடத்தில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகின்ற நேரத்தில் காவல் துறையினர் நிரம்ப இருக்கிறார்களே என்று கேட்டதற்கு அவர்கள் பதில் அளித்தபொழுது, வருகை தந்திருக்கின்ற காவல் துறையினரின் எண்ணிக்கையில் எண்பது விழுக்காடு நம்முடைய காவல் துறையைச் சேர்ந்தவர்கள், நமக்குச் சாதகமானவர்கள், நல்லவர்கள் என்ற நற்சான்றிதழை அன்றைக்கு அந்தத் தேர்தல் களத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தலைவர் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள்.

ஆனால் இங்கே இன்றைக்கு காவல்துறைக்கு அளிக்கப்பட்ட பல்வேறு சலுகைகளை, பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட அடுக்கடுக்காக நாட்டின் நலன் கருதியும், சமுதாயத்தின் முன்னேற்றம் கருதியும் நாட்டிலே ஏற்படுகின்ற சமுதாயத் தீங்குகளைக் களைவதற்கும், சமுதாயத்தில் இருக்கின்ற குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதற்காகவும் வேண்டிய எல்லாவிதமான சலுகைகளையும் அடுக்கடுக்காகப் புரட்சித் தலைவரவர்கள் இன்றைக்கு நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பத்தாண்டு காலத்திற்கு முன்னாலே இருந்த காவல் நிலையங்களின் எண்ணிக்கை என்ன, இப்பொழுது இருக்கின்ற எண்ணிக்கை என்ன என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்பொழுதிருந்த காவலர்களின் எண்ணிக்கையைப் பார்க்கின்ற நேரத்தில், பத்தாண்டு காலத்திற்கு முன்னால் 40,000 பேர்கள் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் இருந்தார்கள். இன்றைக்கு அது

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஏறத்தாழ 70,000 என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது. காவல் நிலையங்களுடைய எண்ணிக்கை கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து, 10, 15 மைல் என்று சொல்கின்ற அந்த இடைவெளிக்குள் காவல் நிலையங்கள் இருக்க வேண்டுமென்ற அளவுக்கு, இன்றைக்குக் காவல் நிலையங்கள், பல்வேறு இடங்களிலே திறக்கப்பட்டு, உடனுக்குடன், குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டு, இந்தியக்





துணைக் கண்டத்திலே மட்டுமல்லாமல், உலகத்திலே இருக்கிறவர்கள்கூட வியந்து பாராட்டத்தக்க அளவுக்கு, நம்முடைய தமிழக காவல் துறை இயங்குகிறது என்பதை நாம் அத்தனை பேரும் அறிவோம்.

சில நேரங்களில், காவல் துறையினர் செய்கிற நன்மையை நாம் சொல்வதில்லை. அவர்களுக்குத் தரவேண்டிய மரியாதையை, அல்லது அவர்கள் கடமையாற்றும்போது செய்யவேண்டிய உதவியை நாம் செய்வதில்லை. ஆனால், அதற்கு மாறாக, எந்த ஆட்சியாக இருந்தாலும், அவ்வப்போது ஆட்சியிலே இருக்கிறவர்களுக்கு, அந்த ஆட்சிக்கு, உறுதுணையாகக் காவல் துறை இருக்கிறது என்று ஒரு குற்றச்சாட்டை மட்டுமே நாம் அடுக்கடுக்காகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஏதோ முன்னாலே ஆட்சி நடைபெற்றிருந்த நேரத்தில், காவல் துறையிலே எந்தவிதமான குறையும் ஏற்படவில்லை; முன்னாலே ஆட்சி நடத்திய நேரத்தில், எங்கேயும் துப்பாக்கிச் சண்டைகள் இல்லை, இப்பொழுது தான் புதிதாக, நடப்பதைப் போல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில நேரங்களிலே எடுத்துக் காட்டுவது, அதுவும் இந்த மாமன்றத்தில் ஜனநாயகம் காப்பாற்றப்படவில்லை என்று சொல்கிற நேரத்தில் என்னுடைய ஞாபகம்—மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இருக்கையிலே இல்லை;— பின்னோக்கிச் செல்கிறது. காரணம், 1972 ஆம் ஆண்டு அவர் சட்டமன்றத்திலே உறுப்பினராக இல்லை. நான் 1972 ஆம் ஆண்டு இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்தேன் என்ற முறையில், சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டிய இடத்தில், ஜனநாயகப் படுகொலையைச் செய்து விட்டுப் போன முதல் அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நான் இன்று நின்று பேசிக் கொண்டிருக்கிற இடத்திற்குப் பக்கத்திலே, [illegible] சபாநாயகராக அன்றைக்குப் பொறுப்பேற்றிருந்தவர் இருந்த அந்த இருக்கையிலே இருக்கிற சபாநாயகரை எழும்ப விடாமல் பேசவிடாமல், [illegible] சபாநாயகரே சபையை நடத்த[illegible] காட்சியை இந்த மாமன்றத்திலே நான் கண்டிருக்கிறேன் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

5 கோடி மக்களுடைய தலைவிதியை நிர்ணயிக்க வேண்டிய இந்த இடத்தில், சட்டத்தை நிறைவேற்ற வேண்டிய இந்த இடத்தில், ஒழுங்கைக் கடைப்பிடிக்க வேண்டிய இந்த இடத்தில், ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டிய இந்த இடத்தில், ஜனநாயகப் படுகொலையைச் செய்து காட்டியவர்கள், இன்றைக்குச் சட்டம் இல்லை, ஒழுங்கு இல்லை, நாட்டிலே நீதி இல்லை, நேர்மையில்லையென்று சொல்கிறபொழுது எனக்கு வேதனையாகவும், விந்தையாகவும் இருக்கிறது.

நம்முடைய அருமைச் சகோதரர் உறுப்பினர் திரு. ரகுமான் கான் அவர்கள் சொல்கின்றபொழுது, எங்களுடைய அருமைச் சட்டமன்ற உறுப்பினர்கள், ஏன் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் பாதுகாப்பு இல்லை, எங்களுக்குப் பாதுகாப்பு இல்லையென்றாலும் பரவாயில்லை, நாங்களே பாதுகாப்பை ஏற்படுத்திக் கொள்கிறோம் என்று சொல்லிய நேரத்தில், நான் இன்னுங்கூட பேசவேண்டும், மகிழ்ச்சியோடு அப்படிப்பட்ட பேச்சுக்களை கேட்கவேண்டுமென்ற ஆசையிலேதான் இருந்தேன். இங்கே முன் வரிசையிலே இருக்கிறவரும் மதிப்பிற்குரிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நாஞ்சிலார் அவர்கள் ஒருமுறை டெல்லிக்குச் சென்ற நேரத்திலேதான் அங்கே அவர் தாக்கப்பட்டு, சட்டை கிழிக்கப்பட்டு, டெல்லி நாடாளுமன்றத்திலே, தமிழகத்திலே இருக்கிற ஒரு கட்சியும், காவல் துறையினரும் என்னைத் தாக்கியிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை, அந்த டெல்லி மாநகரத்திலே எடுத்துரைத்த நிலையெல்லாம் இப்பொழுது அவர்களுக்குத் தெரியாமல் இல்லை.

அதோடு அல்ல, இங்கேயிருக்கிற சிந்தன் அவர்கள் கூட ஒரு நேரத்திலே கத்தியால் தாக்கப்பட்ட பொழுது, தொழிலாளர் போராட்டத்திலே தாக்கப்பட்டபொழுது, அன்றைக்குக் காவல் துறையிலே இருந்தவர்கள், தொடர்ந்த வழக்கிலே, பின்னாலே கோர்ட்டுக்கு வந்த நேரத்தில், இங்கேயிருந்த எஸ்.பி. இமே தொடுத்திருந்த வழக்குக்கு மாறாக, சாட்சியம் அளித்த நிலைகள் எல்லாம் அன்றைக்கு இருந்தது என்பதையெல்லாம் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், நாடாமன்ற உறுப்பினராக இருந்தாலும், ஏன், வெங்கா கவுண்டர் நாடாளுமன்ற உறுப்





ராக இருந்தவரை, பாதுகாப்பாகத் தங்க வேண்டிய சட்டமன்ற
உறுப்பினர் விடுதியில், பஸ்ஸிலே ஏறி வரும்போது, கத்தியும்,
கடப்பாறையுமாக வைத்துக்கொண்டு, மண்டையிலே அடித்து
உயிர் போகிற நிலையில், அந்தக் கோரக் காட்சியை உண்டாக்கிய
ஆட்சிக்குச் சொந்தமாக ஒரு காலத்திலே இருந்தவர்கள்தான்
இன்றைக்குக் காவல் துறையைப்பற்றி குறை சொல்லிக் கொண்
டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே எண்ணிப்
பார்க்கிறேன்.

அதை விட, அன்றைக்கு, நம்முடைய ரகுமான்கான் அவர்
களுடைய கட்சித் தலைவர் அவர்கள், ஓரத்தநாட்டுக்கு வந்து
பட்டுக்கோட்டைக்குச் செல்ல வேண்டும், பொதுக் கூட்டத்திலே
பேச வேண்டும், நான் முதல் அமைச்சராக இருக்கிறேன் என்று
சொல்லியதற்குப் பின்னாலே, அன்றைக்கிருந்த பெரிய காவல்
துறை அதிகாரிகள், அன்றைக்குக் கருப்புக் கொடி காட்டுவதற்
குத் தயாராக இருக்கிற கூட்டத்திற்குள் நீங்கள் வரவேண்டாம்,
திரும்பச் சொல்லுங்கள் என்று சொன்னபோது, எதற்காக நீங்கள்
காக்கி சட்டை அணிந்திருக்கிறீர்கள், எப்படியும் நான் வந்தே தீர
வேண்டும், பேசியே தீர வேண்டும், இரவு 1 மணியானாலும் பரவா
யில்லை, கூடியிருப்பவர்களை எல்லாம் அடித்து, அந்த இடத்தில்
ஆள் இல்லாமல், எந்த அளவுக்குத் தாக்குதலுக்கு உள்ளாக்க
முடியுமோ, அப்படி ஆக்குங்கள் என்று சொல்லி, ஒரு நாட்டி
னுடைய முதலமைச்சராக இருந்தவர் 11 மணி நேரம் ஓரத்தநாட்
டிலே இருந்த இடத்திலே இருந்துவிட்டு இரவு 12 மணி அளவில்
பட்டுக்கோட்டைக்குச் சென்று ரோட்டிலே இருந்தவர்களை
எல்லாம் கை கால் முறிய அடித்து அன்றைக்கு முதலமைச்சராக
இருந்தவர் செய்திருக்கிறார் என்றால் நான் எண்ணிப் பார்க்கின்
றேன். இன்றைக்கு உள்ள முதலமைச்சர் எந்த இடத்திற்கும்
அப்படி அதிகாரிகள் வரவேண்டாம் என்று சொன்ன இடத்திற்கு
காப்பு கேட்கின்ற நேரத்தில் இந்த அவையில் உறுப்பினராக
செல்லவில்லை. அப்படிப்பட்ட தடியடிபிரயோகங்களை நடத்த
வில்லை. அதுமட்டுமல்ல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாது
காப்பு கேட்கின்ற நேரத்தில் இந்த அவையில் உறுப்பினராக
இருந்த எஸ். எம். துரைராஜ் அவர்கள் செங்கற்பட்டு செல்லுகின்ற
நேரத்தில் அவரை அடித்து மண்டையை பிளந்து அதற்கு பின்
னால் அவர் உயிர்போகின்ற நிலையிலே மருத்துவமனையிலே
சேர்க்கப்படுகின்ற நேரத்தில், ஆட்சி நடத்தியவர்களை நாம்

பார்த்துக் கொண்டிருக்கிறோம். இதையெல்லாம் நான் சொல்வதற்கு காரணம் இருக்கிறது. தந்தை ஈன்றெடுத்த மகனைகூட தனக்கு மகன் இல்லை என்று சொல்லுகின்ற காட்சியை போல் அன்றைக்கு காட்டியவர்கள் எல்லாம் இன்றைக்கு இங்கே எதுவுமே இல்லை, ஜனநாயக பாதுகாப்பு இல்லை, சட்டம் ஒழுங்கு நிலை நாட்டப்படவில்லை என்பதையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

நான் டெல்லியிலேயிருந்து ஆக்ரா வரை சென்றுவிட்டு பஸ்ஸிலே வருகின்றபோது இடையிலே இருக்கின்ற ஒரு பள்ளத்தாக்கு பகுதியிலே அந்த பஸ்கள் எல்லாம் தடுத்து நிறுத்தப்பட்டு, ஒவ்வொரு பஸ்ஸிலும் ஒவ்வொரு காவல் துறை அதிகாரியாக ஏறிக்கொண்டு, ஒரு 20 பஸ்களை ஒன்றாகச் சேர்த்து மாலை நேரம் முடிவதற்குள்ளாக டெல்லிக்கு போய்ச் சேர வேண்டும் என்ற நிலையை எடுத்துச் சொன்னார்கள். பெண்களாக இருந்தால் அணிந்திருக்கின்ற நகைகளையெல்லாம் கழட்டி வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள். நான் அவர்களிடம் கேட்டேன், இது எவ்வளவு காலமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று. இது ஆண்டாண்டு காலமாக நடைபெற்று வருகிறது என்றும் அந்த காவல் துறையைச் சார்ந்தவர்கள் நமக்கு துணையாக வந்துகொண்டேயிருப்பார்கள் என்றார்கள். பஸ்ஸிலே வருகின்ற நேரத்தில் எதிரில் வருகின்ற பஸ்ஸை மறித்து, ஏதாவது தடையிருக்கிறதா, தடுக்கிறார்களா என்று கேட்டு, இல்லை என்ற பிறகு பஸ்ஸை ஓட்டுகிறார்கள். அதைப் பார்த்து விட்டு நான் இங்கே வருகின்ற நேரத்தில் தமிழகத்தில் உள்ள காவல்துறையினர் எந்த அளவுக்கு சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்தது. இன்றைக்கு வழக்குகளும் குறைந்திருக்கின்றன. இன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியிலேதான் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. சின்னஞ்சிறு சலுகைகள், பெரிய சலுகைகள் என்று வழங்கப்பட்டிருக்கின்றன. ஊதிய விகிதாச்சாரத்தை உயர்த்துதல், கைக்கிளில் இரண்டுபேர் செல்லலாம் போன்ற சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பல இடர்பாடுகளைச் செய்துகொண்டு குற்றங்களை புரிந்து கொண்டிருப்பவர்களை கண்டுபிடிப்பதற்கு நவீன கரல் முறையில் நடவடிக்கைகளை இன்றைக்கு புரட்சித் தலைவர் ஆட்சி எடுத்திருக்கிறது என்பதை எடுத்துச்சொல்வேன். அன்றைக்கு டி.ஜி.பி. என்ற அந்த நிலையை அதிகப்படுத்தாத





நேரத்திலே இன்றைக்கு நாம் இரண்டு டி.ஜி.பி. க்களை பெற்றிருக்கிறோம். ஐ.ஜி. 10 பேர்கள் என்ற நிலை மாறி இன்றைக்கு 22 பேர்களாக உயர்ந்திருக்கிறார்கள். இரயில்வே மற்றும் பல்வேறு இடங்களில் நாம் அந்த பதவிகளை உயர்த்துவதோடு மட்டுமல்லாமல், இன்றைக்கு 60,000-க்கு மேற்பட்ட காவல்துறையினரை நாம் பெற்று இருக்கிறோம். அதற்கு வேண்டிய வாகன வசதிகளை நாம் ஏற்படுத்தி தந்திருக்கிறோம். என்னுடைய குறைபாடு என்னவென்றால், நாம் காவல்துறையை மதிக்காமல், ரோட்டிலே சட்டங்களை கையிலே எடுத்துக்கொண்டு அவர்கள் செய்கின்ற காரியங்களுக்கு தடையாக இருக்கிறோம். சில நேரங்களிலே நாம் பழமையோடு இதனை ஒப்பிட்டு பார்க்கும்போது, பழைய காவல்துறை வருகிறது என்று ஊரிலே சொன்னால், கூட்டமாக நின்றுகொண்டிருப்பவர்கள் உள்ளத்திலே அச்சம் வரும். நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்ற பயம் வரும். ஆனால் அத்தகைய அச்சம் இன்றைக்கு இல்லை. அவர்கள் செய்கின்ற காரியங்களுக்கு இடையூறு விளைவிப்பதாக இருக்கிறது. இப்படி காவல்துறைக்கு பல்வேறு வகையிலே தொல்லைகளை கொடுத்தும் இன்றைக்கு அவர்கள் சீராக நடத்திக்கொண்டிருக்கிறார்கள். பத்து ஆண்டுகளுக்கு முன்னாலே எண்ணிக்கையில் குறைவாக இருந்த காவல்துறை இன்றைக்கு அதிகமாகியிருக்கிறது. இன்றைக்கு இருக்கின்ற பிரச்சனை எல்லாம் மூலைக்கு மூலை போராட்டம் நடைபெறுவதுதான். அன்றைக்கு ஏதோ ஓரிடத்தில் போராட்டம் நடைபெறும். இன்றைக்கு மூலைக்கு மூலை நடைபெறும் போராட்டங்களை சமாளித்தாக வேண்டும். இன்றைக்கு பேருந்து வசதிகள் அதிகமாகியிருக்கின்றன. சிற்றூர்களில் சிறிய சிறிய சச்சரவுகள். எல்லா இடத்திலும் பாதுகாப்புத்தர வேண்டும் என்ற நல்ல உணர்வோடு அவர்கள் தொடர்ந்து செயல்படுகிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒருவர் வாங்குகின்ற சம்பளத்தில் ஏதாவது ரூ. 150; ரூ. 200-க்கு சாமான்களை பெறவேண்டுமென்று சொன்னால் அதிலே 50 சதவிகிதம் இன்றைக்கு அரசு மலிவு விலையிலே தருகின்றது என்று சொன்னால் இதற்கு முன்னால் இருந்தவர்கள் அந்த எண்ணிப்பார்க்கவில்லை.

[திரு. துரை கோவிந்தராசன்] [1986 மே 6

மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் கோடிட்டு காட்டுகின்ற போது கொடுக்கின்ற அளவு குறைந்திருக்கிறது என்றுதான் சொன்னார்களே தவிர, கொடுக்கவில்லை என்று கோடிட்டு காட்டவில்லை. ஆனால் அப்படிப்பட்ட எண்ணங்களை எல்லாம் புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்த பின்னால்தான் நிறைவேற்றி அந்தக் காரியங்கள் எல்லாம் நடைபெற்று இருக்கின்றன என்பதை இங்கே இருக்கின்ற மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற இடங்களுக்குச் செல்கிறபோது அன்றைக்குக் கறுப்புக் கொடியை எங்களது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் காட்ட வேண்டுமென்று சொன்னதால் அவர்களை வழக்குமன்றப் படிக்கட்டுகளில் ஏற்றவேண்டும் என்பதற்காக அன்றைக்குப் பல்வேறு வழக்குகளை எல்லாம் உருவாக்கிய சூழ்நிலையில் இருந்தவர்கள் தான் இன்றைக்கு காவல் துறையைப் பார்த்து பலவற்றைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காக நான் மெத்த வருத்தப்படுகிறேன்.

(முற்பகல் 11-30)

இந்தக் காவல் துறையில் இன்றைக்கு இந்த அரசு அளித்திருக்ககூடிய சலுகைகளைப் பற்றிப் படித்துப் பார்க்கிறபோது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. ஒரு காலத்திலே இந்த அவையிலே நான் இருந்தேன். மரியாதைக்குரிய முன்னாள் முதலமைச்சர் அவர்கள், காவல் துறை மானியத்தின் மீது திரு. மணலி கந்தசாமி மற்றும் திரு. பொன்னப்ப நாடார் போன்றவர்கள் எல்லாம் பேசிய பேச்சுக்கு ஒரு கதையைச் சொல்லி பதிலளித்தார்கள். ஒரு பாம்பு கதையைச் சொன்னார். ஒரு பாம்பு ஒரு சாதுவிடத்தில் சென்று 'எல்லோரும் என்னைப் பார்த்தால் வெறுக்கிறார்கள், அதற்கு என்ன காரணம்' என்று அந்தப் பாம்பு சாதுவைப் பார்த்துக் கேட்டதாம். அதற்கு அந்தச் சாது 'நீ யாரைக் கண்டாலும் கடிக்கிறாய், அதனால்தான் உன்னை வெறுக்கிறார்கள். எனவே இனிமேல் கடிக்காமல் இரு' என்று சொல்லி அந்தப் பாம்பை அனுப்பி விட்டாராம். அதற்குப்



1986 மே 6] [திரு. துரை கோவிந்தராசன்]

பின்னால் அந்தப் பாம்பு கடிப்பதை விட்டுவிட்டு நகர்ந்துபோய்க் கொண்டே இருந்ததாம். அது கடிக்காத காரணத்தால் சின்னஞ்சிறு குழந்தைகள் எல்லாம் சின்னத் தடியை எடுத்து அந்தப் பாம்பைக் காயப்படுத்திவிட்டார்களாம். மறுபடியும் அந்தப் பாம்பு திரும்பி வந்து 'நான் யாரையும் கடிப்பதில்லை, இருந்தாலும் சின்னஞ்சிறுவர்கள் எல்லாம் என்னை அடிக்கிறார்கள் என்று அந்தப் பாம்பு கேட்டதாம். அதற்கு மீண்டும் அந்தச் சாது 'நீ யாரையும் கடிக்கவேண்டாம் என்று தானே சொன்னேன், அடிக்க வருகிறவர்களிடத்தில் நீ படமெடுத்து சீறவேண்டாம் என்று சொல்லவில்லையே, படமெடுத்து சீறியிருந்தால் உன்னை அடிக்காமல் அல்லவா விட்டிருப்பார்கள்' என்று சொன்னாராம். இப்படி ஒரு கதையை இந்த மன்றத்தில் எடுத்து வைத்து அவர்கள் சொன்னதை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

இன்றைக்குக் காவல் துறையிலே இருப்பவர்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு நாம் உறுதுணையாக இருக்கிறோமா என்றால் இல்லை. இப்படிப்பட்ட நிலையில்தான் இன்றைக்குப் பல்வேறு சலுகைகளை, புதிய, புதிய அறிவிப்புகளை இன்றைக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் தந்து கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக வாகனங்கள் வாங்குவதற்காக 100 இலட்சமும், ஓட்டுநர் மற்றும் கம்பியில்லாத் தந்தி ஆப்பரேட்டர்களுக்குச் சிறப்பு ஊதியமாக 40 ரூபாயும், 25 ரூபாயும் தந்திருக்கிறார்கள். காவல் துறையினருக்கு உள்ள அலவன்ஸ் என்பதைப் பொறுத்தவரையில் ஒரு காலத்தில் ஒன்றரை ரூபாயாக இருந்தது, அதற்குப் பிறகு 2½ ரூபாயாக மாறி, அதற்குப் பின்னால் 4 ரூபாயாக, 6 ரூபாயாக, 7 ரூபாயாக மாறி இன்றைக்கு விடுப்பிலே இருந்தால், அவ்வாறு விடுப்பிலே இருக்கிற காலத்திலே பணியாற்றினால் 10 ரூபாய் படி என்ற அளவுக்கு இன்றைக்குக் காவல் துறையிலே அவற்றை எல்லாம் உயர்த்தி இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல. அன்றைக்குக் காக்கித் துணிகளை அணிந்து கொண்டு வெட்ட வெய்யிலில் நின்றுகொண்டு பணியாற்றுகிற போது ஒரு நாள் அணிகிற சட்டையை மறுநாள் அணிய

டி2 ள 110—12

[திரு. ஆனா கோவிந்தராசன்] [1986 மே 6

முழுமையாக அமைந்து அவர்களுக்கு இருந்த குறையைப் போக்கி இன்றைக்கு பெட்டாலியன் அமைத்து இருக்கிறார்கள். அந்த வகையில் பல்வேறு பணிகளை இந்த அரசு செய்திருக்கிறது. நாம் எல்லாம் இன்றைக்கும் தமிழகத்தில் ஏற்படுகிற பல்வேறு நிலைமைகளுக்குக் காவல் துறையினர்தான் காரணம் என்று சொல்கிற அளவுக்கு அவர்கள் செய்கிற எந்தக் காரியமாக இருந்தாலும் அதிலே குறை நம்முடையதாக இருந்தாலும் அந்தக் குறையைச் சுட்டிக்காட்டுவதற்காக காவல் துறையின் பக்கத்திலே அதைக் கொண்டு வந்து விடுகிறோம்.

இன்றைக்குப் பல்வேறு அதிகாரிகளுக்கு உயர்ந்த பதவி கொடுக்கப்படுகிறது. இன்ஸ்பெக்டர்களாக இருப்பவர்கள், டி.எஸ்.பி.யாக இருப்பவர்கள் உயர்ந்த இடத்திற்கு வரவேண்டுமென்ற வகையிலே மேலே இருந்த பதவிகள் எல்லாம் உயர்த்தப்பட்டு பிரிக்கப்பட்டு 10, 20 என்ற அளவுக்கு டி.ஐ.ஜி., ஐ.ஜி. போன்ற போஸ்ட்கள் எல்லாம் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. அந்த இடங்களுக்கு எல்லாம் பலரும் வருகின்ற வாய்ப்பை இந்த அரசு இன்றைக்கு ஏற்படுத்தி இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து அத்தனை காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கும் கட்டிடங்களைக் கட்டித் தரவேண்டும் என்று இன்றைக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். 1972-ல் சேமக் காவல் படை இல்லை. ஆனால் இன்றைக்கு 182 பிரிவுகள் தமிழகத்தில் இருக்கின்றன. தமிழ்நாடு சிறப்புக் காவல் படை என்பது 1972-லே ஒரு அணி மட்டுமே இருந்தது. ஆனால் இன்றைக்கு 9 அணிகளாக அது வளர்ந்து இருக்கின்றது. துப்பறியும் பிரிவுகள் அன்றைக்கு 3-ஆக இருந்தது, இன்றைக்கு 4 பிரிவுகளாக ஆக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல தேர்ந்தெடுக்கப்பட்ட காவல் துறையினருக்கான பயிற்சி நிலையங்கள் முன்பு 2 இடங்களில் மாத்திரம் தான் இருந்தது இன்றைக்கு 10 இடங்களில் விரிவுபடுத்தி காவலர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. அதைப்போல



1986 மே 6] [திரு. ஆனா கோவிந்தராசன்]

அந்தக் காவலர் பயிற்சிக்காக அனுப்பப்பட்டவர்கள் 2,025 பேர்கள் என்ற நிலை மாறி இப்போது 4,650 பேர்கள் பயிற்சிக்கு அனுப்பப்பட்டு, அவர்களுக்கு காவல் துறையினர் பல்வேறு இடங்களில் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அது மட்டும் அல்ல. பல இடங்களில் அவர்களுக்கு வாக்கி டாக்கி, மற்றும் எல்காட் நிறுவனத்திடமிருந்து பெற்ற கருவிகள் போன்ற நவீன கருவிகளை அரசு கொடுத்து, அவர்களுக்கு உறுதுணையாக, குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு எளிதாக இருப்பதற்கு நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு உதவி செய்கிறது. தமிழ்நாடு காவல் துறையினரின் நல நிதியாக ஏறக்குறைய மொத்த தொகையாகவே 1 லட்சம் ரூபாயில் 1978-லே தொடங்கப்பட்ட அந்த நிதியை தற்போது 3.5 லட்சமாக அரசு உயர்த்தியிருக்கிறது. அதேபோல படிப்பு உதவித் தொகை என்று 20 ஆயிரம் ரூபாய் மட்டுமே இருந்தது, தற்போது 40,250 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்படி பல்வேறு வகைகளிலும் அவர்களுக்கு உதவிகள் வழங்கப் பட்டிருக்கின்றன.

மேலும் பெண்களைக் காவல் துறையிலே சேர்க்கும் திட்டத்தைக் கொண்டு வந்து அதன்மூலம் 550 பெண்கள் காவல் படையிலே பணிபுரிகிறார்கள். குடியிருப்பு வசதிகள் செய்துக் கொடுக்க வேண்டும் என்று இந்த அரசு 3,285 குடியிருப்புகளையும் அத்தோடு 1,270 படைவீடுகளையும் கட்டித் தந்துள்ளது. இப்படி பல்வேறு வகைகளிலும் காவலர்களுக்கு, காவல் துறையில் பணிபுரிபவர்களுக்கு, புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி பல்வேறு வசதிகளை செய்து தந்திருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து இன்றையதினம் முன்னாலே ஆட்சியிலே உள்ளவர் களைப் பற்றி எடுத்துச் சொன்னால், பின்னாலே வருபவர்களைப் பற்றி அதற்குப் பின்னாலே வருபவர்கள் எடுத்துச் சொல்வதைப் போல. இதில் குற்றங்குறைகளை ஆட்சியாளர்களைப் பற்றி வழி வழியாகச் சொல்லிக் கொண்டிருக்கும் நிலைமையை மாற்றி, காவல் துறையிலே ஆங்காங்கு இருப்பவர்களுக்கு என்னென்ன

வசதிகள் செய்தாக வேண்டும். அவர்கள் மக்களுக்கு சேவை செய்கிறார்கள், பணியாற்றுகிறார்கள், மக்கள் பாராட்டத் தக்க வகையிலே அவர்கள் செய்கிற காரியங்களும் நாம் அவர்களுக்குச் செய்கிற காரியங்களும் அமைய வேண்டும் என்கிற அளவில் இங்கே யோசனைகளைச் சொல்ல வேண்டும் என்ற என்னுடைய ஆசையை இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த வகையில் அவர்கள் ஆட்சி நடத்திய நேரத்தில் சின்னஞ்சிறு குறைபாடுகள் எவ்வளவோ இருக்கின்றன. மின்சார கட்டணம் சம்பந்தமாக ஒரு போராட்டத்தில் பெரணமல்லூரிலே நடந்த ஒரு துப்பாக்கிச் சூடு சம்பவம் குறித்து நமக்கெல்லாம் தெரியும். இரண்டு பைசா உயர்த்துவதற்காக அன்றைக்கு எப்படிப்பட்ட நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டன என்றும், அன்றைக்கு எந்த அளவுக்கு காவல் துறை கஷ்டப் பட்டது என்பதையும் இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டும். அதைப்போலவே அன்றைக்கு காவல் துறையினருக்கு இருந்த சலுகைகளை விட அதிகமான சலுகைகளை, எல்லா விதங்களிலும் அளித்து, அவர்களுக்கு வேண்டியவற்றையெல்லாம் செய்து கொடுத்து, அவர்களை மக்களுக்கு நல்ல முறையில் கடமையாற்ற செய்ய வேண்டும் என்று இந்த அரசு பல காரியங்களைச் செய்து தந்திருக்கிறது.

அது மட்டும் அல்ல. அன்றைக்கு காவல் துறை நிலையத்திற்கு சென்று ஒரு வழக்கை பதிவு செய்ய வேண்டும் என்று போனால், அங்கிருக்கும் காவல் துறை அதிகாரி அதை வாங்கி வைத்துக் கொண்டு, சரி சென்று வாருங்கள் என்று சொல்லி அந்த கேஸ்களை பதிவு பண்ணாமல் வைத்திருந்த நிலைமைகளை யெல்லாம், புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி வந்ததற்குப் பிறகுதான், எடுத்துச் செல்லுகின்ற வழக்குகள் எல்லாம் பதிவு செய்யப்பட்டு உடனுக்குடன் விசாரணைக்கு உட்படுத்தப்படும் நிலை ஏற்பட்டது. அந்த வகையிலே 1 லட்சத்து 10 ஆயிரத் திற்கும் மேற்பட்ட வழக்குகள் இன்றைக்கு பதிவு செய்யப்





பட்டிருக்கின்றன. ஆனால் அன்று 60 ஆயிரம், 70 ஆயிரம் வழக்குகளே பதிவு செய்யப்பட்டிருந்தன. அப்படி பதிவு செய்யப் படாததற்கு என்ன காரணம் என்று கேட்டால், முழு விசாரணையும் செய்யாமல் இடை இடையே ஒவ்வொரு வழக்கையும் அதன் தன்மைகளுக்கு ஏற்ப ஏதாவது பெற்றுக் கொண்டு ஆங்காங்கே விட்டு விட வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் அன்றைக்கு கேஸ்கள் பதிவு செய்யப்படாமலேயே காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய அருமை நண்பர் இங்கே இல்லை. இன்றைக்கு காவல் நிலையங்களிலே, இரண்டு மாத காலத்திற்கு முன்னால் நடைபெற்ற உள்ளாட்சி ஊராட்சி மன்றத் தேர்தல்களில் வெற்றி பெற்று வந்த தலைவர்களும், அவர்களுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களுமே உள்ளே போய் தங்களுக்குள் ஒருவருக் கொருவர் சண்டையிட்டுக் கொண்டு, அந்த அதிகாரிகளுக்கு முன்னாலேயே சண்டையிட்டுக் கொண்டு, அவர்களுக்கு என்ன செய்வது என்று தெரியாத நிலையை ஏற்படுத்தி வருகிறார்கள். உதாரணமாக ராணிப்பேட்டை நகராட்சி மன்றத் தலைவர் அவர்கள், 20 நாட்களுக்கு முன்னால் அங்கிருக்கின்ற காவல் நிலையத்திலுள்ளே சென்றிருக்கிறார்கள். அவருடைய கட்சியைச் சார்ந்த நகராட்சி மன்ற உறுப்பினரும் உள்ளே போய் இருக்கிறார்கள். இரண்டு பேர்களும் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டு, குடுமியைப் பிடித்துக் கொண்டு சண்டையிட்டுக் கொண்டு, அந்த அதிகாரியின் முன்னாலேயே சண்டை போட்டுக் கொண்டு நின்றபடியால், அங்கிருந்த அதிகாரிகளுக்கு எப்படி அவர்களை சமாதானப்படுத்துவது என்றும் தெரியாமல், எப்படி அதில் வழக்கு போடுவது என்றும் புரியாத நிலையில் அங்கே காவல் துறையினர் இருந்துக் கொண்டிருக்கிறார்கள். நான் இந்தச் சொல்வதற்கு காரணம் காவல் துறையில் சிறப்பாக,

விஞ்ஞான ரீதியில் இவ்வளவு வசதிகளை வைத்துக் கொண்டு அவர்கள் செயல்படுகிறபோதே, அதையும் மீறி மிகத் தந்திரமாக இவர்கள் ஏதோ பாம்பைப் போல ரூபம் எடுத்து இன்றைக்கு காரியங்கள் நடத்துவதன் காரணமாக, இப்படிப்பட்ட குறைகளை அவர்கள் காவல் துறை மீது சொல்ல நேரிடுகிறது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 11-40)

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் தந்திருக்கிற பல்வேறு விளக்கங்களைப் பார்க்கிறபோது இன்றைக்கு தமிழ் நாட்டில் இருக்கிற நம்முடைய காவல் துறை எவ்வளவு சிறப்பாக செயல்படுகிறது என்பது தெரிகிறது. நாம் நம்முடைய மாநிலத்தை விட்டு அண்டை மாநிலங்களுக்குச் செல்கிறபோது, உங்கள் மாநிலத்தில் இருக்கிற காவல் துறையைப் போல வேறு எந்த மாநிலத்திலும் இல்லையென்று அங்கேயிருப்பவர்கள் சொல்கிறபோது, அதைக் கேட்பதற்கு மிகவும் பெருமையாக இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் காவல் துறையினை செம்மையாக, சிறப்பாக நடத்திச் செல்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கருத்துக்களை எடுத்துக்கூறுவதற்கு நான் நிற்கிறேன். ஒரு பக்கத்தில் இவ்வளவு சிறந்த காவல் துறையை இந்தியாவில் எங்கேயும் நாம் பார்க்க முடியாது, உலகத்திலேயே பார்க்க முடியாது என்று வாதாடிக் கொண்டிருப்பதை பார்த்தோம். போப் ஆண்டவர் சென்னை மாநகரத்திற்கு வந்தபோது எவ்வளவு சிறப்பாக அவருடைய நிகழ்ச்சிகள் நடந்தன. அது இந்த போலீஸ் இலாக்காவிற்கு, அதன் திறமைக்கு சான்றிதழ் வழங்குவதைப் போன்றதாகும் என்று குறிப்பிட்டார்கள். அதற்குப் பிறகு அமெரிக்காவை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது அங்கே பாதை நோக்கில் நடந்து செல்வதற்கு தடை ஏற்படுவதைப்போல எங்கேயாவது இங்கே தடை ஏற்படுகிறதா என்றும். பட்டப்பகலில் மற்ற இடங்களிலும் நடக்கிறதைப் போல 'பேங்க்





கொள்ளைகள் எங்கேயாவது நடக்கிறதா என்றும்
கேட்கப்பட்டது. இந்தியாவில் சில மாநிலங்களில் போலீஸ் துறை
எப்படி இருக்கிறது என்று சூசகமாகப் பேசப்பட்டது. ஆனால்
நான் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஏதோ காவல்
துறையினர்தான் இதற்கெல்லாம் பொறுப்பு என்று நான் கருத
வில்லை. இன்னும் ஒரு பக்கத்தில் பேசப்பட்டது. இந்தக் காவல்
துறையில் இருப்பவர்கள் எல்லாம் பாவிகள், அவர்கள் இந்தக்
குற்றத்தை செய்கிற அளவிற்கு குற்றப் பரம்பரையைச்
சார்ந்தவர்கள் என்று. அந்தமுறையில் நாம் இந்தப்
பிரச்னையைப் பார்க்கவில்லை. குற்றங்கள் குறைவதும்
ஏறுவதும் போலீஸ் துறையைப் பொறுத்து அல்ல.
சமுதாயத்தில் இருக்கிற சீரழிவுகள்தான் குற்றங்கள் நிகழ்வதற்கு
காரணமாக இருக்கின்றன. போப் ஆண்டவர் வருகையின்போது
நிகழ்ச்சிகள் அமைதியாக நடந்ததில் போலீசிற்கு எந்தப் பங்கும்
இல்லையென்று சொல்லவில்லை. வங்கிகள் கொள்ளை இங்கே
இல்லையென்றால், அதற்கெல்லாம் தமிழ் நாட்டில் தமிழர்களின்
நாகரீகம் அவ்வளவு சீரழியவில்லை என்பதைத்தான் எடுத்துக்
காட்டுகிறது. போலீசின் திறமைதான் அதற்கு காரணம் என்று
வாதாடி, இந்தத் துறையில் ஏற்பட்டிருக்கிற குறைகளை,
குற்றங்களை கண்டுபிடிப்பதற்கான முயற்சியிலிருந்து நாம்
விலகக் கூடாது என்று வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.
குற்றங்கள் அதிகமாவதற்கு அவர்கள்தான் பொறுப்பு என்று
நான் சொல்லவில்லை. அதுமட்டுமல்லாமல் இந்த ஆய்வு
அறிக்கையில் ஒரு பக்கத்தில் போலீஸ் கான்ஸ்டேபிள்
அய்யாப்பெருமாள், இராசரத்தினத்தினுடைய திறமையைப்
பற்றியும், அவர்கள் எவ்வளவு உறுதியாக கடமையாற்றினார்கள்
என்பதைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதிலே எனக்கு எந்த
ஆட்சேபணையும் இல்லை. அவர்கள் குற்றவாளிகளைப்
பிடிப்பதற்கான முயற்சியில் எவ்வளவு தீவிரம் காட்டி
தங்களுடைய உயிரை இழந்தனர் என்பதிலும் எங்களுக்கு
ஆட்சேபணை இல்லை. அவர்களுக்கு மரியாதை செலுத்துவதற்கு
நாங்களும் தயார்தான். அத்தகைய உணர்வு போலீஸ் அணியில்
ஏற்பட வேண்டுமென்று விரும்புகிறவர்கள்தான் நாங்கள்.

[திரு. வி. பி. சிந்தன்] [1986 மே 6

ஆனால் மையமான பிரச்னை அதுவல்ல. அதைத்தான் மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

மையமான பிரச்னை என்பது இந்தப் போலீஸ் இலாக்காவை நடத்திச் செல்வதில் அரசின் கொள்கை என்ன என்பது தான். இந்த மையமான பிரச்னையில் அரசின் கொள்கை என்ன* அந்தக் கொள்கை எப்படி உருவாக்கப்படுகிறது. எப்படி அமல் நடத்தப் படுகிறது என்பது தான் என்னுடைய கேள்வி.

இந்த ஆய்வு அறிக்கையில், ஆங்கில புத்தகத்தில் 5-ம் பக்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'The Tamil Nadu Police, in this exercise, maintain and nurture very corial relationship with the public.'

என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழில் அதைச் சொல்லும்போது, இந்த வழியில் நின்று பணிபுரியும் தமிழகக் காவல் துறை பொதுமக்களுடன் சிறந்த நல்லுறவினைப் பேணி வளர்த்து வருகின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப் படித்துப் பார்த்து சிரித்தேன். வேடிக்கைக்காகச் சொல்லவில்லை. ஒருவேளை இந்த ஆண்டுக்கு உள்ள ஒரு மிகச் சிறந்த நகைச்சுவைக்கு பரிசளிக்க வேண்டுமானால், இந்த வாசகத்திற்கு பரிசளிக்கவேண்டும் என்று நான் சொல்வேன். காரணம் ஏதோ ஒரு இலாக்கா இன்றையதினம் மக்களிடமிருந்து முழுமையாக தனிமைப்படுத்தப்பட்டு இருக்கிறது என்று சொன்னால், அது போலீஸ் இலாக்கா தான். அதனுடைய செயல்முறைகளும், அதை நடத்திச் செல்கிறவர்கள் செய்கிற தவறுகளும், இத்தகைய ஒரு இக்கட்டான நிலைமையை ஏற்படுத்தி இருக்கிறது என்பது என்னுடைய கருத்து. இதை நான் குறிப்பிடும்போது, இந்த மன்றத்திலே துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு விஷயத்தை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். சில அதிகாரி களுடைய தவறோ, அல்லது சில நடவடிக்கைகளோ அல்லது சில டிரென்ட், போக்குகளோ தவறு என்று சொல்லும்போது, அது நீதிமன்றத்திலே இருக்கிறது, சப்ஜுடிஸ் என்று சொல்லி



1986 மே 6] [திரு. வி. பி. சிந்தன்]

விடுகிறார்கள். அந்த அதிகாரிகளுக்கு இங்கே பதில் அளிப்பதற்கு வாய்ப்பு இல்லை, ஆகவே நீங்கள் பேசக் கூடாது என்று சொல்கிறார்கள். இது முறையல்ல. நான் இதைச் சொல்வதற்குக் காரணம் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசக்கூடாது என்று சொல்லவில்லை. ரூல் 93 பிரகாரம் நோட்டிஸ் கொடுத்துவிட்டுப் பேசுங்கள். நாங்கள் உங்களுடைய உரிமை களைப் பறிப்பது போன்று சொல்லக்கூடாது. அதுசரியல்ல. நோட்டிஸ் கொடுத்துவிட்டுப் பேசினால், அமைச்சர்கள் பதில் கொடுப்பதற்கு வசதியாக இருக்கும்.

**திரு. வி. பி. சிந்தன்:** ஒரு மிகச் சிறந்த நீதிபதி சொல்லும் போது,

'In short, a plea for justice is addressed not to the Court alone, but to the Executive and Legislature as well'.

என்று சொல்கிறார்கள். மக்கள் நீதி வழங்கப்படுவதற்கு, நீதி மன்றத்திற்கு முன் உள்ள ஒரு பிரச்சனையாக மட்டும் அதைக் கருதக்கூடாது. அதில் நிர்வாகத்திற்கு பொறுப்புண்டு, சட்ட மன்றத்திற்குப் பொறுப்புண்டு என்று சொல்கிறது. அதைத்தான் நம்முடைய அரசியல் சட்டத்திலே Checks and Balances என்று சொல்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். இங்கே பேசவில்லை என்றால் வேறு எங்கே பேசுவது? இந்தக் குறைகளை எல்லாம் இங்கே எடுத்து விவாதித்தால்தானே அதைத் தீர்க்க முடியும். பொதுமக்களிடம் போலீஸ் இலாக்காவிலே நடைபெறக்கூடிய அநீதிகளைப் பற்றி, அக்கிரமங்களைப் ப்ற்றி, தவறுகளைப் பற்றி நான் இதைச் சொல்வதற்குக் காரணம், போலீஸ் பற்றிய ஒரு நல்ல உணர்வை நாம் உருவாக்கவில்லை என்று சொன்னால், மக்களுக்கு அருவருப்பு ஏற்படும். அருவருப்பு ஏற்பட்டதற்குப் பிறகு, பல தவறான காரியங்களுக்கு அவர்கள் போகக்கூடிய அபாயம் உண்டு. மக்களிடையில் அப்படி ஒரு உணர்ச்சி ஏற்படுத்துவதற்கு இந்தச் சட்டமன்றம் முயற்சிக்க வேண்டும்.

திருப்பூரில் நாகம்மாள் என்ற ஒரு பேராசிரியை கொலை செய்யப்பட்டார். போலீஸ் விசாரணையிலே எதுவும் புலனாக வில்லை. அந்தப் பகுதியில் நடந்த கிளர்ச்சியும் இயக்கமும் தான் பேராசிரியை நாகம்மாள் அவர்களுடைய மரணத்திற்கு யார் காரணம் என்பதை கண்டுபிடிக்க முடிந்ததற்கும், பிறகு தண்டனை கொடுப்பதற்கு வழி ஏற்படுத்தியது. ஆகவே மேலும் மேலும் இதை வலியுறுத்தவேண்டிய காரணத்தால்தான் நான் இங்கே பேசுகிறேன். ஆனால் சப்ஜுடிஸ் என்று நான் பேசும் போது தலைவர் அவர்கள் குறுக்கிடுகிறார்கள். ஆனால் நான் ஒன்றை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்த அறிக்கையி னுடைய 48 வது பக்கத்திலே I refer to the English text. கீழ்க்கரையிலே அக்டோபர் 25 ஆம் தேதி 1985 ஆம் ஆண்டு நடைபெற்ற நிகழ்ச்சியைப் பற்றி ஒரு பகுதி உண்டு. நான் உங்கள் மூலமாக நம்முடைய அவை முன்னவர் அவர்களுக்குத் தெரிவிப்பது, அதை மீண்டும் ஒரு முறை படித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிலும் குறிப்பாக ஒரு வருடைய பெயரைக் குறித்து, அவர்கள் தான் கூட்டத்தின் மீது கல் எறிந்தது என்றும், பல சொத்துகளை நாசப்படுத்தினார்கள் என்றும் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதற்குப் பிறகு அந்த பாராவினுடைய கடைசி வாசகத்தைப் படித்து பாருங்கள். Magisterial enquiry is ordered. இந்த மேஜிஸ்ட்ரேட்டினுடைய என்கொயரி ஆர்டர் பண்ணப் பட்ட பிறகும், அரசு இந்த மன்றத்திலே வைக்கக்கூடிய ஒரு அறிக்கையிலே அந்தக் குற்றச்சாட்டுகளை நிரூபிக்கிற முறையிலே அதை நிரூபித்த ஒரு நிலைமையிலே அந்த வாசகங்கள் அமைவது சரிதானா? நீங்கள் அதைச் செய்யலாம். நாங்கள் எதாவது குறிப்பிட்டால்தான் தவறா என்று நான் குறிப்பிட விரும்பு கிறேன்...

ஆகவேதான் **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





(முற்பகல் 11-50)

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடைசியிலே பேசியவை யெல்லாம் நீக்கப்படுகின்றன.

திரு. வி. பி. சிந்தன்: சட்டமன்ற, பாராளுமன்ற குறிப்பிலே ஏற்றுகின்ற காரணத்தினாலே அதற்கு தலை வணங்குகிறவன் அல்ல என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதனால் தான் அடுத்த பிரச்சனைக்குப் போகிறேன். இந்த ஒத்திவைப்பு . . . (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஜுடிஷியல், லெஜிஸ் லேச்சர் பற்றிப் பேசினீர்கள். நான் அதை கேட்டுக் கொண்டி ருந்தேன். அதைத் தொடர்ந்து கேட்டுவிட்டுப் போகலாம் என்று வந்தேன். நீங்கள் அதோடு விட்டு விட்டீர்கள் (குறுக்கீடு)

திரு. வி. பி. சிந்தன்: அதை நான் பேசவில்லை. அதை என்றைக்கோ விட்டுவிட்டேன். ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் அல்லது பிரச்சனை களைப்பற்றி நான் இங்கே பேசியவை ஒரு பக்கத்திலே இருக்கட் டும். அவை முன்னவர் அதற்கு ஒரு பதில் சொல்கிறார். அந்தப் பதில் போலீஸ் இலாக்காவால் தயாரிக்கப்பட்டது. விசாரணைக் குழு என்று சொல்லி இங்கே பல்வேறு பிரச்சனை களுக்கு விசாரணைக் குழு போடப்பட்டிருக்கிறது. அந்த விசாரணைக் குழுவின் முடிவு என்ன என்பது தெரியாது. எதை யும் ஒரு முழுமையான நிலைமையில் கொண்டு வரக்கூடிய முறை யில் அரசின் கொள்கை இல்லை என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். இதைச் சொல்லுவதற்கு காரணம் இன்வெஸ்ட் டிகேஷன் ஒன்றை மட்டும் எடுத்துக்கொள்கிறேன். எனக்குள்ள நேரத்தில் நான் அவ்வளவு தான் சொல்ல முடியும். இன்வெஸ்ட் டிகேஷன் ஒன்றை மட்டும் எடுத்துக்கொள்கிறேன்.

அனேகமாக இன்வெஸ்ட்டிகேஷன் என்று சொன்னால் நம்முடைய போலீஸ் அதிகாரிகளுக்கு ஒரு மெத்தட் தான் தெரியும். அது third degree method சித்திரவதை செய்து எவ்வளவு நிர்ப்பந்தம் செலுத்த முடியுமோ, நகக் கண்ணில்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஊமையை வந்து, அடித்து, சித்திரவதை செய்து, பிரக்ஞை இழந்து விழுந்து விட்ட பிறகு, தண்ணீரை உடம்பிலே ஊற்றி—அதை எல்லாம் நான் அனுபவித்த காரணத்தால் சொல்லுகிறேன். மீண்டும் அடித்து இப்படி துன்புறுத்தி ஸ்டேட்மெண்டு எழுதுவது, —பல நீதிமன்றங்களுடைய தீர்ப்புகளை படித்தவர் தானே நீங்கள் —கடைசியில் அந்தக் குற்றவாளி, தீர்ப்பளித்தார்கள் அதனால் நான் அதைச் சொல்ல வேண்டி வந்தது என்று சொல்லக்கூடிய நிலைமை எல்லாம் ஏற்படுகிறது. சமீப காலத்தில் இந்தப் போக்குகள் அதிகமாகி இருக்கிறது. இந்தப் போக்குகளைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். இதைச் செய்யக் கூடாது, இது குற்றம், குற்றப் புலனாய்வு செய்வதற்கு third degree method ல் சித்திரவதை செய்யக்கூடாது என்று நீங்கள் சுற்றறிக்கை அனுப்பினீர்களா? நீங்கள் போலீஸ்காரர்களுக்கு இப்படி செய்யக் கூடாது என்று பயிற்சி கொடுக்கிறீர்களா? இதைத் தான் நான் கேட்க விரும்புகிறேன். அப்படி ஒரு முயற்சி எடுத்து இருந்தால் அதற்கான விளைவுகள் நிச்சயமாக ஏற்பட்டு இருக்கும். விளைவு ஏற்படவில்லை என்பது தான் அண்மையில் போலீஸ் நிலையங்களில் நடைபெறக்கூடிய கொலைகளின் பட்டியல் எடுத்துக் காட்டுகிறது. நான் விவரங்களுக்குள் போக விரும்பவில்லை. பல்வேறு போலீஸ் நிலையங்களிலே இவ்வாறு நடக்கிறது.

தென்காசி தாலுக்காவிலே பாவூர்சத்திரத்திலே உள்ள போலீஸ் நிலையத்தில் திருட்டுக் குற்றத்திற்காக சின்னசாமி என்பவரை 11—4—1986-ல் கைது செய்து அழைத்துச் செல்கிறார்கள். திருட்டுக் குற்றத்திற்கு கைது செய்யப்பட வேண்டியது தான். அவன் திருடி இருக்கிறானா இல்லையா என்று— நாய் படை, குதிரைப் படை, வாக்கி டாக்கி, இன்னும் எத்தனையோ கருவிகள் விஞ்ஞானக் கருவிகள், கம்ப்யூட்டர் உட்பட, நீங்கள் உபயோகிக்கிறீர்கள். ஆனால் பண்டைக் கால முறைகளிலே சித்திரவதை செய்து கடைசியாக 13 ஆம் தேதி அவனுடைய சடலம் அவனுடைய குடும்பத்திற்கு திருப்பிக் கொடுக்கப்படுகிறது. இப்படி எத்தனை நிகழ்ச்சிகள்.



ஆவணக்காப்பக ... 008
139486

மதுரை, போடி அருகில் தேவகரம் போலீஸ் ஸ்டேஷனில் தனுஷ்கோடி என்ற 20 வயது பையன் இப்படி கைது செய்யப் பட்டு அவனை சித்திரவதைக்கு உள்ளாக்கி அவன் அங்கே இறந்து போகிறான். இப்போது ஆர்.டி.ஓ. விசாரணை என்று சொல்லுகிறீர்கள். இந்த விசாரணையால் என்ன பலன் ஏற்படும் என்று எனக்குப் புரியவில்லை. இத்தகைய முறைகளை கடைப்பிடிக்கக் கூடாது என்று போலீஸ்க்கு தாக்கீது கொடுக்கப்பட்டதா? ஆகவே இந்த முறைகளுக்கு காரணமான போலீஸ்காரர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா? என்ன நடவடிக்கை என்பதை நான் அரசுக்கு விட்டுவிடுகிறேன். அப்படி நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் மேலும் மேலும் இது ஏற்படும். இதனுடைய விளைவுகள் என்ன ஆகும்.

வேதாரண்யம் போலீஸ் அலுவலகத்தில் இருந்து வந்த ஒரு கூச்சலைக் கேட்டு, அவருடைய மரணக் கூச்சலைக் கேட்டு ஏராளமான கூட்டம் சேர்ந்து விடுகிறது. அவர்கள் மீது தடியடிப் பிரயோகம், கண்ணீர் புகை போன்றவைகள் ஏற்படக்கூடிய நிலைமைகள் ஏற்படுகிறது.

அதேபோல் நான் இன்னும் ஒரு நிகழ்ச்சியை சொல்ல விரும்புகிறேன். செஞ்சியில் உள்ள ஓளிபுரம் என்ற கிராமத்தில் சின்னமணி அலையஸ் ஆறுமுகம் என்ற ஒருவர் கைது செய்யப்பட்டு இந்த முறையில் நடந்தது.

கோவையில் நடந்த இதைவிட வருந்தத்தக்க பிரச்சினையை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கோவையில் 1—11—1985-ல் ஈரோடு போலீசார் சித்தாபுரத்திற்கு வந்து ஒரு வீட்டில் சோதனை செய்து ஒருவரை கைது செய்கிறார்கள். அவர் பெயர் ஜார்ஜ் பிலிப் என்பது. அந்த வீட்டில் அவரை அடிக்கிறார்கள். வீட்டில் உள்ள அவருடைய மனைவி குழந்தைகள் எல்லாம் கதறி அழுகின்றபோதும் அடிக்கிறார்கள். ரத்த காயம் ஏற்படுத்துகிறார்கள். அதற்குப் பிறகு அவரை ஈரோட்டுக்கு அழைத்துச் சென்று விடுகிறார்கள். ஈரோடு போலீஸ் நிலையத்திற்கு அவர் தேவையாக இருந்து இருக்க முடியும். தேவைக்காக கைது செய்யப்பட்டது. ஆனால் அடித்துதான் இழுத்து செல்ல வேண்டுமா? அதற்குப் பிறகு

மறுநாள் அவருடைய, பிலிப் உடைய மனைவிக்கு ஒரு தந்தி வருகிறது. ஒரு போலீஸ் அதிகாரியும் அந்த வீட்டுக்கு வருகிறார். உடனடியாக உன்னையும் உங்களுடைய சொந்தக்காரர்களையும் ஈரோட்டுக்கு அழைத்து வரும்படி போலீஸ்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று சொல்லி ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்கிறார்கள். அங்கே பிலிப்பினுடைய பிணத்தைத் தான் அவர்கள் பார்க்க முடிந்தது. பார்த்த பிறகு அந்த போலீசார் அந்த பிணத்தையாவது அந்தக் குடும்பத்திற்கு திருப்பிக் கொடுத்தார்களா என்றால் இல்லை. போலீசே அதை அடக்கம் செய்தது. அதற்குப் பிறகு ஈரோடு போலீஸ் அதிகாரிகள் மீண்டும் மீண்டும் அந்த வீட்டுக்குச் சென்று சமரசமாக முடித்து விடுங்கள் உங்களுக்கு நாங்கள் ஏதேனும் பணத்தைக் கொடுத்து விடுகிறோம் என்று பேசுகிறார்கள். இதுபற்றி சட்டமன்ற உறுப்பினரும், மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் தலைவருமான திரு. ரமணி அவர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள். தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் நான் ஒன்றை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். முதலமைச்சருக்கு, ஏதாவது பிரச்சினை பற்றி கடிதம் எழுதினால், அதற்கு முதலமைச்சரோ, அல்லது அவரது செயலாளரோ, அல்லது பொறுப்புள்ளவரோ, ஒரு பதில் எழுத வேண்டாமா? ஜனாதிபதிக்கு எழுதினாலும் பதில் வருகிறது. ராஜீவ் காந்திக்கு எழுதினாலும் அந்தக் கடிதங்களுக்குப் பதில் வருகிறது. இங்கே இப்படி முக்கியமான பிரச்சினைகள் பற்றி எழுதப்படுகின்ற போது அதற்குப் பதில் அளிக்கப்படுகின்ற பழக்கம் இல்லை.

(நண்பகல் 12-00)

சென்னையில் பெரியமேட்டில், சரோஜா என்ற ஏழு குழந்தைகளுள்ள பெண் கொலை செய்யப்பட்டிருக்கிறார் . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 5 உறுப்பினர்கள் பேசவேண்டும். சீக்கிரம் முடியுங்கள்.



**திரு. வி. பி. சிந்தன்:** அந்தப் பெண் மார்பில் அடிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டிருக்கிறாள். நான் மார்ச்சுவரிக்கு சென்றிருந்தேன். அந்த அம்மையாருடைய பிணத்தின் தலையைத் தூக்கிப் பார்த்தேன். என்னுடைய கை பூராவும் ரத்தமாகி விட்டது. அந்த மார்ச்சுவரியினுடைய அதிகாரிகளும் பார்த்தார்கள். மற்றவர்களும் பார்த்தார்கள். ஆனால் அந்த போலீஸ் ரிப்போர்ட்டிலே அவர்களுக்கு அடிபடவில்லை என்றிருக்கிறது. அந்தப் பிணத்திலிருந்து ரத்தம் கொட்டிக்கொண்டிருக்கிறது. பிணவறையின் அதிகாரிகள் கூட அந்தக் காட்சியைப் பார்த்தார்கள். ஏன் சார், உங்கள் கையால் தொட்டுப் பார்க்கிறீர்கள் என்றுகூட என்னைக் கேட்டார்கள். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எத்தனையோ வியாசர்பாடியிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

டில்லிபாபு என்பவர் 19—1—1986 அன்று கைது செய்யப்பட்டு, சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு இருக்கிறார். ஏன் சித்திரவதை செய்கிறீர்கள் என்று கேட்டபோது, ஓடிச் செல்கின்ற நேரத்திலே கீழே விழுந்து அவன் செத்துவிட்டான் என்று சொல்கிறார்கள். அவன் ஓடிச் செல்கின்ற நேரத்தில் இவ்வளவு காயங்கள் எப்படி ஏற்படும்? சென்னையில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடந்தால் எப்படிப்பட்ட கூட்டம் சேரும் என்பது எல்லோரும் அறிந்த ஒன்றே. பிறகு துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. மூன்று பேர் செத்தார்கள்.

இந்த மீனவர்களுடைய பிரச்சினைக்கு நான் போகவில்லை. நான் வலியுறுத்திக் கேட்பதெல்லாம், இந்த போலீஸ் அதிகாரிகளுக்கு காக்கி உடைக்குள்ளே ஒரு மனிதன் என்ற எண்ணம் இருப்பதில்லையா, அந்த மனிதனுக்கும் சில பண்பு உண்டு. அந்த மனிதனுக்கு உணர்வு உண்டு. இப்படிப்பட்ட நேரங்களில் இதைத் தடுக்க நிறுத்தவேண்டிய நிலை உங்களிடம் இருக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்கள் காவல் துறையில் நடைபெறுகின்ற கொடுமைகளை எல்லாம் சித்தரித்துக் காட்டுகிறார்கள். உண்மையா, இல்லையா என்பது விவாதத்திற்குரிய பிரச்சினை

[திரு. ப. உ. சண்முகம்] [1986 மே 6

அது வேறு விவகாரம். உண்மையை வரவழைக்க சித்திரவதை செய்கிறார்கள் என்று சொன்னார்கள். யார் யாரை எப்படி செய்தார்கள் என்று அதற்குள்ளே போகவில்லை. உண்மையை வரவழைக்க தவறான முறையிலே தமிழக காவல் துறையினர் அப்படிச் செய்வதாக ஒத்துக்கொண்டு, நான் அவரிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அவர்கள் கட்சி ஆளுகின்ற மேற்கு வங்கத்தில் பூமாலை போட்டு உண்மையை வரவழைக்கின்றார்களா? அல்லது ரோஜாப்பூ மாலை போட்டு உண்மையை வரவழைக்கின்றார்களா? எப்படிப்பட்ட முறையை அவர்கள் வைத்திருக்கிறார்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. வி. பி. சிந்தன்:** நல்ல கேள்விதான். விளக்கம் சொல்வதற்கு உரிய நேரத்தை சபாநாயகர் அவர்கள் தந்தால் நல்லது. அவை முன்னவர் அவர்கள் அங்கே போலீஸ் எப்படி நடக்கிறது என்று தெரிந்துகொள்ள நேரில் சென்று, தெரிந்து கொண்டால் நல்லது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் வங்கத்தைப் பற்றி அல்ல. வேறு சில நாடுகளில் எப்படி காவல் துறையினர், சிறைச்சாலைகள் எல்லாம் நடக்கின்றன, எப்படிப்பட்ட கொடுமைகள் எல்லாம் நடக்கின்றன என்பதைப்பற்றி நானும் படித்து இருக்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சி நாடுகள் எப்படி செயல்படுகின்றன என்பதையும் நான் படித்து இருக்கிறேன். எங்கோ ஒன்றிரண்டு இடங்களில் போலீசார் செயல்பட்டதை வைத்துக்கொண்டு, ஒட்டுமொத்தமாக காவல் துறையினரைப் பற்றி அப்படிச் செய்கிறார்கள் என்று சொல்வது நல்லதல்ல. சமூக விரோதிகளுக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது சரியல்ல என்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

**திரு. வி. பி. சிந்தன்:** சமூக விரோதிகளானாலும் சரி, அவர்களை விசாரணை நடத்தி, தண்டிக்க வேண்டுமே தவிர, இந்த முறையை நீங்கள் கையாளக்கூடாது. சமூக விரோதிகளை சித்திரவதைக்குள்ளாக்கலாமா? சமூக விரோதி என்று என்னையும் சொன்னார்கள் ஒரு நேரத்தில், சித்திரவதையும் செய்தார்கள்.



1986 மே 6]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** சமூக விரோதி என்றாலும் முறையாக விசாரிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். கொலை செய்துவிட்டவனை விசாரிக்க வேண்டுமென்றால், மேற்கு வங்கத்திலே ரோஜாப்பூ மாலை போட்டு அர்ச்சனை செய்து விசாரணை நடத்துகிறார்களா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. வி. பி. சிந்தன்:** தலைவர் அவர்களே, மேற்கு வங்கத்திலே, கேரளாவிலே, திரிபுராவிலே கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி நடத்துகின்ற இடங்களிலே போலீஸ் அதிகாரிகள் விசாரணை செய்கின்ற நேரத்தில், போலீஸ் துறையினுடைய அமைச்சர் அவர்கள், எல்லா போலீஸ் நிலையங்களுக்கும் அந்த எச்சரிக்கையை அனுப்பி, இப்படி ஏதேனும் தவறான நடவடிக்கைகளிலே ஈடுபடக்கூடியவர் மீது நடவடிக்கை எடுத்ததுண்டு. அந்த நடவடிக்கைகள் எல்லாம் எடுத்ததன் விளைவாக பெரிய மாற்றம் அந்த மாநிலத்திலே ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கணக்கிலே எடுத்துக் கொண்டுதான் நான் இந்த எச்சரிக்கையை . . . . . . (மணியடிக்கப்பெற்றது) என்னுடைய நேரத்தை நீங்கள் இப்படி கணக்கெடுக்கக்கூடாது. பலர் குறுக்கிட்டு இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 4 உறுப்பினர்கள் பேசவேண்டும். அதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டியது இருக்கிறது.

**திரு. கு. ரமணி:** ஒவ்வொரு தடவையும் யாரும் குறுக்கிடாமல் இருந்தால் நாங்கள் கரெக்டாக டைமிற்குள் நின்று பேசலாம். நீங்கள் பார்த்து 2 அல்லது 4 நிமிஷம் கொடுக்கலாம். ஆனால் ஒவ்வொருவரும் பேசுகிறபோது . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1½ மணிக்குள் முடிக்க வேண்டும். இன்னும் 4 உறுப்பினர்கள் பேசவேண்டியிருக்கிறது.

**திரு. கு. ரமணி:** இரண்டு அல்லது மூன்று அமைச்சர்கள் தொடர்ந்து கேள்வி கேட்டுக்கொண்டே இருந்தால், பேசுகிறவருக்கு . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பேசக்கூடிய பிரச்சினையைப் பொறுத்தது. சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. கு. ரமணி: நீங்கள் பார்த்து எதைச் சொன்னாலும் அர்த்தம் இருக்கிறது. ஆனால் அவர் என்ன சொல்கிறார்? பூமாலை போட்டு வரவேற்கிறீர்களா? என்று கேட்கிறார். நான் சவால் விட்டுக் கேட்க விரும்புகிறேன். அவரும் வரட்டும், நானும் வரத் தயார். வெஸ்ட் பெங்காலிலே போய் என்குயரி நடத்திவிட்டு வரலாம். நான் அதற்குத் தயார். அவர் ஒத்துக் கொள்வாரா? நானும் இப்படிக் கேட்கலாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் சீக்கிரமாகப் பேசி முடிக்க வேண்டும்.

திரு. வி. பி. சிந்தன்: பல விவாதங்களிலே பல உறுப்பினர்கள் எழுப்பிய கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்தை நான் இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறேன். அதற்கு சற்று அனுமதி அளிக்க வேண்டும். நான் அந்த பத்து ஆண்டுகளில் என்ன நடந்தது, அல்லது இந்த 10 ஆண்டுகளில் என்ன நடந்தது என்று பேசவில்லை. போலீஸ் இலாகாவிலே ஒரு மாற்றம் வேண்டும் என்று இப்போது நம்முடைய பிரதமர் உட்பட சொல்லிக்கொண்டிருக்கிற நோக்கில், அந்த மாற்றத்தை எப்படியாவது உருவாக்க வேண்டும் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சமுதாயத்திலேயே மாற்றம் வேண்டும். போலீஸ் நம்முடைய சமுதாயம்தான். They are all our friends and relatives

திரு. வி. பி. சிந்தன்: சமுதாயத்தில் நல்ல உணர்வுகள் ஏற்படும்போது அவர்களுடைய வேலை குறையும். அதனாலேதான் நான் ஆரம்பத்திலேயே சொன்னேன் சமுதாயத்தில்தான் இந்த மாற்றம் ஏற்பட வேண்டும் என்று. நான் இன்னும் ஒரு விஷயத்தை வலியுறுத்த விரும்புகிறேன்.

பாதிக்கப்பட்டவர்கள் பகுதியிலே, குறிப்பாக, வழக்கறிஞர்கள் பகுதியிலே சமீப காலமாக போலீஸ் நடவடிக்கையைப்பற்றி ஏற்படுகிற உணர்வுகளை, சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு-



கிறேன். மாநிலம் தழுவிய வக்கீல்களுடைய வேலைநிறுத்தம். மாநிலம் தழுவிய பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய வேலை நிறுத்தத்தை நான் பார்த்ததுண்டு. மாநிலம் தழுவிய வக்கீல்கள் வேலை நிறுத்தம். கையிலே விலங்கு போட்டு இழுத்துச் சென்று அடிக்கிறார்கள். வழக்கறிஞர்களை கோர்ட்டுக்கு உள்ளே சென்று அடிக்கிறார்கள்.

வழக்கறிஞர்களைக் கைது செய்து—நான் விவரத்துக்குள் போக விரும்பவில்லை. விழுப்புரத்திலே நடந்தது, அல்லது நெல்லையிலே சையத் அஹமது—உங்களுக்கும் தெரிந்தவர்தான். அந்த 'பார் அசோசியேஷனிலே' மதிப்புக்குரிய ஒரு வழக்கறிஞர். அவர் மீது 302 போடப்பட்டு, அது உள்பட, சாத்தூரிலே, திருச்சியிலே, இன்னும் பல இடங்களிலே இப்படிப்பட்ட நடவடிக்கைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவேதான் நான் சொல்கிறேன். அந்தப் பகுதியினை எதிர்ப்பாக மாற்றாதீர்கள். ஏன் அது நடக்கிறது என்று ஆராய்ச்சி செய்து—இந்த ரிப்போர்ட்டைப் படித்துப் பார்த்தால் ஒரு குறையும் கிடையாது. ஒரு குறையினைப் பற்றியும், எந்த இடத்திலேயும், திருத்தப்பட வேண்டிய பகுதிகள் உண்டு என்று முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருந்தால் நான் மகிழ்ச்சி அடைந்திருப்பேன். பூராவும், To condemn the Police Department என்று அல்ல நான் சொல்வது. எனக்கு நேரம் இல்லை. ரேப், கற்பழிப்பு, டெளரி ஆகிய . . . (குறுக்கீடு)

டெளரி முதலிய குற்றங்கள் சம்பந்தமாக சட்டத் துறையிலே பல மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. ஆனால், அந்த முறையிலே, போலீஸ் அதிகாரிகள், போலீஸ் இலாக்காவிலே உள்ள சில அதிகாரிகள் உள்பட, அதற்கு பயிற்சி அளிக்கப்பட்டார்களா? அந்தச் சட்டத்தின்படி அவர்கள் நடவடிக்கை எடுத்தார்களா என்று கேட்டால் நீண்ட பட்டியல் என்னிடம் உண்டு. அந்தச் சட்டத்தின்படி நடந்துகொள்ளவில்லை என்பதைத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவேதான் அரசினுடைய கொள்கையிலே ஒரு மாற்றம் வேண்டும்—தொழிலாளிகள், விவசாயிகள் போராடும்போது—இங்கே பல விவாதங்களிலே சொல்லாவிட்டாலும் நான் இதில் குறிப்பிட விரும்புகிறேன்—அரசியல்

காரணங்களுக்காக, தனவந்தர்கள், செல்வாக்கு உள்ளவர்கள் என்ற காரணத்திற்காக வழக்கு போடாதீர்கள். நான் ஒரு குற்றம் செய்து, அந்தப் பக்கத்திலே இருக்கிறவர்கள் ஒரு குற்றம் செய்தால், குற்றம் இரண்டுக்கும் ஓரே சட்டம்தான். ஒரு சட்டம் என்று பார்க்கின்றபொழுது, செய்யாறிலே ஏதோ செய்ததற்காக 307-இன் கிழ் நடவடிக்கை; ஆனால் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஜோதி ஸ்டோர்ஸ், இந்தியா சில்க்ஸ்-இல் கொள்ளை அடிக்க முன் நின்றவர்கள்மீது 307 இல்லை. என்ன என்ன சட்டங்களின் கீழ் போடப்பட்டிருக்கின்றது என்ற விவரங்கள் இருக்கின்றன. இராமநாதபுரத்தில் அதில் நடவடிக்கை இல்லை. ஆனால் செய்யாற்றில் ராசு என்பவர் மீது 307. அந்தக் குற்றங்களின் தன்மையைப் பொறுத்து 307 போட வேண்டியதுதானே?

(பிற்பகல் 12-10)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வழக்கு போடுவதை எந்த செக்ஷனில் போடுவது என்பதையெல்லாம்பற்றி நாமே சொல்வது சரியல்ல. ஆங்காங்கு உள்ளவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். தவறுகள் ஏதேனும் இருந்தால் சுட்டிக்காட்டலாமே தவிர, இரண்டையும் ஒப்பிட்டுப் பேசி, தலையீடு உள்ளதைப்போலப் பேசுவது சரியல்ல; முறையும் அல்ல.

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் மீண்டும் இந்த அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கொள்கைகளில் திருத்தங்கள் செய்யப்படவில்லை என்றால் மீண்டும் மீண்டும் போலீசில் நடக்கும் தவறுகள் அதிகமாக வரும்; மக்களிடமிருந்து மிக அதிகமாக எதிர்ப்புகள் வரும், ஒவ்வொரு அரசுக்கும் அழிவை ஏற்படுத்தி இருப்பது போலீஸ் இலாக்காவின் செயல்தான் என்பதை நம்முடைய முன்னவர் அவர்களுக்கு எச்சரிக்கையாகச் சொல்லிக்கொள்கிறேன். அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். பல மாநிலங்களில் கொடுக்கப்படுகின்ற அளவிற்கு இங்கே பேட்டா இல்லை, வீடு கட்டும் திட்டம் இல்லை, இப்படிப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் சம்பந்தமாக கவனிக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).



* **திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்:** மாண்புமிகு பேரவையினுடைய தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் துறை, தமிழ்நாடு தீயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பு கொடுத்தமைக்காக நான் மகிழ்கிறேன். நம்முடைய காவல் துறையினுடைய திறமையைப்பற்றி இரண்டு விதமான கருத்துக்கள் இருக்க முடியாது. அவர்களுடைய திறமை இந்தியத் துணைக் கண்டத்திலே அங்கீகரிக்கப்பட்ட ஒன்று. சமீபத்திலே ஏறத்தாழ மூன்று கோடி வாக்காளர்கள் கலந்து கொண்ட நம்முடைய உள்ளாட்சி, ஊராட்சி, நகராட்சி, ஒன்றியங்களினுடைய தேர்தல்கள் ஏறத்தாழ அமைதிகரமான முறையிலே நடந்தேறியதற்கு அவர்களுடைய ஒத்துழைப்பு காரணம் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல, இந்தக் கொள்கைக் குறிப்பிலே கோடிட்டுக் காட்டாவிட்டாலும்கூட, பஞ்சாப் மாநிலத்திலே நடந்த தேர்தலைக்கூட, படுபயங்கரமான சூழ்நிலை இருந்த அந்த மாநிலத்தில் ஒரு ஜனநாயக அடிப்படையிலே ஒரு தேர்தலை நடத்தி முடிப்பதற்காக இங்கிருந்து சென்ற போலீசார் துணை நின்றிருக்கிறார்கள் என்று அறியும்பொழுது அவர்களுடைய திறமையை நாம் பாராட்டத்தான் வேண்டும்.

பொதுவாக இங்கு நடந்த விவாதங்களைக் காணும்பொழுது, மிகக் கொடுமையான உள்ளம். படைத்தவர்களுடைய கூடாரம் தான் காவல்துறை என்பதையோ அல்லது முழுக்க முழுக்க பரிசுத்தமானவர்களுடைய பஜனை மடம்தான் காவல்துறை என்பதையோ நாம் ஏற்க முடியாது.

சமுதாயம் எந்த அளவிற்கு நிலைகுலைந்து இருக்கிறதோ சமுதாயத்தினுடைய ஒழுக்கம் எப்படியெல்லாம் இன்றைக்கு வாழ்க்கையிலே படிந்து இருக்கிறதோ அந்த எதிரொலிதான் காவல்துறையினிடத்தில் இருக்கிறது என்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். குறிப்பாகச் சில விஷயங்களைப்பற்றி நான்

அதிகமாகப் பேசாமல் விட்டுவிடுகிறேன். ஏனென்றால்,
காலத்தின் நெருக்கடியை நான் உணர்கின்றேன். சபையின்
முன்னவர் அவர்கள் அடிக்கடி கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டு
இருக்கிறார்கள். அவர்கள் குறிப்பாக ஒரு மணி நேரமாவது
பேச வேண்டும்.

நான் சொல்ல விரும்புவதெல்லாம், இந்த நாட்டிலே சமுதாயத்
தினுடைய அமைதியைக் குலைக்கக்கூடிய சக்திகள் என்னென்ன
என்பது காவல்துறைக்கு நன்றாகத் தெரியும். அப்படித் தெரிந்
திருக்கும் காவல் துறை, அந்தச் சமுதாய விரோதிகளை, சமுதாய
விரோத சக்தியின் செயல்களிலே ஈடுபடுவதற்கு முன்னால்
தடுத்து நிறுத்துவதற்குப் பல சந்தர்ப்பங்களிலே தவறி விடுகி
றார்களே என்பதுதான் என்னுடைய ஆதங்கமாகும்.

குறிப்பாக, இந்த நாட்டிலே சிறுபான்மை சமுதாயத்தினருக்கு
எதிராக மிக கேவலமான, தரம் கெட்ட, அவர்களுடைய
உள்ளத்து உணர்ச்சிகளையெல்லாம் புண்படுத்தக்கூடிய ஏச்
சுக்கள், கேலிகள் தொடர்ந்து பேசப்பட்டு வருகின்றன; எழுதப்
பட்டு வருகின்றன. இது இந்த நாட்டினுடைய சட்டத்தின்
பிரகாரம் தடுத்து நிறுத்த வேண்டிய செயல் என்பதையும்,
அதைத் தடுத்து நிறுத்துவதற்கான போதுமான சட்டங்கள் நம்
முடைய நாட்டிலே ஏற்கனவே நிறைவேற்றப்பட்டிருக்கின்றன
என்பதையும் நாம் எல்லாம் அறிவோம். நான் கேட்கிறேன்,
கடந்த ஓராண்டுக் காலத்திலாவது இப்படி சமுதாயங்களுக்கிடை
யிலே கலவரத்தை அல்லது மாச்சரியத்தைத் தூண்டக்கூடிய
எழுத்துக்களுடைய அடிப்படையில் ஏதாவது ஒரு வழக்காவது
பதியப்பட்டிருக்கிறதா? அல்லது இப்படி தூண்டக்கூடிய பேச்சுக்
களைப் பேசியவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படு
கிறதா என்று பார்த்தால், அதைப்பற்றிய புள்ளிவிவரங்கள்
நமக்குக் கிடைக்கவில்லை.

இன்று, இந்தக் காவல் துறை தந்திருக்கக்கூடிய குறிப்பு
களிலே பார்க்கும்போது கூட நம்முடைய பெருமதிப்பிற்குரிய
சிந்தன் அவர்கள் இங்கே பேசும்பொழுது ஒரு பத்தியைக் குறிப்
பிட்டுச் சொன்னார்கள். நானும் அதைக் குறிப்பிடத்தான்





இருந்தேன். அதைப் பார்க்கும்போது, அதை எழுதியது காவல்
துறைதானா என்ற சந்தேகம் கூட ஏற்படுகிறது. ஏன் என்றால்,
அந்த அளவுக்கு ஒரு சமுதாயத்தின் மீது ஒட்டுமொத்தமாகக்
குற்றம் சாட்டக்கூடிய வரிகள்தான் இந்தத் தமிழ் வடிவத்தைப்
பொறுத்தவரையிலும், 69 ஆம் பக்கத்தில், இரண்டாவது பத்தியில்
சொல்லப்பட்டிருக்கிறது. அதை நான் இங்கே படித்துக் காட்டி,
சபையினுடைய குறிப்பேட்டிலே பதிய வைக்க விரும்பவில்லை.
நான் அறிந்துகொள்ள விரும்புவதெல்லாம், இங்கே ஏதோ ஒரு
சிறு கூட்டம் ஏற்பாடு செய்திருந்தது போலவும், அந்தக் கூட்டத்
திலே இன்னொரு சமுதாயத்தினர் சென்று குழப்பம் விளை
வித்தது போலவும் சொல்லிக் காட்டப்பட்டிருக்கிறது. நான்
தெரிந்துகொள்ள விரும்புவது, முழுக்க, முழுக்க ஒரு சமுதாய
மக்கள் கூடி வாழக்கூடிய பகுதியில், ஏற்கனவே அந்தச் சமுதாய
மக்களுக்கு எதிராக பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிற ஒரு குழு
வினர் ஒரு கூட்டம் நடத்த அனுமதிப்பது நலம்தானா என்பதைப்
பற்றி நாம் சிந்திக்க வேண்டும். எனக்குக் கிடைத்த தகவலின்
அடிப்படையில் அங்கே உள்ளூர் போலீசாரும் சரி, அந்த வட்டார
மாவட்டப் போலீசாரும் சரி, திட்டவட்டமாக அந்த இடத்திலே
கூட்டம் நடத்தக்கூடாது என்று அவர்கள் அனுமதி மறுத்த
தற்குப் பிறகு, அங்கே கூட்டம் நடத்துவதற்கு அனுமதி வழங்கு
வதற்கு யார் தூண்டினார்கள் என்பதைத்தான் நான் தெரிந்து
கொள்ள விரும்புகிறேன். இப்படி அந்தத் துறையிலே, அந்த
வட்டாரத்திலே வாழக்கூடிய காவல் துறை அதிகாரிகள் அமைதி
குறையும் என்று நிச்சயமாக தெரிந்து, அங்கே கூட்டம் நடத்தக்
கூடாது என்று அவர்கள் தடை விதித்திருக்க அங்கே நடத்தியே
தீர வேண்டுமென்பதற்காக, போலீசையே தூண்டி, முந்தைய
முடிவை மாற்றி அனுமதி வழங்க ஏற்பாடு செய்த அந்தச் சக்தி
களைப் பற்றி நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அப்படிப்பட்ட சக்திகளு
டைய தலையீட்டின் காரணமாகத்தான் நம்முடைய காவல்
துறைக்குக் கெட்ட பெயர் ஏற்படுகிறது. சுமுகமாக வாழ்ந்து
கொண்டிருக்கக்கூடிய சமுதாய மக்களுக்கு இடையே கூட தேவை
யற்ற கலவரங்கள் எல்லாம் விளைய ஏதுவாக இருக்கிறது.

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1986 மே 6

இந்தக் குறிப்பிலே ஒன்றை நான் சொல்லிக் காட்ட விரும்புகிறேன். இங்கே முஸ்லிம் சமுதாயத்தைப் பற்றி குறிப்பிடும்போது, முகமதியர் என்றே குறிப்பிடுவதைப் பார்க்கிறேன். இது கிட்டத்தட்ட, ஆங்கிலேயர்கள் இருந்த காலத்திலே குறிப்பிடப்பட்ட வார்த்தை. இஸ்லாமிய சமுதாயத்தைப் பின்பற்றுவோருக்கு முகமதியர் என்ற பெயர் எந்தக் காலத்திலும் பொருந்தாது. அதைப்பற்றி நாடு விடுதலை பெற்ற நாட்களிலே ஒரு பெரிய போராட்டமே நடந்தது. நம்முடைய அரசினுடைய குறிப்பேடுகளிலே கூட முஸ்லீம் என்ற பெயர் மாற்றம் செய்யப்பட்டு, தமிழக அரசு சார்பாக, வெளியிடப்படுகிற எல்லா வெளியீடுகளிலும் முஸ்லீம் என்ற சொல்லே கையாளப்பட்டிருக்கிறது. இன்று திடீரென்று இந்த முகமதியர் என்ற பெயர் சொல்லிக் காட்டப்படுகின்ற ஒரு மரபு எப்படித்தான் ஆரம்பமாயிற்றோ எனக்குத் தெரியவில்லை. தயவுசெய்து அதைத் திருத்திக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முஸ்லீம்களைப் பொறுத்தவரையில், முகமதியர்கள் என்று குறிப்பிட்டால் அதைக் கிட்டத்தட்ட ஒரு இன்சல்டிவ் வேர்டாகவே அவர்கள் கருதுகிறார்கள். அதைக் குறிப்பிட்டு, விரிவாகப் பேசுவதற்கு இதைப் பயன்படுத்த நான் விரும்பவில்லை. இனி வரக்கூடிய அரசு வெளியீடுகளிலே முகமதியர் என்ற வார்த்தை எந்தக் காலத்திலும் இருக்கக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

இந்தக் கொள்கைக் குறிப்பிலே சமீப காலத்திலே இன்ன, இன்ன இடங்களில் எல்லாம், இந்தச் சமுதாயங்களுக்கிடையே கலவரம் நடந்திருக்கிறது என்று சொல்லிக் காட்டப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையே நான் பாராட்டத்தக்க முறையிலே இல்லை. மிக்க உணர்ச்சியைத் தூண்டக்கூடிய இந்த நிகழ்ச்சிகளைப்பற்றி சொல்லிக் காட்டும்போது ஒரு நடுநிலையான நிலையிலே நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி இல்லாமல் கிட்டத்தட்ட ஒரு சமுதாயத்தின் மீதே குற்றம் சொல்லக்கூடிய முறையிலே இதிலே சொல்லிக் காட்டப்பட்டிருக்கின்ற முறைகள் எல்லாம் தவிர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1986 மே 6] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

குறிப்பாக சமீபத்திலே நான் இந்த பேரவையிலே கூட சபையினுடைய முன்னவர் அவர்கள் கவனத்திற்கு இராமநாதபுரத்தில் நடந்த விரும்பத்தகாத அந்த நிகழ்ச்சிகளைப்பற்றிச் சொன்னேன். அங்கே அமைதி நிலைநாட்டப்பட வேண்டும். அங்குள்ள சிறுபான்மை மக்களுடைய உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டேன். அங்கே நடந்த நிகழ்ச்சிகளை, நேரிலே சென்று பார்க்கும்போது நிதானத்தோடு இருப்பவர்கள் கூட நிலைகுலையத்தக்க சம்பவங்கள் அங்கே நடந்திருப்பதை நான் அறிந்துகொள்ள முடிகிறது. அதிலே வேதனை தரத்தக்க அம்சம் என்னவென்றால் இதுநாள் வரையிலே போலீசார் ஒரு அமைதியை நிலைநாட்டக்கூடிய முயற்சியிலே கும்பலாக கூடியிருப்பவர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்திருக்கிறார்கள் அல்லது துப்பாக்கிப் பிரயோகம் கூட பல இடங்களில் செய்திருக்கிறார்கள் தவிர்க்க முடியாத இடங்களில் என்பதைஎல்லாம் நாம் அறிந்துகொள்கின்றோம். ஆனால் இராமநாதபுரமத்தில் என்ன நடந்திருக்கிறது என்றால் எந்தச் சம்பவத்திலுமே ஈடுபடாத, எந்த விதத்திலும் தொடர்பே இல்லாத முஸ்லீம் பெண்கள் தங்கள் வீடுகளிலே தூங்கிக்கொண்டிருக்கும்போது நள்ளிரவிலே, கதவுகள் தட்டப்பட்டு, கதவுகள் உடைக்கப்பட்டு அங்குள்ள பெண்கள் தாக்கப்பட்டிருக்கிறசர்கள். அப்படி தாக்கப்பட்ட பெண்கள் கண்ணீரும் கம்பலையுமாக செய்த முறையீட்டை நான் டேப்பிலேகூட பதித்து வைத்திருக்கிறேன். வேண்டுமானால் நம்முடைய முன்னவர் அவர்களிடமும், சபாநாயகர் அவர்களிடமும், முதலமைச்சர் அவர்களிடமும் நான் போட்டுக் காட்டத் தயாராக இருக்கிறேன். எதற்காக? நம்முடைய நீதியினுடைய அடிப்படை 100 குற்றவாளிகள் தப்பித்தால் கூட ஒரு அப்பாவி தண்டிக்கப்படக் கூடாது என்பதுதான். அந்த அடிப்படையில் தான் நம்முடைய நீதியினுடைய ஒரு முன்னோட்ட கருத்து வகுக்கப்பட்டிருக்கிறது. ஏதோ ஒரு குற்றவாளியைப் பிடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு குற்றம் செய்தவன் எவனாக இருந்தாலும் அவனை பிடிப்பது பற்றியோ, நீதி மன்றத்திலே நிறுத்துவது பற்றியோ தக்க தண்டனை வாங்கிக்கொடுப்பது

பற்றியோ எங்களுக்கு ஆட்சேபம் இல்லை. அதற்கு நாங்கள் குறுக்கே நிற்கவில்லை. நள்ளிரவிலே படுத்து தூங்கக்கூடிய பெண்கள் வீட்டிலே, ஆண்கள் இல்லாத நேரத்தில், கதவைத் தட்டி எவ்வளவு வசை மொழிகளில், எவ்வளவு கேவலமான மொழிகளில் இந்த காவலர்கள் பேசியிருக்கிறார்கள் என்பதை நான் எடுத்துக் கூறவே கூச்சப்படுகிறேன். இப்படிப்பட்ட நிலை ஏன் நடந்திருக்கிறது? இராமநாதபுரத்தில் மாத்திரம் ஏன் நடந்திருக்கிறது என்று பார்க்கும்போது என்னால் இதற்கான காரணத்தை அறிந்துகொள்வதற்கு இன்னும் முடியாமல் இருக்கிறது. அதை அரசுத் துறையினர் ஆராய்ந்து தக்க ஒரு நிம்மதியை அங்கே ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல பேர்கள் ஊரைவிட்டே ஓடியிருக்கிறார்கள். பல பேர்கள் இன்னும் எந்த நேரத்திலே யார் வந்து கதவைத் தட்டுவார்கள் என்ற ஒரு நிம்மதியற்ற வாழ்க்கையை அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதிலே ஒரு குறிப்பிடத்தக்க ஒரு நிலை என்னவென்றால் ஒரு இளைஞன் தலையிலே அடிக்கப்பட்டு அவன் குற்றுயிரும் குலையுயிருமாக கிடத்தப்பட்டு ஏறத்தாழ இறந்துவிடுவான் என்ற நிலை இருந்தபோது அவனிடத்தில் மரண வாக்குமூலம் கூட வாங்கியிருக்கிறார்கள். ஆனால் அப்படி மரண வாக்குமூலம் வாங்கப்பட்ட அந்த இளைஞன் மீது இப்போது கொலைக் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு போடப்பட்டிருக்கிறது என்றால் அதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. நான் நிச்சயமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இராமநாதபுரத்தில் நடந்தது ஒரு வகுப்புக் கலவரமே அல்ல. ஏதோ அரசியல் காழ்ப்புணர்ச்சியில் தங்களை எதிர்த்து போட்டியிடுவதா என்ற ஆணவப்போக்கில் எதிர்த்து போட்டியிட்ட அல்லது அதற்கு ஆதரவு தந்த வர்க்காளர்களுக்கெல்லாம் ஒரு பாடம் படித்து கொடுக்க வேண்டும் என்ற நிலையிலே சில பேர் விளைவித்த அராஜகம்தான் இதற்கு காரணம் என்று அறியும் போது நான் மிகவும் வேதனைப்படுகிறேன். இந்தப் போக்கு தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இந்தப் போக்கிற்கு நம்முடைய காவலர் துணை நின்று இருக்கிறார்கள் என்று அறியும்போது என்னுடைய வேதனை பன்மடங்காகிறது. அதிலே குறிப்பாக





அந்த வட்டாரத்தில் உள்ள காவலர்கள் யார், குற்றவாளிகள் யார்? குற்றம் அற்றவர்கள் என்று தெரிந்தவர்கள் அந்த நிலையை சமாளித்துக் கொண்டிருக்கும்போது புதியதாக ஒரு போலீஸ் அதிகாரி அங்கே வந்து சேர்க்கப்படுகிறார். அந்த அதிகாரி நடந்து கொண்ட முறைகளை பார்த்தால் தமிழ்நாட்டிலேதான் நாம் வாழ்கின்றோமா என்ற சந்தேகம் எனக்கு ஏற்படுகிறது. அவர்கள் அடிக்கடி தோட்டாக்கள் நிரப்பப்பட்ட துப்பாக்கியை எடுத்துக்காட்டி, தோட்டாக்களை எல்லாம் எடுத்துக் காட்டி இதை எல்லாம் காலிசெய்துவிட்டுத்தான் இந்த இடத்தை விட்டுப் போகப் போகிறேன் என்று சிலபேருடைய பெயரைச் சொல்லி அவர்களை எல்லாம் சுட்டுத் தீர்த்துவிட்டுத்தான் போகப் போகிறேன் என்று பயம் காட்டி இருக்கிறார் என்று சொன்னால் இது முறைதானா? இதெல்லாம் நம்முடைய தமிழகத்தில் கடைப்பிடிக்கப்பட்ட வழிதானா என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

இதிலே ஒரு வருந்தத்தக்க நிலைமையைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய அன்புக்கும் மதிப்புக்கும் உரிய சகோதரர் திரு இராமசாமி அவர்களை நான் பல்லாண்டுக் காலமாக அறிவேன். அவர் என்னுடைய அன்புக்குரியவர். இன்றைக்கும் அவர் எனது அன்புக்குரியவர்தான். அவரும் என்னிடத்திலே பற்று வைத்திருப்பவர். நானும் அவர் மீது பற்று வைத்திருக்கிறேன். அவருடைய மூத்த சகோதரர் தேர்தலில் நின்றபோது நானும் என்னுடைய சமுதாயத்தினரும் முழுக்க, முழுக்க அவருக்காகப் பாடுபட்டு வெற்றி தேடித் தந்தவர்கள். அங்கே அந்த மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக அலையும்போது அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கருணை காட்டியிருந்தால் அல்லது பாதுகாப்புக்கு முயற்சி எடுத்துக்கொண்டிருப்பாரேயானால் இந்த அவலம் நடந்திருக்காது என்று சொல்லி கதறி அழுகிறார்கள்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அன்புக்கும், மரியாதைக்கும் உரிய அண்ணன் திரு. சமத் அவர்கள் இராமநாதபுரம் நிகழ்ச்சி பற்றிச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மரியாதைக்குரிய அண்ண

முன்னவர் அவர்கள் பதிலளிக்கும்போது அதற்கும் சேர்த்து பதிலளிப்பார்கள் என்று நான் கருதுகிறேன். ஆகவே அதற்குள் நான் நுழைய விரும்பவில்லை. அன்றையதினம் நான் அகதிகள் முகாம்களைப் பார்வையிடுவதற்காக, மதுரையிலே நடந்த ஒரு கூட்டத்திலே கலந்துவிட்டு இரவு 3 மணிக்கு வீட்டுக்குச் சென்று இருந்தேன். காலையில் எழுந்து என்னுடைய அலுவல்களைப் பார்ப்பதற்கு முன்பு கலவரம் மூண்டுவிட்டதாகச் செய்தி கிடைத்தது. அந்தக் கலவரத்தைத் தூண்டியவர்கள் யார் என்று இதயபூர்வமாக மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. சமத் அவர்களுக்குத் தெரியும். அந்தச் சமுதாய மக்கள் ஒன்றாகத்தான் இருக்கிறார்கள். அந்த மக்கள் என்னுடைய அன்புக்கும், மரியாதைக்கும் உரியவர்கள். அவர்கள் ஒன்றாகத் தான் இருக்கிறார்கள். ஒரு விரும்பத்தகாத நிகழ்ச்சி நடந்திருக்கிறது. கடந்த காலமாகத் தொடர்ந்து ஒரு நபர் அவ்வாறு செய்து கொண்டிருக்கிறார். அவர்தான் தூண்டி விட்டார் என்பது எனக்குக் கிடைத்த தகவலாகும்.

மரியாதைக்குரிய திரு. சிந்தன் அவர்கள் கூட ஒரு அறிக்கை தந்திருக்கிறார்கள். அந்த அறிக்கை தவறானது. யாரோ உண்மைக்குப் புறம்பான தகவலைத் தந்ததன் அடிப்படையில் அவர்கள் அதைத் தந்திருக்கிறார்கள். பேராசிரியர் அவர்களும் அவ்வாறு தந்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் அனைத்து மக்களுடனும் நான் ஒன்றாகத்தான் பழகுகிறேன். ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற உணர்வோடு என்னுடைய கடமையை நான் செய்துகொண்டிருப்பவன். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்ற தர்மத்தின் அடிப்படையில் செயல்பட்டுக் கொண்டிருப்பவன் நான். அந்த அடிப்படையில் சில கடமைகள் இருக்கின்றன. சட்ட மன்ற உறுப்பினராக மட்டும் இருந்திருந்தால் நானே போய் தடுத்து இருக்க முடியும். நான் அமைச்சராக இருப்பதால் நான் போனால் என் பின்னாலே போலீசார் வருவார்கள். பிறகு அமைச்சரே போலீசாரை வைத்து அடித்தார் என்ற குற்றச்சாட்டு கூட வந்துவிடும். ஆகவே தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட





வேண்டும், அவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருப்பவன் நான். இராமநாதபுரத்தில் இப்போது அமைதியான சூழ்நிலை இருக்கிறது. மிக அருமையான அமைதியான சூழ்நிலை இருக்கிறது. எனவே அச்சப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இருக்கக்கூடிய ஆதங்கம் எல்லாம் ஒரு அமைச்சர் அவர்களே இருந்தும் இந்த மக்களுக்குப் பாதுகாப்புத் தருவதில் முன் நிற்கவில்லையே என்பதுதானே தவிர வேறு கருத்தை நான் எதிரொலிக்கவில்லை. அருமைச் சகோதரர் திரு. இராமசாமி அவர்களை இஸ்லாமிய சமுதாயம் ஆதரித்து இருக்கிறது. இப்போதும் கூட நண்பர்களாகத்தான் இருக் கிறார்கள் என்பதை நானும் நன்றாக அறிவேன். அந்த நட்பு நீடிக்கட்டும். அந்த நட்பின் அடிப்படையிலேயாவது அப்பாவி மக்கள் பாதுகாக்கப்படட்டும் என்று தான் நான் கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய மாவட்டச் செயலாளர் கிட்டத்தட்ட 35 ஆண்டுகளாகவே அந்தப் பதவியில் இருப்பவர். ஒரு நியூசன்ஸ் கேஸிலே கூட சம்பந்தப்படாதவர். எஸ்.பி. அழைத்துப் பேசுகிறார், அமைதியை நிலைநாட்ட. 9½ மணி வரையில் பேசி விட்டு வீட்டுக்குப் போகிறார். வீட்டுக் கதவை உடைத்து அவரையும் அடித்து, அங்குள்ள பெண்களையும் அடித்திருக் கிறார்கள். இதற்கு யார் காரணம்? உள்ளூர் போலீசார் எல்லாம் தவறாக நடந்துவிட்டது, எங்களுக்குத் தெரியாமல் நடந்து விட்டது என்று அவர்களே வந்து சமாதானம் சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. இந்த உள்ளூர் போலீஸ் அதிகாரிகளை எல்லாம் மீறி அமைதியை நிலைநாட்டுவதற்கு வெளியே இருந்து அனுப்பப்பட்ட போலீசார் யார்? அவர் இழைத்த அந்தக் கொடுமைகளைச் சொல்லிக் காட்டுவதற்கு நேரம் இல்லை. அது கிட்டத்தட்ட இந்த அவையிலே நாமெல்லாம் பேசப்படக்கூடிய செய்தியாகத்தான் இருக்கிறது. இப்போது அமைதி நிலவுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்கின்றேன். ஆனால் என்ன அமைதி என்றால் கிட்டத்தட்ட

[திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்] [1986 மே 6

ஒரு மயான அமைதிதான் விளங்குகிறது. கிட்டத்தட்ட பொதுமக்கள் எல்லோருமே அந்த ஊரை விட்டே வெளியேறி மதுரையிலும் சென்னையிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். குற்றவாளிகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவே இல்லை. அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்பது குறித்து குறிப்பிட்டுக் காட்டப் பட்டாலும் கூட, அவர்கள் ஒருவர் கூட கைது செய்யப்படாமல் பாதுகாப்பாக இருப்பதோடு, இந்தப் பிரச்னையில் கைது செய்யப்பட்ட அப்பாவி மக்கள் மீது கொலை குற்றம் வரைக்கும் என்னென்ன குற்றங்களை சுமத்த முடியுமோ அப்படி சுமத்தப் பட்டிருக்கிறது என்றால் அதைத்தான் எங்களாலே பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அந்த வேதனையான நிலைமையைப் போக்க தமிழக அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

நான் மாண்புமிகு முன்னவரிடத்திலே கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவென்றால், இந்த அவையிலே இருக்கின்ற எல்லாக் கட்சி எம்.எல்.ஏ.-க்களையும் அனுப்பி அங்கு நடந்ததை விசாரித்து ஒரு நிரந்தரமான சுமூகமான சூழ்நிலையை அங்கே ஏற்படுத்துவதற்கு ஆவன செய்யவேண்டும் என்பதுதான். இப்படிப்பட்ட நிலைமைகள் வேண்டத்தகாத விரும்பத்தகாத நிலைமைகள் ஏற்படக்கூடிய இடங்கள் எவை எவை என்பதை போலீசார்கள் ஏற்கெனவே அறிந்து அங்கே அமைதியை நிலை நாட்டக் கூடிய பணியைச் செய்ய வேண்டிய அதிகாரிகள் மத்தியிலே ஒரு சிறுபான்மை இனத்தை, சமுதாயத்தைச் சார்ந்த ஒரு அதிகாரியும் இருக்கின்ற ஒரு நிலையை நிச்சயமாக ஏற்படுத்துவதற்கு காவல் துறையின் உயர் அதிகாரிகள் முயல வேண்டும். அப்படி இருந்திருந்தால் இப்படிப்பட்ட சில விரும்பத் தகாத விளைவுகளையும் தடுத்திருக்க முடியும் என்று கூறிக் கொள்கிறேன்.

ஏற்கெனவே ஒரு யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. எப்போதும் உள்ளூரிலே இருக்கக்கூடிய, காவல் துறையிலே இருக்கக்கூடிய, அடிமட்டத்திலே இருக்கக்கூடிய சில பேர்கள், அங்குள்ள அரசியல் அடிப்படையில் செயல்படக்கூடிய



1986 மே 6] [திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்]

காரணத்தினால்தான் இப்படிப்பட்ட நிலைமைகள், அதிகமான கொடுமைகள் நடந்து வருகின்றன. ஆகவே அதைத் தடுத்து நிறுத்த எங்காவது அப்படிப்பட்ட கலவரங்கள் நடக்கிறது என்றால், நம்முடைய தமிழக அரசின் சார்பாக (Crack Force) கிராக் ஃபோர்ஸ் எனப்படும் ஒரு படையை, கலவரத்தை அடக்குவதற்காகவே தயாரிக்கப்பட்டு, நடுநிலைப் பேணக்கூடிய நிலையில், அது அங்கே பணிகளைச் செய்ய வேண்டும், அந்த வகையில் அது தயாரிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய அவளூரில் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

அங்கே தக்க தருணத்தில் நம்முடைய காவல் துறை தலைமை அதிகாரிகளும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் தலையிட்டு ஒரு உடன்பாடு கண்டிருக்கிறார்கள். அதற்காக என்னுடைய பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே ஒரு காவல் நிலையத்தை வைக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். தேவதானப்பட்டியிலே நடந்த துப்பாக்கிச் சூட்டிலே ஏதேதோ நடந்து கடைசியில் துரதிருஷ்டவசமாக அதிலே இறந்தவன் ஒரு முஸ்லீம் இளைஞனாக, அதிலும் அந்த சம்பவங்களுக்கு எந்த விதத்திலும் சம்பந்தப்படாதவனாக இருக்கிறான். ஒரு குடும்பத்திற்கே ஊன்று கோலாக இருந்த அந்த இளைஞன் மறைந்துவிட்டிருக்கிறான். அந்த குடும்பத்திற்கு ஏதாவது அரசு நிதி உதவி தந்து வாழ்வளிக்க வேண்டும் என்று கேட்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை, தீயணைப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது ஒருசில உணர்வுகளை சொல்ல வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். காவல் துறையினுடைய சிறப்புகளையும் இங்கே பல உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். காவல் துறை நடுநிலையோடு நியாயமாக செயல்பட வேண்டும் என்பதில் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள்

இன்றைக்கு இதய சுத்தியோடு நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எனக்கு முன்பாக பேசிய சட்ட மன்ற உறுப்பினர் மாண்புமிகு ரகுமான்கான் அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர் பேசும்போது கூட பல நடந்த நிகழ்ச்சிகளைச் சொன்னார்களே தவிர, சமுதாயத்திலே அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சிகளைச் சொன்னாரே தவிர, இந்த ஆட்சி, இதனுடைய முதல்வர், அல்லது அமைச்சர் பெருமக்கள், அந்தத் துறையிலே குறுக்கீடு செய்து, அங்கே பல்வேறு தலையீடு செய்து, எந்த விதமான முறைகேடுகளும் செய்யவில்லை என்பதை அவர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். சான்றிதழ்கள் வழங்கி இருக்கிறார்கள். அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களுக்கு பிறகு வருகிறேன்.

இன்றைக்குத் தமிழகத்தினுடைய காவல் துறையானது மிகச் சிறப்பான முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதை எங்களைப் போன்றவர்கள் முழுவதுமாக அறிந்துக் கொண்டிருக் கிறோம். காவல் துறையினர் சென்னையிலே சமீபத்திலே மிகப் பெரிய புயல் வெள்ளம் வந்தபோதும் சரி, எல்லா மக்களையும் பாதுகாக்கின்ற பணிகளிலேயும் சரி, அல்லது மிகப் பெரிய ஊர்வலங்கள், கூட்டங்கள் போன்றவையோ அல்லது மிகப் பெரிய வரவேற்புகளாகவோ எப்படி இருந்தாலும் சரி, எதுவானாலும் சரி, மக்களை கட்டுப்படுத்தி, முறைப்படுத்தி ஒழுங்குப்படுத்துவதில், தமிழகக் காவல் துறைக்கு இணையாக இந்திய துணை கண்டத்திலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத வகையிலே, இன்றைக்கு பணியாற்றிக் கொண்டிருக் கிறார்கள். புத்திக் கூர்மையாகட்டும், அறிவு ஆற்றல் திறமை யிலாகட்டும், எல்லாவிதமான வழக்குகளையும் விசாரித்து கண்டு பிடிப்பதில் ஆகட்டும் தமிழக காவல் துறை எவ்வளவு திறமையானது என்பது பற்றி, காவல்துறையின் நண்பர்களைப் பற்றி, இங்குள்ள நமது நண்பர்கள் எல்லாம் எடுத்துக் காட்டிச் சொன்னார்கள். நான் ஒன்றை மாத்திரம் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். காவல்துறை இன்றைக்கு முழுமையாக எல்லாவிதமான பணிகளையும் நியாயத்தோடு, நேர்மையோடு





செய்து கொண்டிருக்கிறபோது எங்கேயாவது ஒருசில தவறுகள் ஏற்படலாம். அந்தத் தவறுகளை முழுமையான குற்றச்சாட்டு களாகச் சொல்லி இந்த ஆட்சியையும், காவல்துறையையும் குறைவாக மதிப்பிடுவது என்பது சரியான ஒன்றல்ல. எனக்கு முன்னாலே பேசிய ரகுமான்கான் அவர்கள் பல நிகழ்ச்சிகளை இன்றைக்குச் சொன்னார்கள். நான் கேட்கிறேன், நீங்கள் ஆட்சியில் இருந்த போது என்ன புத்தர் கொள்கைகளையா போதனை செய்து கொண்டிருந்தீர்கள்? அன்றைக்கு என்ன நாட்டில் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, வங்கிக் கொள்ளை இவையெல்லாம் நடைபெறவில்லையா? அவைகள் ஏதோ இந்த ஆட்சியில் தான் நடைபெறுவதைப் போல சுட்டிக் காட்டினார்கள். சமுதாய அமைப்பில் கொலை, கொள்ளை போன்றவை நடைபெறுவது சாதாரண நிகழ்ச்சிகள் ஆகும். அவைகளை கட்டுப்படுத்தி உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பது தான் ஒரு அரசின் கடமை, காவல் துறையின் கடமை. அந்தக் கடமையில் எங்கே தவறியிருக்கிறார்கள்? சுட்டிக்காட் டுங்கள். அந்தக் கடமைகளை செய்ய தவறியிருந்தால் நீங்கள் சொல்வது சரியானதாக இருக்கும்.

சொல்கிறீர்களே பொய் வழக்கு என்று உங்களுக்கே அடுக்குமா? நான் கேட்கிறேன். நீங்கள் உங்கள் ஆட்சியில் முதல் வராக டாக்டர் கலைஞர் கருணாநிதி இருந்தபோது என்மீதே ஒரு வழக்கைப் போட்டார்கள். என்னவென்று? அவரை நான் பிளேடு என்ற பயங்கர ஆயுதத்தைக் கொண்டு கொலை செய்ய முயற்சித்ததாக ஒரு வழக்கு எதற்காக, அவர் மீது அரசியல் காரணங்களுக்காக. அவர் ஒரு எலுமிச்சை பழம் கொடுத்து எங்களையெல்லாம் பைத்தியம் என்று சொன்னார். நான் நேரடியாக அவரிடம் சைதாபேட்டைக்கு அவர் வந்திருந்தபோது மேடையில் ஏறி, நாங்கள் பைத்தியக்காரர்கள் அல்ல. புரட்சித் தலைவரை இயக்கத்தை விட்டு நீக்கிய தாங்களும் மற்றவர்களும் தான் என்று சொல்லி மாலை அணிவித்தேன். அதற்காக என் மீது கொலை முயற்சி வழக்கு; அதற்காக திட்டமிட்டு என்னை அடித்து கொல்கிற வகையில் தூண்டுறுத்திய முயற்சிகள். இவைகள் எல்லாம் இன்றைக்கு வரலாறுகளாக இருக்கும்

உண்மை நிகழ்ச்சிகள். அதற்கு அத்தாட்சி நான்தான். அது மட்டுமா? நீதிமன்றத்தில் ஒன்பது மாதங்கள் சிறைத் தண்டனை வழங்க முயற்சித்தார்கள். அந்த முயற்சி என்னவானது? உயர் நீதிமன்றத்தில் வழக்கைத் தள்ளுபடி செய்து, பொய் வழக்கு போட்டிருக்கிறீர்கள், இதுபோன்ற காவல் துறையைப் பயன் படுத்தியிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது என்று நீதிமன்றத்தில் சொல்லவில்லையா? இப்படி பொய் வழக்குகளை, உண்மைக்கு மாறான வழக்குகளைபோட்டு அதிகாரத்தில், ஆட்சியில் இருந்த போது எதிர்க்கட்சியை தாக்குகிற முயற்சியில் ஈடுபட்ட நீங்கள் இன்றைக்கு இந்த ஆட்சியைப் பார்த்து, புரட்சித் தலைவர் ஆட்சியைப் பார்த்து, பொய் வழக்கு என்று சொல்கிறீர்கள். அதிகார துஷ்பிரயோகம் என்று சொல்கிறீர்கள். நியாயம் தானா? இன்றைக்கு புரட்சித் தலைவர் ஆட்சிப் பொறுப்பில் முதல்வராக இருக்கிறார்கள். இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர் தவறு செய்தாலும், நாடாளுமன்ற உறுப்பினர் தவறு செய்தாலும் கைது செய்யுங்கள் என்று சொல்கிறார். இதுபோன்று உங்கள் ஆட்சியில் நடைபெற்றது உண்டா? ஒரு சட்டமன்ற உறுப்பினர் கொலை வழக்கில் மாட்டிக் கொண்டால், ஒரு மாவட்டச் செயலாளர் கொலை வழக்கில் மாட்டிக் கொண்டால், அவரை எம்.ஜி.ஆர். விருந்து எடுங்கள் என்று சொல்லி, கண்ணியத்திற்குரிய காவல்துறைத் தலைவர் அருளுக்குத் தொலைபேசி, நடந்தது உண்மையா, இல்லையா? இப்படி அதிகார துஷ்பிரயோகம் செய்தவர்கள் ஆட்சியில் இருந்தபோது இறந்தது என் மகன் என்று சொல்ல வைக்காமல், பெற்ற மகனையே தன் மகன் இல்லையென்று சொல்ல வைத்தது அதிகார துஷ்பிரயோகம் இல்லையா?

அன்பிற்குரிய மாண்புமிகு நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் இன்றைக்கு இங்கே இருக்கிறார். திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தார் என்பதற்காக, அவரை, கண்ணியத்திற்குரிய நாடாளுமன்ற உறுப்பினராக பணியாற்றிக் கொண்டிருந்த ஒருவரை, விமான நிலையத்தில் தாக்கவில்லையா? அன்றைய ஆட்சிக் காலத்தில் தாக்கியவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?





அதைப்போல இதோ இங்கே அமர்ந்திருக்கிறாரே திரு. வி. பி. சிந்தன் அவர்கள் அன்றைக்கு பட்ட பகலில் நடு ரோட்டில் தாக்கப்பட்டாரே, என்ன நடவடிக்கை எடுத்தீர்கள், தாக்கியவர்கள் மீது? அப்படிப்பட்ட ஆட்சியையும், சட்டம் ஒழுங்கையும் நடத்தியவர்கள் தான் இன்றைக்கு புரட்சித் தலைவரை பார்த்து, அவருடைய ஆட்சியைப் பார்த்து, நேர்மையாக செம்மையாக நடந்து கொண்டிருக்கிற இந்த ஆட்சியைப் பார்த்து, குறை சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். ஏதோ சில தவறுகள் நடந்து இருக்கின்றன என்பதற்காக அருமை சகோதரர் ரகுமான் கான் சொல்கிறார்கள், காவல் துறை தேவைதானா? அதற்கு ஒரு அரசு தேவை தானா என்று கேட்கிறார்கள். குறை எங்கே இல்லை? உங்களிடத்தில் இல்லையா? நம்மிடத்தில் இல்லையா? அரசியல்வாதிகளிடம் இல்லையா? அதற்காக அரசியலே வேண்டாம் என்று சொல்லிவிடலாமா? அவர் பேசுகிறபோது சொன்னார்கள். இதற்காக ஒரு காவல் துறை தேவையா என்று. குறைகள் ஏற்படுவது இயற்கை. குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுங்கள். சுட்டிக்காட்டிய பிறகு நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் முறையாகச் சொல்லுங்கள். அதை விடுத்து வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்று எதையாவது சொல்ல வேண்டும், பேச வேண்டும் என்பதற்காக சொல்ல வேண்டாம். இங்கே அவர் பேசியதில் இந்த ஆட்சியும், காவல் துறையும் எதையும் மீறியிருக்கிற குற்றச்சாட்டுக்களை சொல்ல முடிந்ததா? சம்பவங்களைச் சொன்னார்கள். நடந்த நிகழ்ச்சிகளைச் சொன்னார்கள். ஆனால் ஒருவிதமான குற்றச்சாட்டையும் சொல்லவில்லை.

(பிற்பகல் 12-40)

இந்தக் காவல் துறை அதிகாரிகளாகட்டும், இந்தக் காவல் துறையை கையில் வைத்திருக்கிற முதலமைச்சர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவர் ஆகட்டும் அல்லது அமைச்சர் பெருமக்கள் ஆகட்டும், இப்படிச் செய்தார்கள், அப்படிச் செய்தார்கள், தவறு செய்தார்கள், திட்டமிட்டு பழி வாங்கினார்கள், திட்டமிட்டு அதை மறைத்து வைத்தார்கள் என்ற குற்றச்சாட்டை அவர்களால் சொல்ல முடியவில்லை. காரணம் புரட்சித் தலைவருடைய ஆட்சி நியாயமாகவும், நேர்மையாகவும்,

[திரு. சைதை சா. துரைசாமி] [1986 மே 6

நடந்து கொண்டு இருப்பதற்கு இதுதான் அத்தாட்சி எனச் சொல்லி, அப்படிப்பட்ட சிறப்பான காரியங்களைச் செய்து கொண்டு இருக்கிற காவல் துறைக்கு சென்னை மாநகரத்தில் ஆகட்டும், தமிழக முழுமையும் ஆகட்டும், இன்றைக்கு காவல் துறையாவது சிறப்பான பணிகளைச் செய்து கொண்டு இருக்கிறது.

குறிப்பாக எனது தொகுதியிலே வெள்ளம் வந்தபோது, எனது தொகுதி மக்களை எல்லாம் அற்புதமாக பாதுகாத்து, அவர்களை எல்லாம் பாதுகாப்பான இடங்களுக்கு அழைத்துச் சென்று பணியாற்றிய அந்த சேவையை எங்களால் இன்னும் மறக்க முடியவில்லை. அப்படிப்பட்ட அற்புதமான பணிகளைச் செய்து கொண்டு இருக்கிற காவல்துறைக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த சட்டமன்றத் தொடரிலே நான் சொன்னேன். இந்த மசாஜ் நிலையங்கள் எல்லாம் சென்னையிலே சீரழித்து கொண்டு இருக்கின்றன என்று சொன்னேன். அதைக் கட்டுப்படுத்தி இருக்கிறார்கள், நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்பார்கள், அதைப்போல, இன்றைக்கு குறைந்த எண்ணிக்கையை வைத்து, சென்னை மாநகரத்தில் மாத்திரம் அல்ல, தமிழகம் முழுமைக்கும் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதிலே நிகரற்ற செயலாகப் பணியாற்றிக் கொண்டு இருக்கிற காவல் துறைக்கு ஒருசில சலுகைகளை புரட்சித் தலைவர் தான் ஆட்சியிலே இருக்கும்போது—எல்லோருக்கும் வாரி வாரி வழங்குகின்ற மனப் பக்குவத்தைப் பெற்றவர்கள், தாராளமாக ஏழை எளியவர்களுக்கும் சமுதாயத்திலே நலிந்த பிரிவினர் எனச் சொல்லிக் கொள்கின்ற அத்தனை பேர்களுக்கும் அது அரசு ஊழியர்களாகட்டும், மற்றவர்களாகட்டும், அத்தனை பேர்களுக்கும் வாரி வழங்குகின்ற புரட்சித் தலைவர் ஆட்சியில்—காவல்துறையைச் சேர்ந்தவர்களுக்கு பல சலுகைகளை வழங்கி இருக்கிறார்கள். அந்த சலுகைகளினுடைய அடிப்படையிலே இன்னும் பல சலுகைகளை வழங்க வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



1986 மே 6] [திரு. சைதை சா. துரைசாமி]

இன்றைக்கு சென்னை மாநகரத்தில் டெலிபோன் எக்சேஞ்ச் இயங்கிக் கொண்டு இருக்கிறது. அது ஏதோ ஹைதர் அலி காலத்திலே அமைக்கப்பட்ட டெலிபோன் எக்சேஞ்சாக இருக்கிறது. அதை நவீனப்படுத்த வேண்டும். காவல் நிலையத்தோடு உடனடியாக தொடர்பு கொள்ள முடியவில்லை. (குறுக்கிடு). எனவே ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் நல்ல தொலைபேசி தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். ஏன் என்றால், இந்த 82081 என்ற நம்பரைப் போடும்போது, அந்த நம்பர் உடனடியாகக் கிடைப்பதில்லை. எல்லாக் காவல் நிலையத்தோடும் தொடர்பு கொள்ள முடியவில்லை. ஆகவே டெலிபோன் வசதிகளை நேரடியாக ஏற்படுத்தித் தரவேண்டும், வசதி செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அவசரப் போலீஸ் 100-ஐ விரிவுபடுத்த வேண்டும். அது மாத்திரம் அல்ல. வெளிநாடுகளில் இருந்து வருகிற போதை மாத்திரைகளை விற்பனை செய்கிறார்கள். அதைக் கண்டறிந்து தடை செய்ய வேண்டும். அதுமாத்திரம் அல்ல. பால் உணர்வைத் தூண்டுகின்ற வகையில் சில ஆபாச போஸ்டர்கள் இன்றைக்கு சென்னை மாநகரத்திலே ஒட்டுகிறார்கள். அதற்காக தனிச் சட்டம் கொண்டு வருவதாக இந்த அவையிலே கூட அறிவித்திருக்கிறார்கள். அது வருகின்ற வரையிலும் காத்திராமல் இடைக்காலத்தில் அப்படிப்பட்ட சுவரொட்டிகள் ஒட்டாமல் பாதுகாக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாத்திரம் அல்ல. சென்னையில் அடிக்கடி ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் எனச் சொல்லி, பொதுமக்களுடைய அன்றாடப் பணிகளைச் செய்யவிடாமல், அவர்கள் செல்லுகின்ற முக்கியமான சாலைகளில் போக்குவரத்து நெரிசலான இடங்களில் ஊர்வலங்கள், மறியல்கள் போன்றவற்றை தடை செய்யவேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும் அனுமதி வழங்கக்கூடாது என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுமாத்திரம் அல்ல. இன்றைக்கு பல சமூக விரோதிகள் பல இடங்களில் கடற்கரை வாயிலாக விலை உயர்ந்த பொருட்களை கடத்துகிறார்கள். அதற்காக சிறந்த மோட்டார் படகு

[திரு. சைதை சா. துரைசாமி] [1986 மே 6

களை காவல்துறைக்கு வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பெண் போலீசுக்கு காக்கி உடை கொடுத்திருக் கிறார்கள். இதற்குப் பதிலாக சேலையை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் தோள்பட்டையில், அவர்கள் பதவிக்கான நட்சத்திரம் போன்றவற்றையும் அவர்களுக்கு அளித்து, அவர்கள் அணிகின்ற உடை ஜாக்கெட்டும் சேலையுமாக இருந்தால் இன்னும் கொஞ்சம் சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓய்வு பெற்ற போலீஸ்காரர்கள் இந்தத் துறையிலே பல சலுகைகளைப் பெற்றிருந்தாலும், அவர்கள் ஓய்வு பெறுகிற நேரத்தில், அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அரசு வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல போலீஸ் என்றவுடன் ஒரு பயம் வேண்டும். அந்த பயம் வருவதற்கு சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு உண்டான காரியங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் ஆர். 6 என் கின்ற காவல் நிலையம் வாடகைக் கட்டிடத்திலே இயங்கிக் கொண்டு வருகிறது. அந்தக் கட்டிடததைச் சொந்தமாக்க வேண்டுமென்று ஏற்கனவே இடம் கொடுத்தோம. அந்த இடத்தில் இன்னும் கட்டிடம் துவக்கப்படவில்லை. எனவே அந்தக் கட்டி டத்தைக் கட்ட வேண்டுமென்றும் அதேபோல் காவல்துறையைச் சார்ந்தவர்களுக்கு இன்றைக்கு டாக்டர் புரட்சித் தலைவர் காலத்தில் தலைமைக் காவலர்களுக்கு மாதம் 25 ரூபாய் உயர்த்தியும் மற்றும் முதுநிலைக் காவலர்களுக்கு மாதம் 20 ரூபாய் உயர்த்தியும் மற்றும் முதலமைச்சர் பதக்கம், அண்ணா பதக்கம் ஆகியவைகளை வழங்கி தமிழக காவல் துறையின் பணியினை ஊக்குவிக்கின்ற பணியினை செய்துகொண்டு இருக்கிறார்கள்.

தமிழகக் காவல் துறையினர் 12 நாட்கள் தற்செயல் விடுப்பை அனுபவிக்க இயலாத நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் அனு பவிக்காத நாட்களுக்கு அதிகமான ஈட்டுப்படி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் காவலர்களுக்கு தற்போது வழங்கப் படும் சலவைப்படியையும் உயர்த்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பெற்றது).



1986 மே 6]

* திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியம், தீ அணைப்புத் துறை மானியம் இவைகள் மீது ஜனதாக் கட்சியின் சார்பாகப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எனது உரையினைத் துவக்குகிறேன்.

மிகப் பெரிய காரியத்தைச் செய்துகொண்டிருப்பது காவல் துறை, சட்டம் ஒழுங்கு பாதுகாத்தல், திருட்டுக்களைக் கண்டு பிடிப்பது, போக்குவரத்தை சரி செய்வது; திருவிழாக் காலங்களில் ஏற்படும் நெரிசலை சமாளிப்பது போன்ற பல்வேறு பணிகளை மிக நல்ல முறையிலே இந்தக் காவல் துறையானது பணியாற்றிக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய சாதனையைப் பற்றி இந்தக் குறிப்பிலே மிக விவரமாக விளக்கப்பட்டிருக்கிறது. இன்னின்ன வழக்குகளிலே இந்தக் காவல் துறையினர் வெற்றி பெற்றிருக்கி றார்கள் என்றும், இன்னின்ன வழக்குகளில் திருட்டுப் பொருட் களைத் திரும்பக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள் என்றும் அதிலே விளக்கப்பட்டிருக்கிறது.

நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்தக் காவல்துறையினர் போட்ட எத்தனை வழக்குகளிலே நீதி மன்றத்திலே விசாரணை செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் ஏன் கொள்கைக் குறிப்பிலே போடவில்லை என்பதுதான். பல வழக்குகளில் பொய்யான சாட்சியங்களைத் தயார் செய்து அவர்களை வழக்கு மன்றங்களுக்குக் கொண்டு சென்று, அந்த வழக்குகளின் பேரில் நீதி மன்றத்தில் நீதிபதியால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு காவல்துறையினர் மீது கடுமையான குற்றச் சாட்டுகளைச் சொல்லி தள்ளுபடி செய்யப்பட்டதெல்லாம் இந்தக் குறிப்பிலே சொல்லவில்லை என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் இந்த வெட்டுத் தீர்மானங்களைப் பார்த்தால், விசா ரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட கைதிகள் அடித்து கொல்லப் படுகிறார்கள், காவல் நிலையம், புறக்காவல் நிலையம் வேண்டும், காவலர்களை அதிகப்படுத்த வேண்டும், அதிகமான தீ அணைப்பு நிலையங்கள் வேண்டும் என்றெல்லாம் கோரிக்கை விடப்பட்டிருக்

[திரு. எ. எஸ். வ. ஆறுமுகம்] [1986 மே 6

கின்றன. இந்த வெட்டுத் தீர்மானங்களில் உள்ளவைகளை முறையாக இந்த அரசு சரிபார்த்து எங்கெங்கே பிரச்சனைகள் இருக்கின்றனவோ அவைகளை சரி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல் வழக்கு தொடுப்பு வகையில், 665 வழக்குகளை பதிவு செய்ததிலே 22 வழக்குகளில்தான் தண்டனை வழங்கப்பட்டிருக்கின்றது என்று எழுதி இருக்கிறது. அப்படியென்றால் வழக்கு போட்ட முறை சரி இல்லையா? 665 வழக்குகளில் 22 வழக்குகளில்தான் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் எந்த முறையில் வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

அதைப்போல் ஜாதிக் கலவரம், மதக் கலவரம் போன்றவை ஏற்படுகின்ற இடங்களிலே பாதிக்கப்படுபவர்களுக்கு எந்தவித நிவாரணமும் அரசு கொடுப்பதில்லை. இராமநாதபுரம் மாவட்டத்தில் நடந்திருக்கிறது. இன்னும் பல இடங்களிலே நடைபெற்றிருக்கின்றன. பல கடைகள் சூறையாடப்பட்டு, லட்சாதிபதிகளாக இருந்தவர்களெல்லாம் மறுநாள் பிச்சாதிபதிகளாக ஆகி இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் எந்தவிதமான நிவாரணமும் இந்த அரசு வழங்கவில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு அரசு நிவாரணம் அளிக்க வேண்டும், ஏனென்றால் மதக்கலவரங்கள் ஏற்படுகின்றபோது ஏற்படும் இழப்பீடுகளுக்கு அரசுதான் பொறுப்பேற்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல், காவல்துறையில், பாதிக்கப்பட்டவர்கள் புகார் செய்யப் போகும்போது அவர்களையே கைது செய்கின்ற நிலை ஏற்படுகிறது. ஏனென்று கேட்டால் எற்கனவே அவரை அடித்தவரோ, துன்புறுத்தியவரோ முதலிலே சென்று புகார் கொடுத்து விடுகிற காரணத்தால், இரண்டாவதாக புகார் செய்ய செல்பவரை—உண்மையானவரை குற்றவாளி என்று நினைத்து கைது செய்து விடுகிறார்கள். ஆதலால் இந்த மாதிரி சந்தர்ப்பம் வரும்போது, காவல்துறையினர் இரண்டு பேரையும் அழைத்து வந்து விசாரித்து யார் உண்மையான குற்றவாளியோ அவர்மேல் கேஸ் போடவேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1986 மே 6] [திரு. எ. எஸ். வ. ஆறுமுகம்]

அதைப்போல தென்காசி தாலுக்காவில் உள்ள பாலூர் சத்திரத்திலே சின்னசாமி என்பவரை விசாரிக்க அழைத்துச் சென்று இருக்கிறார்கள். அவர் அங்கே தூக்கு போட்டு தற்கொலை செய்துகொண்டதாக ரெக்கார்ட் செய்யப்பட்டிருக்கிறது. 5 அடி 8 அங்குலம் உள்ள ஒரு மனிதர் 4 அடி உயர கொண்டியில் தூக்கு போட்டுக்கொண்டதாக விசாரணையிலே சொல்லப்பட்டது. இதையெல்லாம் சரிபார்த்து இந்தக் காவல்துறையினர் மிக நல்ல முறையிலே பணியாற்ற உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

அதேபோல் இராமநாதபுரத்திலே எஸ். கே. கணேசன் என்ற வக்கீல் ஒரு புகார் மனு கொடுத்திருக்கிறார்கள். 30—4—1985 அன்று இராமநாதபுரம் தேவிப்பட்டணம் அருகில் பத்தனேந்தல் கிராமத்தில் பஞ்சவர்ணம் என்ற பெண் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு இருக்கிறார். அந்தக் குற்றவாளியை ராமய்யா என்ற ஆய்வாளர் உடனடியாக கைது செய்து இருக்கிறார்கள். ஆனால் செல்வாக்கு காரணமாக அவனை விட்டுவிட்டு பிறகு ஒரு சாதாரண நபரைப் பிடித்து அவன் மூலமாக வழக்கு ஜோடிக்கப்பட்டு இந்த கொலை செய்யப்பட்ட பெண்ணை அவருடைய கணவன்தான் கொன்றார் என்று கேஸை திருப்பி இருக்கிறார்கள். அந்த கொலை செய்யப்பட்ட பெண்ணின் கணவர் அந்த நேரத்தில் வாழ்வதற்காக வெளிநாடு சென்று இருக்கிறார் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இவைகளை எல்லாம் பார்த்து விசாரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சேலம் மாவட்டம் இளம்பிள்ளையைச் சேர்ந்த கேசவன் என்பவர் தன்னுடைய மனைவியை போலீஸ்காரர் கடத்திச் சென்று விட்டார் என்றும் ஆனால் இன்றுவரை அதை கேஸ் ஆக எடுத்துக்கொள்ள மாட்டேன் என்று சொல்லி அவர்களும் மனுவை கொடுத்து இருக்கிறார்கள். அவர்கள் கவர்னரை நேரில் பார்த்து மனு கொடுத்து இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். கேஸ் எடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அதையும் இந்த அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்] [1986 மே 6

அதேபோல் விருதுநகரில் சி. கரிகால்ராஜ் என்ற ஒரு கவுன் சிலர், நகராட்சிமன்ற உறுப்பினர் அவர்களுக்கும் அங்கே உள்ள சிவானந்தம் என்ற ஆய்வாளருக்கும் 1 வருடம் 1½ வருடமாக ஒத்துவரவில்லை. சில மாதங்களுக்கு முன்பாக 7-வது மாதத்தில் குண்டர் சட்டத்தில் பிடித்துப் போட்டார், நிரபராதி என்று விடுதலை செய்து விட்டார்கள். இதற்கு எல்லாம் காரணம் அந்த சிவானந்தம்தான் என்று அவர் சொல்லுகிறார். அவர் ஒரு மனுவை அனைத்து துறைக்கும் கொடுத்து இருக்கிறார். இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, ஒரு சாதாரண மனிதனை ஒரு ஆய்வாளர் வேண்டும் என்றே அவர் மீது பல குற் றங்களை திணிக்க முற்படுவது நியாயம்தானா? இந்த சிவானந்தம் என்ற ஆய்வாளர் பற்றி அவர்கள் சொல்லுகிறார்கள், காவல் துறையில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது, ஆனால் இந்த ஆய்வாளர் சிவானந்தம் இங்கே வேண்டாம் என்று சொல்லியிருக் கிறார்கள். அதற்காக சென்ற வாரம் அங்கே ஆண்களும், பெண் களும் உண்ணாவிரதம் இருந்து இருக்கிறார்கள், அவருடைய கொடுமை தாங்காமல். இதை எல்லாம் பார்த்து அவரை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையினர் 3 வருடத்திற்கு மேல் ஒரு இடத்தில் இருக்க முடியாது என்று சொல்லுகிறார்கள், ஆனால் இவர் அதற்கு மேலும் அங்கே இருந்துகொண்டு இருக்கிறார். இந்த 3 வருடம் என்பதை 2 வருடம் ஆக்கினால் நல்லது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அப்படி 2 வருடம் ஆக்கி னால் அரசுக்கு நல்லது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்

இன்னும் ஒன்று இந்த காவல் துறையில் அரசியல் செல்வாக்கு புகுந்து விடுகிறது. காவல் துறையில் சிலரை விசாரிக்கும்போது அவர்கள் சொல்லுகிற காரணம் அரசியல் செல்வாக்கினால்தான் நாங்கள் தவறு செய்வதற்குக் காரணமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே அரசியல் செல்வாக்கு காவல் துறையில் புகாமல் அவர்கள் தன்னிச்சையாக இயங்க அரசு அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1986 மே 6] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

அதேபோல் தீண்டாமை ஒழிப்புப்பற்றி சொல்ல விரும்பு கிறேன். இந்த தீண்டாமை ஒழிப்பு என்பது மிக மிக பயப்படக் கூடிய ஒரு செய்தியாக இருக்கிறது. ஒரு பெரிய தப்பு செய்தால் கூட அதற்கு மேல் அதிகாரிகள் கூப்பிட்டு கேட்க முடியவில்லை. என்னை ஜாதியைச் சொல்லி வைதான் என்று சொன்னாலே அவர் மேல் வழக்கைப் போட்டு விடுகிறார்கள். இதை எல்லாம் இந்த காவல் துறையில் சிலர் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். இதையும் நீக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இதற்கு எல்லாம் காரணம் மது கொடுமைதான். இந்த மது கொடுமையினால் வருகின்ற குற்றங்கள்தான் போலீசாருக்கு பெரிய தலைவலியை கொடுக்கிறது. உதாரணமாக அருப்புக் கோட்டை தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் பிச்சை இறந்தார். அந்த வண்டியை ஓட்டிய டிரைவர் குடித்து இருந்தார் என்பதுதான் அதற்குக் காரணம். அவர் கும்பிட்டு இருக்கிறார், நான் போக மாட்டேன் என்று, அவரிடம் வண்டி சாவியைக் கொடுத்து அவரை அரட்டி கொண்டு போ என்று சொல்லி அனுப்பி அவர் அங்கே கொண்டு போய் மரத்தில் மோதினார், அங்கே செத்து இருக்கிறார்கள். இது நடந்தது இந்த மது தீமை யினால்தான். நேற்று நான் பிச்சை வீட்டுக்குச் சென்று இருந் தேன், அப்போது அங்கிருந்த பெண்கள் ஒப்பாரி வைத்தார்கள். காவலர்களுக்கு பெரிய கேஸ்கள் எல்லாம் இந்த மதுவினால்தான் ஏற்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது).

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியத்தின்மீது எங்கள் கட்சியின் சார்பில் கொடுத்து இருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து எதிர்க்கட்சியின் சார்பில் நிறைவு உரையாக என்னு டைய கருத்தை நான் கூற விரும்புகிறேன்.

ஒரு சோதனையான காலக் கட்டத்தில் என்னை நிறுத்தி இருக்கிறீர்கள்—பசியும் களைப்பும் மிஞ்சி இருக்கும் நேரத்தில்— ஆகவே அருள் கூர்ந்து காலம் கொடுப்பதற்கு கொஞ்சம் தாராள மாக இருக்கவேண்டும் என்று முதலாவதாகக் கேட்டுக்கொள் கிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 மே 6

எல்லையில் நம்மைக் காப்பதற்கு இராணுவம் இருக்கிறது என்று சொன்னால் உள்நாட்டில் நம்முடைய குடும்பங்களைப் பாதுகாப்ப தற்கு காவல் துறை இருக்கிறது என்பதை நாம் நன்கு அறிவோம். ஆனால் எந்தக் கட்சி ஆட்சியிலே இருந்தாலும், எதிர்க் கட்சியி னுடைய கடுமையான விமர்சனங்களுக்கு உட்படுவது காவல் துறையாகத்தான் இருக்க முடியும். இந்தக் காவல் துறையைப் பொறுத்தவரையில், ஒதுக்கீடுகளைப் பார்ப்போமேயானால், 1938-39 ஆம் ஆண்டில் ரூ. 1.30 கோடியாக இருந்த மானிய ஒதுக்கீடு 1945-46-லே ரூ. 2.98 கோடியாக உயர்ந்து, 1962-63-லே ரூ. 6.98 கோடியாகப் பெருகி, இப்படி வளர்ந்து, விரிந்து பெருகி, 1986-87-ல் ரூ. 1,06,23,53,000 ஆகியிருக்கிறது. இதிலேதான் ரூ. 100-ஐ குறைத்துக்கொள்ள வேண்டுமென்ற வெட்டுத் தீர்மானத்தை நாங்கள் கொடுத்திருக்கிறோம். மாண்புமிகு அமைச்சரவர்கள் ரூ. 15 கோடிகூட குறைத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று சொல்வார்கள், ஏனென்றால் அவர் நிதியமைச்சர். எங்களைப் பொறுத்தவரையில் ரூ. 100 குறைத்துக்கொள்ளுங்கள் என்றுதான் வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம், அப்போதுதான் பேச முடியும் என்பதற்காக. எங்களைப் பொறுத்தவரையில் ரூ. 100 கோடி ஒதுக்கி காவல்துறைக்குக் கொடுக்கலாம். உயிரைத் திரணமாக மதித்து, பணி புரிகின்ற அடிப்படைக் காவலர்களுக்கு இன்னும் கொஞ்சம் பணம் கொடுங்கள், சம்பளம் கொடுங்கள், இன்னும் கொஞ்சம் படியாகக் கொடுங்கள், தேவையான மருத்துவ உதவி இவற்றையெல்லாம் கொடுங்கள். அவர்களுடைய குடும்ப நிலையை உயர்த்துவதற்கு இன்னும் கொஞ்சம் கூடுதலாக ஒதுக்கிக் கொடுக்கலாம் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு காவல்துறையினுடைய ஆய்வுரையிலே பல சம்ப வங்கள், பல செய்திகள் குவிந்து கிடக்கின்றன. மதுரையிலே ஐயம்பெருமாள் என்பவர் குற்றவாளியைக் கண்டுபிடிப்பதில் வீரச்செயல் புரிந்து மரணத்தை மேற்கொண்டார். அதேபோன்று கோவை மாவட்டத்தில் ராஜரத்தினம் என்ற காவலர் குற்ற வாளியைப் பிடிக்கும்போது கத்தியால் பல தடவை குத்தப்பட்டு அந்த இடத்திலேயே வீரமரணம் அடைந்தார். தன்னுடைய உயிரையும் பொருட்படுத்தாது, வீரச் சாகசம் செய்தது வெகு



1986 மே 6] [திரு. என். எஸ். வி. சித்தன்]

விளக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது. இதைவிட வீரச் செயல் களைப் புரிந்து சிறப்பாக விளங்க வேண்டுமென்றும், அப்படிப் பட்ட நிகழ்ச்சிகள் தொடர வேண்டுமென்றும் வலியுறுத்த விரும்பு கிறேன். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் உள்ளபடியே நமக்கு பெருமையாகவும், பூரிப்பாகவும் இருக்கிறது.' இது போன்று இன்னும் முன்னுதாரணங்களையும், முன்மாதிரி களையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று விரல் ரேகைப் பதிவுக் கூடம். தமிழ்நாட்டி லுள்ள விரல் ரேகைப் பதிவுக்கூடம்தான இந்தியாவிலே மிகவும் நவீன மயமாக்கப்பட்டதொன்றாகும் என்று கூறப்பட்டிருக்கிறது.

அதேபோன்று இந்தியாவிலேயே இந்தத் துறை ஒன்றுதான் முழு நேர ஈராண்டு தடய அறிவியல், மூதறிவியல் பட்டப்படிப் புக்கான வகுப்புகள், (எம்.எஸ்.ஸி இன் பாரென்சிக் சயன்ஸ்) நடத்தப்படுகின்றன என்று கொள்கைக் குறிப்பில் இருக்கிறது. இத்துறை ஆராய்ச்சிப் பணியிலும் பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. இத்துறையின் இயக்குநர் அவர்கள் மண்டை ஓடுகளை வைத்து அடையாளம் காட்டும் அறிவியலில் தொடர்ந்து ஈடுபாடு கொண்டு, மண்டை ஓட்டு இணைப்புக் கோடுகளை அறிவியல் பூர்வமாக அடையாளம் காட்டும் முறையினைக் கண்டு பிடித்ததை அறிவித்தார் என்றும் கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. இம்மாதிரி ஆராய்ச்சிப் பணிகள் தொடர்ந்து நடைபெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே கொள்கை விளக்கக் குறிப்பில் சில புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1984-85 ஆம் ஆண்டிற்கான புகார் கொடுக்கப்பட்ட விவரங்கள் இருக்கின்றன. அதிலே கண்டு பிடிக்கப்பட்ட எண்ணிக்கைகளும் இருக்கின்றன. 1983 ஆம் ஆண்டு புகார் செய்யப்பட்ட வழக்குகள் மொத்தம் 40,039, இதிலே கண்டு பிடிக்கப்பட்டவை 29,130, இது 65.5 சதவீதம் என்ற சாதனையைச் சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 மே 6

1984 ஆம் ஆண்டிலும் அதே 65.5 சதவிதம். 1985 ஆம்
ஆண்டில் 35,276 புகார்களால் கண்டுபிடிக்கப்பட்டவை 24,622.
ஆக நமமுடைய சாதனை 69.5 என்று போட்டு, நம்முடைய முன்
னேற்றத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் எனக்கு
வேண்டிய விவரம், ஒவ்வொரு ஆண்டும், புகார் செய்யப்பட்ட
வழக்குகள், கண்டு பிடிக்கப்பட்ட வழக்குகள் என்று போட்டிருக்
கிறார்கள். 'கேரி ஓவர்' செய்து வழக்குகளின் எண்ணிக்கையைக்
கொடுத்தால் இன்னும் கொஞ்சம் உதவியாக இருக்கும். இதை
வருங்காலத்திலாவது சொல்ல வேண்டும். இந்த கொள்கை
விளக்கக் குறிப்பில் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

இந்த கொள்கை விளக்கக் குறிப்பின் 8 ஆம் பக்கத்தில், 1985-ம்
ஆண்டு காவல் துணை கண்காணிப்பாளர் நிலை—1 பதவிக்கு
யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்று சொல்லியிருக்கி
றார்கள். அதற்கான காரணம் என்ன என்பதை மாண்புமிகு
அவை முன்னவரவர்கள் பதில் சொல்கின்றபோது விளக்கவேண்டு
மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

அதேபோல் 11 ஆம் பக்கத்தில் குற்றவியல் சிறப்பு நீதி
மன்றத்தில் 1985 ஆம் ஆண்டில் வழக்கு தொடுப்பு வகையில் 665
வழக்குகளை பதிவு செய்ததில் 22 வழக்குகள் தண்டனையில்
முடிவடைந்தன என்ற புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கி
றார்கள். 665 வழக்குகள் பதிவு செய்யப்பட்டதில் 22 வழக்குகள்
தான் தண்டனையில் முடிவு அடைந்தன என்று சொல்லப்பட்
டிருக்கிறது. ஏன் இவ்வளவு குறைவாக இருக்கிறது? அதிக
அளவுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க முடியாமல், வெற்றி
பெற முடியாமல் போன காரணம் என்ன என்பதை மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.



1986 மே 6] [திரு. என். எஸ். வி. சித்தன்]

அதே பக்கத்திலே, நாய்ப் படையைப் பற்றி குறிப்பிட்டு இருக்
கிறீர்கள். அதாவது நாய்ப் படை 1985-லே, 397 வழக்குகளில்
பயன்படுத்தப்பட்டதிலே, 138 வழக்குகளில் அவை பயன் உள்ள
வையாக இருந்தன என்று சொல்கிறார்கள். இந்த நாய்ப்
படையை வைத்து இந்த வழக்குகளில் நாம் வெற்றிகரமாக
நடத்துகிறோம் என்று சொல்லாமல், பயன்படத்தக்க அளவில்
உள்ளது என்று சொன்னால், இந்த ஆண்டு அதை எவ்வளவு
வெற்றிகரமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்று புரிந்து
கொள்ள முடியவில்லை. எனவே அதையும் மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும்.

லஞ்ச ஊழலைப்பற்றிச் சொன்னால், அங்கிங்கெனாதவாறு
பரஞ்சோதியாக, எல்லா இடத்திலும் லஞ்ச ஊழல் காவல் துறை
யிலே நிறைந்து இருக்கிறது. முழுமையாக எல்லோரையும் குறை
சொல்மாட்டேன். சில இடங்களில் அது அதிகமாக தலைதூக்கி
நிற்கிறது. இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இரு
தரப்பாரிடமும் லஞ்சம் வாங்குகிற தனித் தன்மை இந்தத்
துறையில் அதிகமாக இருக்கிறது. தயவுசெய்து யாரும்
கோபித்துக்கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன். லஞ்ச
ஒழிப்புத் துறை என்று ஒரு துறை இருக்கிறது. என்ன காரணத்
தினாலோ, அண்மைக் காலத்திலே லஞ்ச ஒழிப்புத் துறையின்
முனைப்பான நடவடிக்கைகளை எங்களாலே செய்தித் தாள்கள்
மூலமாகவோ அல்லது வேறு பல வகையிலோ புரிந்துகொள்ள
முடியவில்லை.

இந்த லஞ்ச ஒழிப்புத் துறை ஏன் காவல் துறையின் பக்கமாக
தன்னுடைய கவனத்தைத் திருப்பமாட்டேன் என்கிறது? அந்தப்
பக்கத்திலே கொஞ்சம் முனைப்பாக இருக்குமானால், இன்னும்
கொஞ்சம் நல்ல முறையில் அந்தத் துறை செயல்படுவதற்குத்
துணையாக இருக்கும் என்று கருதுகிறேன். சில நாட்களுக்கு
முன் செய்தி ஒன்றைப் பார்த்தேன், தினத்தந்தி பத்திரிகையில்.
அதாவது, பத்திரிகை நிருபர்கள் சென்னை நகர கமிஷனர்
தேவாரம் அவர்களைப் பேட்டி காண்கிறார்கள். அப்போது
அவர்கள் சொல்கிறார்கள்: சென்னையிலே எக்மோர் ரயில் நிலை
யத்திற்கு முன்பாக ஆம்னி பஸ்கள் என்ற பெயரிலே பல

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 மே 6

பேருந்துகள் நிறுத்தப்பட்டு அதன் மூலமாக போக்குவரத்திற்குத் தடையாக, குறிப்பாக எக்மோர் ரயில் நிலையத்திற்குச் செல்கிற பயணிகளுக்குத் தடையாக இருக்கிறது; அதன் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டார்கள்.

போலீஸ் கமிஷனர் தேவாரம் சொல்கிறார்—ஆம். அதுமாதிரி யான புகார்கள் எங்களுக்கு வந்திருக்கின்றன, அவை மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்ற ஒரு செய்தியைச் சொல்லியதைப் பார்த்து நான் கொஞ்சம் ஆச்சரியப்பட்டேன். நம்முடைய கமிஷனர் அலுவலகம் எந்தத் தெருவிலே இருக்கிறது? எழும்பூர் ரயில் நிலையம் எந்தத் தெருவில் இருக்கிறது? பக்கத்திலே இருக்கிற ஒரு தெருவுக்குக்கூட புகார்கள் வந்து அவைமீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றால் என்ன வேடிக்கையாக இருக்கிறது?

சென்னையில், தலைமையிடத்திலேயே இந்தப் பாடு என்றால் எங்கோ இருக்கிற பல நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருக்கிறவர்களுடைய நிலை என்ன என்று சொல்ல முடியும்? புகார்கள் வந்த பிறகுதான் தெரிகிறதா? நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சொல்ல வேண்டுமா? அது ஒரு பெரிய தொந்தரவாக, மெனேஸாக இருக்கிறது. கண்டிப்பாக, போக்குவரத்தைச் சீர் செய்யும் முறையில் ஒழுங்குபடுத்தும் வகையில் அதைக் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய நகரங்களிலே இருக்கிற காவல் துறை இருக்கிற அதிகாரிகள் அந்த நகரத்தை விட்டுப் போவதே கிடையாது. மதுரை, சென்னை, திருச்சி போன்ற இடங்களிலே உள்ளவர்கள் ஒரு நிலையத்திலிருந்து இன்னொரு நிலயத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அது டிரான்ஸ்ஃபர்-ஆக இருக்க முடியாது. ஆகவே, குறிப்பிட்ட ஆண்டுகளுக்குப் பின்னாலே வேறு, வேறு இடங்களுக்கு மாற்றினால்தான் பொதுமக்கள் மத்தியிலே அவர்களுக்கு இருக்கிற தொடர்புகள், நெருக்கங்கள், உறவுகள் குறைந்து, அதன்மூலமாக நேர்மையாக அவர்களால் பணியாற்ற முடியும். ஒரே ஊரில் இருக்கிற ஒரே ஸ்டேஷனில் இருந்து இன்னொரு ஸ்டேஷனுக்கு போடுவது என்பது



1986 மே 6] [திரு. என். எஸ். வி. சித்தன்]

மாறுதலாக இருக்க முடியாது. எனவே, அதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். அதோடு, அங்கே காவல்துறையிலே இருக்கின்ற சாதனங்களைப் பற்றி, பர்னிச்சர்களைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள்.

அங்கே ஒன்று இரண்டு சேர்கள்தான் இருக்கின்றன. பொது மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் போனால்கூட, கொஞ்ச நேரம் நிற்க வைத்து, நாற்காலி வந்த பிறகுதான் உட்காரச் சொல்கிறார்கள். எங்களுக்கே அந்தக் கதி என்றால் சாதாரண நிலையிலே உள்ளவர்களுக்கு என்ன நிலைமை என்று சொல்ல முடியாது. அதற்கு அதிகமான பணம் ஒதுக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

புள்ளிவிவரத்திலே பார்த்தால், தமிழகத்திலே 984 காவல் நிலையங்கள் இருக்கின்றன. 187 புறக்காவல் நிலையங்கள் இருக்கின்றன. 102 ஆம் பக்கத்திலே இந்த விமர்சனக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். காவல்துறையிலே இருக்கிற பல்வேறு பிரிவுகளுக்கு மர மேஜை, நாற்காலிகள் வாங்க ரூ. 88,861—யானைப் பசிக்கு சோளப் பொறி என்றால்கூட அது சாதாரண உதாரணமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

984 நிலையங்கள் எங்கே, 187 நிலையங்கள் எங்கே? இத் துறையிலே இருக்கிற பல்வேறு காரியாலயங்கள் வாடகைக் கட்டடத்திலே இருக்கின்றன. சொந்தக் கட்டடத்திலே சில இருக்கின்றன. அதற்கு இந்த ரூ. 88,861-ஐ வைத்துக்கொண்டு என்ன செய்ய முடியும்? அருள்கூர்ந்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற காரணத்தினால் . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 984 காவல் நிலையங்களும் அப்படியே நாற்காலியே இல்லாமல், ஒரு பெஞ்சும் இல்லாமல் இருப்பதாக நினைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார்கள். அந்த காவல் நிலையங்கள் ஏற்பட்ட காலத்திலிருந்து

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 6

அவை இருந்துகொண்டு வருகின்றன. கூடுதலாக வேண்டும் என்பதுதான் கோரிக்கை. கூடுதலாகப் போன ஆண்டு அளிக்கப் பட்டிருக்கிறது. ஆண்டுக்காண்டு தரப்படும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் எதையும் பேசி சமாளித்து விடுவார். இப்படிப் பதில் சொல்வார் என்று எனக்குத் தெரியும். ஏற்கெனவே ஒரு நாற்காலி, ஒரு பெஞ்ச்தான் இருக்கிறது என்றுதான் நானும் சொல்கிறேன். அதையேதான் அவரும் சொல்லியிருக்கிறார். அவை எப்படிப் போதுமானதாக இருக்க முடியும்? ஆகவே, அங்கே வருகின்ற எல்லோருக்கும் நீங்கள் அதிகமாக மரியாதை கொடுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஒரு சாதாரணத் தேவை அதெல்லாம். எனவே, 88 ஆயிரம் ரூபாய் எந்த அளவில் அதற்குப் பொருத்தமாக இருக்க முடியும்? அதில் என்ன வாங்க முடியும்? அதற்குப் பதில் சொல்வார் என்று எதிர்பார்த்தேன். அவர் சொல்லவில்லை. அதனால் ஏற்றுக் கொள்கிறார் என்று தான் கருதுகிறேன். அதிகமாக நிதி ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

உயிரைத் துச்சமாக மதித்துச் செயலாற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கு நாம் வெகுமதிகள் கொடுத்து வருகிறோம். எடுத்துக்காட்டாக இன்றையதினம் பாரதப் பிரதமர் திரு. இராஜீவ் காந்தி அவர்களின் பாதுகாப்பு அதிகாரியாகப் பணி யாற்றித் தமிழகத்திற்கே பெருமை சேர்த்து வருகின்ற, சேர்ந் துள்ள ஐ.பி.எஸ். அதிகாரி விஜயகுமார், செம்பியத்திலே சில ஆண்டுகளுக்கு முன்பு உதவி போலீஸ் கமிஷனராகப் பணியாற்றி னார். அப்பொழுது அவரும், தற்சமயம் தூத்துக்குடியிலே போலீஸ் சூப்பிரண்டெண்டெண்டாகப் பணியாற்றும் ஆஸ்டின் இன்ஸ்பெக்டர் பன்னீர்செல்வம் ஆகியோர், பயங்கரமான ஆயுதங் களைக் கொண்டு ஒருவரையொருவர் அழிக்க முயன்றுகொண் டிருந்த இரு கோஷ்டிகளுக்கும் இடையே நின்றுகொண்டு மிகத் துணிச்சலாக, துப்பாக்கிப் பிரயோகம் இல்லாமலேயும், வெறு அச்சுறுத்தலினாலேயும் நிலைமைகளைச் சமாளித்ததாக ஒரு



1986 மே 6] [திரு. என். எஸ். வி. சித்தன்]

செய்தி எங்களுக்கு கிடைத்திருக்கிறது. இப்படிப்பட்ட வீரதீர செயல்களைப் புரிகின்றவர்களுக்கு நாம் நிச்சயமாகப் பாராட்டும், வெகுமதியும் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்..

அடுத்தபடியாக தமிழகத்திலே, எனக்கு முன்னாலே பேசிய வர்கள் சொன்னதைப்போல, எல்லா இடங்களிலேயும் இதுபோன்ற தவறுகள் நடைபெறுவதாகச் சொல்ல மாட்டேன். ஆனால் சில யிடங்களில் நடக்கின்ற நிகழ்ச்சிகள் நமக்கு வேதனையைத் தரு கின்றன. கொடுமையான நிகழ்ச்சிகள் சில இடங்களில் நடைபெற் றிருக்கின்றன. எதிர்காலத்தில் இவையெல்லாம் தவிர்க்கப்பட வேண்டும், தடுக்கப்பட வேண்டும் என்பதற்காக ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன்.

மதுரை மாவட்டம் தேவாரத்திலே காவல் நிலையத்திலே சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னதாக அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் திருட்டு வழக்கிலே குற்றம் சாட்டப்பெற்று, காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறார். ஆனால் காவல் நிலையத்திலே காவலர்களால், தாக்கப்பட்ட காரணத்தி னாலே அவர் அங்கே இறந்துவிடுகிறார். ஆனால் காவல்துறை யிலே இருக்கின்ற அதிகாரிகள் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? தான் அணிந்திருந்த உள்ளாடை—அண்டர்வேர்— அந்த உள்ளாடையினாலே தூக்குப் போட்டுக்கொண்டார் என்று ஒரு செய்தியினைச் சொல்லி அதை நம்ப வைத்து, மக்கள் நம்பாத காரணத்தாலே பெருங் கூட்டமாகவே கூடிவிட்டார்கள். பின் னாலே துப்பாக்கிப் பிரயோகம் செய்து உயிர் இழப்பிலே அந்தக் கூட்டத்தைக் கலைத்ததற்குப் பின்னாலேதான, உத்தம பாளையத்திற்கு எடுத்துச் சென்று, அதன் மூலமாக போஸ்ட் மார்ட்டம் போன்ற பல காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இதுமாதிரியான சாவுகள் தவிர்க்கப்பட வேண்டும். அதிலேயும் என்ன தெரியுமா? அந்த வழக்கிலேகூட, இன்னொரு அரிசனப் பெண்ணை இவர் மானபங்கம் செய்தார் என்று ஒரு பொய்யான வழக்கைப் போட்டு, அதன் மூலமாக இவரைக் கடுமையாகத் தாக்கி அவர் உயிரிழந்து இருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். இதை நல்ல முறையிலே விசாரணை செய்து யார் தவறு செய் திருந்தாலும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மதுரை மாவட்டம் வன்னிவேலம்பட்டி என்ற கிராமத்திலே 14—4—1986 ஆம் நாளன்று—சித்திரை நாளன்று நாள் ஏர் பூட்டுவது என்று கிராமத்திலே ஒரு வழக்கம் உண்டு. ஒரு நல்ல நாள் பார்த்து, ஊரிலே இருக்கின்றவர்களெல்லாம் போய் நாள் ஏர் என்று சொல்லி கொஞ்சநேரம் உழுதுவிட்டு வருவார்கள். (குறுக்கிடு) பொன் ஏர் என்று சொல்லுகிறார்கள். எங்கள் பக்கத்திலே நாள் ஏர் என்றுதான் சொல்வோம். ஏதோ ஒரு பெயர். பொன் ஏர், நாள் ஏர் என்ற இரண்டையும் வைத்துக் கொள்வோம். நாள் ஏர், பொன் ஏர் என்பதிலே சண்டை வேண்டாம். அந்த பொன் ஏர் எடுத்தார்கள். வன்னிவேலம் பட்டியிலே, ஒரு நாள் நிர்ணயம் செய்து, அந்த ஊரினுடைய ஊராட்சித் தலைவராக வந்திருக்கின்றவர் பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்தவர், குறிப்பிட்ட நாளிலேதான் அந்த நாள் ஏர்—பொன் ஏர் போட வேண்டுமென்று சொல்கின்றார். ஆனால் ஊரிலே இருக்கின்ற பெரியதனக்காரர்கள், பெரியவர்களெல்லாம், வயதிலே முதிர்ந்தவர்களெல்லாம், இன்றைக்கு நாள் சரியாக இல்லை, இரண்டு நாட்களுக்குப் பின்னாலே நாம் அந்த நாள் ஏரைப் பூட்டலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்களுடைய பேச்சைக் கேட்காமலேயே அவர் அந்தக் குறிப்பிட்ட தினத்திலே, தான் நினைக்கின்ற தினத்திலே புதிதாக வந்திருக்கின்ற ஊராட்சித் தலைவர் அவர்கள் ஒன்றிரண்டு பேர்களை மட்டும் அழைத்துக்கொண்டு போய் உழுதுவிட்டு வருகிறார். ஆனால் ஊரிலே இருக்கின்றவர்கள், பெரும்பான்மையானவர்கள் நல்ல நாள் பார்த்து ஒரு தேதியை நிர்ணயம் செய்து, அந்த நாளிலே போய் ஏர் பிடிக்கிறார்கள். கோபங்கொண்ட ஊராட்சித் தலைவர் மற்றவர்களெல்லாம் சேர்ந்து, இரவு 12 மணி, 1 மணிக்கு மின்சாரம் எடுத்துவிட்டு, ஊரையே இருட்டாக்கி, ஊரிலே இருக்கின்ற வீட்டிலே இருக்கின்றவர்களைத் தாக்குகிறார்கள்; கடுமையாகத் தாக்குகிறார்கள்; பெண்கள், குழந்தைகள் எல்லோரையும் தாக்குகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு கொடுமையான சம்பவம் மதுரை பக்கத்திலே இருக்கின்ற திருமங்கலத்திற்குப் பக்கத்திலே நடைபெற்றிருக்கின்றது. ஆனால் காவல் துறையிலே என்ன செய்திருக்கிறார்கள் தெரியுமா? யாரெல்லாம் தாக்கப்பட்டிருக்கிறார்களோ, யாரெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ, யாரெல்லாம் இரத்தக் காயத்தோடு இருந்தார்களோ அவர்கள்மீது வழக்கு. இது என்ன நியாயம்? ஆக, படுகின்ற பாட்டையும் பட்டு, இதர தொல்லைகளையும் பெற்றுவிட்ட அவர்கள்மீது வழக்கு தொடுத்திருக்கிறார்கள். ஆகவே, சம்பந்தப்பட்டவர்கள்மீது வழக்கு தொடராமல், அதே நேரத்திலே எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்கள்மீது வழக்கு போட்டிருக்கிறார்கள், வேறு சம்பவத்தைச் சொல்லி, இந்தச் சம்பவத்திலே பாதிக்கப்பட்டவர்கள்மீதுதான் வழக்கு தொடரப்பட்டிருக்கிறது. வேறு வழக்குகளை எதிர்க் கட்சியிலே இருப்பவர்கள்மீது போட்டிருக்கிறார்கள். அது வேறு வழக்கு. ஆகவே, சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய



என்னுடைய திருமங்கலம் தொகுதியிலே, மதுரை மாவட்டத்திலே நம்முடைய விமான நிலையத்திற்குப் பக்கத்திலே, மதுரையிலேயிருந்து அருப்புக்கோட்டைக்குப் போகின்ற தேசிய நெடுஞ்சாலையிலே, வலையங்குளம் என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊர் மதுரையிலேயிருந்து 14 கிலோமீட்டர் தூரத்திலே இருக்கிறது. அந்த ஊரிலே, அடுக்கடுக்காக வழிப்பறிகள் நடந்துகொண்டே இருக்கின்றன, கடந்த இரண்டு ஆண்டு காலமாக. அது சம்பந்தமாக எனக்குப் புகார் எழுதியிருக்கிறார்கள்; முதலமைச்சருக்குப் புகார் எழுதியிருக்கிறார்கள்; ஐ.ஜி. அவர்களுக்குப் புகார் எழுதியிருக்கிறார்கள். 14 கிலோ மீட்டரிலே இருக்கின்ற அந்த நெடுஞ்சாலையிலேயே, விமான நிலையத்திற்குப் பக்கத்திலேயே இருக்கின்ற அந்த ஊரிலேயே இரண்டாண்டுக் காலமாகத் தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. சில மாதங்களுக்கு முன்னாலே வலையங்குளம் கூட்டுறவு விவசாய வங்கியின் கதவு உடைக்கப்பட்டு பணத்தைத் திருடிக்கொண்டு போனார்கள். சிறு சிறு விவசாயிகள், வியாபாரிகள் வருவார்களேயானால் தட்டிப் பறித்து வழிப்பறி செய்துகொண்டு போகிறார்கள். சுந்தர பாண்டியன் என்பவர் இரவிலே மோட்டார் பைக்கிலே போகிறார். அப்பொழுது சினிமாவிலே வருவது மாதிரி சினிமாவிலே வருவதைப் போல மோட்டார் நடந்திருக்கிறது.

பைக்கை நிறுத்தி, மாத்திலே கட்டி வைத்து, இருக்கிற பொருள்களை எல்லாம் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள். பக்கத்திலே இருக்கிற ஒரு பம்ப் செட் அறையிலே உறங்கிக் கொண்டிருந்த கணவன், மனைவி, குழந்தைகள் அத்தனை பேரையுமே கதவை உடைத்து, நகைகளை, பணத்தை, பொருள்களை எடுத்துக்கொண்டு, உள்ளே வைத்து பூட்டிவிட்டுப் போய் விட்டார்கள். இதுசம்பந்தமாக, பல்வேறு இடங்களிலே இருக்கிற பெரிய அதிகாரிகள் அத்தனை பேருக்கும் புகார்கள் செய்திருந்துங்கூட, இன்னும் மக்கள் மத்தியிலே அங்கே பீதி குறையவில்லை. ஆகையினால், இதுமாதிரியான தொடர் நிகழ்ச்சிகள் தவிர்க்கப்பட வேண்டும், எல்லா பெரிய அதிகாரி களுக்கும் இதுசம்பந்தமாக புகார்கள் கொடுத்திருக்கிறார்கள், தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

போடி தொகுதியிலே, அம்மாபட்டு ஊராட்சி மன்றம் இருக்கிறது. அங்கே துணைத் தலைவர் தேர்தல் வந்தது. துணைத் தலைவர் தேர்தலிலே. வாக்குகள் எல்லாம் போட்டுவிட்டார்கள் வாக்குப் பெட்டியிலே. ஆனால், எண்ணுவதற்கு முன்னாலே சில தகராறுகள் வருகின்றன, சண்டை வருகின்றது. ஆகையினாலே, வாக்குப் பெட்டிகளை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்குக் கொண்டு போகிறார்கள். ஆனால், காவல் துறை அங்கே நடுநிலை யிலேயிருந்து சமாளிக்காமல், ஜாதிக் கலவரத்தைத் தூண்டுகிற அளவுக்கு அங்கே நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன என்று போடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர், திரு. கே. எஸ். எம். இராமச்சந்திரன் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதை அருள் கூர்ந்து கவனித்து, சிறிய பொறியாக இருந்தாலும் பெரிய பொறியாகப் பரவுவதற்கு முன்னாலே தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல ஒரு வேதனை தரத்தக்க கோர நிகழ்ச்சி. எங்களுடைய கட்சியைச் சேர்ந்த இடைப்பாடி தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் சொல்லியிருக் கிறார்கள். சேலம் மாவட்டத்திலே பூலாம்பட்டி காவல் நிலையத்திலே கடந்த 10 மாதங்களுக்கு முன்பாக ஒரு கொலை



வழக்கிலே மாமியாரையும் மருமகனையும் குற்றம் சாட்டி காவல் நிலையத்திற்கு அழைத்துப் போகிறார்கள், விசாரணை என்ற பெயராலே. அங்கே எப்படி விசாரணை செய்கிறார்கள் தெரியுமா? மாமியாரையும் மருமகனையும் லாக் அப்பிலே தள்ளி, நிர்வாணப் படுத்தி—நான் பேசுவதற்கே அஞ்சுகிறேன்—அவர்களைப் பலவந்தமாக உறவுகொள்ளச் சொல்லி அங்கேயிருக்கிற காவல் துறை ஆய்வாளர்—அவருடைய பெயர் இராஜமாணிக்கம்— வற்புறுத்துவாரானால், நான் கேட்கிறேன், நாம் என்ன ஜனநாயக நாட்டிலேயா வாழ்ந்துகொண்டிருக்கிறோமா? விசாரணைக்கு ஒரு எல்லையே இல்லையா? அதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டுகிறேன். இது எப்படிச் சரியாக இருக்க முடியும்? சம்பந்தப்பட்டவர்கள் மீது மிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். இதைவிட காட்டுமிராண்டித்தனமாக . . .

**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு திரு. சித்தன் அவர்கள் சில கருத் துக்களைச் சொன்னார்கள். இப்படித் தவறான வகையிலே நடந்துகொண்ட காரணத்தால், சிவில் துறையிலே ஆர்.டி.ஓ. என்ற ராங்கிலே இருப்பது போன்ற எஸ்.ஐ.-க்கள் 43 பேர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டு, வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக் கிறார்கள். ஒரு தவறு செய்தால் அவன் தெரிந்து செய்தால், அவன் தேவன் என்றாலும் விட மாட்டேன் என்ற புரட்சித் தலைவர் சொன்னதற்கிணங்க, இப்பொழுது அரசு போலீஸ் துறையிலேயே இப்படித் தவறு செய்தவர்களை வீட்டுக்கு அனுப்பியிருக்கிறது என்பதைத் தகவலுக்காகச் சொல்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** ஆகவே, இதுமாதிரியான நடவ டிக்கைகளிலே ஈடுபடுகிறவர்களை மிகக் கடுமையான தண்டனைக் குள்ளாக்க வேண்டும். யாரையும் விசாரிப்பதற்கு ஆட்சேபணை கிடையாது. இப்படிப் பொருத்தம் இல்லாத அளவுக்கு அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களானால், அது எங்கே போய் முடியும் என்பதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பேரவைத் தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டிலே இங்கே ஒரு வழக்கினைப் பற்றி, ஒரு நிறுவனத்தைப் பற்றி, நாங்கள் எல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருந்தோம். சென்னையிலே ஒரு பெரிய நிறுவனம், உம்மிடியார் நிறுவனம்; அந்த உம்மிடியார் நிறுவனம் நகைத் தொழிலிலே முன்னணியிலே இருக்கிறார்கள். அவர்கள் பாங்கிங் பிசினஸ் என்ற முறையிலே மக்களிடமிருந்து டெபாசிட் வாங்கி, அதன் மூலம் தங்களுடைய வியாபாரத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தார்கள். அப்படிப் பொதுமக்களிடமிருந்து, நடுத்தர மக்களிடமிருந்து பல கோடிக்கணக்கான ரூபாய்கள் அவர்கள் டெப்பாசிட் என்ற பெயராலே, சீட்டு என்ற பெயராலே வாங்கி, திருப்பிக் கொடுக்காமல், வட்டியும் கொடுக்காமல், அசலும் கொடுக்காமல், கொடுத்த மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக நிற்பதை நாங்கள் இந்த மன்றத்திலே கொண்டு வந்தோம். ஆனால், என்ன காரணத்தாலோ, அது நீதிமன்றத்துப் பிரச்சினை என்று சொல்லி அன்றைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. வெளியில் என்ன ஆயிற்று? அந்த உம்மிடியார் நிறுவனம், பல கோடிக்குச் சொந்தக்காரரான அந்த நிறுவனம், பல இடங்களிலே, பல கோடி ரூபாய்கள் சொத்துக்குச் சொந்தமானவர்கள் நீதிமன்றத்திற்குப் போய் இன்சால்வன்சி கொடுத்துவிட்ட காரணத்தால், சாதாரண ஏழை, நடுத்தர மக்கள், ரூபாய் 1,000, ரூபாய் 2,000 கொடுத்தவர்கள் எல்லாம் இன்றைக்கு நடுத்தெருவிலே இருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக நான் கேட்டுக்கொள்வது, அந்தப் பிரச்னை இங்கே எடுத்துக் கொள்ளப்பட்டவுடனே காவல் துறை முனைப்பாகச் செயல்பட்டிருக்குமேயானால், சுறுசுறுப்புடன் இருந்திருக்குமேயானால், இப்படிப் பல்லாயிரக்கணக்கானவர்கள் கண்ணீரும் கம்பலையுமாக பணத்தையும் கொடுத்துவிட்டு நடுத்தெரு நாராயணர்களாக நிற்கும் நிலை வந்திருக்காது; எதிர்காலத்தில் இதைப்போல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய கட்சி சட்டமன்ற உறுப்பினர் திரு. கதிர்வேலு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், அவருடைய தொகுதியான ராணிப்பேட்டை தொகுதியிலே, வாலாஜாவிலே கடந்த நான்கு





மாத காலத்திலே அடுத்தடுத்து கொள்ளை அடிக்கின்ற நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. கனரா வங்கியின் அதிகாரி வீட்டிலே ரூ. 40,000 கொள்ளை நடந்திருக்கிறது. அடுத்தாற்போல் இருக்கும் இன்ஷூரன்ஸ் அதிகாரி வீட்டிலே கொள்ளை நடைபெற்றிருக்கிறது. இன்னும் நான்கு வீடுகள் தள்ளி கொள்ளை நடைபெற்று இருக்கிறது என்று அடுத்தடுத்து கொள்ளை நடந்து வருவதாகச் சொல்கிறார்கள். அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய பேரவையிலே இருக்கின்ற நிருபருடைய துணைவியார் டி.டி.ஐ. நிறுவனத்திலே இருக்கிறார். திருமதி மல்லிகா என்பவர் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் பெருங்குளத்தில் பார்வையிட்டுக்கொண்டிருக்கின்ற நேரத்தில்கூட முகமூடி கொள்ளைக்காரர் ஒருவர் ஸ்கூட்டரிலே வந்து கழுத்திலே இருக்கின்ற செயினை எல்லாம் அறுத்துக்கொண்டு போகின்ற சூழ்நிலையை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். பல நிகழ்ச்சிகள் இதுபோல் இருக்கின்றன. குற்றம் புரிபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர்காலத்திலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து போடி பகுதியில் ராசிங்கபுரத்தில் இரண்டு வகை கவுண்டர்கள் சமுதாயத்திலே தகராறு ஏற்பட்டு அதிலே ஒரு பிரிவைச் சேர்ந்தவர்கள் 15 பேர்கள்மீது மட்டும் வழக்கு போட்டு குற்றப் பத்திரிகை கொடுக்காமலேயே 1½ ஆண்டுக் காலமாக அவர்கள் நீதி மன்றத்திற்கு இழுக்கடிக்கப்படுகிறார்கள். இதை காலாகாலத்தில் சமரசம் செய்திருக்கலாம், அல்லது குற்றப்பத்திரிகை கொடுத்திருக்கலாம். 1½ ஆண்டுக் காலம் சாதாரண நிலையில் உள்ள மக்களை நீதி மன்றத்திற்கு இழுத்தடிப்போமானால் அவர்களுக்கு எப்படி நியாயம் கிடைக்க முடியும்? ஏழை அப்பாவி மக்கள் இப்படித் துன்புறுத்தப்படுகிறார்கள் என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்கிறேன்.

அடுத்தபடியாக பாபநாசம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. இராசாராமன் சொல்லியிருக்கிறார். தஞ்சை மாவட்டத்திலே பாபநாசம் வட்டத்திலே ராஜகிரி, பண்டாரவாடை பகுதியிலே

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 மே 6

முஸ்லிம் மக்களை அதிகமாகத் தாக்கி வருகிறார்கள். இந்த கிராமத்தில் சமூக விரோதிகள் அடிக்கடி நக்ஸலைட்டுகள் மூலம் புகுந்து தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். சரியான வழக்குப் பதிவு செய்யவில்லை. இதுபோன்று தாக்குதல் செய்யும் நபர்கள் மீது ஏன் காவல்துறை தன்னுடைய கடமையைச் செய்யவில்லை? நடவடிக்கை எடுக்கவில்லை? கடுமையான சட்டத்தைப் போட்டு அதன்மூலம் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அவர்கள் சொல்கிறார்கள்.

பாபநாசம் வட்டம் கபிஸ்தலம் போலீஸ் சரகத்தைச் சேர்ந்த உம்மனபாடி கிராமத்தில் ஒரு பெண்மணி கொலை செய்யப்பட்டு இருக்கிறார். ஆனால் இதுவரை உண்மையான குற்றவாளி கண்டு பிடிக்கப்படவில்லை. நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக இந்த விவரத்தைச் சொல்கிறேன்.

ராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. கதிர்வேலு அவர்கள் ஒரு செய்தியைச் சொன்னார்கள். அரக்கோணம் தாலுக்காவில் அவலூர் கிராமத்தில் 13—2—1986 அன்று ஒரு முஸ்லீம் நிறுவனத்திற்குச் சொந்தமான நிலத்தை குத்தகை விடுவது சம்பந்தமாக தகராறு வரும் என்று தெரிந்து முன்பே காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுத்திருந்தும்கூட காவல் துறை உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காததால் அங்கே முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த ஆண்களும், பெண்களும் நைய புடைக்கப்பட்டு கை உடைந்து, கால் உடைந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்கான புகைப்படங்கள் எல்லாம் என்னிடத்தில் கொடுத்திருக் கிறார்கள். இதுபோன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் நிகழாத அளவுக்கு முன் எச்சரிக்கை நடவடிக்கையை காவல்துறை எடுத்திருக்கு மானால் இவைகளைத் தவிர்த்திருக்கலாம் என்ற விவரத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, காவல்துறை நிர்வாகத்தில் அரசியல் தலையீடு இன்றித் தவிர்க்க அரசின் மேற்பார்வையிலே, அதே நோக்கில் சுய ஆட்சி உரிமைகொண்ட தனி அமைப்பாக உருவாக்க வேண்டும் என்ற கருத்தினை இதற்கு முன்னாலே நான் சொன்னேன்.



1986 மே 6] [திரு. என். எஸ். வி. சித்தன்]

[illegible] வலியுறுத்துகிறேன். அது ஆராயப்படுகின்ற [illegible] வலியுறுத்துகிறவனாயிருப்பவன். அந்தத் துறையில் [illegible] கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வானொலி, தொலைக்காட்சி ஆகியவற்றை அரசு நேரடி நிர்வாகத்திலிருந்து சுய ஆதிபத்திய அமைப்பின்கீழ் கொண்டுவர வேண்டுமென்று பலவேறு தரப்பிலே சொல்லப் படுகிறது. அதுபோல இந்தத் துறையும் ஒரு சுய ஆதிபத்திய துறையாக இருக்குமானால் நல்ல முறையில் பணியாற்ற முடியும், அரசியல் தலையீடு இல்லாமல் இந்தத் துறை பணியாற்றத் துணையாக இருக்கும். இதிலே கவனத்தை ஓட்டுமாறு முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறையின் செயல்பாட்டைக் குறை சொல்வதற்கில்லை. மாறாக மனமாரப் பாராட்டவே செய்யலாம். வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்ட தொன்மை வாய்ந்த சிலைத் திருட்டு கண்டுபிடிக்கப்படுவதி லிருந்து, உள்நாட்டிலே கள்ள நோட்டு அச்சடித்தல், கள்ள அமெரிக்க டாலர் நோட்டு அடிப்பது போன்ற சிக்கலான வழக்குகளை நம்முடைய குற்றப் புலனாய்வுத்துறை கண்டு பிடித்துள்ளதை மெச்சுகிறேன். வரவேற்கிறேன். அதே நேரத்தில் இந்தக் குற்றப் புலனாய்வுத் துறையை, அரசியல் ஆசாபாசத்திற்கு இன்றைய ஆட்சி அதிகமாகப் பயன்படுத்து கிறதோ என்ற சந்தேகம் எனக்குத் தோன்றுகிறது. இந்தக் குறைபாட்டை என்னால் சொல்லாமல் இருக்க முடியாது. இதற்கு பல சான்றுகள் என்னால் சொல்ல முடியும். எந்த ஒரு அரசியல் சிக்கலான பிரச்சினை ஏற்பட்டபோதிலும் மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறையினுடைய போர்வையிலே ஒதுங்கிக் கொள்வதே இங்கே ஒரு வழக்கமாக இருக்கிறது என்பதை நான் வேதனையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த காலங்களில் மாநில குற்றப்புலனாய்வுத் துறை போலீசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பல வழக்குகளில் புலனாய்வுத் துறை முடிவு என்னவாயிற்று என்பதை ஆண்டு கணக்கிலேகூட அறிவிக்கப்படாத மர்மமாகவே இருந்துகொண்டிருக்கிறது. உதாரணமாக திருச்செந்தூர் கோவில் நகையை சரிபார்க்கின்ற

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 மே 6

அதிகாரி சுப்பிரமணிய பிள்ளை அவர்களுடைய மர்ம மரணம பற்றிய புலனாய்வு, சாலை விபத்திலே இறந்துபோன முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப்பிரமணியத்தின் விபத்து மர்மமாக இருப்பதாக அவருடைய மனைவி புகார் கொடுத்ததாகவும், குற்றப் புலனாய்வுத்துறை போலீஸ் விசாரித்து வருவதாகவும் முதலமைச்சர் அவர்களே அறிவித்தார்கள். அந்த விசாரணையினுடைய அறிக்கை என்னவாயிற்று? குற்றப் புலனாய்வுத் துறையின் முடிவு என்னவாயிற்று என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

* * *

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பேசுகிறபோது * * *

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சில புகார்கள் வந்திருப்பதாகவும் அவை குற்றப் புலனாய்வுத் துறைக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொன்னார்களே, குற்றப் புலனாய்வுத் துறை விசாரித்ததா? அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதைத்தான் நான் கேட்டேனே தவிர வேறல்ல . . .

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியானால் அவர்கள் முதலிலே சொன்ன அந்தக் கருத்தை நீக்குவதுதான் அவையின் மரபுக்குச் சரியாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். * * என்பதைப் போல அவர்கள் குறிப்பிட்டார்கள். அது தேவையில்லை.

(பிற்பகல் 1-20)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** * * சம்பந்தமாகச் சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதனை முழுமையாக எடுக்க வேண்டாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய உரிமை காக்கப்படவேண்டும்

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1986 மே 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் பகுதி நீக்கப்பட்டு விட்டது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொடர்ந்து வேறு பிரச்சினைகளைப் பேசுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, * * என்பதுதான் சரியானது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்தபோது ஒருங்கிணைந்த சென்னை ராஜதானியாக இருந்தபோது அதாவது ஆந்திரப்பிர தேசம், சவுத் கர்நாடகா, மலபார், தமிழ்நாடு ஆகியவை எல்லாம் சேர்ந்து ஒருங்கிணைந்த சென்னை ராஜதானியாகத் தமிழகம் இருந்தபோது ஒரே ஒரு ஐ.ஜி. மட்டும்தான் பதவியில் இருந்தார். ஆனால் இப்போது நிறைய அதிகாரிகள் வந்திருக்கிறார்கள். எந்த அதிகாரிமீதும் எனக்கு தனிப்பட்ட கோபதாபம் இல்லை.

அண்மையில் காவல் துறை டைரக்டர் ஜெனரலாக இருந்து ஓய்வு பெற்ற திரு. லட்சுமிநாராயணன் அவர்கள் ஒரு கட்டுரையில் ஐ.ஆர். 8 விளைச்சல் மாதிரி மேல் மட்டத்தில் அதிகாரிகள் பெருகிக்கொண்டிருக்கிறார்கள் என்று எழுதியிருந்ததை நான் படித்துப் பார்த்தேன். அந்த முறையிலே மேலே இருக்கின்ற அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது. அடி மட்டத்திலே இருக்கின்றவர்களின் எண்ணிக்கை பல ஆண்டுக் காலமாக உயர்த்தப்படாமல் இருப்பதன் காரணத்தால் பல வழக்குகள் கண்டுபிடிக்கப்படாமலே போகிறது. மக்களுக்குப் போதிய பாதுகாப்புக் கிடைக்காத நிலைமை இருக்கிறது. எனவே அதில் நாம் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காவல் துறையைப் பொறுத்தவரையில் உயர் அதிகாரிகளாக இருப்பவர்கள் மத்தியில் கொஞ்சம் விரக்தி மனப்பான்மை இருப்பதாகத் தெரிகிறது. பல ஆண்டுக் காலமாக உயர் பதவியில் இருப்பவர்கள், குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால் காவல் துறையிலே உயர் பதவியில் இருக்கிற திரு. துரை, திரு. ஸ்ரீபால்,

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ராஜசேகரன் ஆகியோரிடத்திலே எல்லாம்—அவர்கள் யாருக்குப் பயிற்சி கொடுத்தார்களோ அவர்கள் எல்லாம் மேலே வந்திருக்கிறார்கள். அவர்கள் மட்டும் ஏனோ அப்படியே இருக்கிறார்கள். ஏறி வந்தவர்கள் மேலே போவது போல, ஏணி மட்டும் அப்படியே இருப்பது போல இருக்கிறார்கள். ஏன் அவ்வாறு இருக்கிறார்கள்? திரு. டி. ஆர். ராஜகோபாலன் அவர்கள் இன்றைக்கு டி.ஐ.ஜி. என்ற நிலைமையில் இருக்கிறார்கள் அவர்கள் பல ஆண்டுக் காலமாக இப்படி இந்தப் பதவியில் இருக்கிறார்கள். இப்படிச் சிலருக்கு நியாயமான உரிமைகள் மறுக்கப்படுகிற காரணத்தால் விரக்தி மனப்பான்மை ஏற்படுகிறது. நியாயமான காரணம் எதுவும் இல்லை என்று சொன்னால் அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கலாம் அல்லவா? அவர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்தால் ஏற்றுக்கொள்கிறேன். இல்லை என்றால் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, காவல் துறைக்கு வேண்டியது கட்டுப்பாடும், கடமையுணர்வும்தான். இந்த இரண்டு அம்சங்களும் காவல் துறையில் பெருகி வருகிறது என்பதை சொல்வதற்குப் பதிலாக அருகி வருகிறது என்றுதான் சொல்லவேண்டும். காவல் துறையினரைக் கண்டதும் மக்களுக்கு ஏற்படுகிற அச்ச உணர்வு இன்றைக்குப் படிப்படியாகப் போய்விட்டது என்றுகூடச் சொல்லலாம். பஸ்ஸிலே நின்றால் உள்ளே போய்யா என்று சாதாரண பிரயாணி காவல் துறையினரைப் பார்த்துச் சொல்கிற அளவுக்கு நிலைமை வந்திருக்கிறது.

தமிழகத்தில் தற்போது வொய்ட் காலர் என்ற வகையில் டிப்டாப் குற்றச்சாட்டுகள் பெருகிக் கொண்டிருக்கின்றன. ரூபாய் நோட்டு இரட்டிப்பு மோசடி, கள்ள நோட்டு அச்சடித்தல், சீட்டுக் கம்பெனி வைத்து மோசடி செய்வது போன்றவை எல்லாம் பெருகிக்கொண்டு வருகின்றன. எனவே, ஸ்காட்லான்ட் யார்ட் போலீஸ் போன்று நமது போலீஸ் துறையும் விளங்க வேண்டும். அப்போதுதான் அவற்றைக் கண்டுபிடிக்க முடியும். ஒரு காலத்தில் புகழ் மண்டிக்கிடந்த காவல் துறையில் இன்றைக்கு அது கண்டுக்கொண்டு போய்விடக்கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். காவல் துறையினுடைய செயல்





திறன் இன்னும் நல்ல முறையில் இருக்கவேண்டும் என்பதற்காக
நான் ஒன்றிரண்டு யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.
கடந்த காலத்தில் இருந்ததுபோல வாகனங்கள் ஓட்டுவதற்கான
லைசன்ஸ் வழங்குகின்ற அதிகாரம் பழையபடியே போக்கு
வரத்துத் துறை போலீசுக்கே ஒதுக்கப்பட வேண்டும்.

லைசன்ஸ் வழங்குகின்ற அந்த முறையை அவர்களுக்கே
ஒப்படைக்க வேண்டும். அதைப்போலவே குற்றப் புலன் ஆய்வு
துறைப் போலீஸ்காரர்களுக்கு என்ன அதிகாரங்கள் இருக்
கின்றனவோ அதை அப்படியே டிராஃபிக் போலீஸ் துறைக்கும்
வழங்க வேண்டும். அப்படி வழங்கினால்தான் இன்றைக்குப்
போக்குவரத்திலே இருக்கிற பல தவறுகள் அல்லது முகமூடிக்
கொள்ளைகள் போன்ற பல கொள்ளைகள் போன்றவைகள் நடை
பெறுவதை ஓரளவுக்குத் தடுக்க முடியும். அந்த வகையிலே
கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு சமுதாயக் குற்றங்கள் என்று சொல்லப்படுகிற
நேரத்திலே அவற்றிலே ஒன்றாக வரதட்சிணை கொடுமை
நடைபெறுவதைப் பத்திரிகையிலே பார்க்கிறோம். அவைகள்
தவிர்க்கப்பட வேண்டும். களையப்பட வேண்டும் என்று சொல்லு
கிறோம். அந்த வரதட்சிணைக் கொடுமைபற்றிக்கூட நம்முடைய
இந்தியாவினுடைய மேன்மைக்குரிய பிரதமர் திரு. ராஜீவ் காந்தி
அவர்கள் மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கு கடிதம் எழுதி
யிருக்கிறார்கள். நம்முடைய அரசும் அதற்கு முயற்சிகள்
எடுத்துக் கொண்டிருக்கிறது. என்றாலும்கூட இதிலே இருக்கிற
ஒரு முக்கியமான அம்சமே, இந்த வரதட்சிணையைப் பொறுத்த
வரையில் வரதட்சிணை ஒழிப்பு சம்பந்தமாக முன்னாள்
தலைமைச் செயலர் திரு. கார்த்திகேயன் தலைமையில் ஒரு குழு,
தமிழகத்திலே இருக்கிற இந்திய நிர்வாகக் குழுவினுடைய மாநில
குழுக்களை அழைத்து ஒரு கருத்தரங்கு நடத்தியது. அதிலே
நம்முடைய நீதிபதிகள் ரத்தினவேலு பாண்டியன், இராமசாமி
போன்றவர்கள், பப்ளிக் பிராசிக்கியூட்டர் பத்மினி ஜேசுதுரை
போன்றவர்கள். இன்னும் பல கிரிமினல் வழக்கறிஞர்கள் எல்லாம்
பங்கு கொண்டு அதுபற்றி விரிவாக ஆராய்ந்து மத்திய அரசு,

மாநில அரசு எடுக்க இருக்கிற நடவடிக்கைகளில் இந்த வரதட்சிணை கொடுமைபற்றிச் சொல்லுகிற நேரத்திலே அதிலே மாற்றாந்தாய் மனப்பான்மைதான் நிலவுகிறது என்று சொல்லுகிறார்கள். மாற்றான் தகப்பன் மனப்பான்மை என்று சொல்லவில்லை. சிற்றன்னைக் கொடுமைதான் இருக்கிறதேதவிர, சிற்றப்பா கொடுமை என்று கிடையாது. ராமரே வனவாசம் போவதற்கு ஒரு சிற்றன்னைதானே தேவைப்பட்டார்.

எனவே அப்படிப்பட்ட சிற்றன்னைக் கொடுமையைப்பற்றி, நகைகள் கொடுப்பது, வரதட்சிணை பணம் கொடுப்பது சம்பந்தமாக ஏற்படுகின்ற பல குறைகள்பற்றிப் பல செய்திகள் வருகின்றன. வரதட்சிணை கொடுப்பது சம்பந்தமாக தீர்மானிக்கிற நேரத்திலே ஒரு பெரிய அதிகாரியை வைத்துக் கொண்டு, அவர் தலைமையிலே ஒரு குழு அமைத்து, அதுபற்றி யோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அல்லது அந்த பெரிய அதிகாரிகளை முன்பாக வைத்துக் கொண்டு, நாங்கள் இந்த அளவுக்கு நகை கொடுக்கிறோம், பாத்திரம் கொடுக்கிறோம், பணம் கொடுக்கிறோம் என்று உறுதிப் பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும். அதை ஒரு யோசனையாக எனக்குப் பட்டதைச் சொல்லுகிறேன். அப்படிச் செய்தால் பிற்காலத்திலே இது மாதிரியான தவறுகள் நடைபெறாமல் இருப்பதற்கு அல்லது இதுபோன்ற தவறுகளைத் தவிர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை நான் யோசனையாகச் சொல்லுகிறேன்.

இரண்டு பெரிய காரணங்கள் இன்றைக்கு வரதட்சிணை கொடுமைக்கான காரணங்களாக இருக்கின்றன. அவற்றில் ஒன்று, தன் சக்திக்கு மீறி திருமணச் செலவு செய்வது. படாடோபமாகச் செலவு செய்வது. அவர் இன்றைக்கு இப்படித் திருமணம் நடத்தினாரா? நான் அதைவிடச் சிறப்பாகச் செய்து காட்டுகிறேன் என்று சொல்வது என்று இப்படி திருமணங்களில் அதிகச் செலவு, சக்திக்கு மீறி செலவு செய்யப்படுகின்ற காரணத்தினால்தான் இது மாதிரியான மறைமுக லஞ்ச ஊழல்கள் பெருகுவதற்கு அடிப்படையான காரணங்களில் ஒன்றாகும் என்று நான் கருதுகிறேன்.





நம்முடைய நாவலர் அவர்கள் எப்போதும் பேசுகிறபோது ஒன்றைச் சொல்வார்கள். இந்த உறுப்பினர்கள் எப்போது பேசினாலும் என்னுடைய தொகுதிக்கு அதைக் கொடுங்கள், இதைக் கொடுங்கள், பள்ளிக் கட்டிடங்கள் கொடுங்கள், சாலைகள் கொடுங்கள், போலீஸ் நிலையம் கொடுங்கள் என்று கேட்கிறீர்களே தவிர, நான் வருவாய்த் துறையை வைத்துக் கொண்டிருக்கிறேனே, யாராவது வருவாயைப் பெருக்குவதற்கு யோசனை சொல்லுவார்களா என்று பல தடவை சொல்லியிருக்கிறார்கள். நான் ஒரு சிறிய யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். இப்படி சும்மா வீணாக செலவு செய்கிற காரணத்தால் ஆரம்பரச் செலவு செய்பவர்களுக்கு வரி போடுங்களேன். 25 சதவீதம்கூட திருமண வரி போடுங்கள், கவலை இல்லை. ஆரம்பரமாகத்தானே அதை செலவு செய்கிறார்கள். அதை 10 சதவீதமாக வேண்டுமானாலும் எண்ணிப் பார்த்து போடுங்கள். அதன் மூலமாக போட்டிகள் தவிர்க்கப்படும். லஞ்ச ஊழல்கள் களையப்படும். கொடுமைகள் குறைக்கப்படும். சாதாரண நிலையில் இருக்கின்றவர்களுக்கு, ஏழைகளுக்குத் துணையாக இருக்கும் வகையில் அந்தக் கருத்துக்களை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதனாலே ஆடம்பரத் திருமணங்களுக்கு ஒரு வரையறை வைத்து அதற்கு வரி போடுவதிலேகூட நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இன்னும் அதிகக் கவனம் செலுத்துவார்கள் என்று நம்புகிறேன், செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறையிலே இருக்கின்றவர்களுக்கு நிறைய பணம், சம்பளம், படி கொடுக்க வேண்டும் என்று நான் முன்பேயே சொன்னேன். இப்போது அவர்களுக்கு குடும்ப இன்ஷ்யூரன்ஸ். திட்டம் என்ற ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். அந்தக் குடும்பத்திற்கு இன்ஷ்யூரன்சாக இந்த அரசாங்கம் ஏதாவது ஒரு தொகையை மாதா மாதம் கொடுத்து, அந்தக் குடும்பத்தைக் காக்கின்ற அளவுக்கு ஒரு குடும்ப இன்ஷ். யூரன்ஸ் திட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

காவல் துறையைப்பற்றிச் சொல்லுகிற நேரத்தில் குறையாகத்
தான் சொல்லுகிறீர்களே தவிர கடுமையாகத்தான் விமர்சிக்கி
றீர்களே தவிர நல்லவிதமாக ஏன் சொல்லுவதில்லை என்று
சொல்லுகிறார்கள். எங்காவது சில நிகழ்ச்சிகள் நடைபெற்று
விட்ட பிறகு, அதற்காக காவல் துறையையே ஒட்டு மொத்தமாக
குற்றம் சாட்டுகிறீர்களே அது ஏன் என்று ஆளும் கட்சியிலே
இருந்து சிலர் சொல்லுவார்கள். மிகவும் நல்ல முறையிலே செயல்
பட்டுக் கொண்டிருக்கும் தமிழகத்திலே இருக்கிற காவல் துறை
இந்தியாவிற்கே வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்பதற்
காகவும்தான் அப்படிப்பட்ட கருத்துக்களைச் சொல்லுகிறார்கள்.
அப்படிப்பட்ட கருத்துக்குத் துணையாக ஒன்றிரண்டு
ஆலோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

காவல் துறை பணிக்கு என்று ஆட்களை எடுப்பதிலே ஒரே
முறையில், யூனிஃபார்ம் சர்வீஸஸ் ரெக்ரூட்மெண்ட் போர்டு
என்று தனியாக ஒரு போர்டையே ஏற்படுத்தி, அதன் மூலம்
காவல் துறை, தீ அணைப்புத் துறை, வனத் துறை போன்ற துறை
களுக்கு ஆட்களை எடுப்பதற்கான முறையிலே ஏற்பாடு செய்ய
வேண்டும். எப்படி ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்றவைகளுக்கும்,
ரெயில்வே துறைக்கும் எப்படி தனியாக போர்டு இருக்கிறதோ,
அதைப்போலவே காவல் துறைக்கு என்று தனியாக ஒரு
போர்டை வைத்து, அதை யூனிஃபார்ம் சர்வீசஸ் ரெக்ரூட்
மெண்ட் போர்டு என்பதாக அமைக்க வேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அந்த போர்டிலே கூட டிசம்பர்
மாதம் 31 ஆம் தேதி அன்று எத்தனை வேலைகள் காலியாக
இருக்கின்றன, எத்தனை பேர்கள் லிஸ்டில் இருக்கிறார்கள்,
எத்தனை வேலைகளுக்கு ஆட்கள் வேண்டும் என்ற ஒரு கணக்கை
எடுத்து வைக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு கணக்கு எடுத்து
ஒவ்வொரு ஆண்டும் தேவையான பதவிகள் நிரப்பப்பட
வேண்டும். அதில் காலதாமதமே கூடாது. 1981 ஆம் ஆண்டிலே
இருந்து சொல்லிக் கொண்டிருக்கிறோம், சப்-இன்ஸ்பெக்டர்
வேலைக்கு ஆட்களை எடுக்கிறோம், ஆட்களை எடுக்கிறோம்
என்று. ஒரு விதியாக ஏதோ வைத்தார்கள். அவர்களும்
வந்தார்கள். எங்கோ தேர்வு எழுதினார்கள். அங்கே மிகக்
கேவலமாக நடந்தது (குறுக்கீடு, மணியடிக்கப் பெற்றது).



மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் அனுமதியோடு
அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

(பிற்பகல் 1-30)

திரு. என். எஸ். வி. சித்தன்: மாவட்டங்களில் அதற்கான
தேர்வுகள் நடைபெற்றன. இங்கே சென்னையில் மறுபடியும்
தேர்வு எழுதியிருக்கிறார்கள். தேர்வு எழுதி ஆறுமாத காலம்
ஆகிவிட்டது. அதில் பரிசீலனை முடிந்துவிட்டதா? ஆட்கள்
எப்போது எடுக்கப் போகிறார்கள்? நான் கேட்டுக்கொள்ள
விரும்புவதெல்லாம் ஆயிரம் பேர்களை எடுக்கப் போகிறோம்
என்று ஒரே நேரத்தில் வைத்தால் எப்படி அவர்களுக்குப் பயிற்சி
கொடுக்க முடியும்? தமிழ்நாட்டில் இருக்கிற ட்ரெயினிங்
காலேஜில் ஆயிரம் பேர்களுக்குப் பயிற்சி கொடுக்க முடியுமா?
100 பேர், 200 பேர் என்றால் முடியும். 10 ஆண்டுக் காலத்தில்
எடுக்க வேண்டியதை ஒரே நேரத்தில் எடுக்கப் போகிறோம்
என்று சொல்லி, பல ஆண்டுக் காலமாக எடுக்காத காரணத்தால்
இப்படி இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் காவல் துறையில்
இருக்கிற பணியாளர்களுக்குப் பயிற்சியைத் தொடங்க வேண்டும்.
ஆகவே அந்த முறையில் காவல் துறைப் பணியாளர்களுக்கு
ஆட்கள் எடுப்பதில் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக காவல் துறையில் பயிற்சி கொடுப்பதில்
தற்போது பணி ஆரம்ப காலத்தில் சப் இன்ஸ்பெக்டர் என்றால்
ஒரு வருடம், கான்ஸ்டேபிள் என்றால் ஆறு மாத காலம் பயிற்சி
கொடுக்கிறார்கள். பின்னாலே 10, 15, 20, 25, 30 ஆண்டுக் காலத்
திற்கு அவர்களுக்குப் பயிற்சியே கொடுப்பதில்லை. உலகம்
எவ்வளவு வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. சமுதாய
அமைப்பில் எத்தனை மாற்றங்கள் ஏற்படுகின்றன? நாம் பார்க்
கிறோம். விஞ்ஞான வளர்ச்சியில் எவ்வளவு மாற்றங்கள் இருக்
கின்றன? வேலை ஆரம்பித்த காலத்தில் கொடுக்கும் ஆறுமாத
காலம் பயிற்சி பணிக்காலம் முழுமைக்கும் போதுமா? ஆகவே
ஒரு குறிப்பிட்ட வரையறை வைத்து, நான் நீண்டகால
பயிற்சி கொடுங்கள் என்று சொல்ல மாட்டேன், 10 நாட்கள், 15

நாட்கள், ஒரு வாரம் அல்லது இரண்டு வாரம் காவலர்களுக்கு,
அதிகாரிகளுக்குப் பயிற்சி கொடுத்தால் மிகவும் பயனுள்ளதாக
இருக்கும். காவலர்கள் எஸ்.ஐ. ஆக வருவார்கள், வேறு பதவி
களுக்கு வருவார்கள்.

இந்த நேரத்தில் ஆசிய ஜோதி பண்டித ஜவஹர்லால் நேரு
அவர்கள் சொன்ன வார்த்தைகள் நினைவுக்கு வருகின்றன.

"You have to keep on running just to stand where you are."

நீங்கள் எந்த இடத்தில் இருக்கிறீர்களோ, அதே இடத்தில் இருக்க
வேண்டுமென்றால் ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். ஆகவே
காவலர்களும் மற்ற அதிகாரிகளும் தங்கள் கடமையை நல்ல
முறையில் செய்ய வேண்டுமென்றால் இந்த பயிற்சி மாற்றங்கள்
நிச்சயமாக வேண்டும். சட்டங்களில், விதிகளில் மாறுதல்கள்
வந்து கொண்டேயிருக்கின்றன. ஏன் பயன்படுத்தும் ஆயுதம்,
வெப்பனில் கூட ரிவால்வர் என்பது பிஸ்டல் ஆகியிருக்கிறது,
பத்து ஆண்டுக்காலம், 30 ஆண்டுக்காலத்திற்கு முன்னாலே
கொடுத்த பயிற்சியை வைத்துக்கொண்டு நவீனக் கருவிகளை
இயக்குங்கள் என்று சொன்னால் தொடர்புடையதாக இருக்காது.
கொடுக்கிற பயிற்சியை அத்தனை பேருக்கும் ஒட்டுமொத்தமாகக்
கொடுக்க வேண்டுமென்று சொல்ல மாட்டேன். அதனை முறைப்
படுத்திக் கொண்டு காவல் துறையில் இருப்பவர்கள் பயன்பெறுகிற
வகையில் Inservice Training அளிக்க வேண்டும். அந்தப் பயிற்சியை
அளிக்கிறபோது உயர்நீதிமன்ற நீதிபதிகள், கிரிமினல்
வழக்குகளில் புகழ்பெற்றவர்கள், நல்ல தீர்ப்புகளைச்
சொல்கிறவர்கள் அந்தப் பயிற்சியில் வகுப்புகள் எடுக்க வேண்டும்.
கிரிமினல் லாயர்கள், வழக்குகளைப் போடுவதில் இப்படித்
தவறுகள் வருகின்றன, இப்படியெல்லாம் தவறுகளைச்
செய்கிறார்கள் என்று சுட்டிக்காட்டி முன்மாதிரியாக நவீன
முறையில் நடவடிக்கைகளை எடுப்பதற்கு உதவுகிற வகையில்
அவர்கள் வகுப்புகளை எடுக்க வேண்டும். அந்த வகையில் அந்தப்
பயிற்சி அமைய வேண்டும்.



இன்னும் சொல்ல வேண்டுமென்றால் தொழிற்சங்கத் தலைவர்
களையும், சமுதாயத் தலைவர்களையும்கூட அழைத்து
வகுப்புகளை நடத்தச் சொல்லலாம். அந்த வகையில் காவல்
துறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக தீவிரவாதிகள். இன்றைக்கு நாட்டில் தீவிர
வாதிகளின் அச்சம் தலை தூக்கியிருக்கிறது. பஞ்சாப் போன்ற
மாநிலங்களில் மைய மாநில அரசுகளுக்கு சவாலாக இன்றைக்கு
பல நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக்கின்றன. எதிர்காலம்
கேள்விக்குறியாக, இருண்ட நிலையில் இருக்கிற அளவிற்கு தீவிர
வாதிகளின் நடவடிக்கைகள் இருந்து கொண்டிருக்கின்றன.
இந்தத் தீவிரவாதிகளின் நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு நம்மு
டைய தமிழகப் போலீசார் தயாராக இருக்க வேண்டும். தீவிர
வாதிகள் என்று சொன்னால் உடனே இராணுவத்தை அழை
யுங்கள் என்று சொல்கிற நிலைமை இருக்கக் கூடாது. தமிழ
கத்தில் இருக்கிற ஸ்பெஷல் போலீசில் 9, 10 படாலியன்கள் இருக்
கின்றன என்று சொல்கிறார்கள். அந்த பட்டாலியன்களில்
இருக்கும் அத்தனை பேருக்கும் பயிற்சி என்று சொல்ல
மாட்டேன். 20, 30 பேர்களுக்கு ஒவ்வொரு பட்டாலியனிலும்
பயிற்சி கொடுத்தால் அவர்கள் நல்ல முறையில் பணியாற்றுவதற்கு
இயலும்.

நான் டெல்லிக்குப் போயிருந்தபோது ஒருவர் சொன்னார்.
அன்னை இந்திரா காந்தியைக் கொலைசெய்த குற்றவாளிகளைப்
பாதுகாக்கிற பொறுப்பை தமிழகப் போலீசிற்கு கொடுத்திருக்கி
றார்கள். தமிழகப் போலீசை மட்டும் ஒரு நாளைக்கு
வரவழைத்துக் கொள்ளுங்கள், நாங்கள் தப்பித்து விடுகிறோம்
என்று அவர்கள் சொல்வதை கேட்கிறபோது உள்ளபடியே
பூரிப்பாகத்தான் இருக்கிறது. இந்திய குடியரசுத் தலைவரின்
பிரம்மாண்டமான மாளிகையாக இருந்தாலும், துணைத்
தலைவர் மாளிகையாக இருந்தாலும், மேன்மை தங்கிய
பிரதமர் அவர்களின் இல்லமாக இருந்தாலும், அங்கே
யெல்லாம் தமிழர்கள் இருக்கிறார்கள் என்று பார்க்கிற
போது தமிழகப் போலீசிற்கு எவ்வளவு பெருமையாக
இருக்கிறது. ஆகவே தமிழகப் போலீசில் இருப்பவர்

களுக்கு, கமாண்டர்களுக்கு பயிற்சி கொடுப்பதைப் போல கொடுத்து, இந்தத் தீவிரவாதிகளை சந்திக்கிற அளவிற்கு, நவீன ஆயுதங்களை அவர்கள் சிறப்பாக கையாளுகிற அளவிற்கு செய்ய வேண்டும். அந்த வகையில் ஒரு பிரிவை ஏற்படுத்தி உடனே பயிற்சியைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு பட்டாலியனிலும் 10 பேர், 20 பேர்களுக்குப் பயிற்சி கொடுத்தால் போதும். அத்தனை பேருக்கும் கொடுக்க வேண்டுமென்று சொல்ல மாட்டேன். அந்த முறையிலே நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படி எடுத்துக் கொண்டால், எந்த ஒரு அவசரமான நிலைமை வந்தாலும், அதைச் சமாளிப்பதற்கு தமிழக அரசின் காவல் துறை தயாராக இருக்கும். எனவே அந்த முறையில் கவனம் செலுத்தவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து காவல் துறையில் இருக்கின்ற வாகனங்களைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால், 40 சதவீதம் வாகனங்கள்—அதற்குக் குறைவாகவும் இருக்கலாம், அல்லது கூடுதலாகவும் இருக்கலாம்—இன்றைக்கு பழுதடைந்த நிலைமையில் இருக்கின்றன, பணிமனையில் உறங்கிக்கொண்டு இருக்கின்றன. உதாரணமாக சென்னையில் இருக்கின்ற வாகனங்கள் 300 அல்லது 350 என்று எடுத்துக்கொண்டால், 70 வாகனங்கள் பழுது அடைந்த நிலைமையில் இருந்துகொண்டு இருக்கின்றன. இப்படி இருந்தால் எப்படி காவலர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்ய முடியும். குற்றங்களைத் தடுக்க முடியும். சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க முடியும். ஆகையினாலே இந்தக் காவல் துறையில் இருக்கின்ற வாகனங்களை—அரசுப் பணிமனையிலே பல மாதங்கள் காத்துக் கொண்டு இருக்கவேண்டிய அவசியம் இருக்கிறது—போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பணிமனைகளுக்கு அனுப்பி ரிப்பேர் செய்யலாமே. இப்படிச் செய்தால், போக்குவரத்துக் கழகங்களுக்கும் வருவாய் கிடைக்கும். இவைகளைப் பழுது பார்த்து ஓட்டவும் முடியும். எனவே அந்த முறையிலே கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆயுதப் படை ஒன்றை நாம் வைத்திருக்கிறோம். அங்கே ஒரு சிறிய மினி ஒர்க் சாப் வைத்துக்கொண்டால் அதன் மூலமாகக்கூட இந்த வாகனங்களை எல்லாம் பழுது பார்ப்பதற்கு





வசதியாக இருக்கும். எனவே இந்த முறையிலாவது செய்ய கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து எங்கெல்லாம் இனக்கலவரம் நடைபெறுகிறதோ, இனக்கலவரம் நடைபெறுகிற அந்தப் பகுதியில் உள்ள காவல் நிலையத்தில் எல்லாச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அங்கே குறிப்பிட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் இருக்கவேண்டும் என்று நான் சொல்லவில்லை. இனக்கலவரம் காலத்தில், ஸென்ஸிட்டிவ் ஸ்டேசன்கள் என்று சில இடங்களில் இருக்கின்ற நேரத்தில், எல்லா சமுதாயத்தைச் சேர்ந்த அதிகாரிகளும், காவலர்களும் இருப்பார்களானால், அந்தப் பகுதியில் இருப்பவர்களுக்கு சொந்த உணர்ச்சி வரும், நம்முடைய பகுதியில் உள்ள சொந்தக்காரர்கள் என்ற முறையிலே அவர்கள் பணியைச் செய்வார்கள் என்பதை நான் ஒரு யோசனையாகச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து வழக்குப் பதிவு செய்வதிலே நிறைய வழக்குகளிலே—பல வழக்குகள் என்று சொல்லாவிட்டாலும்கூட—நடக்கின்ற அந்த நிகழ்ச்சிக்கும் போடுகின்ற அந்தப் பிரிவுக்கும் சம்பந்தம் இல்லை. உதாரணமாகப் பார்த்தால், பேருந்திலே பயணம் செய்கிற நேரத்திலே, ஒருவர் புட் போர்டிலே பயணம் செய்கிறார் என்று வைத்துக்கொண்டால், அவர் மேல் மோட்டார் வெகிகில்ஸ் சட்டத்தின் கீழ் வழக்குப் போட முடியாது. அதற்கு நம்முடைய காவல் துறை என்ன செய்கிறது என்றால், ஓடுகிற பஸ்சிலே ஏறினார் என்றுதான் வழக்குப் போடுவார்கள். எந்தத் தவறைச் செய்கிறார்களோ, அந்தத் தவறை அப்படியே ரெக்கார்ட் செய்கிற அளவிற்கு சட்டங்கள் திருத்தப்பட வேண்டும். விதிகள் திருத்தப்படவேண்டும். மாறாக ஆரம்பமே பொய்யாக ஆரம்பித்து, எப்.ஐ.ஆரும் பொய்யாக ஆரம்பித்து, வழக்கும் பொய்யாக போய் விடக்கூடிய நிலைமையில், 3 மாத காலம், அல்லது 4, 5 மாத காலம் என்று இழுத்துக்கொண்டு போனால் இருக்கின்றவர்களுக்கு எப்படி நினைவுக்கு வரும். படித்தவர்களுக்கே நடப்பதைப் பற்றிச் சொன்னால் நினைவுக்கு வராது. பாமரர்கள் எப்படி சாட்சி சொல்வார்கள்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, 'பொய்ம்மையும் வாய்மை இடத்த புரை தீர்ந்த நன்மை பயக்கும் எனின்'.

திரு. என். எஸ். வி. சித்தன்: ஆகவே உண்மையாக நடக்கின்ற குற்றங்களை உண்மையாகப் பதிவு செய்கின்ற முறையிலே இந்தச் சட்டங்கள் எல்லாம் திருத்தப்பட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். இது எல்லாம் காவலர்கள் தங்கள் பணியைச் செம்மையாகச் செய்வதற்கு உதவியாக இருக்கும். உதாரணமாக நாற்காலி செய்யவேண்டும் என்றால் ஒரு தச்சனுக்கு நல்ல கூர்மையான உளியைக் கொடுத்தால்தானே அவனால் செய்ய முடியும். சிற்பி என்று ஒருவன் இருந்தால், அந்தச் சிலையை வடிப்பதற்கான கருவிகளைக் கொடுத்தால்தானே அவனால் சிலையை வடிக்க முடியும். மாறாக இவைகளில் சந்து பொந்துகளை எல்லாம் வைத்து, அதன் மூலமாக பணிகளை நல்ல முறையில் செய்ய வேண்டும் என்றால் எப்படி முடியும்? ஆகவே தான் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எல்லைப் புறக் காவல் நிலையங்களைப்பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். தமிழக எல்லைகளில் இருக்கின்ற காவல் நிலையங்கள் அல்லது மாவட்டத் தலைமையிடத்திற்கு அப்பால் இருக்கிற காவல் நிலையங்களுக்கு கொஞ்சம் தனிக் கவனம் செலுத்த வேண்டும். அங்கே ஏதாவது ஒரு நிகழ்ச்சி, ஒரு கலவரம் நடக்குமானால், இங்கே தலைமையிடத்திலிருந்து ஆட்கள் போய்ச் சேருவதற்கு அதிகமான காலதாமதம் ஆகின்றது. எல்லை ஓரத்தில் இருக்கின்ற காவல் நிலையங்களில் அதிகமான எண்ணிக்கையில் வழக்குகள் வருகின்ற காரணத்தாலே, அந்தக் காவல் நிலையங்களுக்கு எல்லாம் தொலைபேசி கண்டிப்பாக வேண்டும். அதேபோல் வி.எச்.எப். செட் என்று சொல்கிறோமே அந்த மாதிரியான செட்கள் கண்டிப்பாகக் கொடுக்கப்படவேண்டும். மேலும் வாகனங்கள் நல்ல முறையில் கொடுக்கப்படவேண்டும், தள்ளுமாடல் வண்டிகள் அல்ல. மேலும் காவலர்களுடைய எண்ணிக்கை உயர்த்தப்பட வேண்டும். சாதாரணமாக உள்ள காவல் நிலையங்களில், காவலர்களின் எண்ணிக்கை 40





என்று சொன்னால், இப்படிப்பட்ட காவல் நிலையங்களில் 40 காவலர்களாவது இருக்கின்ற அளவிற்கு அவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்த வேண்டும். அப்படி உயர்த்தினால்தான், திடீரென்று ஒரு நிகழ்ச்சி நடக்கின்றபோது, அதைச் சந்திப்பதற்கு தயாராக இருப்பார்கள். மதுரை மாவட்டத்தில் கம்பம் என்ற ஊர் தள்ளி இருக்கிறது. அதேபோல் ராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபம் இருக்கிறது. இங்கே ஹோசூர் பகுதி இருக்கிறது. இப்படி ஒவ்வொரு மாவட்டத்திலேயும் இருக்கின்ற காரணத்தால், சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் கவனம் செலுத்துகின்ற முறையில், அதிகமான அளவிற்கு காவலர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-40)

அடுத்து வெளிநாட்டுப் பயணம். வெளிநாட்டுக்கு நம்முடைய தமிழக அரசு, மத்திய அரசின் துணையோடு—நம்முடைய காவல் துறையில் உள்ள பெரிய அதிகாரிகள் எல்லாம் போகிறார்கள். அதிலே எனக்கு மகிழ்ச்சி. கருத்து வேறுபாடு கிடையாது. அப்படியென்றால், ஏன் பெரிய அதிகாரிகளுக்கு மட்டும் இந்த வாய்ப்புக் கொடுக்கிறீர்கள்? காவலர்களுக்கும் கொடுங்களேன். ஹெட் கான்ஸ்டபிளுக்குக் கொடுங்களேன், எல்லோருக்கும் கொடுங்களேன். இன்றைக்கு ஓய்வு பெறுகிற நிலையிலே இருப்பவர்களுக்குக் கொடுத்து, 5 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வு பெறுவதற்குப் பதிலாக, இன்றைக்குப் புதிய நிலையிலே வந்திருப்பவர்களை அந்த இடையிலேயே இருக்கிறவர்களை அனுப்புவதுதான் சிறந்தது. நான் அத்தனை பேரையும் அனுப்ப வேண்டுமென்று சொல்லமாட்டேன்; முடியாது. அதிலே 5 பேர்கள், 10 பேர்கள் அனுப்புவார்களானால்; டோக்கியோ போலீஸ் பெயர் பெற்றிருக்கிறது, லண்டன் போலீஸ் பெயர் பெற்றிருக்கிறது, ஸ்காட்லாண்ட் போலீஸ் பெயர் பெற்றிருக்கிறது. அங்கு போய் பார்த்து வருவார்களானால், அவர்களுக்கு ஒரு மிடுக்காக இருக்கும், அங்கே இருக்கிற காவலர்கள் எவ்வளவு அருமையாகப் பணி புரிகிறார்கள். பொது மக்களுக்கும் அவர்களுக்கும் இருக்கிற நேச உணர்வு, பாச உணர்வு,

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 மே 6

நெருக்க உணர்வு ஆகியவற்றை நேரில் பார்த்து வருவதன் மூலம்,
காவல் துறையில் அடிமட்டத்தில் இருப்பவர்களுக்குக்கூட ஒரு
பொறுப்புணர்வு வரும்; நாமும் அவர்கள் மாதிரி நடக்கவேண்டும்,
சிறப்பான பெயர் வகித்து, வெளிநாடுகளுக்குப் போகவேண்டும்.
அதன் மூலமாக, காவல் துறையினுடைய தரம் உயரும். வெளி
நாடுகளிலே இருக்கிற காவலர்களை நாம்கூட அழைக்கலாம்.
பரஸ்பரம் ஒரு திட்டத்தின்கீழ் அடிமட்டத்திலே இருப்பவர்களை
வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டும். அதற்கென்று ஒரு
தொகையை, ஒரு எண்ணிக்கையை ஒதுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, காவல் துறையிலே பராமரிப்புபற்றி ஒருசில
கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். ராஜா அண்ணாமலை
புரத்திலே காவலர் குடியிருப்பு ஒன்று இந்தியாவினுடைய பிரதம
அமைச்சராக இருந்த திரு. மொரார்ஜி தேசாய் அவர்களாலே
திறந்து வைக்கப்பட்டது. அந்தக் காவலர் குடியிருப்பு ஹவுசிங்
போர்டால் கட்டப்பட்டது. ஹவுசிங் போர்ட் கட்டிக் கொடுத்து,
காவலர் குடியிருப்பாகக் கொடுத்துங்கூட, பொதுப் பணித்
துறை அதை ஏற்றுக்கொள்ளவில்லை, ரிஜிஸ்தரில் ஏற்றுக்
கொள்ளவில்லை. ஹவுசிங் போர்ட் கொடுத்ததை பொதுப்
பணித் துறை ஏற்றுக்கொள்ளவில்லையென்றால், தனியாருடைய
நிலைமை எப்படியிருக்கும்? அப்படி எடுத்துக் கொள்ளாத
காரணத்தால், கூரை இடிந்து விட்டது. அதைப்போலவே,
நான் அஞ்சுகிறேன், இன்றைக்கு ராஜாரத்தினம் ஸ்டேடியத்திற்குப்
பக்கத்திலே இருக்கிற காவலர் குடியிருப்புப் பொதுப்
பணித் துறையினரால் இன்னமும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை
யென்கிற ஒரு செய்தி எனக்குக் கிடைத்துள்ளது. என்னுடைய
ஆதங்கம் எல்லாம் ராஜா அண்ணாமலைபுரத்திலே நடந்த
நிகழ்ச்சி, ராஜாரத்தினம் ஸ்டேடியத்திலே நடந்துவிடக்கூடாது.
ஆகவே, உடனடியாக அதைப் பொதுப் பணித் துறை ஏற்றுக்
கொண்டு பராமரிக்க வேண்டும். பல இலட்சக்கணக்கான ரூபாய்
செலவழித்து நாம் கட்டடம் கட்டி வருகிறோம். பராமரிக்கின்ற
பொறுப்பு இருந்தும் பொதுப் பணித் துறை ஏன் ஏற்றுக்கொள்ள
வில்லையென்று பாருங்களேன். ஹோம் செக்ரட்டரி, பொதுப்



1986 மே 6] [திரு. என். எஸ். வி. சித்தன்]

பணித் துறை செக்ரட்டரி, ஹவுசிங் போர்ட் அதிகாரிகள்
ஆகியோரை வைத்துக்கொண்டு, எந்த, எந்தக் கட்டடங்களை,
எப்படி, எப்படிப் பராமரிப்பது என்பதைப்பற்றிப் பரிசீலனை
செய்ய ஒரு உயர்மட்டக் குழு போட்டோமானால் அதன்
மூலமாகக் காவலர்களுடைய உயிர்களுக்கு—நம்முடைய உயிர்
களைக் காக்கின்ற காவலர்களுடைய உயிர்களைக் காக்கும்
பொறுப்பு நமக்கும் இருக்கிறது. திருப்பரங்குன்றத்திலே காவலர்
குடியிருப்பு இருக்கிறது. அடுப்பு வசதிகள்கூடக் கிடையாது.
அதைப்போல பல சொல்ல முடியும். ஆனால், இந்தத் துறையிலே,
இந்தப் பராமரிப்பிலும் அரசு அதிகமாக கவனம் செலுத்தவேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பெரிய, பெரிய கூட்டங்கள் கூடுகின்ற நேரத்
திலே உதாரணமாக இந்தியாவினுடைய தலைமை அமைச்சர்
சென்னை வருகின்ற நேரத்திலே, அல்லது மற்ற மாவட்டங்
களுக்குப் போகின்ற நேரத்திலே, மதுரை போன்ற நகரத்தில்
சித்திரைத் திருவிழா போன்று நடக்கின்ற நேரத்திலே,
திருவண்ணாமலையில் கார்த்திகை தீபம் நடக்கின்ற நேரத்திலே,
பல லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து கூடுகிறார்கள். அப்படிக்
கூடுகின்ற நேரத்திலே, காவலர்களுடைய பணி இன்றியமை
யாதது. எந்தவிதமான அசம்பாவிதமும் நிகழாவண்ணம் மக்க
ளுடைய உயிர்களையும் உடமைகளையும் காக்கின்ற பொறுப்பு
காவலர்களுக்கு இருக்கின்றது. அப்படி நடைபெறுகின்ற அந்த
நிகழ்ச்சிகளுக்குப் பல மணி நேரங்களுக்கு முன்னதாகவே நம்மு
டைய காவலர்கள் தங்களுக்குரிய இடங்களுக்குப் போய் விடுகி
றார்கள். பல மணி நேரங்கள் வெயிலிலும் மழையிலும் அவர்கள்
நின்று கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு, அப்படிக்
கடமையைச் செய்கின்றவர்களுக்கு ஒரு ஜூஸ் கொடுக்கவோ,
காபி போன்ற ஒரு பானம் கொடுக்கவோ ஏற்பாடு கிடையாது.
நான் இந்தத் துறையைக் கேட்டுக்கொள்வதெல்லாம், சென்னைக்கு
இரண்டு வாகனங்கள், மாவட்டத்திற்கு ஒன்று என்று கொடுத்து
விடுவீர்களானால், காவலர்கள் வெயிலிலே நிற்கின்றபோது, அவர்
களுக்கு ஏதாவது பானம் கொண்டு போய்க் கொடுக்க வாய்ப்பு
ஏற்படும். அந்த வாகனம் எப்படி அமைய வேண்டுமென்றால்,

அந்தக் காவலர்களுக்கு உணவு அல்லது பானங்கள் கொண்டு போகக்கூடிய அளவுக்கு, அதனுடைய வடிவமைப்பு இருக்க வேண்டும். பெரிய, பெரிய பாத்திரம் வைத்துக்கொள்வதுபோல் இருக்கவேண்டும். அதிலே ஒன்றும் அதிகமான தொகை வந்து விடாது. மனிதாபிமான உணர்வோடு அந்தக் காவலர்களுக்குக் கொடுப்பதற்குத் துணையாக அவற்றைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அவர்களுக்கு வாரத்திற்கு இரண்டு நாள் விடுமுறை. இன்றைக்கு மத்திய மாநில அரசு அலுவலகங்கள் வாரத்திற்கு இரண்டு நாள் விடுமுறையில் பணி புரிகின்றன. ஆனால் காவல் துறையிலே இருக்கிறவர்களுக்கு மட்டும் அது கிடைக்கவில்லை. அப்படி இருக்கும்போது, ஒரு நாள் விடுமுறை என்றால், அவர்களுக்கு ரூ. 10 இ.டி. என்ற வகையில் கிடைக்கிறது. வாரத்திற்கு இரு நாள் விடுமுறை என்றால், ரூ. 10 கூடுதலாகச் சேர்ந்து ரூ. 20 அவர்களுக்குக் கிடைக்கும். அதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவலர்களுக்கு 12 நாள்தான் ஆண்டொன்றுக்கு விடுமுறை. 10 நாள் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். 10 பிளஸ் 12 ஆக 22 நாள் கொடுக்கச் சொல்லுங்கள் என்று கேட்கிறார்கள். அடடா, நியாயமான கோரிக்கையாக இருக்கிறது. கொடுத்தால் என்ன என்று யாருக்கும் தோன்றுகிறது. அருள் கூர்ந்து அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வெகுமதி. காவல் துறையிலே இருப்பவர்களுக்கு வெகுமதி கொடுக்கிறோம். அப்படி ஒதுக்கீடு செய்துள்ளது எவ்வளவு தெரியுமா? ஒரு மாவட்டத்திற்கு ரூ. 10,000-லிருந்து, ரூபாய் 15,000 தான் ஒதுக்கீடு ஒரு ஆண்டிற்கு. நான் கேள்விப்படுகிறேன், ஒரு மாவட்டத்தில் ரூ. 2,000-லிருந்து 3,000 வரை காவலர்கள் எண்ணிக்கை இருக்கும். ரூ. 10,000, ரூ. 15,000 எப்படிப் போதுமானதாக இருக்க முடியும்? நான் அத்தனை பேருக்கும் பிரித்துக் கொடுக்கும்படி சொல்லவில்லை. ஆனால்,





விரத்திற்காக தங்கள் உயிரையும் பணயம் வைத்து போராடுகின்ற பொழுது, அவர்களுக்கு வெகுமதி கொடுப்பதில் இன்னும் கொஞ்சம் தாராளமாக இருக்க முடியும். சாதாரணமாக, கள்ளச் சாராயம் விற்கிறவர்களிடம் மாமூல் வாங்குவதைவிட, இந்த ஐ.ஜி. யிடம் வெகுமதி பெற்றேன் என்று சொல்வதிலே, உள்ள பெருமை வேறு எதிலும் காவலர்களுக்குக் கிடையாது. அப்படிப் பெருமைப் படுகிற அளவிற்கு இந்த வெகுமதித் தொகையை அதிகரித்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு காவலர்கள் பணியில் ஈடுபட்டு இருக்கும்போது இறப்பார்களானால் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம். தன்னுடைய உயிரையும் பொருட்படுத்தாமல் தன்னுடைய கடமையைச் செய்கிறார்கள். அதன் மூலமாக எதிரிகளால் தாக்கப் பட்டு உயிர் இழக்கிறார்கள் என்று மேலும் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம். அதேநேரத்தில் அங்கே வாரிசுகளுக்கு வேலை என்ற அடிப்படையில் படித்தவர்களுக்கு ஜூனியர் அசிஸ்டெண்டு கிரேடிலும், படிக்காதவர்களுக்கு கடைநிலை ஊழியர் என்ற நிலையிலும் நாம் வேலை கொடுக்கிறோம். நான் பாராட்டுகிறேன். ஆனால் அதேநேரத்திலே ஒரு காவலர் இறந்து போகும் நேரத்திலே வேலைக்கு போகக்கூடிய தகுதி இல்லாத குழந்தைகள் இருந்தால் என்ன செய்வது? மூன்று வயது, நான்கு வயது, ஐந்து வயது உள்ள குழந்தைகள் இருந்தால் வேலை கொடுக்க முடியாது. ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படும். ஆனால் இந்த குழந்தைகள் வளர்ந்து சம்பாதிக்கும் நிலைக்கு வரும் வரை அந்த காவலர் இறக்கும்போது என்ன சம்பளம் வாங்கினாரோ அதே சம்பளத்தை 10 ஆண்டுகள், 15 ஆண்டுகளுக்கு மனிதாபிமான முறையில் கொடுப்போமானால் அந்த குடும்பம் பசி, கவலை இல்லாத அளவுக்கு வாழ்வதற்குத் துணையாக இருக்கும். இதனால் அதிகமாக ஒன்றும் வந்து விடாது. ஒரு ஆண்டை எடுத்துக்கொண்டால், 5, 10தான் வரும். ஆகவே இதை எல்லாம் நாம் செய்வோமானால் காவல் துறையில் இருப்பவர்கள் இன்னும் கொஞ்சம் நல்ல முறையில் பணியாற்றுவார்கள். அதை அருள் கூர்ந்து பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1986 மே 6

இன்றைக்கு பல வழக்குகளைப்பற்றி புள்ளிவிவரங்களைக் கொடுத்து இருக்கிறார்கள். இந்தியாவில் இருக்கின்ற ஆவரேஜை பார்க்கும்போது தமிழகத்தில் இருக்கின்ற ஆவரேஜ் குறைவாக இருக்கிறது என்று பெருமைப்பட்டுக்கொள்கிறோம். ஆனால் அதேநேரத்தில் நம்முடைய அணுகு முறை விஞ்ஞானப் பூர்வமாக இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னக்கோல் களவுகளை எடுத்துக்கொள்ளுங்கள், ஆதாய களவுகள், வழிப்பறி, கொலை வழக்குகளை எடுத்துக் கொண்டால் மொத்த வழக்கு எத்தனை சதவீதம் இருக்கிறது. மாநிலம் பூராவும் ஒரு ஆவரேஜை எடுத்துக் கொண்டு இந்தப் பகுதியில் அந்த ஆவரேஜ் மீறப்படுமானால் 4 சதவீதம், 5 சதவீதம் இருப்பது இன்னும் தனிப்பட்ட பகுதியில் அந்த ஆவரேஜ் அதிகமாக இருக்குமானால் என்ன காரணம் என்று எண்ணிப் பார்த்து அதைக் களைவதற்கு காவல் துறை விழிப்புணர்ச்சி யோடு அப்புரோச் கொண்டு விஞ்ஞான அணுகுமுறையியல் செயல் படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வறட்சியைப் பற்றி இன்றைக்கு நிறைய சொல் கிறார்கள். காவலர்கள் குடியிருப்புகளுக்கு அந்த வறட்சியில் இடம் இல்லை. என்னுடைய திருமங்கலம் தொகுதியில் உள்ள காவலர் குடியிருப்புகளுக்கு தண்ணீர் வசதி இல்லை என்று சோழவந்தானிலிருந்து வரும் நல்ல குடிநீரை எங்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே தமிழகத்தில் இருக்கின்ற காவலர் குடியிருப்பு களுக்கு வறட்சியின் காரணமாக ஆழ் துளை கிணறுகளை ஆழப் படுத்துவதற்கு இன்னும் கொஞ்சம் அதிகமான முயற்சியை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணி யடிக்கப்பெற்றது) ஆகவே அந்த புள்ளி[illegible]த்தை எடுத்து



1986 மே 6] [திரு. என். எஸ். வி. சித்தன்]

உடனடியாக அந்த காவலர் குடியிருப்புகளுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால் நம்மைக் காக்கிறார்கள், ஆகவே அவர்களைக் காக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது.

மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்கு இன்றைக்கு நாம் எல்லாம் மக்கள் பிரதிநிதிகள் எல்லாம், அதிகாரிகள் எல்லாம் போகிறோம். ஆனால் மாவட்ட எஸ்.பி. அவர்கள் அங்கே வருவது இல்லை. அவர்கள் வருவார்களானால் பல விவரங்களை நாம் கேட்க முடியும். யாரோ ஒரு சிறிய அதிகாரியை அனுப்பி விடுகிறார்கள். ஆகவே முழுமையான விவரங்கள் அந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் கிடைப்பது இல்லை. ஆகவே ஒன்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திற்கு அந்த மாவட்ட எஸ்.பி. அவர்கள் வரவேண்டும். அப்படி அவர் வரவில்லை என்று சொன்னால் தனியாக, மாவட்ட வளர்ச்சி மன்றத்தைப் போலவே போலீஸ் துறைக்கு என்று மாவட்டத்தில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர் களையும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை அழைத்து கூட்டம் போட்டு மாவட்ட வளர்ச்சி மன்றத்திற்கு எப்படி நாம் அஜெண்டா கொடுக்கிறோமோ அதுபோல் தீர்மானம் கேட்டு, தீர்மானம் கொடுத்து பரிசீலனை செய்வார்களானால் இன்னும் நம்முடைய பொதுமக்கள் பிரதிநிதிகளுக்கும், பொதுமக்களுக்கும் போலீசாருக்கும் நெருக்கம் அதிகமாக இருக்கும். இதில் அந்தத் துறை கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசிடம் அவசரச் செலவினத்திற்காக கடன் கோருகிறார்கள். பணம் கொடுக்க ஆறு மாத காலம் ஆகிறது என்ற ஒரு செய்தியை நம்முடைய பழனி தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் இங்கே சொல்லி யிருக்கிறார்கள். அவர்களுக்கு முறையீடு வந்து இருக்கிறதாம். எனவே ஆறு மாத காலம் என்று சொல்லுவது எந்த வகையிலும் பொருத்தமாக இருக்காது. நாம் என்ன இனாமாகவா கொடுக்கிறோம், கடன் தானே கொடுக்கிறோம். ஆகவே 10, 15 நாட்களில் கொடுப்பதற்கு முயற்சியை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தின் தலைநகரத்தில் உள்ள காவல் துறை விளையாட்டு மைதானத்திலே 'பிளட் லைட்' வேண்டும் என்று சொல்லி அந்தத் தொகுதியின் எங்கள் சட்டமன்ற உறுப்பினர் சொல்லியிருக்கிறார்கள். அதையும் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் நிறைய இருக்கிறது போல் இருக்கிறது. அடுத்த வருடத்திற்கு கொஞ்சம் வைத்துக் கொள்ளுங்கள். We are going to be here for another three years.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, சென்னை மாநகருக்கு ஒரு கமிஷனர் இருக்கிறார். ஆனால் அதேநேரத்திலே மதுரைக்கும், கோவைக்கும் கமிஷனர் நியமிக்கப்படவில்லை. நியமிக்காததற்கு காரணம் எனக்குத் தெரியவில்லை. சென்னைக்கு ஒரு நீதி, மதுரைக்கு ஒரு நீதி, கோவைக்கு ஒரு நீதி என்று இருக்கக்கூடாது. ஆகவே, அவைகள் பெரிய நகரங்கள். ஆகவே அவைகளுக்கு கமிஷனர் நியமிக்கின்ற முயற்சியை விரைவாக நீங்கள் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-50)

பெண் காவலர்களைப் பொறுத்தவரையில் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் வைகை திரு. துரைசாமி அவர்கள் சொன்னது போல் இப்போது இருக்கின்ற உடுப்பு அவர்களுக்கு பொருத்தமாக இல்லை. ஆகவே அவர்கள் வழக்கமாக அணிகின்ற சேலையை உடுத்துகின்ற முறையில் அந்த உடுப்பை மாற்ற வேண்டும் என்ற யோசனையை 2, 3 ஆண்டுகளுக்கு முன்னால் சொன்னேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசுகிற நேரத்தில் கூட பரிசீலனை செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆக எளிதாக தங்களுடைய பணிகளைச் செய்வதற்கு உடைகளை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





சில நேரங்களிலே சில அறிவிப்புகள், அறிவிப்புகளாக இருக்கின்றன. சில மாதங்களுக்கு முன்னால், நம்முடைய முதல்வர் அவர்கள் சொன்னார்கள். சென்னை நகரத்திலே முகமூடித் திருடர்களைக் கண்டுபிடிக்க, சிறிய விமானங்களை வாங்கப் போகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் என்ன காரணத்தினாலே வாங்கப்படவில்லை. ஆதலால் இப்படி அறிவிப்புகள், அறிவிப்புகளாக இல்லாமல், நிதர்சனமாக, பரிட்சார்த்தமான முறையில் காரியசாதகமாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு செய்தி. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த முறை பதவியேற்ற நேரத்திலே, பின்னர் அமைச்சர்கள் பதவி ஏற்க, சில நாட்களாயின. சில அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் ஏற்பதிலே ஏற்பட்ட இடைப்பட்ட காலத்திலே அமைச்சர்களாக இருந்தவர்களுடைய வீடுகளில் பணிபுரிந்த காவலர்களுக்கு எந்தக் கணக்கிலிருந்து சம்பளம் வழங்கப்பட்டது? இன்னும் இது முறையாக்கப்படவில்லையா? இந்தச் செய்தி எனக்கு வந்திருக்கிறது. அப்படி இருக்குமானால், உடனடியாக அவர்களுக்கான சம்பளம் வழங்குவதற்கான ஆணையை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடாற்காடு செய்யாறு தாலுக்காவில், ஆத்தூரில் ஒரு காவல் நிலையம் இருக்கிறது. அங்கே ஒரு புகார் மேதகு ஆளுநர் அவர்களுக்கும், நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும், காவல் துறையில் உள்ள சில பெரிய அதிகாரிகளுக்கும் அனுப்பப் பட்டிருக்கின்றது. அந்த ஊரிலுள்ள சப்-இன்ஸ்பெக்டர் ஒருவர் மிகவும் கொச்சையாக, கடுமையாக அந்தப் பகுதியிலுள்ள அரிசன சகோதரர்களைத் திட்டியதாக—அதற்கான முழு விவரமும் என்னிடம் இருக்கிறது—அதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். அது உண்மையாக இருக்குமானால், கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. சித்தன் அவர்களுடைய துணைவியாரும், மற்ற குழந்தைகளும், மேலே மாடத்திலே, சாப்பிடுவதற்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை அவர் மறந்துவிட்டு, பேசுவதாக நான் கருதுகிறேன். ஆகவே, சீக்கிரம் முடித்துக்கொண்டு, அவர்களை அழைத்துப் போகவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** நான் யாருக்காகவும் தனியாகப் பேசவில்லை. வழக்கமாகப் பேசுவதைத்தான் பேசுகிறேன். இதை மிகைப்படுத்திப் பேசக்கூடாது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** அவர்கள் இருப்பதனால் தான் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** நல்ல வேளை பசியை மறந்து ஏதாவது பேசி, சிரித்து, பசியை மறந்தால் நல்லதுதான்

ஒரேயொரு நிமிடத்தில் என்னுடைய தொகுதியைப் பற்றிப் பேசி முடித்துக்கொள்கிறேன். திருமங்கலம் காவல் நிலையத்தில் அடிப்படை வசதிகள் சரியாக இல்லை. அது பழங்காலக் கட்டிடத்தில் இருக்கிறது. எனவே அதைப் புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமங்கலம் காவல் நிலையம் இன்னும் வாடகைக் கட்டிடத்தில் தான் இயங்கிக்கொண்டிருக்கின்றது. அதற்கான சொந்தக் கட்டிடங்களைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருமங்கலம் தொகுதியைச் சார்ந்த வீரப் பெருமாள்புரத்தில் ஒரு புதிய காவல் நிலையம் ஏற்படுத்தவேண்டுமென்று சொல்லி [illegible]க்கிறேன். அதை அருள்கூர்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோன்று ஒரேயொரு கோரிக்கை. காவல் துறை அலுவலர்கள் விடுப்பு முன் அனுமதி பெறாமல் 21 நாட்களுக்கு மேல் பணிக்கு வராமல் இருந்த காரணத்தால் 'டெசர்டர்' என்று முடிவு செய்து பதவி நீக்கம் செய்ததை, மீண்டும் பதவியில் சேர அனுமதிக்கும் அரசாணையை 29—6—1981 அன்று வழங்கியிருக்கிறது. ஆனால் 40 வயதிற்கும் மேற்பட்டவர்களுக்கு அந்தச் சலுகை இல்லை. ஒரு மனிதாபிமான அடிப்படையில் இந்த அலுவலர்களையும், வேலையில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, தீயணைப்புத் துறை பற்றி நிறையப் பேச வேண்டுமென்றிருந்தேன் . . . (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலுரையை நாளைக் காலை வைத்துக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பினார்கள். என்னைப் பொறுத்தவரையிலும் 3, 4 மணி நேரம் வரையிலும் வேண்டுமானால் பேசுவதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் நாளை காலை கேள்வி நேரத்தை ஒத்திவைத்து விட்டு, பதிலுரையை வழங்கலாம் என்று கூறுகிறார்கள். நாளையதினம் தொழிலாளர் துறையினுடைய மானியக் கோரிக்கையும் வருகிறது. இருந்தாலும் கேள்வி நேரத்தை ஒத்திவைத்து, நாளைக்கு பதிலுரையை வழங்கலாம் என்ற கருத்தினுடைய அடிப்படையில் நாளைக்கு கேள்வி நேரத்தை ஒத்தி வைத்து, நாளைக்கு பதிலை ஏற்றுக்கொள்ளும்படியாக மாண்புமிகு பேரவைத் தலைவரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

## 4. அரசினர் தீர்மானம்.

### விதி 32-ஐத் தளர்த்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஒவ்வொரு நாள் கூட்டத்தின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் கேட்டு விடையளிப்பதற்கென்று ஒதுக்கப்பெற வேண்டும் என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ நாளை (7—5—1986) தளர்த்த வேண்டும்."

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 மே 6

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (7—5—1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-54 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 5. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

78. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1982-83 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் மற்றும் 31—3—1983 ஆம் தேதி வரையிலான ஐந்தொகைக் கணக்குகள் [1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69 (5) (ஏ) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (ஆங்கிலம்).

79. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் மற்றும் 31—3—1984 ஆம் தேதி வரையிலான ஐந்தொகைக் கணக்குகள் [1948 ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948 69 (5) (ஏ) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது (ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள் ஏனைய தாள்கள்

ஏதுமில்லை.



## இணைப்பு

[11 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட ... (8714)-க்கான விடையைக் காண்க.]

தமிழகத்திற்கு முக்கிய பிரமுகர்கள் வருகின்றபோது அவர்களின் பாதுகாப்பை கருத்தில்கொண்டு அவர்கள் செல்லும் வழியில் முக்கிய இடங்களில் சவுக்குக் கட்டையால் தடுப்பு வேலிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. சென்னை மாநகரில் அண்ணா சாலை, காமராஜர் சாலை போன்ற மிக முக்கியமான சாலைகள்தான் மிக முக்கியமானவர்கள் வருகையின்போது பயன்படுத்தப்படுகின்றன. இச்சாலைகளில் சில இடங்களில் நடைபாதைகளில் நிரந்தர தடுப்பு வேலிகள் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன.

முக்கிய பிரமுகர்கள் வருகையின்போது அவர்கள் செல்லும் வழியிலுள்ள முக்கியமான சாலைகளின் சந்திப்புகளில் சவுக்குக் கட்டையால் தடுப்பு வேலிகள் தேவைக்கு ஏற்றவாறு அவ்வப்போது அமைக்கப்படுகின்றன. எந்த சாலைகளில் நிரந்தரமாக அமைப்பது என்பது பெரிய பிரச்சினையாகிவிடும். சென்னையில் சில முக்கிய சாலைகளான அண்ணாசாலை, காமராஜர் சாலை, மவுண்ட் சாலையையும் அடையாற்றையும் இணைக்கும் வல்லபாய் படேல் சாலை ஆகியவற்றைக்கூட நிரந்தர தடுப்புகளால் இணைப்பது ஏறக்குறைய 25 கி.மீ. நீளம் ஆகிவிடும்.

தற்போது சென்னை விமான நிலையத்தில் வரவேற்பு மண்டபத்தை ஒட்டிய பகுதிகளில் நிரந்தர தடுப்பு வேலிகளுக்கு வகை செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே அனைத்து சாலைகளிலும் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்க செலவினம் அதிகம் ஆகும் என்பதோடு அவைகள் முறையே பராமரிக்கப்பட்டு ஒவ்வொரு வருகையின்போதும் மீண்டும் மீண்டும் சீரமைக்கப்படவேண்டிய அவசியமும் உள்ளது. விமான நிலையத்திற்கும் கிண்டி ரயில்வே நிலையத்திற்கும் இடையேயுள்ள மவுண்ட் சாலை வேண்டுமானால் பக்கத் தடுப்புகளால் நிரந்தரமாகத் தடுக்கப்படலாம். இதுபற்றித் தீவிரமாக பரிசீலிக்கப்படும்.